KURAL OF TIRUVALLUVER.

BIBLIOTHECA TAMULICA

SIVE

OPERA PRAECIPUA TAMULIENSIUM

EDITA
TRANSLATA ADNOTATIONIBUS GLOSSARIISQUE
INSTRUCTA

A

CAROLO GRAUL, D. TH.

TOMUS QUARTUS:

TIRUVALLUVERI KURAL

VERSIONE LATINA ADNOTATIONIBUS GLOSSARIOQUE ILLUSTRATUS.

LIPSIAE:
F. A. BROCKHAUS.
1865.

TRANGAMBARIAE: OFFICINA MISSIONARIA.

KURAL OF TIRUVALLUVER.

HIGH-TAMIL TEXT

WITH

TRANSLATION INTO COMMON TAMIL AND LATIN, NOTES AND GLOSSARY.

BY

CHARLES GRAUL, D.D.

LATE DIRECTOR OF THE LEIPZIG EVANGELICAL-LUTHERAN MISSIONARY INSTITUTION.

PUBLISHED AFTER THE AUTHOR'S DEATH

BY

WILLIAM GERMANN.

EVANG.-LUTH. MISSIONARY.

LEIPZIG:

F. A. BROCKHAUS.

1865.

TRANQUEBAR: MISSION PRESS.

UNIV BIBL TÜBINGEN

Ci XIV 93 a

PREFACE.

It is owing to circumstances beyond my control, that I am only now able to fulfil my promise, given in the preface to the third volume of my "Bibliotheca Tamulica," which appeared as early as 1856. I hope, however, that the long delay has rather benefited the work, which I have now the pleasure of presenting to the friends of the Tamil language and literature.

The Tamil text of the Kural, which I here give, is principally based on the printed editions of Vethagirimutheliar, Saravanaperumaleijer, and Kuppeijar, and also on the old commentary of Parimelazhacher, as well as on the text which Beschi followed in his Latin translation of the first two books—both in manuscript. The different readings, which are, however, very few, are mentioned in the "Notes."

I have accompanied the High-Tamil text with a kind of translation into common Tamil. In preparing it I have availed myself of the Tamil commentaries of the above-mentioned V. and S., without however following them in a servile way. It does not by any means claim to the merit of a regular translation, but is calculated only to facilitate the study of the Kural for those who have hitherto read nothing but books in common Tamil. My plan therefore has been, in all cases where a commentary seemed necessary for an easier understanding of the text either to add in ( ), or at once to substitute the common Tamil word, grammatical form,

and construction in place of the High-Tamil. Words enclosed in [ ] are mere additions for the sake of making the meaning of the text, with its extreme shortness of expression, more intelligible.

The Latin translation is as faithful as possible; it is written in a succinct style, fitting the original as closely as possible, in order to enable the Tamil student to follow the Tamil text word for word. It is due to the Rev. Brotherton, Missionary of the Anglican Church in the Tamil country, and to Mr. Clarke, Secretary of the Royal Asiatic Society in London, that for the first two books I have been able always to consult the Latin translation by the famous Beschi, Roman-Catholic Missionary among the Tamils in the first part of the last century († 1747), which hitherto existed only in manuscript. Beschi's translation is rather paraphrastic and gives the Tamil conceptions a more or less Christian colouring. I had intended to subjoin the whole of it, but as it would have increased the price of the book without great advantage, I have confined myself to mentioning among the "notes" such deviations from my own translation as seemed important or interesting.

The glossary at the end of the book will, I think, be deemed sufficient, especially in connexion with the translation of the High-Tamil text into common Tamil. The notes by which it is preceded are chiefly grammatical. Notes explanatory of the contents are mixed with them and are also to be found scattered through the Tamil and Latin translations. For a fuller explanation of the contents I must refer the student to the third volume of my "Bibliotheca Tamulica." To the same work I must refer for a more

detailed account of the life of our poet, of the character and composition of his poem and the position it holds in the Tamil literature. Here I have given only what is absolutely necessary.— Considering the state of Tamil philology, it would be hazardous to attempt to define exactly the time in which Tiruvalluver lived; we can only say, that, in all probability, his age lies within the wide compass of 200 before and 800 after Christ. The history of his life is obscured by a cloud of fables, but it seems sufficiently certain that he was by birth of a rather low extraction and that by his poem in the purest Tamil he eclipsed the fame of the proud academicians of Madura, who then most probably gave an undue prominence to Sanscrit literature.

The Kural owes its name to the metre in which it is written, a kind of distich—with initial rhymes and alliterations—the first line of which usually consists of four feet, whereas the second line numbers but three. It has the three purushârtha's ("human aims") for its subject: virtue, property and love. The first book on "virtue" treats of "domestic" (chapt. 1—24) and of "ascetic" virtue (25—38). The second book on "property" is divided into three parts: the first part being devoted to the person of the king (39—63), the second to the requisites of a good government (64—95), among which the ministers of the state stand foremost (64—74); the third to some miscellaneous matters (96—108). The third book on "love"—which is occasionally taken also as an allegory, i. e. as the play (lîlâ) of the godhead with the loving soul— describes the different situations of clandestine (109—115) and of public (116—133) matrimony. It is clear then, that the first book

principally turns on moral, the second on political, the third on domestic matters.

The Kural breathes throughout the atmosphere of Buddhism or rather Jainaism (see the notes to the first chapter), although the Brahmins have thought fit to appropriate it to themselves by making Tiruvalluver an incarnation of Siva.

The monotheism taught in it is that of the later Buddhists or Jainas, who acknowledged an Âdibuddha or Âdîsvara, called sometimes even Âdideven "primordial god" (cf. LASSEN, *Indische Alterthumskunde* II, 2455, 1084; DUBOIS, *Description of the Character, Manners and Customs of the People of India*, p. 558—559; GRAUL'S *Translation of Sivanjânasittiar, Deutsche Morgenl. Gesellsch.* Vol. VIII, p. 727; WASSILJEW, *Der Buddhismus.* I, 134). Nothing is said about the dignity of Brahmins, who are not even mentioned by their exclusive official name; the real greatness of man is independent of birth, and rests on purely moral ground; among the four Brahmanical stages of life we see only those of the householder and of the ascetic treated of; the Brahmanical pantheon retreats to the background, and when made to advance on the stage, sometimes appears in the garb of allegorical figure, and sometimes even is lightly spoken of. Besides, the poet lavishes praise beyond measure on the ascetic life; absolute abstinence from destroying any animal life in a direct or indirect way (ahinsâ) is enforced, and only general rules for moral conduct are given, while no mention is made of any special caste-rules. Such is the character of the Kural and every single feature of it testifies to its essentially Buddhistic or Jainaistic spirit.

Thus much as a preface to this work, the fruit of more than twelve years' labour. My former attempts in the Tamil language and literature having met with the most kind reception on the part of Tamil scholars, even in the Tamil country itself, I firmly trust that this new attempt of the same description will find the same indulgence, especially when it is considered, that, living in the midst of Germany, as I do, I have not had the advantage of taking advice from anybody or of even being assisted in the correction of the proof-sheets.

If the Christian Mission is to extend its influence more and more to the educated classes of Tamil society, it must be one of the duties of its agents to master the ideal element in which those classes breathe and live—namely Tamil literature.

May then this humble work be blessed by the Head of the Church to form one of the stepping stones in aid of such Christian Missionaries, as sincerely wish to undertake the arduous, but indispensable task of climbing up to the literary strongholds of Tamil heathendom!

Dr. Graul.

So far the Author. But he was not allowed to see this book completed; of the first sheet only he saw a proof. It was on the 10. Nov. 1864, that the Lord delivered him from his wearisome long sufferings, when we had still cherished the hope of his being the first to represent the mission as a science at the German universities.

In what degree of completion he left this work may be judged from the fact that he had also written the preface. To enlarge the Notes—though not considerably—was all that he still intended to do, it being his purpose to treat on the relation between the Kural and the Sanscrit literature in a special treatise. On his dying-bed the Author committed the publication to the Editor, his latest scholar, with whom he had last read the Kural.

I have undertaken this labour with pleasure and, I hope, with that faithfulness which I owe my highly revered Teacher, trusting in that indulgence which the Author asked for himself, when he wrote: "Living in the midst of Germany, as I do, I have not had the advantage of taking advice from anybody or of even being assisted in the correction of the proof-sheets."

I have had the manuscript printed unchanged; the mistakes which may occur are only mine. However, I hope, it will easily be seen, that this work has not properly the character of an *opus posthumum*.

The late Dr. Graul brought all the energy of his mind to bear in the cause of Tamil mission; his affection for those people was such, that when sailing from Ceylon, he was deeply affected on seeing the last native Tamulian. May God abundantly bless the Tamil mission, which this book will also assist in advancing, so that the Author may meet many Christian brethren of the Tamil nation before the throne of the Most High!

LEIPZIG, June 30th, 1865.

W. GERMANN.

அறத்துப்பால்.

DE VIRTUTE.

I.

பாயிரம். கடவுள்வாழ்த்து. Introductio. Dei laus.

1. அகரமுதல வெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றே யுலகு (க)

எழுத்து (எழுத்துக்கள்) எல்லாம் அகரம் (ஆகிய) முதல (முதலையுடையன); உலகம் ஆதிபகவன் (ஆகிய) முதற்றே (முதலையுடைத்து.)

Literae omnes principium habent literam A; mundus principium habet numen primordiale.

2. கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழா அரெனின் (உ)

வாலறிவன் (மெய்யறிவினையுடையவனது) நல்ல தாளை (பாதத்தை) தொழாஅர் (தொழார்கள்) எனின் (ஆயின்), கற்றதினால்ஆய (உண்டாகிய) பயன் (பிரயோசனம்) என் (யாது)?

Discendo fructus quis, nisi verearis bonos pedes (numinis) pura scientia praediti?

3. மலர்மிசை யேகினான் மாணடிசேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார் (௩)

மலர் (பூ) மேல் எகினான் (சென்றவனது) மாண் (பெருமை பொருந்திய) அடியை சேர்ந்தவர் நிலம் (நிலத்துக்கு) மிசை (மேல்) நீடு (நெடுங்காலமாக) வாழ்வார்.

Qui adhaeserint augusto pedi illius, qui super florem (i. e. vel mundum, vel cor humanum afflatu numinis quasi apertum) graditur, supra terram diu vivent (antequam novam suscipiunt migrationem).

4. வேண்டுதல்வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்
கியாண்டுமிடும்பையில (௪)

வேண்டுதலும் (விரும்புதலும்) வேண்டாமையும் (விரும்பாமையும்) இலான் (இல்லாதவனது) அடியை சேர்ந்தவர்க்கு யாண்டும் (எந்நாளும்) இடும்பை (துக்கம்) இல்லை.

Qui adhaeserit pedi illius, qui cupiditate et aversione caret, ei nulla umquam erit afflictio.

5. இருள்சேரிருவினையுஞ் சேராவிறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு (௫)

இறைவன் (கடவுளது) பொருள் (மெய்மை) சேர்ந்த புகழை புரிந்தார் (விரும்பிச்சொல்லுகிறவர்) மாட்டு (இடத்து) இருள் (மயக்கம்) சேர்ந்த (நல்வினை தீவினை என்னும்) இரண்டு வினைகளும் சேரா (உண்டாகா).

Utraque áctio (sc. et bona et mala) cum tenebris (i. e. errore) juncta non se junget iis, qui colunt laudem numinis cum veritate junctam.

6. பொறிவாயிலைந்தவித்தான் பொய்தீரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார் (௬)

பொறிகளை (இந்திரியங்களை) வாயில் (வழிகளாக உடைய) ஐந்து (ஆசைகளையும்) அவித்தவனது பொய் தீரும் (அற்ற) ஒழுக்க நெறியிலே (வழியிலே) நின்றவர் நீடு வாழ்வார்.

Diu vivent, qui firmiter insistunt in via virtutis errori non obnoxia, (viam dico) illius qui quinque (sc affectus) via sensuum (incedentes) exstinxit.

7. தனக்குவமையில்லாதான் றாள்சேர்ந்தார்க்க
ல்லான்
மனக்கவலை மாற்றலரிது (௭)

தனக்கு உவமையில்லாதவனது தாளை சேர்நதவர்க்கு அல்லாமல் மனக்கவலையை மாற்றல் (நீக்குதல்) அரிது.

Iis tantum exceptis, qui pedibus illius, qui sibi similem non habet, adhaerent, (hominibus) animi curam transnatare (i. e. supcrare) difficile erit.

8. அறவாழியந்தணன் றாள்சேர்ந்தார்க்கல்லாற்
பிறவாழி நீந்தலரிது (௮)

அறவாழி (தருமக்கடலாகிய) அந்தணன் (கடவுளது) தாளை சேர்ந்தவர்க்கு அல்லாமல் பிற (வேறாகிய) ஆழியை (கடலை) நீந்தல் (கடத்தல்) அரிது.

Nisi adhaeseris pedi sapientis illius, qui mare virtutum est, alterum mare (sc. hujus vitae? — vitii?) trajicere difficile erit.

9. கோளில்பொறியிற்குணமிலவேயெண்குண
த்தான்
றாளை வணங்காத்தலை (௯)

எண்குணமுள்ளவனது தாளை வணங்காத தலைகள் — கோள் (புலன்களை க்கொள்ளுகை)இல் (இல்லாத பொறியின் (இந்திரியங்கள்போல்) குணமில (பிரயோசனமில்லாதவைகளாம்).

Ut sensus perceptione carens, ita caput, non venerans octo virtutibus praeditum (numen), virtute caret.

10. பிறவிப்பெருங்கடனீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேராதார் (௰)

[சேர்ந்தவர்] பிறவி (பிறப்பாகிய) பெரிய கடலை நீந்துவார்; இறைவனதுஅடியை சேராதவர் நீந்தார்.

(Ceteri) vastum ortus (iterati) mare trajicient; non trajieient, qui pedi numinis non adhaerent

II.

வான்சிறப்பு. Coeli pluentis praestantia.

11. வானின்றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்தமென்றுணரற் பாற்று (௧)

வான் (மழை) நின்று (நிற்க), — உலகம் வழங்கிவருகையினாலே [அம்மழை] தான் அமிழ்தம் என்றுணரப்படும் தன்மையை உடைத்து.

Cum pluvia permanente mundus procedat, ea naturam habet, ut pro nectare habenda sit.

12. துப்பார்க்குத் துப்பாயதுப்பாக்கித்துப்பார்க்குத்
துப்பாயதூஉமழை (௨)

துப்பவர்க்கு (உண்பவர்க்கு) துப்பாகிய (நன்மையாகிய) துப்பு (உணவை) ஆக்கி [அதை] துப்பவர்க்கு [தானும்] துப்பாயதும் (துப்பானதும் = உணவாக நிற்பதும்) — மழை.

Quod non modo comedentibus suavia alimenta subministrat, sed (ea) comedentibus (et ipsum) alimentum fit, id est pluvia.

13. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர்வியனுலகத்
துண்ணின்றுடற்றும்பசி (௩)

விண் (மேகம்) நின்று (பெய்யாமல்) பொய்க்குமாயின் விரிந்த நீரையுடைய வியன் (வியமான=பரந்த) உலகத்துள் பசி நின்று உடற்றும் (வருத்தும்).

Si nubes (in eoelo) sistens mentitur, fames sistens in vasta terra cum ingentibus aquis (i. e. oceano) vexabit.

14. ஏரினுழாஅருழவர் புயலென்னும்
வாரிவளங் குன்றிக் கால் (௪)

புயல் (மேகம்) என்னும் வாரி (வெள்ளம்) வளம் (பயன்) குன்றிக் கால் (குன்றும் போது) உழவர் ஏரினால் உழார் (உழமாட்டார்கள்).

Aratro non arabunt (agricolae), si nubis aquarum ubertas minuitur.

15. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற்
றாங்கே
யெடுப்பதூஉமெல்லா மழை (௫)
கெடுப்பதும் கெட்டவர்க்கு சார்வாகி (துணையாகி) மற்று ஆங்கே எடுப்பதும் எல்லாம் — மழை.
Id quod perdit et perditis auxilium ferendo iterum sublevat, — id omne pluvia.

16. விசும்பிற் றுளிவீழினல்லான்மற்றாங்கே
பசும்புற் றலைகாண்பரிது (௬)
விசும்பின் (மேகத்தினின்றும்) துளி வீழின் (விழுந்தால்) [காண்பது] அல்லால் (அல்லது) மற்று ஆங்கே பசும் புல்லினது தலையையும் காண்பு (காணுதல்) அரிது.
Nisi guttae e coelo ceciderint, tunc virentis herbae caput difficile erit cernere.

17. நெடுங்கடலுந் தன்னீர்மைகுன்றுந்தடிந்தெழிலி
தானல்காதாகி விடின் (௭)
எழிலி (மேகம்) தான் தடிந்து (முகக்கிறதினால் குறைத்து?) நல்காதாயின் (மழை பொழியாவிட்டால்) நெடிய கடலும் தன் நீர்மை (இயல்பு) குன்றும்.
Et ipsius spatiosi maris bonitas deficiet, nisi nubes (vapores) auferentes (imbrem) largiantur.

18. சிறப்பொடுபூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்குமீண்டு (௮)
வானம் [பெய்யாது] வறக்கும் ஏல் (ஆயின்) வானோர்க்கும் (தேவர்களுக்கும்) ஈண்டு (இங்கே) சிறப்போடு (திருவிழாவுடனே) பூசனை (பூசை) செல்லாது (நடவாது).
Sacra quotidiana cum sollemnibus, si coelum exsiccatur, et ipsis coelestibus in hac terra non procedent.

19. தானந்தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்காதெனின் (௯)
வானம் (மழை) வழங்காதாயின் வியன் (வியமான = விரிந்த) உலகத்திலே தானமும் தவமும் [ஆகிய] இரண்டும் தங்கா.
Et largitio et castimonia corporis in spatioso orbe manere non poterunt, nisi coelum largiatur.

20. நீரின்றமையாதுலகெனின் யார்யார்க்கும்
வானின்றமையாதொழுக்கு (௰)
நீர் இன்று (இல்லாமல்) — யார்யார்க்கும் உலகு (உலகியல்) அமையாது எனின் (செல்லாதாயின்), ஒழுக்கமும் — வான் (மழை) இன்று (இல்லாமல்) — அமையாது.
Si mundus (occupatio mundana) sine aqua nemini prospere procedit, ordo (mundi) sine pluvia non procedet.

III.

நீத்தார் பெருமை. Ascetarum magnitudo.

21. ஒழுக்கத்துநீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு (க)

பனுவல் (நூல்களது) துணிவு (நிச்சயம்) ஒழுக்கத்து (ஒழுக்கத்திலேநின்று) நீத்தவரது (துறந்தவரது) பெருமையை விழுப்பத்து (மேலானபலபொருள்களுள்ளும்) வேண்டும் (விரும்பும்).

Majestatem poenitentium a suo instituto non aberrantium ut omnium maximum decus auctorum decretum desiderat.

22. துறந்தார்பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண்டற்று (உ)

துறந்தவருடைய பெருமையின் துணையை (அளவை) கூறினால், வையத்து (உலகத்தில்) இறந்தவரை (செத்தவரை) எண்ணிக் கொண்டால் போலும்.

Si modum majestatis poenitentium pronunties, perinde est ac si numeres in terra mortuos.

23. இருமைவகைதெரிந்தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்றுலகு (ங)

[பிறப்பு வீடென்னும்] இருமையின் வகை தெரிந்து ஈண்டு (இப்பிறப்பிலே) அறத்தை பூண்டவரது (கொண்டவரது) பெருமை உலகிலே பிறங்கிற்று (உயர்ந்தது).

Qui duorum statuum (i. e. ortus et liberationis) conditionem scientes in hac vita virtutem amplectuntur, eorum majestas in mundo splendet.

24. உரனென்னுந் தோட்டியானோரைந்துங் காப்பான்
வரனென்னும்வைப்புக்கோர்வித்து (ச)

உரன் (அறிவு) என்னும் தோட்டியான் (அங்குசத்தினால்) ஓர் ஐந்தையும் (ஐம்பொறிகளையும்) காப்பவன் வரம் (மோட்சம்) என்னும் வைப்புக்கு (நிலத்துக்கு) ஓர் வித்து (ஆவான்).

Qui stimulo, qui dicitur fortitudo (sapientia), quinque (sensus) traenat, is agro, qui dicitur „deliciae“, (i. e. coelo) semen est.

25. ஐந்தவித்தானாற்றலகல்விசும்புளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி (௫)

ஐந்தையும் அவித்தவனது ஆற்றலுக்கு (வல்லமைக்கு) அகன்ற விசும்பில் (ஆகாயத்தில்) உள்ளவர்களுக்கு கோமான் (தலைவனாகிய) இந்திரனே சாலும் (போதுமான) கரி (சாட்சி).

De potestate illius, qui quinque (affectus sensuum) exstinxit, Indra, rex eorum, qui immensum aetherem inhabitant, locuples testis est (quippe qui potestatem illam in se ipso expertus sit).

26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார் (௬)

செயற்கு (செய்தற்கு) அரியவைகளை செய்பவர் பெரியோர்; செய்தற்கு அரியவைகளை செய்யாதவர் சிறியோர்.

Qui factu difficilia faciunt, magni sunt; parvi, qui factu difficilia non faciunt.

27. சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு (௭)

உலகமானது சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமும் என்கிற ஐந்தின் வகை தெரிபவன் கட்டே (இடத்ததே).

Qui rationem quinque illorum, quae dicuntur gustus visus tactus auditus olfactus, distincte novit, in eo mundus continetur.

28. நிறைமொழிமாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (௮)

நிறைகின்ற மொழியையுடைய மனிதரது (முனிவரது) பெருமையை (அவர்களது) மறை மொழி (மந்திரம்) காட்டிவிடும்.

Magnitudinem hominum verbi numquam irriti verbum arcanum (sive maledicens sive benedicens) ostendet.

29. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தலரிது (௯)

குணம் என்னும் குன்று (மலையின்மேல்) எறி நின்றவரது வெகுளி (கோபமானது) கணமாயினும், காத்தல் அரிது.

Qui montem virtutis ascendentes in culmine consistunt, eorum iram etiamsi unum tantum temporis momentum duret, cavere difficile erit.

30. அந்தணரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான் (௰)

எவ்வுயிர்க்கும் (எல்லாவுயிர்களின் மேலும்) செந்தண்மையை (செவ்வையான அருளை) பூண்டு (மேற்கொண்டு) ஒழுகலான் (நடக்கையினால்), அந்தணர் என்போர் (என்றுசொல்லப்பட்டவர் (துறவு) அறவோர் (அறமுள்ளவர்).

Qui Antaṇar (i. e. pulchra lenitate praediti) vocantur, virtutem colunt (vel: qui virtutem colunt, Antaṇar vocantur), quia hi, in omne vivum pulchra lenitate induti, vitam agunt.

IV.

அறன் வலியுறுத்தல். Virtutis commendatio.

31. சிறப்பீனுஞ் செல்வமுமீனுமறத்தினூஉங்
காக்கமெவனோ வுயிர்க்கு (௧)

சிறப்பையும் ஈனும் (கொடுக்கும்) செல்வத்தையும் ஈனும்; (ஆதலால்) உயிர்க்கு அறத்தின் ஊங்கு (மேற்பட்ட) ஆக்கம் யாது?

Gloriam parit, felicitatem etiam parit; quodnam viventibus bonum est virtute majus?

32. அறத்தினூஉங்காக்கமுமில்லை யதனை
மறத்தலினூஉங் கில்லை கேடு (௨)

அறத்தின் ஊங்கு (மேற்பட்ட) ஆக்கமும் இல்லை; அதனை (அதை) மறத்தலின் ஊங்கு (மேற்பட்ட) கேடும் இல்லை.

Virtute majus emolumentum non est, nec majus damnum ejus oblivione.

33. ஒல்லும்வகையாலறவினை யோவாதே
செல்லும்வாயெல்லாஞ் செயல் (௩)

ஒல்லும் (கூடும்) வகையால் அறமாகிய வினையை ஓவாதே (இடைவிடாமல்) செல்லும வாய் (இடங்களினால்) எல்லாம் செய்க!

Quocumque poteris modo virtutis opera sine intermissione, ubicumque occasio se offert, perficere debes.

34. மனத்துக்கண்மாசிலனாதலனைத்தற
னாகுல நீர பிற (௪)

மனத்துக்கண் (மனதிலே) மாசிலன் (மாசில்லாதவன்) ஆதல் அனைத்தும் அறமே; பிற (மற்றவைகள்) ஆகுல (ஆரவார) நீரை (குணத்தை) உடையனவாம்.

In animo macula carere virtus est. Ccterum omne habet naturam inanis strepitus.

35. அழுக்காறவாவெகுளி யின்னாச்சொன்னான்கு
மிழுக்கா வியன்றதறம் (௫)

அழுக்காறும் (பொறாமையும்), அவாவும் (ஆசையும்) வெகுளியும் (கோபமும்) இன்னாத சொல்லும்[ஆகிய]இந்நான்கினையும்[பற்றி] இழுக்காது (வழுவாது) இயன்றது (நடந்தது) அறமாம்.

In his quatuor, invidia, cupiditate, ira et iniquis verbis, vestigio non falli, virtus est.

36. அன்றறிவாமென்னாதறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை (௬)

அன்று அறிவோம் என்னாது அறத்தை செய்க! அது பொன்றும் (இறக்கும்) கால் (போது) பொன்றாத (பிரியாத) துணை (உதவி).
„Cras sapiemus“, ita non dicens virtutem colas. (E vita) ubi abiturus es, illa comes numquam abitura.

37. அறத்தாறிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடூர்ந்தானிடை (௭)

சிவிகை பொறுத்தவனோடு (சுமந்தவனோடு) ஊர்ந்தவனிடத்தில் [கண்ணால் அறியப்படும் படியால்] அறத்தின் ஆறு (பயன்) இது என வேண்டுவதில்லை.
Qualis via virtutis sit, non opus est dicere; (cernere licet) in eo, qui in lectica gestatur et in bajulo, qui eum gestat. (Nam qui gestatur meriti in existentia priori conflati mercedem, bajulus demeriti poenam ostendit).

38. வீழ்நாள் படா அமை நன்றாற்றினஃதொருவன்
லாழ்நாள் வழியடைக்குங் கல் (௮)

ஒருவன் வீழும் (செய்யாமல் கழியும்) நாள் படாமல் நன்று ஆற்றின் (செய்தால்), அது வாழும் நாளது (பிறப்பின்) வழியை அடைக்கும் கல்லாம்.
Si nullum diem perdi patiens recte feceris, hic erit lapis, qui diei vitae viam occludet (i. e. qui impediet, quominus denuo nascaris).

39. அறத்தான்வருவதே யின்பமற்றெல்லாம்
புறத்த புகழுமில (௯)

அறத்தால் வருவதே இன்பமாகும்; மற்றெல்லாம் [இன்பத்திற்கு] புறத்த (புறம்பானவைகளாம்) புகழுடையனவுமல்ல.
Quae a virtute veniunt, deliciae sunt; cetera omnia sunt contraria et laude carent.

40. செயற்பாலதோருமறனே யொருவற்
குயற்பாலதோரும் பழி (௰)

செயல் பாலது (தன்மையது) அறனே; உயல் (ஒழிதல்) பாலது பழியே (தீவினையே).
Quod facere decet, virtus! Quod omittere decet, vitium!

V.

இல்வாழ்க்கை. Vita domestica.

41. இல்வாழ்வானென்பானியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றினின்ற துணை (க)

இல்லறத்தோடு கூடி வாழ்பவன் என்பான் (என்று சொல்லப்பட்டவன்) இயல்பினையுடைய மூவர்க்கும் [பிரமசாரிக்கும் வானப்பிரத்தனுக்கும் சன்னியாசிக்கும்] நல்லாற்றில் (நல்லொழுக்கவழியில்) நின்ற (நிலைபெற்ற) துணையாவான்.

Paterfamilias honestis (illis) tribus (i. e. sacrorum librorum studiosis, anachoretis, mendicantibus religiosis) in via bona constanti auxilio est.

42. துறந்தார்க்குந் துவ்வாதவர்க்குமிறந்தார்க்கு
மில்வாழ்வானென்பான் றுணை (உ)

துறந்தவர்க்கும் (ஆதாரமானவராலே விடப்பட்டவர்க்கும்) துவ்வாதவர்க்கும் (வறுமைப்பட்டவர்க்கும்) இறந்தவர்க்கும் (செத்துப்போனவர்க்கும்) இல்லறத்தோடு வாழ்பவனென்று சொல்லப்பட்டவன் துணையாவான்.

Paterfamilias orbatis, pauperibus et defunctis (manibus aquam spargendo) auxilio est.

43. தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கறானெ
ன்றாங்
கைம்புலத்தாறோம்ப றலை (ங)

தென்புலத்தாரும் (பிதிரரும்) தெய்வமும் விருந்தும் ஒக்கலும் (சுற்றத்தாரும்) தானும் என்று சொல்லப்பட்ட ஐம்புலத்து (ஐந்திடத்து) ஆறு (ஆற்றை) ஓம்பல் தலையாம்.

In hos quinque, in Manes, in Deum, in hospitem, in consanguineos et in se ipsum morem traditum diligenter observare, hoc caput est.

44. பழியஞ்சிப்பாத்தூணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சலெஞ்ஞான்றுமில் (ச)

வாழ்க்கை பழிக்கு அஞ்சி பாத்து (பங்கிட்டு தான்) ஊணை (உண்ணுதலை) உடையதானால், வழி (சந்ததி) எஞ்சல் (குறைதல்) எஞ்ஞான்றும் (எப்போதும்) இல்லை.

Conjugio, quod peccatum timens, aliis impertiens, cibo utitur, progeniei defectus numquam erit.

45. அன்புமறனுமுடைத்தாயினில்வாழ்க்கை
பண்பும் பயனுமது (ரு)

இல்வாழ்க்கை அன்பினையும் அறத்தினையும் உடையதானால் அது [அவ்வில்வாழ்க்கைக்கு] பண்பும் (குணமும்) பயனும் (பிரயோசனமும்) ஆம்.

Si conjugium amorem et virtutem habet, hoc et natura ejus erit et fructus.

46. *அறத்தாற்றினில்வாழ்க்கையாற்றிற் புறத்தாற்றிற்*
போஒய்ப் பெறுவதெவன் (௬)

[ஒருவன்] இல்வாழ்கையை அறத்தாற்றின் (அறமாகிய ஆற்றில்) ஆற்றினால் (செலுத்துவானானால், அதற்கு) புறத்தாற்றில் (புறமாகிய ஆற்றில் = துறவறத்தில்) போய் பெறுவது யாது?

Si via virtutis conjugium geris, viam externam (i. e. vitam anachoretae) ineundo, quid (majus) poteris assequi?

47. *இயல்பினானில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்*
முயல்வாரு ளெல்லாந் தலை (௭)

இயல்போடு இல்வாழ்க்கையிலே வாழ்பவன் என்று சொல்லப்பட்டவன் முயல்பவர் (தவஞ்செய்பவர்) எல்லாருள்ளும் தலையாவான்.

Qui bene se gerit in conjugio, is omnium qui vires contendunt (i. e. qui corpus castigant) caput est.

48. *ஆற்றினொழுக்கியறனிழுக்காவில்வாழ்க்கை*
நோற்பாரினோன்மை யுடைத்து (௮)

[தவஞ்செய்பவரை] ஆற்றிலே (வழியிலே) ஒழுக்கி (நடத்திதானும்) அறத்தினின்றும் இழுக்காத (தவறாத) இல்வாழ்க்கையானது [தவஞ்செய்து] நோற்பவரை பார்க்கிலும் நோன்மையை (பொறுமையை) உடையதாம்.

Conjugium, quod (alios) in viam deducens (ipsum) a virtute numquam aberrat, continentiam habet prae continentibus.

49. *அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை யஃதும்*
பிறன்பழிப்பதில்லாயினன்று (௯)

அறம் என்னப்பட்டது இல்வாழ்க்கையே; அதுவும் (தவமும்), பிறனால் பழிக்கப்படுவது இல்லாயின் (இல்லாதிருந்தால்), நன்றாம்.

Quae virtus dicitur, est vita conjugalis; altera etiam, si non est, quod ab aliis reprehendatur, bona erit.

50. *வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறை*
யுந்
தெய்வத்துள் வைக்கப் படும் (௰)

வையத்துள் வாழ்வு ஆங்கு (இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால்) வாழ்பவன் வானத்தில் உறையும் (இருக்கும்) தெய்வத்துள் வைக்கப்படுவான்.

Qui his in terris conjugio convenienter vitam ducit, is ad deos, in coelo habitantes, tolletur.

VI.

வாழ்க்கைத்துணை நலம். Uxoris bonitas.

51. மனைத்தக்கமாண்புடையளாகித்தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (க)

மனைக்கு தக்க மாண்பு (மாட்சிமையை) உடையவளாகி தன்னை க்கொண்டவனது (புருடனது) வளத்திற்கு (வரவுக்கு) தக்கவள் வாழ்க்கைக்கு துணையாவாள்.

Quae vitae domesticae aptis virtutibus excellens ad fortunam conjugis se accommodat, ea felicitatis domesticae adjutrix est.

52. மனைமாட்சியில்லாள்கணில்லாயின்வாழ்க்கை
யெனைமாட்சித்தாயினுமில் (உ)

மனையின் மாட்சி இல்லாள் (மனையாள்) கண் (இடத்தே) இல்லையாயின், வாழ்க்கை எவ்வளவு மாட்சியை உடையதாயினும் [அம்மாட்சி] இல்லை.

Si uxori desit virtus domestica, quotcumque virtutes vita domestica habeat, nullae sunt.

53. இல்லதெனில்லவண் மாண்பானாலுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை (௩)

இல்லவள் (இல்லாள்) மாண்பானால் (மாண்பையுடையவளாயிருந்தால்), இல்லது (இல்லாதது) என் (யாது)? இல்லாள் மாணாத கடை (இடத்து), உள்ளது யாது?

Quid deerit, si uxor excellat; quid aderit, si non excellat?

54. பெண்ணிற்பெருந்தக்க யாவுளகற்பென்னுந்
திண்மையுண்டாகப் பெறின் (௪)

கற்பென்னுந்திண்மை (திடம்) உண்டாக பெற்றால், பெண்ணை பார்க்கிலும் பெருந்தக்க (மாட்சிமையுள்ளவைகள்) எவை உள (இருக்கின்றன).

Muliere quid praestantius, si obtinuerit, ut castitatis vis exoriatur.

55. தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழு
வாள்
பெய்யெனப் பெய்யுமழை (௫)

தெய்வத்தை தொழாதவளாகி கொழுநனை (புருடனை) தொழுது [நித்திரை விட்டு] எழுந்திருப்பவள், பெய் என்று சொல்ல, மழை பெய்யும்.

Quae non deum adorans, sed conjugem, lecto surgit, si dicat „cadat pluvia“, pluvia cadet.

56. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் (௬)

தன்னை காத்து, தன்னை கொண்டவனை பேணி, தகை சான்ற சொல்லை (புகழை) காத்து சோர்வில்லாதவள் பெண்ணாவாள்.

Quae se ipsam custodiens, conjugem curans, famam magnitudine plenam servans, segnitia caret, ea est uxor.

57. சிறைகாக்குங் காப்பெவன் செய்யுமகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை (௭)

சிறை [பெண்களை] காக்கும் காப்பு எதை செய்யும்? மகளிர் (பெண்களது) நிறை (கற்பு) காக்கும் காப்பே தலையாம்.

Custodia, quam claustra faciuut, quid proderit? quam facit virtus mulierum, ea praecipua custodia est.

58. பெற்றார் பெறிற்பெறுவர் பெண்டிர் பெரு
ஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழுமுலகு (௮)

பெண்டிர்(பெண்கள்) தம்மை [உண்மையாக] பெற்றவரை பெறின் (பெறுவார்களாயின்), புத்தேளிர் (தேவர்) வாழும் உலகத்திலே பெரும் சிறப்பை பெறுவார்கள்.

Mulier, si obtinuerit, qui ipsam obtinuit (i. e. vel simpliciter conjugem vel emphatice conjugem, qui re vera ipsam possidet) in mundo, in quo vivunt dei, magnam gloriam obtinebit.

59. புகழ்புரிந்தில்லிலோர்க்கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை (௯)

புகழை புரிந்த (விரும்பிய) இல் (மனையாள்) இலோர்க்கு (இல்லாதவர்க்கு) இகழ்பவர்க்குமுன் எறு (ஆண்சிங்கம்) போலும் பீடு (பெருமித) நடை இல்லை.

Cui non est uxor, laudem diligens, ei non est incessus tamquam leonis coram vituperatoribus.

60. மங்கலமென்ப மனைமாட்சி மற்றத
னன்கலனன்மக்கட் பேறு (௰)

மனையாளது மாட்சியை மங்கலம் என்ப (என்று சொல்லுவார்கள்); மற்று நல்ல மக்களை பெறுதல் அதன் (அதற்கு) நல்ல கலன் (ஆபரணமாம்).

Uxoris pracstantiam magnum bonum dicunt; pulchrun ei ornamentum addit bonorum liberorum procreatio.

VII.

புதல்வரைப் பெறுதல். Filiorum procreatio.

61. *பெறுமவற்றுள் யாமறிவதில்லையறிவறிந்த*
மக்கட்பேறல்ல பிற (௧)

பெறுமவற்றுள் (பெறும் பேறுகளுள்) அறிவை அறிந்த மக்களை பெறுதலையே அல்லது நாம் பிற [பேறுகளை] அறிவதில்லை.

Inter possidenda aliud praeter possessionem filiorum, qui scienda sciunt, nescio.

62. *எழுபிறப்புந் தீயவை தீண்டாபழிபிறங்காப்*
பண்புடை மக்கட் பெறின் (௨)

பழி பிறங்காத (தோன்றாத) பண்பையுடைய மக்களை பெற்றால் எழு [வகைப்பட்ட] பிறப்பிலும் தீயவைகள் தீண்டா.

Mala „septem ortuum" te non tangent, si genueris bonos filios, in quibus culpa non apparet.

63. *தம்பொருளென்ப தம் மக்களவர்பொரு*
டந்தம் வினையான் வரும் (௩)

தம்முடைய மக்களை தம்முடைய பொருள் என்று சொல்லுவார்கள் [ஏனெனில்] அவர்களுடைய பொருள் தம்தம் வினையால் (தம்மை நோக்கி அவர் செய்யும் கருமத்தினால்) வரும்.

Filios suos bona sua vocant (sc. sapientes); filiorum (enim) bona operibus, (quae) respectu ipsorum (parentum fiunt), ad ipsos (parentes) redeunt.

64. *அமிழ்தினுமாற்ற வினிதே தம் மக்கள்*
சிறுகை யளாவிய கூழ் (௪)

தம்முடைய மக்களது சிறிய கைகள் அளாவின (அளைந்த) கூழ் (சோறு) அமிர்தத்திலும் ஆற்ற (மிகவும்) இனிது.

Cibus proprii filioli manicula pertractatus (parenti) multo dulcior est nectare.

65. *மக்கண்மெய்தீண்டலுடற்கின்பமற்றவர்*
சொற்கேட்டலின்பஞ் செவிக்கு (௫)

மக்களது மெய்யை (உடம்பை) தீண்டல் உடலுக்கு இன்பமாகும்; மற்று அவர்களுடைய் சொல்லை கேட்டல் செவிக்கு இன்பமாகும்.

Corpori voluptas est corpus filii tangere, auri voluptas ejus verba audire.

66. குழலினிதியாழினிதென்ப தம் மக்கண்
மழலைச்சொற் கேளாதவர் (௬)

மக்களது மழலையாகிய சொல்லை கேளாதவர்கள் குழல் இனிது யாழ் (வீணை) இனிது என்பார்கள்.

„Dulcis fistula, dulcis cithara“ ita dicent, qui filioli sui primam vocem non audiverunt.

67. தந்தைமகற்காற்று நன்றியவையத்து
முந்தி யிருப்பச் செயல் (௭)

தந்தை மகனுக்கு ஆற்றும் (செய்யும்) நன்றியாவது அவையத்தில் (சபையினிடத்து) முந்தியிருக்க செய்தலாம்.

Favor a patre filio praestandus est cfficere, ut in coetu (doctorum) praesideat.

68. தம்மிற்றம்மக்களறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கெல்லாமினிது (௮)

தம்மின் (தங்களை பார்க்க) தங்கள் மக்கள் அறிவுடைமை (அறிவுடையராயிருக்கையே) மாநிலத்தில் மன்னும் (நிலைபெற்ற) உயிர்களுக்கு எல்லாம் இனிதாகும்.

Filios se ipsis sapientiores esse, quicumque in amplis terris constituti vitam agunt, dulce judicant.

69. ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக்கேட்ட தாய் (௯)

தன் மகனை சான்றவன் என்று கேட்ட தாயானவள் ஈன்ற (பெற்ற) பொழுதிலும் பெரிதாக உவப்பாள் (மகிழ்வாள்).

Majori gaudio, quam cum pareret, effertur mater, quae audit filium perfectum (sapientem) vocari.

70. மகன்றந்தைக்காற்றுமுதவியிவன் றந்தை
யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல் (௰)

தந்தைக்கு ஆற்றும் உதவியாவது — இவன் தந்தை என்ன நோற்றான் கொல் (என்ன தவத்தை செய்தானோ) என்னும் சொல் (சொல்லை உண்டாக்குதலாம்).

Remuneratio, quam filius debet patri, haec est, quod (admirantes) dicunt „istius pater quam acerbam castimoniam sustinuit!“

VIII.

அன்புடைமை. Amor.

71. அன்பிற்குமுண்டோவடைக்குந்தாழார்வலர்
புன்கணீர் பூசறரும் (க)

அன்பினுக்கும் அடைக்கும் தாழ் உண்டோ? ஆர்வலரது (அன்புடையவரது) புல்லிய கண்ணீரே பூசல் தரும் (எல்லாரும் அறிய தூற்றும்).

Estne etiam amori occludens sera? Lacrimula amantis eum foras proferet.

72. அன்பிலாரெல்லாந் தமக்குரியரன்புடையா
ரென்புமுரியர் பிறர்க்கு (உ)

அன்பில்லாதவர் எல்லாவற்றிஞலும் தமக்கே உரியவராவர்; அன்புடையவர் பிறருக்கு என்பிஞலும் (எலும்பிஞலும்) உரிய வராவார்.

Amore vacui omuia possident sibi; amore pleni et ipsa *ossa* possident ceteris.

73. அன்போடியைந்த வழக்கென்பவாருயிர்க்
கென்போடியைந்த தொடர்பு (ங)

ஆர் (அரிய) உயிர்க்கு என்போடு இயைந்த (உண்டாகிய) தொடர்பை (சம்பந்தத்தை) அன்போடு இயைந்த வழக்கு (நடைபடி) என்பார் [இத்தொடர்ச்சிக்கு பயன் அன்புடைமையே].

Cum amore junctam vitam (i. e. in vitam cum amore junctam tendere) dicunt societatem, qua cum corpore jungitur cara anima.

74. அன்பீனுமார்வமுடைமை யதுவீனு
நண்பென்னுநாடாச்சிறப்பு (ச)

அன்பானது [பிறரிடத்து] ஆர்வமுடைமை (ஆசையை) ஈனும் (தரும்); அது நண்பு (சிநேகம்) என்னும் நாடாத சிறப்பை ஈனும்.

Amor parit desiderium, illud vero parit amicitiae decus non pervestigandum.

75. அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்ருரெய்துஞ் சிறப்பு (ரு)

அன்புற்று அமர்ந்த வழக்கை வையகத்தில் (இவ்வுலகத்தில்) இன்புற்றவராகி [விண்ணுலகத்தில்] எய்தும் (அடையும்) சிறப்பு என்பார் [இந்த சிறப்பு அந்த வழக்கின் பயனே].

Cum amore junctam vitam dicunt — post jucunde hic actam vitam — nanciscendam gloriam (i. e. cum amore juncta vita per se ipsa mercedem hăbet et in hoc et in illo mundo).

76. அறத்திற்கேயன்பு சார்பென்ப வறியார்
மறத்திற்குமஃதே துணை (௬)

அறியாதவர் அறத்திற்கே அன்பு சார்பு (துணை) என்பார்; மறத்திற்கும் (கோபத்திற்கும்) அது துணையாகும்.

Amorem clementiae adjutorem dicunt imperiti: etiam irae (in amicis corrigendis) adjutor est.

77. என்பிலதனை வெயிற்போலக் காயுமே
யன்பிலதனை யறம் (௭)

என்பில்லாததை வெயில் (சுடுதல்) போல அன்பில்லாததை அறம் (அறக்கடவுள்) காயும் (சுடும்).

Ut sol adurit quod ossibus caret (velut formicae in regionibus soli vicinis), ita justitia (divina) quod amore caret.

78. அன்பகத்தில்லாவுயிர்வாழ்க்கைவன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த்தற்று (௮)

அகத்தில் அன்பில்லாத உயிர் வாழ்தலானது வன்பாலில் (பாலை நிலத்தில்) வற்றல் (உலர்ந்த) மரமானது தளிர்த்தால் போலும்.

Vita ejus, qui in mente amorem non habet, perinde est, ac si in terra saxosa sicca arbor gemmas ageret.

79. புறத்துறுப்பெல்லாமெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப்பன்பிலவர்க்கு (௯)

யாக்கை (உடம்பின்) அகத்திலே [நின்ற] உறுப்பு (அங்கமாகிய) அன்பில்லாதவர்க்கு புறத்திலே [நின்ற] உறுப்பு எல்லாம் எதை செய்யும்?

Externa membra quid proderunt, si desit internum corporis membrum — amor?

80. அன்பின்வழியதுயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு (௰)

அன்பின் வழியது (வழிநின்றது) உயிர்நிலை (உயிர்நின்றது); அது (அன்பு) இல்லாதவருக்கு எலும்பு தோல் போர்த்த உடம்புகள் இருக்கும் [அன்பில்லாத உடம்பு உயிரில்லாத உடம்பாகும்].

Quod amoris via incedit, sedes vitae (i. e. hominis vera anima) est; corpora vero eorum, qui amore carent, sunt ossa pelle cooperta.

IX.

விருந்தோம்பல். Hospitalitas.

81. இருந்தோம்பியில்வாழ்வதெல்லாம்விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (க)

[வீட்டில்] இருந்து ஓம்பி (பொருளை காப்பாற்றி) இல்லினிடத்தே வாழ்வதெல்லாம் — விருந்தை ஓம்பி வேளாண்மையை (உபகாரத்தை) செய்தல் பொருட்டாம்.

Omnis vita domestica, qua quis (domi) manens (rei familiari) consulit, hunc habet finem, ut hospitibus consulatur, beneficia conferantur.

82. விருந்துபுறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று (உ)

சாவாத மருந்து (அமிர்தம்) ஆயினும், விருந்து புறத்து இருக்க, தானே உண்ணுதல் — வேண்டல் பாலது (விரும்பும் தன்மையுடையது) அன்று.

Dum hospes foris versatur, intus solum edere, etiamsi sit ambrosia, non desiderandum est.

83. வருவிருந்துவைகலுமோம்புவான்வாழ்க்கை
பருவந்து பாழ்படுதலின்று (ங)

வந்த விருந்தை வைகலும் (நாளுநாளும்) ஓம்பிவருபவனது வாழ்க்கையானது பருவந்து (வருந்தி) பாழ்படுதல் (கெடுதல்) இன்று (இல்லை).

Qui venientes hospites quotidie benigne excipit, ejus domus afflictionem et ruinam non patietur.

84. அகனமர்ந்துசெய்யாளுறையுமுகனமர்ந்து
நல்விருந்தோம்புவானில் (ச)

செய்யாள் (இலக்குமி) முகம்அமர்ந்து (மகிழ்ந்து) நல்ல விருந்தினரை ஓம்பிவருபவனது வீட்டினிடத்தே அகம் (மனம்) அமர்ந்துஉறையும் (வாசம் பண்ணுவாள்).

Qui laeto vultu bonum hospitem curat, in ejus domo dea felicitatis laeto animo morabitur.

85. வித்துமிடல்வேண்டுங்கொல்லோவிருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம் (ரு)

விருந்தை ஓம்பி மிச்சிலை (எச்சிலை) மிசைபவனது (உண்பவனது) புலம் (விளைநிலமானது) விதையும் இடுதல் வேண்டுமோ?

Numquid opus erit, ut semen etiam spargatur in agro illius, qui, postquam providerit hospiti, quod superest, comedit ipse?

86. செல்விருந்தோம்பிவருவிருந்துபார்த்திருப்பா
னல்விருந்து வானத்தவர்க்கு (௬)

செல்லும் விருந்தை ஓம்பி வரும விருந்தை பார்த்திருப்பவன் வானத்திலுள்ளவர்க்கு நல்ல விருந்தாவான்.

Qui hospiti jam abituro prospiciens, venturum exspectat, is coelestibus gratus erit hospes

87. இனைத்துணைத்தென்பதொன்றில்லைவிருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன் (௭)

வேள்வியின் பயன் இன்ன துணையை. (அளவை) உடையது என்பதாகிய ஒன்றுஇல்லை; விருந்தினது துணையே துணையாம்.

Fructus beneficiorum hospitalium non est, de quo dici possit: hanc mensuram habet; mensura hospitis ejus mensura est.

88. பரிந்தோம்பிப்பற்றற்றேமென்பார்விருந்தோம்பி
வேள்வி தலைப்படாதார் (௮)

விருந்தை ஓம்பி வேள்வி தலைப்படாதவர்கள் — பரிந்து (வருந்தி) ஓம்பியும் (பொருளை காத்தும்) பற்று (ஆதரவு) அற்றவர்களாயிருக்கிறோம் — என்பார்கள்.

(Rei familiari) multo labore prospeximus, et nunc spe caremus. Ita dicent, qui non prospicientes hospitibus officia hospitalia praetermittunt.

89. உடைமையுளின்மைவிருந்தோம்பலோம்பா
மடமை மடவார்கணுண்டு (௯)

விருந்து ஓம்பலை ஓம்பாத (இகழும) மடமை (பேதைமையானது) உடைமையுள் இன்மையாம்; [அது] மடவாரிடத்தே உண்டு.

Paupertas in (mediis) divitiis est stultitia, quae curam hospitis non curat; in stultis (tantum) reperitur.

90. மோப்பக்குழையுமனிச்சமுகந் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (௰)

மோந்தால் — அனிச்சமானது குழையும் (வாடும்); முகம் திரிந்து நோக்கினால் — விருந்து குழையும்.

Si nares admoves, marcescet flos Anitscha: convivium (conviva?) marcescet, si vultum mutans adspicis.

X.

இனியவைகூறல். Dulcia loqui.

91. இன்சொலாலீரமளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள்கண்டார்வாய்ச் சொல் (க)

இனிய சொற்களாவன ஈரம்அளைந்து (அன்போடு கலந்து) படிறு (வஞ்சனை) இல்லாதனவாயிருக்கிற செம்பொருளை (அறத்தை) கண்டவரது வாயின் சொற்களே.

Dulcis sermo est is, qui lenitate temperatus, a fraude alienus, ore eorum profertur, qui „pulchrum bonum“ comtemplati sunt.

92. அகனமர்ந்தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொலனாகப் பெறின் (உ)

முகம் அமர்ந்து (மலர்ந்து) இனிய சொல்லையுடையவனாக பெற்றால், [அது] அகம்அமர்நது ஈதலினும் (கொடுத்தலினும்) நல்லதாம்.

Si (a te) impetras, ut laeto vultu dulcia loquaris, melius est, quam laeto animo largiri.

93. முகத்தானமர்ந்தினிது நோக்கியகத்தா
மின்சொலினதே யறம் (ங)

அறமானது முகத்தால்அமர்ந்து இனிதாக நோக்கி அகத்துடன் ஆகிய இனிய சொல்லை உடையதே.

Hilari vultu, suavi obtutu, ex animo dulcia loqui, haec virtus est.

94. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉமின்சொலவர்க்கு (ச)

யார்மாட்டும் (எல்லாரிடத்தும்) இன்புறும் (இன்பத்தை உண்டாக்குகின்ற) இனிய சொல்லை உடையவர்கரு துன்புறும் (துன்பத்தை உண்டாக்குகின்ற) துவ்வாமை (வறுமை) இல்லை.

Qui erga quoslibet dulcia verba, jucunditatis plena, habet, ei paupertas, doloris plena, non erit.

95. பணிவுடையனின்சொலனாதலொருவற்
கணியல்ல மற்றுப் பிற (ரு)

ஒருவனுக்குஅணி (ஆபரணமாவது) பணிவு (வணக்கம்) உடையன் (உடையவனாகி) இன்சொலன் (இனிய சொல்லையுடையவன்) ஆதலாம்; பிறஅணி அல்ல.

Animo submisso dulci sermone uti, cuique ornamentum! alia (vel aliena sc. ornamenta) non ita.

96. அல்லவை தேய வறம் பெருகு நல்லவை
நாடி யினிய சொலின் (௬)

நல்லவற்றை நாடி இனியவற்றை சொன்னால் அல்லவை (பாவங்கள்) தேய (குறைய) அறம் பெருகும்.

Si benigna meditans dulcia loqueris, vitiis decrescentibus, virtus crescet.

97. நயனீன்றுநன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல் (௭)

பயனை ஈன்று (உண்டாக்கி) பண்பினின்றும் தலைப்பிரியாத (நீங்காத) சொல்லானது நயனை ஈன்று நன்றியை பயக்கும் (தரும்).

Verba, quae utilitatem pariunt et a bona indole non discedunt, virtutem parient et salutem producent.

98. சிறுமையுணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையுமின்பந் தரும் (௮)

சிருமையினின்று நீங்கிய இனிய சொல்லானது மறுமையிலும் இம்மையிலும் இன்பத்தை தரும்.

Sermo dulcis, ab indignitate alienus, et in altera vita et in hac voluptatem afferet.

99. இன்சொலினிதீன்றல் காண்பானெவன்
கொலோ
வன்சொல் வழங்குவது (௯)

இனிய சொல்லானது இனிதை ஈன்றலை (தருதலை) காண்பவன் வன்சொல்லை (கடுஞ்சொல்லை) வழங்குவது (சொல்வது) என்ன?

Qui cognovit, dulcia verba dulcia parere, cur dura verba largietur?

100. இனியவுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று (௰)

இனியவை உண்டாயிருக்க இன்னாதவைகளை கூறுதல்—கனி இருக்க காயை கவர்ந்தற்று (சாப்பிட்டால் போலும்).

Dum dulcia praesto sunt, acerba loqui perinde est ac acerbos fructus edere, cum matura praesto sint.

XI.

செய்ந்நன்றியறிதல். Grata beneficiorum memoria.

101. செய்யாமற்செய்த வுதவிக்கு வையகமும்
வானகமுமாற்றலரிது (௧)

செய்யாமல் (தனக்கு முன் ஒன்றாகிலும் செய்யாதிருக்க) செய்த உதவிக்கு வையகமும் வானகமும் மாற்றல் அரிதாம் (பூமியையும் வானத்தையும் கைம்மாறாக கொடுத்தல் போதாது).

Beneficium sine beneficio (ante recepto) collatum vix coelum et terra remunerari poterunt.

102. காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது (௨)

[ஒருவனுக்கு துன்பம் வந்த] காலத்திலே செய்த நன்றி — சிறிதாகிலும் — ஞாலத்தினும் (உலகத்தினும்) மாண (மிக) பெரிதாயிருக்கும்.

(Opportuno) tempore collatum beneficium, quamvis parvum sit, mundo ipso multo majus erit.

103. பயன்றூக்கார்செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது (௩)

பயனை தூக்காதவராய் (ஆராயாதவராய்) செய்த உதவியாகிய நயனைதூக்கின் [அதின்] நன்மை கடலினும் பெரிதாகும்.

Virtutem beneficii, quod non ponderato fructu conferatur, si ponderes, bonitas ejus ipso pelago major erit.

104. தினைத்துணைநன்றி செயினும்பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரிவார் (௪)

தினை துணையுள்ள நன்றியை செய்தாலும் பயனை தெரிவார் (அறிபவர்) பனை துணையுள்ளதாக கொள்வார்.

Quamvis milii grano par beneficium conferatur, qui fructum (grati animi?) noscunt, illud palmyrae arbori par judicabunt.

105. உதவிவரைத்தன்றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து (௫)

உதவியானது உதவியின் வரையை (அளவை) உடையதல்ல; உதவி செய்யப்பட்டவருடைய சால்பின் (மாட்சிமையின்) வரையை உடையதாம்.

Beneficium (collatum) mensura beneficii (referendi) non est; praestantia illius, qui beneficium accepit, ejus mensura est.

106. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு (௬)

மாசற்றவர் கேண்மையை (சினேகத்தை) மறவாதே; துன்பத்துள் துப்பானவர் (சகாயமானவர்) நட்பை துறவாதே (விடாதே).

Noli oblivisci benevolentiae eorum, qui labe carent; noli deserere amicitiam eorum, qui in rebus adversis praesto tibi erant.

107. எழுமையெழுபிறப்புமுள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு (௭)

தமது கண்களிலிருந்து விழும்அம் (நீரை) துடைத்தவரது நட்பினை எழுமையினையுடைய எழுப்பிறப்பிலும் உள்ளுவார்கள் (நினைப்பார்கள்).

Qui ab oculo cadentem lacrimam abstersit, ejus amicitiam per septiformes septem ortus (omnes) recordabuntur.

108. நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று (௮)

நன்றியை மறப்பது நன்றுஅல்ல; நன்றல்லதைஅன்றே (செய்த உடனே) மறப்பது நல்லது.

Bona oblivisci bonum non est; non bona statim oblivisci bonum est.

109. கொன்றன்னவின்னா செயினுமவர்செய்த
வொன்றுநன்றுள்ளக் கெடும் (௯)

கொன்று அன்ன (கொன்றால் போலும்) இன்னாதவற்றை செய்தாலும் — அவர் செய்த நன்றுஒன்றையே உள்ள (நினைக்க) — கெடும் (இல்லையாம்).

Si quis homicidio par maleficium in nos committat — simul ac unius tantum beneficii ab eo accepti meminerimus, illud evanescet.

110. எந்நன்றி கொன்றார்க்குமுய்வுண்டாமுய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (௰)

எந்நன்றியை (எந்த அறங்களை) கொன்றார்க்கும் (கெடுத்தவருக்கும்) உய்வு (ஈடேற்றம்) உண்டாம்; செய்த நன்றியை கொன்ற மகனுக்கு உய்வு இல்லை.

Etiamsi quis quodcumque bonum (in se) occiderit, ei salus est; hominibus, qui acceptum beneficium occidunt, salus non est.

XII.

நடுவுநிலைமை. Aequitas.

111. தகுதியெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின் (௧)

தகுதிஎன்னும் ஒன்று நன்றாகும்—[பகைவர்அயலோர் நட்பினர் என்னும்] பகுதியால் (இம்மூவகையோரிடத்தும்) பாற்பட்டு (முறைமையை காத்து) ஒழுக (நடக்க) பெற்றால்.

Pulchrum hoc unum est, quod convenientia dicitur; (fiet) si poteris servare rationem cuique conditioni convenientem.

112. செப்பமுடையவனாக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற்கேமாப்புடைத்து (௨)

செப்பத்தை (நடுவுநிலைமையை) உடையவனது ஆக்கமானது சிதைவு (கேடு) இன்றி (இல்லாமல்) எச்சத்திற்கு (சந்ததிக்கும்) ஏமாப்பை (உறுதியை) உடையதாம்.

Fortuna justi, sine ruina, posteris etiam firmitati erit.

113. நன்றேதரினு நடுவிகந்தாமாக்கத்தை
யன்றே யொழிய விடல் (௩)

நன்மையை தந்தாலும் நடுவை (நீதியை) இகந்து (இகத்தலால்) ஆம் (உண்டாகின்ற) ஆக்கத்தை அன்றே (அப்பொழுதே) ஒழிய விடு.

Quantumvis boni tibi afferat, fortunam, quae aequitatem migrando nascetur, statim abjicias.

114. தக்கார் தகவிலரென்பதவரவ
ரெச்சத்தாற் காணப்படும் (௪)

தக்கார் — தகவில்லாதவர் என்பது அவரவருடைய எச்சத்தால் (சந்ததியால்) காணப்படும்.

Aequusne an iniquus quis fuerit, cujusque progenie perspicuum erit.

115. கேடும்பெருக்கமுமில்லல்லநெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கணி (௫)

கேடும் பெருக்கமும் இல்லாதவை யல்ல (பழவினையால் முன்னே யாவர்க்கும் அமைந்து கிடந்தன), நெஞ்சத்தில் கோடாமையே (சாயாமையே) சான்றவர்க்கு அணியாகும்.

Pernicies et prosperitas non ex nihilo (sed ex merito atque culpa in vita priori conflato) oriuntur; (quare) animis non inclinari perfectis ornamentum est.

116. கெடுவல்யானென்பதறிக தன்னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின் (௬)

தனது நெஞ்சம் நடுவு ஒருவி (நீதியிலிருந்து நீங்கி) அல்ல (நீதியல்லாதவை) செய்தால், யான் (நான்) கெடுவேன் என்பது அறிக (அறிய கடவான்).

Si animus tuus aequitatem deserens, quod iniquum est fecerit, scias, hoc idem esse ac si dicas „peribo.“

117. கெடுவாகவையாதுலகநடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு (௭)

உலகம் (உயர்ந்தோர்) நடுவாக [நடந்து] நன்றியில் தங்கினவனது தாழ்வை (வறுமையை) கெடுவாக வையாது (நினையார்).

Qui aequitatem servans in virtute perseverat, ejus infortunium sapientes calamitatem non judicant.

118. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போலமை
ந்தொருபாற்
கோடாமை சான்றோர்க்கணி (௮)

[தன்னை] சமனாக செய்து சீர்தூக்கும் கோலை (துலா மரத்தை) போல் அமைந்து ஒரு பால் (பக்கத்திலே) கோடாமையே சான்றவர்கு அணியாம்.

Ad instar librae, quae pari momento quod justum est librat, cum tranquillitate in nullam partem inclinari, perfectorum ornamentum est.

119. சொற்கோட்டமில்லது செப்பமொருதலையா
வுட்கோட்டமின்மை பெறின் (௯)

உள்ளின் கோட்டமில்லாமையை ஒருதலையாக (உறுதியாக) பெற்றால், சொல்லின் கோட்டமில்லாததே செப்பமாகும்.

Quod in verbis non deflectit, rectum erit, — si (a te) impetraveris, ut (etiam) animus constanter non deflectat.

120. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின் (௰)

பிற பொருள்களையும் தம் பொருள்களை போல பேணி செய்தால், [அது] வாணிகம் (வியாபாரம்) செய்பவர்க்கு [நல்ல] வாணிகமாம்.

Illis, qui negotiantur, hoc est (vere lucrosum) negotium, si etiam aliena tamquam sua diligenter curant.

XIII.

அடக்கமுடைமை. Continentia.

121\. அடக்கமமரருளுய்க்குமடங்காமை
யாரிருளுய்த்து விடும் (௧)

அடக்கமானது அமரருள் (தேவருலகத்தில்) உய்க்கும் (செலுத்திவிடும்); அடங்காமை [பொறுத்தற்கு] அரிய இருளில் உய்த்து விடும்.

Continentia ad immortales perducit, incontinentia in spissas tenebras dejicit.

122\. காக்கபொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங்கில்லை யுயிர்க்கு (௨)

அடக்கத்தை பொருளாக காப்பாயாக! உயிர்க்கு அதனின் ஊங்கு (மேற்பட்ட) ஆக்கம் இல்லை.

Ut thesaurum custodi continentiam; nullum animae bonum ea majus.

123\. செறிவறிந்து சீர்மை பயக்குமறிவறிந்
தாற்றினடங்கப் பெறின் (௩)

அறிவை அறிந்து ஆற்றின் (நல்வழியால்) அடங்க பெற்றால் [நல்லவர் அந்த] செறிவை (அடக்கத்தை) அறிந்து சீர்மையை பயக்கும்.

Si cognoscenda cognita habens justa ratione te ipsum continere poteris, continentia illa cognita, gloriam tibi paries.

124\. நிலையிற்றிரியாதடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது (௪)

நிலையில் திரியாது (வேறுபடாமல்) அடங்கினவனது தோற்றம் மலையினும் மாண (மிக) பெரிதாம்.

Qui in statu suo immotus se ipsum continet, ejus species monte multo excelsior est.

125\. எல்லார்க்குநன்றும் பணிதலவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து (௫)

பணிதல் (தாழ்மையானது) எல்லாருக்கும் நன்றாகும்; அவருள்ளும் செல்வர்க்கே செல்வ தகைத்து (தகுதியை உடைத்து).

Submissio omnibus bona est; imprimis divitibus (verarum) divitiarum naturam habet.

126. ஒருமையுளாமைபோலைந்தடக்கலாற்றி
னெழுமையுமேமாப்புடைத்து (௬)

ஒருமையுள் (ஒருபிறப்பிலே) ஆமையை போல் ஐந்தினையும் அடக்கல் ஆற்றின் (அடக்க வல்லவன்ஆகின்) எழுமையும் (எழுபிறப்பும்) ஏமாப்பை (உறுதியை) உடையதாம்.

Si in una vita, testudinis instar, quinque (sensus) comprimas, vita septiformis (cf. 62) in tuto erit.

127. யாகாவாராயினு நாகாக்ககாவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (௭)

யாவையும் காவார் (காக்க மாட்டார்) ஆயினும், நாவை காப்பார்களாக! [அதனை] காவாத காலத்தில் — சொல் இழுக்குப்பட்டு (தவறி) — சோகாப்பர் (சோகப்படுவார்).

Quaecunque non custodias, linguam custodi! nisi custodias, verbum vestigio falletur, et tu dolorem patieris.

128. ஒன்றானுந்தீச்சொற் பொருட்பயனுண்டாயி
னன்றாகாதாகி விடும் (௮)

தீய சொற்களது பொருள்களாலே [வரும்] பயனானது — ஒன்றாகிலும் — [ஒருவனிடத்திலே] உண்டாமாயின் [அவனுக்குண்டான] நன்று [எல்லாம்] ஆகாது (தீது) ஆகிவிடும்.

Etiamsi unus tantum oriatur mali verbi fructus, bona (quaecunque) mala fient.

129. தீயினாற்சுட்டபுண்ணுள்ளாறுமாறாதே
நாவினாற் சுட்ட வடு (௯)

தீயினால் (நெருப்பினால்) சுட்ட புண்ணானது உள் (மனத்திலே?) ஆறும்; நாவினாலே சுட்ட வடுவானது ஆறாது.

Vulnus igne inustum intus sanabitur; non sanabitur nota, quam inussit lingua.

130. கதங்காத்துக்கற்றடங்கலாற்றுவான் செவ்வி
யறம்பார்க்குமாற்றி னுழைந்து (௰)

கதத்தை (கோபத்தை) காத்து கற்று அடங்கல் ஆற்றுபவனது செவ்வியை (சமயத்தை? அழகினை?) அறம் பார்க்கும்—[அவன்] ஆற்றில் (வழியில்) நுழைந்து.

Qui iram coercens sapienter sibi temperat, ejus aditum (pulchritudinem?) virtus circumspiciens in viam ejus irrepet.

XIV.

ஒழக்கமுடைமை. Boni mores.

131. ஒழுக்கம்விழுப்பந் தரலானொழுக்க
முயிரினுமோம்பப் படும் (க)

ஒழுக்கம் (ஆசாரமானது) விழுப்பத்தை (சிறப்பை) தருதலால், [அந்த] ஒழுக்கம் உயிரை பார்க்கிலும் ஓம்பப்படும் (காக்கப்படும்).

Boni mores quum dignitatem afferant, bonorum morum majorem curam habere debes quam vitae.

132. பரிந்தோம்பிக்காக்க வொழுக்கந்தெரிந்தோம்பித்
தேரினுமஃதே துணை (உ)

ஒழுக்கத்தை பரிந்து (வருந்தி) ஓம்பி (பேணி) காப்பாயாக! தெரிந்து (மற்றவைகளை ஆராய்ந்து) ஓம்பி தேர்ந்தாலும் அதே துணையாகும்.

Omni studio et cura morum bonitatem custodi! quamvis enim (in ceteris rebus) scientiam et curam adhibens ad perfectionem pervenias, illa auxilio (tibi erit).

133. ஒழுக்கமுடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும் (ஙு)

ஒழுக்கமுடைமையானது குடிமையாகும்; இழுக்கமானது (ஒழுக்கத்தினின்று தவறுதல்) இழிந்த பிறப்பாகிவிடும்.

Mores boni nobilitas generis sunt, mores corrupti sunt generis obscuritas.

134. மறப்பினுமோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும் (ச)

பார்ப்பான் (பிராமணன்) ஓத்தை (ஓதினதை) மறந்தாலும் — [ஓதி] கொள்ளலாம்; பிறப்பானது — ஒழுக்கம் குன்ற (குறைய) — கெடும்.

Etsi obliviscatur doctrinae, (iterum) discere poterit sapiens; bonitate morum deficiente, generis nobilitas peribit.

135. அழுக்காறுடையான்கணாக்கம்போன்றில்லை
யொழுக்கமிலான்கணுயர்வு (ரு)

அழுக்காறு (பொறாமை) உடையவனிடத்தே ஆக்கம் [இல்லாதது] போன்று (போல), ஒழுக்கமில்லாதவனிடத்தே உயர்வு (உயர்ச்சி) இல்லை.

Ut invidis opes, ita male moratis honores non sunt.

136. ஒழுக்கத்தினொல்காருரவோரிழுக்கத்தி
னேதம் படுபாக்கறிந்து (௬)

இழுக்கத்தினால் எதம் (இழிவு) படுபாக்கு (உண்டாக) — உரவோர் (பெரியோர்)[அதை] அறிந்து (அறிந்ததினாலே) ஒழுக்கத்திலே ஒல்கார் (தளரார்).

A morum integritate sapientes non deficient, ignominiam defectionis considerantes.

137. ஒழுக்கத்தினெய்துவர் மேன்மையிழுக்கத்தி
னெய்துவரெய்தாப் பழி (௭)

ஒழுக்கத்தினாலே மேன்மையை எய்துவார் (அடைவார்); இழுக்கத்தினாலே எய்தாத (எய்த தகாத) பழியை எய்துவார்.

Ex moribus bonis (homines) honorem assequentur; ex eorum defectu ignominiam, quam assequi non debent.

138. நன்றிக்குவித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்றுமிடும்பை தரும் (௮)

நல்ல ஒழுக்கமானது நன்றிகு வித்து ஆகும்; தீய ஒழுக்கமானது என்றும் (எப்போதும்) இடும்பையை தரும்.

Boni mores sunt semina boni; mali mores dolorem parient in aeternum.

139. ஒழுக்கமுடையவர்க்கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல் (௯)

வழுக்கியும் (மறந்தும்) தீயவைகளை வாயால் சொல்லுதல் ஒழுக்கமுடையவர்க்கு ஒல்லாது (முடியாது).

Bene morati mala verba, licet inconsiderate, ore proferre nequeunt.

140. உலகத்தோடொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லாரறிவிலாதார் (௰)

உலகத்தோடு (உயர்ந்தோரோடு) ஒட்ட (பொருந்த) ஒழுகல் (நடத்தலை) கல்லாதவர் — பலவற்றையும் கற்றும் — அறிவில்லாதவர் ஆவார்.

Qui vitam agere cum vita sapientum congruam non discunt, quamvis multa discant, indocti sunt.

XV.

பிறனில்விழையாமை. Alienam uxorem non concupiscere.

141. *பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதை*
மை ஞாலத்
தறம்பொருள் கண்டார்கணில் (க)

பிறனது பொருளாயிருக்கிறவளை பெட்டு (இச்சித்து) ஒழுகும் (நடக்கும்) பேதைமையானது ஞாலத்து (பூமியில்) அறத்தையும் பொருளையும் கண்டவரிடத்தே இல்லை.

Stultitia, quae (mulierem) alterius propriam concupiscere solet, non est usquam terrarum apud eos, qui „virtutem“ et „bonum“ perspiciunt.

142. *அறன்கடை நின்றாருளெல்லாம் பிறன்கடை*
நின்றாரிற் பேதையாரில் (உ)

அறன்கடை (அறத்திற்கு புறம்பான பாவத்தில்) நின்றவர் எல்லாருள்ளும் பிறனது கடையிலே (வாயிலினிடத்தே) நின்றவர் போல் பேதையார் (மூடர்) இல்லை.

Inter omnes, qui extra fores stant, nemo est stultitior illis, qui alterius januae adstant.

143. *விளிந்தாரின்வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்*
றீமை புரிந்தொழுகுவார் (ங)

மன்ற (சந்தேகமில்லாமல்) தெளிந்தவரது இல் (இல்லாளிடத்தே) தீமையை புரிந்து ஒழுகுபவர் விளிந்தவரின் (செத்தவரின்) வேறல்லர் (வேறாகார்).

A mortuis non differunt, qui in uxorem illius, qui firmiter confidit, peccare student.

144. *எனைத்துணையராயினுமென்னாந் தினைத்து*
ணையுந்
தேரான் பிறனில் புகல் (ச)

தினைதுணையும் (அளவும்) தேராதவனாக பிறனுடைய இல் (இல்லாளிடத்தே) புகல் (செல்லுதல்) — எத்துணை (எவ்வளவு பெருமை) உடையவராயிருந்தாலும் — என்னும் (யாதாய் முடியும்).

Quantumvis licet sis magnus, quidnam erit, si, ne pro milii quidem grani modo sapiens, alienam uxorem adeas.

145. *எளிதெனவில்லிறப்பானெய்துமெஞ்ஞான்றும்*
விளியாது நிற்கும் பழி (ரு)

எளிதென்று [பிறனது] இல்லிடத்தே இறப்பவன் (செல்பவன்) விளியாமல் (அழியாமல்) எஞ்ஞான்றும் நிற்கும் பழியை எய்துவான்.

Qui dicens: „leve est“, in (alienam) domum irrumpit, ignominiam referet in aeternum non perituram.

146. பகைபாவமச்சம் பழியென நான்கு
மிகவாவாமில்லிறப்பான் கண் (௬)

[பிறனது] இல்லிடத்தே இறப்பான்கண் (செல்பவனிடத்து) பகையும் பாவமும் அச்சமும் பழியும் என்னும் இந்நான்கும இகவா (நீங்கா) ஆம்.

Qui in (alienam) domum irrumpit, ab eo haec quatuor: odium peccatum metus ignominia — non discedunt

147. அறனியலானில்வாழ்வானென்பான் பிற
னியலாள்
பெண்மை நயவாதவன் (௭)

பிறனுடைய இயலாயிருக்கிறவளது பெண்மையை நயவாதவன் (விரும்பாதவன்) அறமாகிய இயலையுடைய இல்வாழ்வான் என்னப்படுவான்.

Maritus, cujus virtus propria est, dicetur ille, qui non desiderat corpus illius, quae est alterius propria.

148. பிறன்மனைநோக்காதபேராண்மைசான்றோர்க
கறனொன்றோ வான்ற வொழுக்கு (௮)

பிறனது மனைவினை நோக்காத பேராண்மையானது சான்றோர்க்கு அறமாவது ஒன்றோ — ஆன்ற (நிறைந்த) ஒழுக்கமாம்.

Excelsa viri indoles, quae ad uxorem alienam non respicit, in perfectis et virtus est et perfectum decus.

149. நலக்குரியார்யாரெனினாமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயாதார் (௯)

நாமம்[பொருந்திய]நீரால்[சூழப்பட்ட]வைப்பில் (பூமியிலே) நலத்திற்குரியவர் யார் என்றால் — பிறனுக்குரியவளது தோள் தோயாதவர் (சேராதவர்).

In hac terra vastis aquis circumdata quis bonum possidet? Qui humeros non tangit illius, quam possidet alter.

150. அறன்வரையானல்ல செயினும் பிறன்வரை
யாள்
பெண்மை நயவாமை நன்று (௰)

அறத்தை வரையாதவனாகி (தனக்கு உரியதாக கொள்ளாதவனாகி) அல்லவை செயவான் ஆகிலும் — பிறன் வரையிலே நிற்பவளது பெண்மையை நயவாமை (விரும்ம) பாணைல்லது.

Etsi virtutem tibi non vindicans (ei) contraria feceris, bonum tibi erit, non concupiscere mulierem, quam sibi vindicavit alter.

XVI.

பொறையுடைமை. Patientia.

151. அகழ்வாரைத்தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை (௧)

தன்னை அகழ்வாரை (வெட்டுபவரை) தாங்கும் நிலத்தை போல தம்மை இகழ்பவரை பொறுத்தல் தலையாம்.

Instar terrae, quae fert aratorem, eos ferre, qui te despiciant, caput (i. e. summa virtus) est.

152. பொறுத்தலிறப்பினை யென்றுமதனை
மறத்தலதனினு நன்று (௨)

இறப்பினை (மிகையை) என்றும் (எப்போதும்) பொறு! அதனை மறத்தல் அதனினும் நல்லது.

Injuriam semper tolera! ejus oblivisci isto melius.

153. இன்மையுளின்மைவிருந்தொரால்வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை (௩)

இன்மையுள் இன்மையாவது — விருந்தினரை ஒருவுதலே (தள்ளுதல்); வல்லமையுள் வல்லமையாவது — மடவாரை பொறுத்தலே.

Hospitem repellere — summa paupertas! stultos ferre — summa fortitudo!

154. நிறையுடைமைநீங்காமைவேண்டிற்பொறை
யுடைமை
போற்றி யொழுகப் படும் (௪)

நிறையுடைமை நீங்காமைவேண்டின் (விரும்பினால்)பொறுமை யுடைமையை போற்றி (காத்து) ஒழுகப்படும் (நடக்க தகும்).

Si tuum honorem amittere nolis, necesse erit, patientiam servans vitam agas.

155. ஒறுத்தாரையொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து (௫)

[பொறாமல்] ஒறுத்தவரை (வருத்தினவரை) ஒன்றாக வைக்கமாட்டார்; பொறுத்தவரை பொன்போல் பொதிந்து வைப்பார்.

(Sapientes) ut rem nihili abjiciunt impatientes; patientes ut aurum servant recondentes.

156. ஒறுத்தார்க்கொருநாளை யின்பம்பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும்புகழ் (௬)

ஒறுத்தவர்கு ஒருநாளை இன்பமே! பொறுத்தவர்கு பொன்றும் (இறந்துபோம்) துணையும் (அளவும்) புகழ்!

Ulciscendi cupidorum gaudium unum diem manebit; laus patientium, dum discedant e vita (dum mundus pereat?)

157. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று (௭)

திறன் (அறம்) அல்லாதவைகளை தன்னிடத்து பிறர் செய்தாலும் [அவருக்கு அதினால் வரும்] நோவுக்காக நொந்து (வருந்தி) அறனல்லாதவைகளை செய்யாமை நல்லதாம்.

Quamvis alii injuste in te agant, bonum tibi erit, de dolore (quem illi inde recepturi sunt) dolentem contra virtutem nihil agere.

158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்றுவிடல் (௮)

மிகுதியால் மிக்கவைகளை (தீமைகளை) செய்தவரை தாம் தமது தகுதியாலே (பொறுமையினாலே) வென்றுவிடக்கடவார்.

Qui superbia (elati) superba faciunt, eos te oportet animi aequitate vincere.

159. துறந்தாரிற்றூய்மை யுடையரிறந்தார்வா
யின்னாச்சொ னோற்கிற்பவர் (௯)

இறந்தவரது (நல் வழியை கடந்தவரது) வாயின் இன்னாதசொல் நோற்பவர் (பொறுப்பவர்) துறந்தவர்போல் தூய்மையை (பரிசுத்த குணத்தை) உடைவராவார்.

Sanctitatem ascetae habet, qui patitur mala verba ex ore eorum, qui modum excedunt.

160. உண்ணாதுநோற்பார் பெரியர்பிறர்சொல்லு *
மின்னாச்சொ னோற்பாரிற் பின் (௰)

பிறர் சொல்லும் இன்னாத சொல்லை பொறுப்பவரின்பின் [விரதங்களினாலே] உண்ணாது (உணவை விட்டு) நோற்பவர் பெரியவர் ஆனார்.

Qui jejunando dolorem patiuntur, magni quidem sunt, — (sed) *post* eos, qui aliorum mala verba patiuntur.

XVII.

அழுக்காறாமை. Sine invidia esse.

161. ஒழுக்காறாக்கொள்கவொருவன்றன் னெஞ்சத்
தழுக்காறிலாத வியல்பு (க)

ஒருவன் தன்னெஞ்சத்திலேஅழுக்காறில்லாத இயல்பினை ஒழுக்கத்தின்ஆறாக (வழியாக) கொள்வானாக.

Cujus indoles est in pectore invidiam non habere, eum bonam sequi viam, quisque secum statuat.

162. விழுப்பேற்றினஃதொப்பதில்லையார்மாட்டு
மழுக்காற்றினன்மை பெறின் (உ)

யார்மாட்டும் (யாவரிடத்தும்) அழுக்காற்றின் அன்மையை (வேறாதலை) பெறுவானாயின், விழு (விழுப்பம் பொருந்திய) பேறுகளுள் அஃது (அதினை) ஒப்பானது இல்லை.

Inter omnes thesauros nullus huic comparandus, si (a te) impetraveris, ut nemini invideas.

163. அறனாக்கம்வேண்டாதானென்பான் பிறனா
க்கம்
பேணாதழுக்கறுப்பான் (ந)

பிறனது ஆக்கத்தை பேணாது அழுக்காறு ப்படுபவன் அறத்தையும் ஆக்கத்தையும்[அறத்தினால் வரும்ஆக்கத்தை] வேண்டாதவன் என்று சொல்லப்படுவான்.

Virtutis felicitatem (virtutem et prosperitatem?) spernens dicetur, qui, aliorum felicitatem negligens, invidet.

164. அழுக்காற்றினல்லவைசெய்யாரிழுக்காற்றி
னேதம் படுபாக்கறிந்து (ச)

அழுக்காற்றினாலே [அறம்] அல்லாதவைகளை செய்யார் — இழுக்காற்றின் (குற்ற வழியால்) எதம் (துன்பம்) படுபாக்கு (உண்டாதலை) அறித்து.

(Sapientes) nihil propter invidiam injuste faciunt, dolorem ab injuriae via exoriri scientes.

165. அழுக்காறுடையார்க்கது சாலுமொன்னார்
வழுக்கியுங்கேடீன்பது (ரு)

அழுக்காறுடையவர்க்கு அது சாலும்; ஒன்னார் (பகைவர்) வழுக்கியும் (தப்பி ஒழிந்தும்) கேட்டை ஈன்பது (கொடுப்பது).

Invidia plenis haec (ipsa) satis est; etiamsi fine excidant hostes perniciem afferet.

166. கொடுப்பதழுக்கறுப்பான்சுற்றமுடுப்பதூஉ
முண்பதூஉமின்றிக்கெடும் (௬)

[பிறர்க்கு] கொடுப்பதை [குறித்து] அழுக்காறுடையவனது சுற்றமானது உடுப்பதும் உண்பதும் இன்றி கெடும்.

Qui (aliis) collatum (beneficium) invidet, ejus propinqui vestitus et cibi inopia interibunt.

167. அவ்வித்தழுக்காறுடையானைச் செய்யவ
டவ்வையைக்காட்டி விடும் (௭)

அழுக்காறுடையவனை செய்யவள் (இல்லகுமி) அவ்வித்து (பொறுமைப்பட்டு) தவ்வையை (அக்காளை = மூதேவியை) காட்டி (கொண்டுவந்து) விடுவாள்.

Dea felicitatis invido invidens sororem suam majorem introducit atque abibit.

168. அழுக்காறெனவொரு பாவிதிருச்செற்றுத்
தீயுழியுய்த்து விடும் (௮)

அழுக்காறென்னும் ஒரு(ஒப்பில்லாத)பாவியானவன் திரு(செல்வத்தை) செற்று (கெடுத்து) தீயுழி (தீயினிடத்து = நெருப்புள்ள நரகத்தினிடத்து) உய்த்து (செலுத்தி) விடுவான்.

Scelerata una illa, quae dicitur invidia, felicitatem interficit et (postremo) in ignem (infernum) praecipitat.

169. அவ்வியநெஞ்சத்தானாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும் (௯)

அவ்விய (பொறுமையுள்ள) நெஞ்சத்தையுடையவனது ஆக்கமும் செவ்வியையுடையவனது கேடும் நினைக்கப்படும்.

Invidi prosperitas et probi pernicies meditationis materiam suppeditant (indicantes meritum culpamque in priore vita comparatum).

170. அழுக்கற்றகன்றாரு மில்லை யஃதிலார்
பெருக்கத்திற்றீர்ந்தாரு மில் (௰)

அழுக்காறுடையவனாகி அகன்றாரும் (பெருகினவரும்) இல்லை; அதில்லாதவர் [ஆகி] பெருக்கத்திலிருந்து தீர்ந்தவரும் (நீங்கினவரும்) இல்லை.

Non sunt, qui invidentes profecerint; non sunt, qui, invidia vacui, proficere desierint.

XVIII.

வெஃகாமை. Sine avaritia esse.

171. நடுவின்றிநன்பொருள்வெஃகிற்குடிபொன்றிக்
குற்றமுமாங்கே தரும் (௧)

நடுவு (நிலைமை) இன்றி (இல்லாமல்) நல்ல பொருளைவெஃகினால் (இச்சித்தால்) — குடி பொன்றி (கெட்டு) குற்றத்தையும் ஆங்கே (அப்போதே) தரும்.

Qui inique (alienis) bonis inhiaverit, ei familia interibit — ipsi vero statim calamitatem afferet.

172. படுபயன்வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணுபவர் (௨)

நடுவல்லாமைக்கு நாணுபவர் (அஞ்சுபவர்) படு (வரும்) பயனை வெஃகி (மிகுந்த ஆசையோடு விரும்பி) பழிபடு பவைகளை செய்ய மாட்டார்.

Quos iniquitatis pudet, ii suae utilitatis studio nihil faciunt, quod vituperandum sit.

173. சிற்றின்பம்வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம்வேண்டுபவர் (௩)

[வீடாகிய) மற்றின்பத்தை வேண்டுபவர் சிற்றின்பத்தை வெஃகி அறமல்லாதவைகளை செய்ய மாட்டார்.

Qui alterum gaudium desideret, propter aviditatem gaudii exigui virtuti contraria non faciet.

174. இலமென்றுவெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சியவர் (௪)

புலத்தை வென்ற புன்மையில்லாத காட்சியுள்ளவர்கள் இலம் (வறியோம்) என்று வெஃகுதலை செய்யார்.

Qui sensibus devictis scientiam a vilitate liberam habent, numquam (aliena) concupiscent, dicentes: nihil sumus (i. e. pauperes sumus).

175. அஃகியகன்றவறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின் (௫)

யாவரிடத்தும் வெஃகி வெறியவைகளை (புத்தியற்றவைகளை) செய்தால், அஃகி (நுட்பமாகி) அகன்ற (விரித்த) அறிவு என்னும்.

Subtilis et copiosa scientia quid (tibi proderit,) si (aliena) concupiscens in omnes stulta feceris?

176. அருள்வெஃகியாற்றின்கணின்றான் பொருள்
வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும் (௬)

அருள் [ஆகிய அறத்தை] வெஃகி ஆற்றிலே [நல்ல வழியிலே] நின்றவன் — பொருளை வெஃகி பொல்லாதவைகளை சூழ (எண்ண) — கெடுவான்.

Qui animi benigni cupidus in via (recta) consistit, si bonorum cupidus mala moliatur, pessum ibit.

177. வேண்டற்கவெஃகியாமாக்கம் விளைவயின்
மாண்டற்கரிதாம்பயன் (௭)

வெஃகியும் (உண்டாகின்ற) ஆக்கத்தை வேண்டாதே! [அதின்] பயன் — விளைவயின் (விளையுமாயின்) — மாண்டற்கு (நன்றாகுதலுக்கு) அரிதாம்.

Noli appetere bonum aviditate partum; fructus ejus, ubi veniet maturitas, vix erit bonus.

178. அஃகாமைசெல்வத்திற்கியாதெனின் வெஃ
காமை
வேண்டும் பிறன்கைப்பொருள் (௮)

செல்வத்திற்கு அஃகாமை (குறையாதிருந்ததற்கு காரணம்) யாதென்று கேட்டால் — வேண்டியதாகிய பிறன் கைப்பொருளை வெஃகாமையாம்.

Securitas tuae salutis quaenam? Non concupiscere alterius rem caram.

179. அறனறிந்துவெஃகா வறிவுடையார்ச்சேருந்
திறனறிந்தாங்கே திரு (௯)

அறத்தை அறிந்து வெஃகாத அறிவுடையவரை திருவானவள் திறத்தை (தான் சேரும் சமயத்தை) அறிந்து ஆங்கே சேருவாள்.

Sapientibus, qui virtutis gnari numquam concupiscunt, Dea felicitatis, opportunitatis gnara, statim se adjunget.

180. இறலீனுமெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ்செருக்கு (௰)

எண்ணாது வெஃகுவானாயின் [அது] இறலை (அழிவை) ஈனும் (தரும்); வேண்டாமை என்னும் செருக்கு (பெருமை) விறலை (வெற்றியை) ஈனும்.

Ruinam pariet, si inconsiderate concupiscas; triumphum pariet magnanimitas, quae non concupiscit.

XIX.

புறங்கூறாமை. De absente non male loqui.

181. அறங்கூறானல்ல செயினுமொருவன்
புறங்கூறானென்ற லினிது (க)

ஒருவன் அறத்தைகூறாதவனாக[அறம்]அல்லாதவைகளை செய்தாலும் புறங்கூறான் (பிறனை காணாத இடத்தே இகழ்ந்து பேசான்) என்றல் (என்பது) இனிதாகும்.

Etsi quis virtutem ne nominans quidem ei contraria faciat, bonum tamen erit, si dicatur de absentibus non detrahere.

182. அறனழீஇயல்லவை செய்தலிற்றீதே
புறனழீஇப் பொய்த்து நகை (உ)

அறத்தை அழித்து [அறம்] அல்லாதவைகளை செய்தலை பார்க்கிலும் புறன் (காணாத இடத்தே) அழித்து (கண்ட இடத்து) பொய்த்து நகைத்தல் தீது (தீமையுடையதாகும்).

Absentem perdere et (praesenti) ore mendaci arridere est pejus quam virtutem perdere et peccatum committere.

183. புறங்கூறிப்பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறுமாக்கந்தரும் (௩)

புறங் கூறி பொய்த்து உயிர்வாழ்தலை பார்க்க சாதல் அறம் (அற நூல்) கூறும் ஆக்கத்தை தரும்.

Fructum quem praedicat virtus, potius mors (tibi) feret, quam quod vivis, alteri praesenti simulans, absenti detrahens.

184. கண்ணின்றுகண்ணறச் சொல்லினுஞ்சொ
ல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல் (௪)

[பிறன்] கண் (எதிரே) நின்று, கண் (ஓட்டம்) அற சொன்னாலும் [அவன்] முன் இன்று (இல்லாமல்), பின் (விளைவதை) நோக்காத சொல்லை சொல்ல வேண்டாம்.

Quamvis coram (aliquo) loquaris, nihil respiciens, tamen noli post tergum ejus verba loqui, quae posterum non respiciunt.

185. அறஞ்சொல்லுநெஞ்சத்தா னன்மை புறஞ்
சொல்லும்
புன்மையாற் காணப்படும் (௫)

அறத்தை சொல்லும் நெஞ்சத்தையுடையவனல்லாதவனாயிருக்கையானது புறஞ் சொல்லும் [மனப்]புன்மையாலே காணப்படும்.

Aliquem non ex animo de virtute loqui, intelligitur ex indole abjectissima, qua de absentibus male loquitur.

186. பிறன்பழிகூறுவான் றன்பழியுள்ளுந்
திறன்றெரிந்து கூறப்படும் (௬)

பிறனது பழியை கூறுபவனது பழிகளுள்ளும் திறம் (அதிகமாகிய பழிகள்) தெரிந்து (ஆராயந்து) கூறப்படும்.

Qui alterius vitia enuntiaverit, inter ipsius vitia idonea seligentes enuntiabunt.

187. பகச்சொல்லிக்கேளிர்ப்பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்றாதவர் (௭)

நகும் (மகிழும்) படி சொல்லி நட்பாடலை (சிநேகஞ் செய்தலை) தேற்றாதவர் (தமக்கு உறுதி என்று அறியாதவர்) பகும் (தம்மை விட்டு நீங்கும்) படி கேளிரையும் (சுற்றத்தாரையும்) பிரிப்பார்.

Qui nesciunt gratis verbis amicitiam jungere, ingratis verbis et ipsos amicos a se alienabunt.

188. துன்னியார்குற்றமுந்தூற்று மரபினா
ரென்னைகொலேதிலார்மட்டு (௮)

துன்னியார் (தம்மோடு நெருங்கினவரது) குற்றத்தை தூற்றும் மரபினையுடையவர் (இயல் பினையுடையவர்) எதிலார் (அயலார்) இடத்து [செய்வது] என்னை கொல் (யாதோ)?

Qui ita affecti sunt, ut ipsorum proximorum culpam divulgent; quid, quaeso, facient alienis?

189. அறனோக்கியாற்றுங்கொல்வையம் புறனோக்கிப்
புன்சொலுரைப்பான் பொறை (௯)

பிறனது புறத்தை நோக்கி புன் (எளிய) சொல்லை உரைப்பவனது பொறையை (பாரத்தை) வையம் (பூமி) அறத்தை நோக்கி தானேஆற்றும் (சுமக்கும்).

Nonne terra, virtutem (esse) videns, onus ejus sustinet, qui tergum videns, detrectat?

190. எதிலார்குற்றம்போற்றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோமன்னுமுயிர்க்கு (௰)

எதிலார்து குற்றத்தை போல் தமது குற்றத்தை காண்பானாகில் மன்னும் (நிலை பெற்ற) உயிர்க்கு தீது உண்டோ?

Si quisque ut alienam culpam suam videret, essetne animis humanis malum?

XX.

பயனிலசொல்லாமை. Inutilia non loqui.

191. *பல்லார்முனியப்பயனில சொல்லுவா*
னெல்லாருமெள்ளப்படும் (க)

பலர் முனிய (வெறுக்க) பயன் (பொருள்) இல்லாதவைகளை சொல்பவன் எல்லாராலும் எள்ளப்படுவான்(இகழுப்படுவான்).
Qui cum multorum stomacho inania loquitur, ab omnibus despicietur.

192. *பயனிலபல்லார்முற் சொல்லனயனில*
நட்டார்கட் செய்தலிற்றீது (உ)

பலர் முன்னே பயனில்லாதவைகளை சொல்லுதலானது நட்டார் (நட்பாளர்) இடத்து நயனில்லாதவைகளை செய்தலினும் தீது (குற்றம்).
Inania loqui coram multis pejus est, quam injusta facere in amicos.

193. *நயனிலனென்பது சொல்லும்பயனில*
பாரித் துரைக்குமுரை (ந)

பயனில்லாதவற்றை பாரித்து (விரித்து) உரைக்கும் உரையானது (உரைக்கிறவன்) நயனில்லாதவன் என்பனை சொல்லும்.
Inania profundens sermo testatur: „Hic (qui loquitur) homo est inanis bonis moribus.“

194. *நயன்சாராநன்மையி னீக்கும் பயன்சாராப்*
பண்பில்சொற் பல்லாரகத்து (ச)

பலரிடத்தே [சொல்லப்படும்] பயனை சோர்த பண்பில்லாத சொல்லானது நயனை சேராமல் [சொல்பவனை] நன்மையிலிருந்து நீக்கும்.
Coram multis habitus sermo, fructus expers, bonitatis expers, (loquentem) a probitatis (laude) excludet.

195. *சீர்மைசிறப்பொடு நீங்கும் பயனில*
நீர்மையுடையார் சொலின் (ரு)

நீர்மை (குணத்தன்மையை) உடையவர் பயனில்லாதவற்றை சொன்னல், சீர்மையானது சிறப்போடு நீங்கும்.
Generositas cum dignitate evanescet, si vir generosus vana loquatur.

196. பயனில்சொற்பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல் (௬)

பயனில்லாத சொல்லை பாராட்டு வானை (பவனை) மகன் என்னாதே! மக்களுக்குள்ளே பதடி (பதர்) என்ன வேண்டும்.
Qui verba futilia jactat, eum hominem ne vocato, glumam hominis voca.

197. நயனிலசொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
மயனில சொல்லாமை நன்று (௭)

சான்றவர் நயனில்லாதவற்றை சொன்னாலும், சொல்லலாம்! பயனில்லாதவற்றை சொல்லாமை நல்லதாம்.
Etiamsi, quod morum bonorum expers est, loquantur perfecti — loquantur! quod sensus expers est, non loqui, bonum est.

198. அரும்பயனாயுமறிவினார் சொல்லார்
பெரும் பயனில்லாத சொல் (௮)

அரிய பயனை ஆயும் அறிவையுடையவர் பெரும் பயனில்லாத சொல்லை சொல்ல மாட்டார்.
Sapientes, qui sensum rarum perscrutantur, nihil dicunt, quin gravem sensum habeat.

199. பொருடீர்ந்தபொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறுகாட்சியவர் (௯)

மருள் (மமக்கம்) தீர்ந்த (இல்லாத) மாசற்ற காட்சியையுடையவர், பொச்சாந்தும் (மறந்தும்), பொருள் தீர்ந்தவற்றை (இல்லாதவற்றை) சொல்ல மாட்டார்.
Verba a fructu remota ne per oblivionem quidem loquentur, qui ab errore remotam vitio puram scientiam habent.

200. சொல்லுகசொல்லிற்பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் (௰)

சொல்லில் (சொற்களில்) பயனுடையவற்றை சொல்லுவாயாக! சொற்களில் பயனில்லாத சொல்லை சொல்லாதிருப்பாயாக!
Inter verba (quae dicturus es) ea, quae fructum habent, (vel: Si loqueris, ea quae fructum habent) eloquere! noli eloqui verbum, quod fructu caret.

XXI.

தீவினையச்சம். Peccati metus.

201. தீவினையாரஞ்சார் விழுமியாரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு (க)

தீவினை என்னும் செருக்கினுக்கு (மயக்கத்திற்கு) முன் செய்த தீவினையுடையவர் அஞ்சார்! விழுமியார் (சிறப்புடையவர்) அஞ்சுவார்.

Qui maleficii experti sunt, non timent; excelsi timent maleficii insolentiam.

202. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினுமஞ்சப்படும் (உ)

தீயவைகள தீயவற்றை [எப்போதும்] பயத்தலால் (உண்டாகுதலால்) தீயவைகள் தீயினும் (நெருப்பினும்) அஞ்சப்படும்.

Cum malum (semper) malum fructum ferat, plus quam ignem time maleficium.

203. அறிவினுளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யாவிடல் (ங)

செறுவார்க்கும் (தம்மை பகைக்கிறவரிடத்திலும்) தீயவற்றை செய்யாமல் விடுதலை அறிவுகளெல்லாவற்றிலும் தலை என்பார்கள்.

Scientiae omnis caput est, ne ipsis hostibus quidem male facere.

204. மறந்தும்பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு (ச)

[ஒருவன்] பிறனது கேட்டை — மறந்தும் — சூழாதிருக்க (எண்ணாதிருக்க) கடவான்; சூழ்ந்தால், சூழ்ந்தவனது கேட்டை அறம் (அறக்கடவுள்) சூழும்.

Nec per oblivionem alterius malum circumspicias; qui circumspexerit, ejus malum virtus (i. e. divina justitia) circumspiciet.

205. இலனென்றுதீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து (ரு)

[நான்] இலன் (தரித்திரன்) என்று தீயவற்றை செய்யாதிருக்க கடவான்; செய்தால் மற்றும் பெயர்த்து இலனாகும் (மறுபடியும் அதிகதரித்திரனாவான்).

Quod pauper sis, noli male facere. Si feceris, magis magisque pauper eris.

206. தீப்பாலதான்பிறர்கட் செய்யற்கநோய்ப்பால
தன்னை யடல்வேண்டாதான் (௬)

நோய் (துன்பம் செய்யும்) பால (தன்மையுடையவை) தன்னை அடலை (வருத்துதலை) வேண்டாதவன் தீ (தீமை) பாலுடையவற்றை தான் பிறர்கண் (பிறரிடத்தே) செய்யாதிருக்ககடவான்.

Quod injuriae naturam habet, alteri non inferat, qui non desiderat ipse eo, quod doloris naturam habet, vexari.

207. எனைப்பகையுற்றாருமுய்வர் வினைப்பகை
வீயாதுபின்சென்றடும் (௭)

எனை (எவ்வளவு பெரிய) பகையுற்றவரும் உய்வார்கள் (தப்பலாம்) வினை (தீவினையாகிய) பகையானது வீயாது (நீங்காமல்) பின் சென்று அடும் (கொல்லும்).

Qualibuscunque hostibus (homines) circumdati sint, evadent; sed hostis, qui est peccatum, sine intermissione insequens, (postremo) interficiet.

208. தீயவைசெய்தார் கெடுத னிழறன்னை
வீயாதடியுறைந்தற்று (௮)

தீயவற்றை செய்தவர்கள் கெடுதல் [ஒருவனது] நிழலானதுவீயாது (நீங்காமல்) தன்னை அடியுறைந்தற்று (தொடர்ந்தாற்போலும்).

Interitus ejus, qui maleficia admittit, similis umbrae est, quae semper aliquem vestigiis consequitur.

209. தன்னைத்தான்காதலனாயினெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப்பால் (௯)

தன்னை தான் காதலன் (காதலுடையவன் = விரும்புதலுடையவன்) ஆயின் (ஆயிருந்தால்) — தீவினையாகிய பால் (பகுப்பு), எனைத்தொன்றும் (எவ்வளவு சிறியது ஒன்றானாலும்), துன்னற்க (அதற்கு விலகி நடக்க கடவான்).

Si te ipsum amas, nil, quod malum sit, quantumvis minimum, facere audeas.

210. அருங்கேடனென்பதறிக மருங்கோடித்
தீவினை செய்யானெனின் (௰)

[ஒருவன்] மருங்கு (பக்கத்தில்) ஓடி தீவினையை செய்யானானால், [அவன்] அரிதாகிய கேட்டையுடையவன் (கேடில்லாதவன்) என்பதை அறிக (அறியலாம்).

Si quis a (recta) via aberrando, maleficium non committat, scito, ad illum ruinam difficulter accedere.

XXII.

ஒப்புரவறிதல். Munificum esse, ubi mos postulat.

211. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு (௧)

[உண்மையான] கடப்பாடுகள் (உபகாரங்கள்) கைம்மாற்றை (பிரதியுபகாரங்களை) வேண்டா; உலகு மாரியிடத்து (மேகங்களிடத்து) என் (என்னபிரதியுபகாரத்தை) ஆற்றும் (செய்யும்)?

Munificentia remunerationem non postulat. Nubi quid reddit mundus?

212. தாளாற்றித்தந்தபொருளெல்லாந்தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு (௨)

தாள் (முயற்சி) ஆற்றித்தந்த (தொகுத்துவைத்த) பொருள் எல்லாம் தக்கவர்க்கு வேளாண்மையை (ஒப்புரவினை) செய்தலாகிய பொருளை (பிரயோசனத்தை) உடையதாம்.

Quaecunque quis sua industria sibi comparavit bona, hominibus bene moratis ad conferenda beneficia conducunt.

213. புத்தேளுலகத்துமீண்டும் பெறலரிதே
யொப்புரவினல்லபிற (௩)

புத்தேள் (தேவர்) உலகத்திலும் ஈண்டும் ஒப்புரவு போல் நல்லவையாகிய பிற (வேறுசெயல்களை) பெறுதல்அரிதாம்.

Difficile est et in deorum mundo et hac in terra adipisci alia bona praeter munificentiam secundum morem.

214. ஒத்ததறிவானுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும் (௪)

ஒத்ததை (உலகநடையை) அறிபவன் உயிரோடு கூடி வாழ்வான்; மற்றையவன் செத்தவர்களுள் வைக்கப்படுவான்.

Qui, quod decet, didicit, (re vera) vivit, ceteri inter mortuos numerandi sunt.

215. ஊருணிநீர்நிறைந்தற்றே யுலகவாம்
பேரறிவாளன் றிரு (௫)

உலகு (உலகநடையை) அவாவும் (விரும்பி செய்யும்) பெரிய அறிவினையுடையவனது திரு (செல்வமானது) ஊருணி (ஊர் உண்ணும் குளம்) நீரினாலே நிறைந்தது போலும்.

Divitiae sapientis, qui morem servare studet, perinde sunt ac si lacus publicus aqua abundat.

216. பயன்மரமுள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடையான்கட் படின் (௬)

செல்வமானது நயனுடையவனிடத்து படின் (உண்டானால்) பயன் [மடும்] மரம் உள்ளூர் (ஊர்நடுவே) பழுத்தல் போலும்.

Si bona benefico homini obtingunt, perinde est ac si arbor fructifera in medio oppido ad maturitatem venit.

217. மருந்தாகித்தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகையான்கட் படின் (௭)

செல்வமானது பெரிய தகைமையுடையவனிடத்து படுமானால் மருந்தாகி தப்பாத மரத்தை போலும்.

Divitiae, quae obtingunt moris observantissimo, similes sunt arbori, quae medicinam ferens, nemini se subtrahit.

218. இடனில்பருவத்துமொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சியவர் (௮)

கடனைஅறியும் காட்சியுடையவர் இடம் (செல்வம்) இல்லாத பருவத்திலும் ஒப்புரவினுக்கு ஒல்கார் (தளரார்)

Sapientes officii gnari etiam tempore inopiae munificentiam debitam non remittunt.

219. நயனுடையானல்கூர்ந்தானாதல்செயுநீர்மை
செய்யாதமைகலா வாறு (௯)

நயனுடையவன் நல்கூர்ந்தவன் (வறுமைப்பட்டவன்) ஆகுதலாவது — செய்யும் நீர்மை (செய்யப்படும் தன்மையையுடைய ஒப்புரவுகளை) செய்யாது (செய்யப்பெறாமல்) அமைகலா (வருந்துகின்ற) ஆறு (இயல்பாம்).

Virum munificum ad paupertatem redigi, hoc ipsum est, quod moleste patitur, se praestando praestare non posse.

220. ஒப்புரவினால் வருங் கேடெனினஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து (௰)

ஒபபுரவினால் கேடு வரும் என்றால் — அது ஒருவன் [தன்னை] விற்று [ஆயினும்] கோள் தக்கத்துடைத்து (வாங்கும் தகுதியையுடையதாம்.

Si dixeris: ex munificentia gignitur damnum, hoc (i. e. tale damnum) tanti est, ut (te ipsum) vendendo illud emere debeas.

XXIII.

ஈகை. Largitio.

221. வறியார்க்கொன்றீவதே யீகைமற்றெல்லாங்
குறியெதிர்ப்பைநீரதுடைத்து (க)

வறியருக்கு (தரித்தரருக்கு) ஒன்றை ஈவதே ஈகையாகும்; மற்றெல்லாம் குறித்த எதிர்ப்பை (விரதியுபகாரத்தை) நீர்மையாக உடையதாம்.

Pauperibus aliquid dare, est donum; reliqua omnia quaesitam remunerationem naturam habent.

222. நல்லாறெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினுமீதலே நன்று (உ)

[மேல் உலகத்துக்கு] நல்லஆறு என்று சொன்னாலும், கொள்ளல் தீதாம்; மேல் உலகம் இல்லை என்றுசொன்னாலும் ஈதலே நல்லதாம்.

Etiamsi dicant: bona (ad coelum?) via est, accipere est malum etiamsi dicant: non est coelum, dare est bonum.

223. இலனென்னுமெவ்வமுரையாமையீதல்
குலனுடையான் கண்ணேயுள (௩)

இலன் (நான் தரித்திரன்) என்னும் எவ்வத்தை (இழிவை) உரையாமையும் ஈதலும் குலனுடையவனிடத்தே (நல்ல குடியில் பிறந்தவனிடத்தே) உண்டு.

Virorum nobilium est, a verbo illo abjecto: „Nil habeo.“ se abstinere et dare.

224. இன்னாதிரக்கப் படுதலிரந்தவ
ரின்முகங் காணுமளவு (௪)

இரந்தவரது இனிய முகத்தை காணும் அளவும் இரக்கப்படுதல் இனிமையில்லாததாகும்.

Malum est rogari — dum laetum ejus vultum, qui rogavit (et voto potitus gratus discedit) aspicias.

225. ஆற்றுவாராற்றல் பசியாற்றலப்பசியை
மாற்றுவாராற்றலிற் பின் (௫)

[தவத்தை] ஆற்றுபவரது ஆற்றல் (வல்லமையாவது) பசியை ஆற்றல் (பொறுத்தல்) ஆம் — அப்பசியை (கொடையினாலே) மாற்றுபவரது ஆற்றலுக்கு பின்.

Opus (summum) eorum, qui in operibus versantur (i. e. ascetarum) est opus famis (voluntariae) — sed post opus eorum, qui famem (aliorum) depellunt.

226\. அற்றாரழிபசி தீர்த்தலஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி (௬)

அற்றவரது (தரித்திரரது) அழி (மிகுந்த) பசியை தீர்த்தலானது [பொருளை]பெற்றவனாகிய ஒருவன் பொருளை வைக்கும் இடம்.

Torquentem famem inopum sedare, opulentorum thesaurus est.

227\. பாத்தூண்மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்டலரிது (௭)

பாத்து (பகுத்து) ஊணை (உண்ணுதலை) மருவியவனை (வழக்கமாக தழுவியவனை) பசி என்னும் தீய பிணிதீண்டுதல் அரிதாகும்.

Qui consuevit (aliis) impertiens coenatum ire, eum pessima illa pestis, quae fames dicitur, nunquam invadet.

228\. ஈத்துவக்குமின்பமறியார்கொ றாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் (௮)

தாம் உடைமையை வைத்து இழக்கும் வண்கண்ணுள்ளவர் ஈந்து உவக்கும் இன்பத்தை அறியார்.

Voluptatem cum gaudio dandi non norunt, qui oculo duro bonum suum servantes amittunt.

229\. இரத்தலினின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியருணல் (௯)

[பொருளின் குறைவை] நிரப்பும் (நிறைக்கும்) படிக்கு தாமே தமியராகி (தனித்தவராகி) உண்ணுதலானது இரத்தலினும் இனிமையில்லாததாகும்.

Certe mendicando acerbius est, (thesaurum) implendi causa solum coenare.

230\. சாதலினின்னாததில்லை யினிததூஉ
மீதலியையாக்கடை (௰)

சாதல்போல் இனிமையில்லாதது [ஒன்று] இல்லை; ஈதல் இயையாத (முடியாத) இடத்து இனிதாகும்.

Moriendo nil acerbius, tamen illud etiam dulce erit, si largitio fieri non potest.

XXIV.

புகழ். Laus.

231. ஈதலிசைபட வாழ்தலதுவல்ல
தூதியமில்லை யுயிர்க்கு (௧)

ஈதலினால் இசைபட (புகழ் உண்டாக) வாழ கடவாய்! அது அல்லாமல் உயிருக்கு ஊதியம் (பயன்) இல்லை.

Vive, ut propter munificentiam lauderis; nullus viventibus fructus est praeter illam laudem.

232. உரைப்பாருரைப்பவை யெல்லாமிரப்பார்க்
கொன்
றீவார்மே னிற்கும் புகழ் (௨)

உரைப்பவர் உரைப்பவைகள் எல்லாம் இரப்பவர்க்கு ஒன்றை ஈவார் மேல் (கொடுப்பவரிடத்தே) நிற்கும் புகழ்.

Sermocinantium sermones omnes ejus continua laus sunt, qui rogantibus aliquid largitur.

233. ஒன்றாவுலகத்துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன்றில் (௩)

ஒன்றாக (தனக்கு ஒப்பில்லாததாக) உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்திலே பொன்றாமல் (அழியாமல்) நிற்பது ஒன்று இல்லை.

Excepta laude, quae sola in mundo excellit, nihil est, quod, non interiens, perpetuo maneat.

234. நிலவரை நீள்புகழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தேளுலகு (௪)

நில (பூமியின்) வரையில் (எல்லையில்) நீளும் புகழை [ஒருவன்] ஆற்றுவானாயின் புத்தேள் உலகம் புலவரை (தன்னை அடைந்திருக்கிற ஞானிகளை) போற்றாது (துதியாது).

Si laudem paras, quae finem terrae attingat, mundus coelestium in coelum sublatos non laudabit.

235. நத்தம்போற்கேடுமுளதாகுஞ்சாக்காடும்
வித்தகர்க்கல்லாலரிது (௫)

நத்தம் (ஆக்கம்) போலும் கேடும் [உயிர்வாழ்தல் போல் இருக்கிற புகழ்] ஊதாகும் (உண்டாகும்) சாக்காடும் (மரணமும்) உள்ளதாகும் வித்தகருக்கு (விவேகமுள்ளவர்க்கு) அல்லாமல் அரிதாகும்.

Damnum quod emolumento par sit et mortem, qua (laus, quae quasi vita est) oritur, praeter scientes vix quisquam assequi potest.

236. தோன்றிற் புகழொடு தோன்றுகவஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று (௬)

தோன்றினால் புகழோடு தோன்ற கடவாய்; அதில்லாதவர்கள் தோன்றலினும் தோன்றாமை நல்லது.

Si (publice) appares, cum laude appare! melius erit, non apparere quam sine laude apparere.

237. புகழ்பட வாழாதார் தந்நோவார்தம்மை
யிகழ்வாரை நோவதெவன் (௭)

புகழ்பட வாழாதவர் — தம்மை நோவாதவராகி — தம்மை இகழ்பவரை நோவது யாது?

Qui, ut laudetur, non vivit, cum sibi ipsi non dolorem faciat, quamobrem vituperatoribus (conquerendo) dolorem facit?

238. வசையென்பவையத்தார்க்கெல்லாமிசையெ
ன்னு
மெச்சம் பெறாஅ விடின் (௮)

இசை (புகழ்) என்னும் எச்சத்தை (பிள்ளையை) பெறாது விடுவாராகில் வையத்திலுள்ளவர்க்கெல்லாம் [அது தான்] வசை [என்றுசொல்லுவார்கள்].

Omnibus, qui in his terris vivunt, dedecori erit, nisi posteritatem, quae laus dicitur, gignant.

239. வசையிலா வண்பயன் குன்றுமிசையிலா
யாக்கை பொறுத்த நிலம் (௯)

இசையில்லாத யாக்கையை (உடம்பை) பொறுத்த நிலத்திலே வசையில்லாத வண் (வளம்பொருந்திய) பயன் (விளைவு) குன்றும் (குறையும்).

In terra, quae sustinet onus corporis, quod laude caret, ubertas fructuum, qui vitio carent, evanescet.

240. வசையொழியவாழ்வாரேவாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழாதவர் (௰)

வசை ஒழிய வாழ்பவர்கள் வாழ்வார்கள்; இசை ஒழிய வாழ்பவர்கள் வாழாதவர்கள் ஆவார்கள்.

Vivunt, qui sine macula vivunt, non vivunt, qui sine laude vivunt.

XXV.

அருளுடைமை. Benevolentia.

241. அருட்செல்வஞ்செல்வத்துட் செல்வம் பொரு
ட்செல்வம்
பூரியார் கண்ணுமுள (௧)

அருளாகிய செல்வம் செல்வத்துள் செல்வம்; பொருளாகிய செல்வம் பூரியாரிடத்தும் (இழிந்தவரிடத்தும்) உண்டு.

Benevolentiae abundantia vera est abundantia; pecuniae abundantia apud viles etiam homines est.

242. நல்லாற்றானாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினுமஃதே துணை (௨)

நல்ல ஆற்றிலே (வழியிலே) நாடி அருளை அள்வாயாக; பல ஆறுகளிலே (சமைய வழிகளிலே) தேரினாலும் (ஆராய்ந்தாலும்) அதே துணையாம்.

Bona via quaerens benevolentiam posside; etiamsi diversis viis (salutem) quaerant, illa auxilium est.

243. அருள்சேர்ந்தநெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்னா வுலகம் புகல் (௩)

அருளை சேர்ந்த நெஞ்சத்தை உடையவர்க்கு இருளை சேர்ந்த இன்னாத உலகத்துள் புகல் (பிரவேசித்தல்) இல்லை.

Qui animum habent cum benignitate junctum in mundum miseriae cum tenebris junctum non intrabunt.

244. மன்னுயிரோம்பி யருளாள்வாற்கில்லென்ப
தன்னுயிரஞ்சும் வினை (௪)

மன்னும் உயிரை ஓம்பி அருளைஆள்பவனுக்கு தன்னுடைய உயிர் அஞ்சும் (அஞ்சுதற்கு எதுவாகிய) வினை இல்லை என்பார்கள்.

Qui vitae (aliorum) consulentes benevolentiae sunt compotes, ipsorum vitae, dicunt, nullum facinus timendum esse.

245. அல்லலருளாள்வார்க்கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி (௫)

அருள் ஆள்பவர்க்கு அல்லல் (துன்பம்) இல்லை! வளி (காற்று) வழங்குகின்ற (உலாவுகின்ற) மல்லலுள்ள (வளப்பமுள்ள) மா ஞாலம் (உலகம்) அதற்கு கரி (சாட்சி) ஆகும்.

Qui benevolentiae compotes sunt, iis nullum malum accidit. Terra dives lateque patens, quam pervagantur venti, testis est.

246. பொருணீங்கிப்பொய்ச்சாந்தாரென்பரருணீங்கி
யல்லவை செய்தொழுகுவார் (௬)

அருளினின்றும நீங்கி அல்லவை (தீயவைகளை) செய்து ஒழுகுபவரை (நடப்பவரை) பொருளினின்றும் நீங்கி [மறுமைப் பொருளை?] பொய்ச்சாந்தவர் (மறந்தவர்) என்பார்.

Qui a benevolentia defeeeruut, et in malis faciendis versantur, eos, sapientes dieunt (in vita priori?) a veritate defecisse et sui esse oblitos.

247. அருளில்லார்க்கவ்வுலகமில்லைபொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாதியாங்கு (௭)

பொருளில்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லாது போல் அருள் இல்லாதவர்க்கும் அவ்வுலகம் இல்லை.

Quemadmodum hie mundus eorum non est, qui divitiis carent, ita alter mundus non est eorum, qui benevolentia earent.

248. பொருளற்றார்பூப்பரொருகாலருளற்றா
ரற்றார்மற்றாதலரிது (௮)

பொருளற்றவர் ஒருகாலத்தில் பூப்பார் (செல்வத்தினால் பொலிவார்); அருளற்றவர் அற்றவரே (அழிந்தவரே) மற்று (பின் ஒரு காலத்தினும்) ஆகுதல்அரிதாம்.

Divitiis orbati iterum aliquando florere poterunt; benevolentia orbati orbi sunt, et vix restitui poterunt.

249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற்றேரி
னருளாதான் செய்யுமறம். (௯)

அருளாதவன் (அருளில்லாதவன்) செய்யும அறம் — தேரின் (ஆராயின்) — தெருளாதவன் (ஞானமில்லாதவன்) மெய்யாகிய பொருளை கண்டது போலும்.

Virtus (omnis), quam exereet benevolentia vacuus, — si bene examines — perinde se habet ac eognitio summae veritatis apud aeumine vacuum.

250. வலியார்முற்றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லுமிடத்து (௰)

ஒருவன் தன்னிலும் மெலியவர் (எளியவர்) மேல் தான் (வருத்துதற்கு) செல்லும் போது, வலியவர்முன் தன்னை நினைக்க கடவான்.

Cogites te coram potentiori constitutum esse, cum in debiliorem invecturus es.

XXVI.

புலான்மறுத்தல். Abstinentia a carnibus.

251. தி[illegible]னூன் பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பா
னெங்ஙனமாளுமருள் (௧)

தன்னுடைய ஊனை (உடம்பை) பெருக்கும் படிக்கு தான் பிறிது (மற்றொன்றின்) ஊனை உண்பவன் எங்ஙனம் (எப்படி) அருளை ஆளுவான்?

Qui ut suam carnem augeat, alienas carnes comedit, quomodo is benevolentia utetur?

252. பொருளாட்சி போற்றாதார்க்கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின்பவர்க்கு (௨)

பொருளாட்சி (பொருளுரிமை) போற்றாதவர்க்கு (காப்பாற்றாதவர்க்கு) இல்லை; ஆங்கு [அதுபோல] அருளாட்சி ஊனை தின்பவர்க்கு இல்லை.

Bona non possident, qui ea negligunt; ita benevolentiam non possident, qui carnibus vescuntur.

253. படைகொண்டார் நெஞ்சம்போனன்றூக்கா
தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம் (௩)

நன்றினை ஊக்காது (மேற்கொள்ளாமல்) ஒன்றின் உடலை சுவைப்பட உண்டவரது மனமானது படையை கொண்டவரது நெஞ்சத்தை போலும்.

Ut animus illius, qui telum in manum sumit, ita ejus animus se habet, qui bonum negligens, ob gustum corpore (animalis) cujusdam vescitur.

254. அருளல்லதியாதெனிற் கொல்லாமைகோறல்
பொருளல்ல தவ்வூன் றினல் (௪)

அருளும் அருளல்லதும் யாது எனின் (என்றால்), கொல்லாமையும் கோறலும் (கொல்லலுமாம்); அவ்வூனை (அக்கொலையால் வந்த ஊனை) தின்னுதல் பொருளல் (தருமம்) அல்லாததாம்.

Quae est benevolentia et quid (vitium ei) contrarium? Non mactare et mactare. Etiam carne illà (mactando comparata) vesci nefas est.

255. உண்ணாமையுள்ளதுயிர் நிலையூனுண்ண
வண்ணாத்தல் செய்யாதளறு (௫)

உயிர்நிற்கை [ஊனை] உண்ணாமையினிடத்து; ஒருவன் உண்பா

னுகில் [அவனை விழுங்கிய] அளறு (நரகமானது) [பின் உமிழ்த ற்கு] அண்ணுத்தல் செய்யாது (வாய்திறவாது).
(Carne) non vescendo vita continetur. Si tamen comedas, inferna (te devorabunt et) iterum non evoment.

256. தினற்பொருட்டாற்கொள்ளாதுலகெனின்யாரும்
விலைப்பொருட்டாலூன்றருவாரில் (௬)
தின்னுதல் பொருட்டால் (காரணமாக) உலகு [ஊனை] கொள்ளாதாயின் விலை பொருட்டால் ஊனை தருபவர் (விற்பவர்) இல்லை.
Nisi mundus edendi causa (carnem) emat, nemo erit, qui pretii causa eam vendat.

257. உண்ணாமைவேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணதுணர்வார்ப் பெறின் (௭)
புலால் பிறிதொன்றின் புண்ணாகும்; அதை உணர்பவர் பெற்றால், [புலாலை] உண்ணாமை வேண்டும்.
Carne non vesci necesse est, quippe cum sit alterius vulnus (i. e. alterius vulneratione comparata), si inveniuntur, qui sapiunt.

258. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியாருண்ணா
ருயிரிற் றலைப்பிரிந்த வூன் (௮)
செயிரினின்றும் (மயக்கத்தினின்றும்) தலைப்பிரிந்த (நீங்கிய) காட்சியுள்ளவர் உயிரினின்றும் தலைப்பிரிந்த ஊனை உண்ணார்கள்.
Sapiens, qui a libidine discessit, non vescetur carne, quae a vita discessit.

259. அவிசொரிந் தாயிரம் வேட்டலினொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று (௯)
அவியை (நெய்யை) சொரிந்து (தீயினிடத்தே பெய்து) ஆயிரம் வேட்டலினும் (யாகஞ்செய்தலினும்) ஒன்றின் உயிரை செகுத்து (அழித்து) உண்ணாமை நல்லது.
Melius est nullius vitam exstinguere et consumere, quam butyrum fundendo mille victimas immolare.

260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும் (௰)
கொல்லாதவனும் புலாலை மறுத்தவனை எல்லா உயிரும் கைக்கூப்பி (கைகுவித்து) தொழும்.
Qui non interficit et carnem respuit, eum vita omnis junctis manibus venerabitur.

XXVII.

தவம். Vita ascetica.

261. உற்றநோய்நோன்றலுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற்குரு (௧)

[பசி சகித்தல் முதலானவைகளால்] உற்ற (உண்டான) நோயை நோற்றலும் (பொறுத்தலும்) உயிருக்கு உறுகண் (துன்பம்) செய்யாமையும் ஆகிய அதுவே தவத்தினுக்கு உரு (வடிவமாகும்).

Proprium dolorem perpeti neque ceteris viventibus offerre dolorem, haec est poenitentiae forma.

262. தவமுந்தவமுடையார்க்காகுமவமதனை
யஃதிலார் மேற்கொள்வது (௨)

தவமும் தவத்தை உடையவர்க்கே உண்டாகும்; அதில்லாதவர் அதை மேற்கொள்வது அவம் (வீணாகும்).

Qui poenitentiam habent, iis etiam fiet poenitentia. Qui vero poenitentia carent, frustra poenitentiam suscipient.

263. துறந்தார்க்குததுப்புரவுவேண்டிமறந்தார்கொன்
மற்றையவர்க டவம் (௩)

[இல்லறத்தை மேற்கொண்டவராகிய] மற்றையவர்கள் துறந்தவர்க்கு துப்புரவு (அனுபவிக்கப்படும் பொருள்கள்) வேண்டி தவத்தை மறந்தார்களோ?

Ceteri studiosi poenitentibus subveniendi — num forte poenitentiae obliti sunt?

264. ஒன்னார்த்தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும் (௪)

ஒன்னாரை (பகைவரை) தெறலையும் (அழித்தலும்) உவந்தவரை (சிநேகிதரை) ஆக்கலையும் (விர்த்தி பண்ணுதலும்) எண்ணினால் — [அவை] தவத்தினால் வரும்.

Si destructionem hostium et fautorum incrementum modo cogites, per poenitentiam obtinentur.

265. வேண்டியவேண்டியாங்கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும் (௫)

வேண்டியவைகளை வேண்டியப்டியே எய்தலால் (பெறுதலால்) செய் (செய்ய தகும்) தவமானது ஈண்டு (இம்மையில்) முயலப் படும்.

Cum optata omnia optata ratione impetrent, in hac vita poenitentiam suscipiunt.

266. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லா
ரவஞ்செய்வாராசையுட் பட்டு (௬)

தவத்தை செய்பவர் தமது கருமத்தை செய்பவராவார்; மற்று [தவம்] அல்லாதவர் ஆசையுட்பட்டு அவம் (வீணான கருமத்தை) செய்பவராவார்.

Qui poenitentiam agunt, suum negotium agunt; ceteri inania faciunt, cupiditatibus involuti.

267. சுடச்சுடப் பொன்போலொளிவிடுந்துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (௭)

[நெருப்பு] சுடசுட பொன் போல் — துன்பமானது சுடசுட, நோற்பவர்க்கு ஒளிவிடும் (ஞானமாகிய பிரகாசமுண்டாகும்).

Ut, igne ardente, in aurum: ita, afflictione ardente, in poenitentes lux se effundit.

268. தன்னுயிர்தானறப் பெற்றானை யேனைய
மன்னுயிரெல்லாந் தொழும் (௮)

தன்னுடைய உயிரை தான்ற (முற்ற) பெற்றவனை (தனக்கு உரித்தாக பெற்றவனை) ஏனைய (மற்ற) மன்னும் உயிர் எல்லாம் தொழும். [தன்னுடைய உயிரை, தான் (அகங்காரம்) அற (கெட), பெற்றவனை . . . ?]

Qui suam vitam omnino suam adeptus est, cum reliqua vita omnis venerabitur. (Qui suam vitam, notione „ego“ cessante, adeptus est . . .?)

269. கூற்றங்குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்கு (௯)

கூற்றத்தை (யமனை) குதித்தலும் (கடத்தலும்) நோற்றலின் ஆற்றலை (வல்லமையை) தலைப்பட்டவர்க்கு (கூடியவர்க்கு) கைகூடும (முடியும்).

Ipsam mortem superare iis continget, qui vim poenitentiae obtinuerunt.

270. இலர்பலராகிய காரணநோற்பார்
சிலர்பலர் நோலாதவர் (௰)

இலர் (வறியவர்) பலராகிய (பலராதலுக்கு) காரணம் (யாதென்றால் அது): நோற்பவர் (தவஞ்செய்பவர்) சிலராக, நோலாதவர் பலராதல்.

Causa, cur homines inanes tam multi sint, haec est, quod poenitentes tam pauci, non poenitentes tam multi!

XXVIII.

கூடாவொழுக்கம். Continentia simulata.

271. வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும் (௧)

வஞ்சனையுள்ள மனதையுடையவனது படிறு (பொய்) பொருந்திய ஒழுக்கத்திலே பூதங்கள் அஞ்சும் அகத்தே (தமமுள்ளே) நகும் (நகைக்கும்).

Qui animo fallaci vitam (castimoniae) fictam agit, eum intus quinque elementa omnia (i. e. sensus, quibus vita castimoniae ficta nihil detrahitur) deridebunt.

272. வானுயர்தோற்றமெவன்செய்யுந்தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின் (௨)

தான் அறிந்த குற்றத்திலே தனது நெஞ்சம்பட்டால் வானின் உயர்ந்த தோற்றம் என்ன [பயனை] செய்யும்?

Incessus altus tamquam coelum quid proderit, si animus cognito peccato teneatur.

273. வலியினிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந்தற்று (௩)

[மனத்தை அடக்கும்] வலி (வல்லமை) இல்லாத நிலைமையை யுடையவனது வலிய உருவம் (தோற்றம்) பெற்றம் (பசுவானது புலியின் தோலை போர்த்து [பயிரை] மேய்ந்தாற் போலும்.

Species virium in eo, cujus conditio est, ut vires ei deficiant, perinde se habet ac bos, quae pelle tigridis cooperta pascitur.

274. தவமறைந்தல்லவை செய்தல்புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த்தற்று (௪)

தவ [வேடத்திலே] மறைந்து [தவம்] அல்லாத்வைகளை செய்தல் வேடன் புதலிலே (புதரிலே) மறைந்து புள்ளை (பறவைகளை) சிமிழ்ந்தல் (பிடித்தல்) போலும்.

Castimoniae specie se occultantem poenitentiae contraria facere perinde est, ac si venator arbusto se occultans aves decipiat.

275. பற்றற்றேமென்பார் படிற்றொழுக்க மெற்றெற்
றென்.
றேதம் பலவுந் தரும் (௫)

பற்று அற்றேம் என்று சொல்பவரது படிறு பொருந்திய ஒழுக்கமானது [அது] எது எது என்று (அழ) பல எதங்களையும் (துன்பங்களையும்) தரும்.

Vita ficta eorum, qui dicunt: „cupiditatum expertes sumus" multum afferet doloris, ut „quid, quid?" dicere cogantur.

276. நெஞ்சிற்றுறவார் துறந்தார்போல்வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணாரில் (௬)

நெஞ்சில் துறவாதவராகி துறந்தவர்போல் வஞ்சித்து வாழ்பவரை பார்க்க வன்கண்ணுடையவர்(இரக்கமில்லாதவர்) இல்லை.

Duriori oculo nemo est quam ille, qui, quamvis animo poenitentia carens, poenitentem simulans fraude vivit.

277. புறங்குன்றிகண்டனைய ரேனுமகங்குன்றி
மூக்கிற் கரியாருடைத்து (௭)

புறத்தில் குன்றி (மணியனது) காணப்படுதல்போல் காணப்படுகிறவராகிலும், அகத்தில் குன்றி [மணியின்] மூக்கிலும் கருமையுள்ளவரை [உலகமானது] உடையதாயிருக்கின்றது.

(Mundus) tenet, qui, quamvis speciem externam cunri seminis prae se ferant, indole interna apice ejus sint nigriores.

278. மனத்ததுமாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர் (௮)

மனத்து (மனத்திலுள்ளது) மாசாக — மாண்டார் (மாட்சிமையுடையவராய்) நீராடி (நீரிலே முழுகி) மறைந்து ஒழுகும் மனிதர் பலர்.

Multi sunt, qui macula (peccati) in animo inhaerente ad modum sanctitate inclytorum lavantur et eo se occultant.

279. கணைகொடிதியாழ்கோடு செவ்விதாங்கன்ன
வினைபடு பாலாற் கொளல் (௯)

கணை (அம்பானது) கொடிது (கொடுமையுள்ளதாயிருக்கின்றது) யாழின் கோடு (வளைவானது) செவ்வியுடையதாயிருக்கின்றது; ஆங்கு (அதின்படியே) அன்ன (அந்த காரியங்களை) வினைபடு (வினையாக தோன்றின) பாலால் (பகுதியால்) கொள்ள வேண்டும்.

Sagitta (recta) atrox est; curva cithara dulcis; eodem modo haec ex proprietate operum sunt aestimanda.

280. மழித்தலுநீட்டலும் வேண்டா வுலகம்
பழித்ததொழித்து விடின் (௰)

உலகம் பழித்ததை ஒழித்து விட்டால் மழித்தலும் (சிரைத்தலும்) நீட்டலும் (சடையாக்கலும்) வேண்டா.

Nec calvities (qua sivaitarum ordo inferior insignis est), nec longa caesaries (quae apud ordinem superiorem caelibum invenitur) opus erit, si abstinueris ab iis, quae mundus (sapientes) reprobat.

XXIX.

கள்ளாமை. Fraude non uti.

281. எள்ளாமைவேண்டுவானென்பானெனைத்தொ
ன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு (௧)

[முத்தியை] எள்ளாமல் (இகழாமல்) வேண்டுபவன் யாதொன்றினையும் கள்ளாதபடி தனது நெஞ்சை காப்பானாக!

Qui dicitur levitatis expers (ad summum bonum) niti, animo suo cavere debet, ne quantulumcumque surripiat.

282. உள்ளத்தாலுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வேமெனல் (௨)

உள்ளத்தினால் உள்ளலும் (நினைத்தலும்) தீதேயாகும்; [ஆதலால்] பிறனது பொருளை கள்ளத்தினால் கள்ளுவோம் என்னாதே.

Etiam mente cogitata mala sunt. Noli dicere: proximi bonum furto subducam.

283. களவினாலாகிய வாக்கமளவிறந்
தாவது போலக் கெடும் (௩)

களவினால் ஆகிய ஆக்கமானது அளவினை இறந்து (கடந்து) ஆவது (வளர்வது) போல் கெடும்.

Bonum fraude partum, dum videtur augeri, modum excedendo destruitur.

284. களவின்கட்கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும் (௪)

களவின்கண் (களவிலே) கன்றிய (மிகுந்த) காதல் (ஆசையானது) விளைவிலே (பயனைக்கொடுக்கும் போது) வீயாத (கெடாத) விழுமத்தை (துன்பத்தை) தரும்.

Cupiditas, in fraude gravescens, cum fructus suos feret, immortalem miseriam pariet.

285. அருள்கருதியன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில் (௫)

அருளை கருதி அன்புடையவராகுதல் [பிறர்] பொருளை கருதி [அவரது] பொச்சாப்பை (சோர்வை) பார்ப்பவரிடத்திலே இல்லை [தம்முடைய மயக்கத்தை பார்ப்பரிடத்திலே இல்லை?]

Benevolentiam meditantes amorem adipisci iis non contingit, qui bona (aliena) meditantes torporem spectant.

286. அளவின்கணின்றொழுகலாற்றார் களவின்கட்
கன்றிய காதலவர் (௬)

களவின் கண் (களவிலே) கன்றிய காதலையுடையவா அளவிலே [நடுவு நிலைமையில்] நின்று ஒழுகுதலைஆற்ற மாட்டார்.

Modum tenentes vitam agere non possunt, quorum cupiditas in fraude gravescit.

287. களவென்னுங்காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்கணில் (௭)

களவு என்னும் கார் (இருண்ட) அறிவினை ஆளுதல் (கொண்டிருத்தல்) அளவு என்னும் ஆற்றலை (பெருமையை) புரிந்தவரிடத்து (விரும்பினவரிடத்து) இல்லை.

Artem illam nigram, quae fraus dicitur, exercere non possunt, qui ad magnitudinem eorum nituntur, qui modum tenent.

288. அளவறிந்தார்நெஞ்சத்தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு (௮)

அளவை அறிந்தவரது நெஞ்சத்தில் அறம்போல் — களவை அறிந்தவரது நெஞ்சில் கரவு (வஞ்சனை) நிற்கும்.

Ut in aniino eorum, qui modum sciunt, virtus, ita in eorum animo, qui fraudem sciunt, fraus residet.

289. அளவல்லசெய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றாதவர் (௯)

களவு அல்லாத மற்றவைகளை அறியாதவர் அளவு அல்லாதவைகளை செய்து ஆங்கே (அப்போதே) வீவார் (கெடுவார்)

Modum non servautes statim iuteribunt, qui nihil nisi fraudem intelligunt.

290. கள்வார்க்குத்தள்ளுமுயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேளுலகு (௰)

கள்ளுபவருக்கு உயிர்நிலையும் (உயிர்நிற்கிற உடம்பும்) தள்ளும் (தவறும்); கள்ளாதவருக்கு புத்தேள் (தேவர்) உலகமும் தள்ளாது.

A fraudulentis ipsorum corpus recedet; a fraude carentibus etiam mundus deorum non recedet.

XXX.

வாய்மை. Veracitas.

291. வாய்மையெனப்படுவதியாதெனின் யாதொ
ன்றுந்
தீமையிலாத சொலல் (க)

வாய்மை (மெய்மை) எனப்படுவது யாது என்றால் — யாதொ
ன்றும் (சிறிதாகிலும்) தீமையில்லாதவைகளை சொல்லுதலாம்.
Si quaeras, quid sit veritas, respondeo: ea dicere, quae quocumque malo vacua sint.

292. பொய்ம்மையும்வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மைபயக்குமெனின் (உ)

புரை (குற்றம்) தீர்ந்த (இல்லாத) நன்மையை பயக்குமாகில்
— பொய்மை [சொற்களும்] — வாய்மை [சொற்களின்] இட
த்தவையாம்.
Etiam sermo falsus naturam veritatis habebit, si sine culpa bonum afferat.

293. தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும் (ங)

ஒருவன் தனது நெஞ்சு அறிவதை (பிறர் அறியார் என்று) பொய்
யாதிருப்பானாக! பொய்த்த பின்பு, தனது நெஞ்சே தன்னை சுடும்
(தபிக்கும்).
Pectore tuo conscio ne mentiaris. Si mentitus es, pectus te uret.

294. உள்ளத்தாற்பொய்யாதொழுகினுலகத்தா
ருள்ளத்துளெல்லாமுளன் (ச)

[ஒருவன் தன்] உள்ளத்தால் பொய்யாது ஒழுகுவானாயின்;
அவன் உலகத்தாரது உள்ளத்துள் (மனங்களில்) எல்லாம்
உளன் (இருப்பான்).
Qui ex animo sine mendacio vitam agit, in totius mundi (sapientium) animo inhaeret.

295. மனத்தொடுவாய்மை மொழியிற்றவத்தொடு
தானஞ்செய்வாரிற்றலை (ரு)

ஒருவன் மனத்தோடு வாய்மையை மொழிவானாயின், [அவன்]
தவத்துடனே தானத்தை செய்பவரின் தலையாவான்.
Qui ex animo (animo conjunctam) veritatem loquitur, caput eorum est, qui cum poenitentia (conjunctam) benignitatem colunt.

296. பொய்யாமையன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந்தரும் (௬)

பொய்யாமைக்கு அன்ன (ஒத்த) புகழ் இல்லை; [அது] எய்யாமல் (வருந்தாமல்) எல்லாஅறத்தையும் தரும்.

Nulla est laus, quae veritatem aequet; sine labore virtutes omnes largitur.

297. பொய்யாமைபொய்யாமையாற்றினறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று (௭)

[ஒருவன்] பொய்யாமையையே பொய்யாமையையே ஆற்றுவானுயின் (செய்வானுயின்) பிறஅறத்தை செய்யாமையே செய்யாமையே நல்லது.

Si quis non mentiens mendacio abstinet, ei licet ceteras virtutes non facienti nihil facere. (Si quis mendacium mendacium non exercet, ei licet ceteras virtutes, non facere, non facere).

298. புறந்தூய்மைநீரானமையுமகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும் (௮)

புறம் (உடம்பின்) தூய்மை (பரிசுத்தமாந்தன்மை) நீரால் அமையும் (உண்டாகும்); அகம் (மனதின்) தூய்மை வாய்மையால் காணப்படும்.

Externa mundities aqua efficitur; interna mundities veritate ostenditur.

299. எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு (௯)

சான்றவர்க்கு (பெரியோர்க்கு) எல்லா விளக்கும் விளக்கு அல்ல; பொய்யா (பொய்யாத = பொய்யாமையாகிய) விளக்கே விளக்காம்.

Omne lumen perfectis non est lumen; lumen veritatis lumen est.

300. யாமெய்யாக்கண்டவற்றுளில்லையெனைத்தொ
ன்றும்
வாய்மையினல்லபிற (௰)

நாம் மெய்யாக (மெய்ந்நூல்களாக) கண்டவற்றுள் (கண்ட நூல்களுள்) வாய்மையைப் போல் நல்லவையாகிய பிற [காரியங்கள்], — எனைத்து ஒன்றும் (யாதொன்ருகிலும்) இல்லை.

In omnibus (scriptis), quae vera esse cognovimus, nullum aliud (invenitur) bonum, quantumcunque est, quod veritatem aequet.

XXXI.

வெகுளாமை. Non irasci.

301. செல்லிடத்துக்காப்பான் சினங்காப்பானல்லி
டத்துக்
காக்கினென் காவாக்காலென் (க)

சினம் (கோபம்) செல்லும் (பலிக்கும்) இடத்தில் [அது உண்டாகாமல்] காப்பவன் காப்பவனாவான்; [அப்படி] அல்லாத (= பலியாத) இடத்தில் காத்தால், என்ன? காக்காவிட்டால், என்ன?

Qui, ubi effectum habere potest, iram continet, is eam continet; ubi non potest, quid erit, si contineat, quid, si non contineat?

302. செல்லாவிடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீயபிற (உ)

சினமானது செல்லாத இடத்தில் தீதாம்; செல்லும் இடத்திலும் அதனின் தீமையுடையவையாகிய பிற [குற்றங்கள்] இல்லை.

Mala est ira, ubi nihil efficit; ubi quid efficit, nihil pejus.

303. மறத்தல்வெகுளியை யார்மாட்டுந்தீய
பிறத்தலதனான்வரும் (ங)

யாவர் மாட்டும் (யாவரிடத்திலும்) வெகுளியை (கோபத்தை) மறப்பாயாக! [ஏனெனில்] தீமையுடையவை பிறத்தல் அதினால் வரும்.

In quemlibet irae obliviscaris; fetus malorum ab ea orietur.

304. நகையுமுவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையுமுவளோபிற (ச)

நகையையும் உவகையையும் (மகிழ்ச்சியையும்) கொல்லுகின்ற சினத்தின் (சினத்தை பார்க்க) பிற பகைகளும் இருக்கின்றனவோ?

Ira, quae risum et gaudium perimit, num alius pejor hostis est?

305. தன்னைத்தான்காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம் (ரு)

தன்னை தான் காத்தால், சினம் [உண்டாகாமல்] காப்பானாக! காக்காவிட்டால் சினம் தன்னையே கொல்லும்!

Si tibi caveas, iram caveas; sin minus, ira te perimet.

306. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
ஏமப் புணையைச் சுடும் (௬)

சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி (நெருப்பு). இனம் (சுற்றம்) என்னும் ஏமம் (காவல் செய்கிற) புணையை [கப்பலையும்] சுடும்.

Igne mortifero irae etiam ratis salutifera amicorum comburetur.

307. சினத்தைப்பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையாதற்று (௭)

சினத்தை [பிரயோசனமாகிய] பொருள் என்று கொண்டவனது கேடு நிலத்தின் மேல் அறைந்தவனது கை பிழையாதது (தப்பாதது போலும்).

Interitus ejus, qui iram numero bonorum habet, perinde est ac non fallens manus ejus, qui terram ferit.

308. இணரெரிதோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று (௮)

இணர் (பலசுடர்களையுடைய) எரி (நெருப்பானது) தோய்வு (வந்து தழுவல்) அன்ன (போலும்) இன்னாதவைகளை [ஒருவன்] செய்தாலும் வெகுளாமை புணர்ந்தால் (கூடுமாயின்), நல்லதாம்.

Etsi quis dolorem tibi commoveat, quasi te attingunt juncti ignes, si irae vacuitas adest, bonum erit.

309. உள்ளியவெல்லாமுடனெய்துமுள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின் (௯)

ஒருவன் தன் உள்ளத்தால் வெகுளியை உள்ளான் (நினையான்) ஆயின், உள்ளின (நினைத்த) எல்லாம் உடன் (கூட) எய்துவான் (பெறுவான்).

Quaecumque intus cogitaverit, simul obtinebit, cui intus ira nulla inest.

310. இறந்தாரிறந்தாரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை (௰)

[கோபத்திலே] இறந்தவர் (மிகுந்தவர்) இறந்தவரோடு (செத்தவரோடு) அனையர் (ஒப்பாவார்); சினத்தை துறந்தவர் [அழிவதாகிய இந்தலோகத்தை] துறந்தவர் துணை (போலாவார்).

Qui ira delinquunt, iis pares sunt, qui animam relinquunt; qui irae renuntiant, eorum sunt socii, qui (omnibus) renuntiaverunt.

XXXII.

இன்னாசெய்யாமை. Nemini male facere.

311\. சிறப்பீனுஞ்செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார்கோள் (க)

சிறப்பை ஈனும் (தரும்) செல்வத்தை பெற்றாலும் (பெறலாம் ஆயினும்), பிறருக்கு இன்னாதவைகளை செய்யாமை மாசற்றவரது கொள்கையாம்.

Etsi bonum consequantur, quod honorem pariat, nemini malum facere eorum est, qui macula carent.

312\. கறுத்தின்னாசெய்தவக்கண்ணுமறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள் (உ)

[ஒருவன்] கறுத்து (கோபித்து) இன்னாதவைகளை செய்த அக்கண்ணும் (இடத்தும்), மறுத்து (மீண்டு) செய்யாமை மாசற்றவரது கொள்கையாம்.

Etiamsi quis iratus ipsis damnum inferat, vicissim nihil damni inferre, macula carentium est.

313\. செய்யாமைசெற்றார்க்குமின்னாத செய்தபி
னுய்யா விழுமந்தரும் (ங)

[தான் பகையை] செய்யாமல் (செய்யாதிருக்க) செற்றவருக்கும் (பகைவருக்கு) இன்னாதவைகளை செய்த பின்பு [அது] உய்யாத (தப்பக்கூடாத) விழுமத்தை (துன்பத்தை) தரும்.

Ipsis hostibus qui sine causa oderint illatum damnum dolorem afferet, qui evitari nequit.

314\. இன்னாசெய்தாரை யொறுத்தலவர்நாண
நன்னயஞ் செய்துவிடல். (ச)

இன்னாதவற்றை செய்தவர்களை ஒறுத்தல் (தண்டித்தலாவது) அவர்கள் நாணும் படியாக நல்ல நயத்தை செய்து விடலாகும் (மறத்தலாகும்).

Damnum (tibi) inferentes poena afficies, si beneficia in eos contuleris, ut pudore afficiantur.

315\. அறிவினானாகுவதுண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக்கடை (ரு)

பிறிதின் நோய்களை தமது நோய்களை போல் போற்றாத (பேணாத) இடத்து அறிவினால் ஆகுவது (ஆகும் பயன்) உண்டோ?

Scientia tua quid efficitur, si alienum malum tamquam tuum non curas?

316. இன்னாவெனத்தானுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட்செயல் (௬)

[இவை] இன்னாதவை என்று தான் உணர்ந்தவற்றை பிறனிடத்தே செய்தலை துன்னாமை (பொருந்தாமை) வேண்டும்.

Quod tu malum esse nosti, id alteri facere ne aggrediaris!

317. எனைத்தானுமெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணா செய்யாமைதலை (௭)

பனததால்ஆம் (மனத்தோடு உண்டாம்) மாணாதவற்றை (கொடியவற்றை) எனைத்தாயினும் (எவ்வளவாயினும்), எஞ்ஞான்றும் (எக்காலத்திலும்) யாவர்க்கு செய்யாமை தலையாம்.

Quantumcumque est quocumque tempore nemini ex animo quidquam haud pulchri facere, (honestatis omnis) caput est.

318. தன்னுயிர்க்கின்னாமை தானறிவானென்கொ
லோ
மன்னுயிர்க்கின்னா செயல் (௮)

தனது உயிர்க்கு இன்னாமையை (அனுபவித்து) அறிபவன் மன்னும் உயிர்க்கு இன்னாதவற்றை தான் செய்யல் என்கொலோ (என்ன காரணத்தால்)?

Qui cognoverit, quid vitae suae malum sit, quare, quaeso, ceteris viventibus malum afferet?

319. பிறர்க்கின்னாமுற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற்றாமே வரும் (௯)

பிறர்களுக்கு இன்னாதவற்றை முற்பகலிலே செய்தால், [செய்த] தமக்கு இன்னாதவை பிற்பகலிலே தாமே வரும்.

Si ante meridiem alteri malefeceris, post meridiem tibi malum ultro obveniet.

320. நோயெல்லாநோய்செய்தார் மேலவா நோய்செ
ய்யார்
நோயின்மை வேண்டுபவர் (௰)

நோய் எல்லாம் நோயை செய்தவர் மேலனவாம்; [ஆதலால்] நோயில்லாமையை வேண்டுபவர் நோயை செய்யார்.

Qui ceteros dolore afficient, eis dolores omnes obvenient; dolorem non facient, qui doloris vacuitatem cupient.

XXXIII.

கொல்லாமை. Non occidere.

321. அறவினையாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந்தரும் (க)

அறமாகிய வினை (செய்கை) எது என்றால் — கொல்லாமை யாம்; கோறல் (கொல்லுதல்) பிற (அறமல்லாத) வினைகள் எல்லாவற்றையும் தரும்.

Si quaeras, quae actio virtuti consentanea sit — non occidere. Vitia omnia caedes parit.

322. பகுத்துண்டுபல்லுயிரோம்புதனூலோர்
தொகுத்தவற்றுளெல்லாந்தலை (உ)

பகுத்து (பங்கிட்டு) உண்டு (சாப்பிட்டு) பல உயிர்களை ஓம்புதல், நூலுடையவர் தொகுத்தவை எல்லாவற்றினும் தலையாம்.

Aliis impertientem cibum capere, multa animantia benevolentia complecti, omnium eorum, quae collegerunt auctores, caput est.

323. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று (ந)

ஒன்றாக (ஒப்பில்லாததாக) கொல்லாமை நல்லது; அதின் பின்னே சார (நிற்க) பொய்யாமை நல்லது.

Unice bona est a caede abstinentia: bonitate secundum locum tenet a mendacio abstinentia.

324. நல்லாறெனப்படுவதியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமைசூழுநெறி (ச)

நல்ல ஆறு எனப்படுவது எது என்றால் — யாதொன்றினையும் கொல்லாமையை சூழும் (பேணும்) நெறியாம்.

Si quaeras, quae bona sit via — via illa qua circumspiciunt, ne quid occidant.

325. நிலையஞ்சிநீத்தாருளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான்றலை (ரு)

[பிறப்பு நிற்கின்ற] நிலைக்கு அஞ்சி நீத்தவர் (துறந்தவர்) எல்லாருள்ளும் கொலைக்கு அஞ்சி கொல்லாமையை சூழ்பவன் தலை.

Inter omnes, qui, ne vita pergat, timentes, abstinentes vivunt, caput est, qui ne vita privet, timens, abstinentiam a caede circumspicit.

326. கொல்லாமைமேற்கொண்டொழுகுவான் வாழ்
நாண்மேற்
செல்லாதுயிருண்ணுங்கூற்று (௬)

உயிரை உண்ணுகின்ற கூற்று (இயமன்) கொல்லாமையை மேற்கொண்டு ஒழுகுபவனது வாழ்நாட்களின் (ஆயுளின்) மேல் செல்லுகிறது இல்லை.

Qui abstinentiam a caede suscipit, ejus vitae dies Deus mortis, qui vitam devorat, non corripit.

327. தன்னுயிர்நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை (௭)

[ஒருவன்] தன்னுடைய உயிரை நீத்தாலும் (இழந்தாலும்) தான் பிறிதின் இனிய உயிரை நீக்குகின்ற வினையை செய்யாதிருப்பானாக.

Quamvis vita tua amittatur, noli quidquam facere, quo alteri dulcem vitam adimas.

328. நன்றாகுமாக்கம் பெரிதெனினுஞ் சான்றோ
ர்க்குக்
கொன்றாகுமாக்கங்கடை (௮)

[யாகத்திலே கொன்றால்] நன்மை யாகும் ஆக்கம் பெரிதாயிருந்தாலும், சான்றவருக்கு கொன்று ஆகும் (கொல்லுதலால் உண்டாகின்ற) ஆக்கம் கடை (இழிந்தது) ஆம்.

Quamvis maximum fiat emolumentum, quod per caedem fit emolumentum, perfectis ultimum est.

329. கொலைவினையராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவாரகத்து (௯)

புன்மை (இழிவை) தெரிபவருடைய அகத்தில் (மனதில்) கொலைவினையையுடைய மனிதர்கள் புலைவினையையுடையவர் ஆவார்.

Qui negotium occidendi tractant, in vili negotio occupantur ex mente eorum, qui, quid vile sit, intelligunt.

330. உயிருடம்பினீக்கியாரென்பர் செயிருடம்பிற்
செல்லாத் தீ வாழ்க்கையவர் (௰)

செயிர் (நோயுள்ள) உடம்புடனே செல்லாத (வறுமையோடு கூடிய) தீய வாழ்க்கையையுடையவரை [முற்பிறப்பிலே] உயிரை உடம்பினின்று நீக்கினவர் என்று சொல்லுவார்.

Vitam e corpore traxisse dicentur, qui in vitioso corpore infelicem, miseram vitam ducunt.

XXXIV.

நிலையாமை. Rerum terrestrium instabilitas.

331. நில்லாதவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறிவாண்மைகடை (க)

நில்லாதவை நிலையுடையவை என்று உணரும் புல்லறிவை (அற்பபுத்தியை) ஆளுதல் கடையாம் (இழிவாம்).

Tenuis illa sapientia, quae instabilia stabilia existimat, ultima est.

332. கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்
போக்குமதுவிளிந்தற்று (உ)

பெரிய செல்வம் [வருதல்] கூத்தாடுதலை செய்கின்ற அவையினிடத்தே (சபையினிடத்தே) குழாத்தற்றே (கூட்டம் போலும்); [அச்செல்வம்] போகுதலும் அது [அக்குழாம்] விளிதல் (போகுதல்) போலும்.

Ut concursus ad gregem mimorum, ita habet cumulatio magnarum divitiarum; etiam dispereunt, ut dispergitur ille.

333. அற்காவியல்பிற்றுச் செல்வமதுபெற்ருல்
அற்குப வாங்கே செயல் (ங)

செல்வமானது அற்காத (நிலையாத) இயல்பையுடையதாகும்; அதை பெற்ருல், அற்கும் (அறங்களை) ஆங்கே [அப்பொழுதே] செய்வாயாக!

Fortuna conditionem habet, ut non maneat; si eam obtinueris, statim quae maneant sequi debebis.

334. நாளெனவொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாளதுணர்வார்ப் பெறின் (ச)

உணர்பவரை பெற்ருல் — உயிரானது — நாள் என்று சொல்லப்படுவதாகிய ஒன்று (ஒருகாலஅளவு) போல் தன்னை காட்டி ஈரும் (அறுக்கும்) வாளது (வாளின் இயல்பிற்று).

Se ostendens tanquam id, quod dies dicitur, vita (revera) est secans ensis, si inveniuntur, qui hoc intelligant

335. நாச்செற்றுவிக்குண்மேல் வாராமுன் னல்வினை
மேற்சென்று செய்யப்படும் (ரு)

நாவை செற்று (அடக்கி) விக்குள் (விக்கலானது) மேல் வருவதற்கு முன்னே நல்வினையை மேற்சென்று (விரைந்து) செய் வேண்டும்.

Antequam singultus linguam comprimens te aggrediatur, bonum opus aggrediens, agere debes.

336. நெருநலுளனொருவனின்றில்லை யென்னும்
பெருமையுடைத்திவ்வுலகு (௬)

இவ்வுலகு நெருநல் (நேற்று) உள்ளன் (உண்டாயிருந்தவன்) ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமையுடையதாயிருக்கின்றது.

„Qui heri erat, hodie non est“, haec est hujus mundi dignitas.

337. ஒருபொழுதும்வாழ்வதறியார்கருதுப
கோடியுமல்லபல (௭)

ஒரு [கண] பொழுதும் வாழ்வதை அறியாதவர் கோடியுமல்ல (கோடியளவும் அன்றி) பல [அதனிலும்] (பலவாகிய காரியங்களை) கருதுவார்.

Qui nesciunt, an vel minimam partem temporis victuri sint, plus quam centena millia moliuntur.

338. குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
யுடம்பொடுயிரிடை நட்பு (௮)

உடம்போடு உயிருடைய நட்பானது குடம்பை (முட்டை) தனித்து ஒழிய புள் (பறவை) பறந்து போகுதல் போலும்.

Ut avis evolat et ovum solum relinquit, ita se habet conjunctio animi cum corpore.

339. உறங்குவதுபோலுஞ் சாக்காடுறங்கி
விழிப்பதுபோலும் பிறப்பு (௯)

சாக்காடு (மரணம்) உறங்குவது (தூங்குதல்) போலும்; பிறப்பு உறங்கிவிழித்தல் போலும்.

Qui moritur ei similis est, qui somnum capit; qui nascitur, ei est similis, qui somno solvitur.

340. புக்கிலமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சிலிருந்த வுயிர்க்கு (௰)

உடம்பினுள் துச்சிலிருந்த (ஒதுக்குக்குடியிருந்த) உயிருக்கு, புக்கில் (வீடு) அமைந்ததில்லை.

Anima, quae in corpore tanquam in hospitio moratur, domum nullam habet. — Nonne ita est?

XXXV.

துறவு. Renuntiatio.

341. யாதனின்யாதனினீங்கியானோத
லதனினதனினிலன் (௧)

[ஒருவன்] யாதினின்றும் யாதினின்றும் நீங்கினான், [அவன்] அதினின்றும் அதினின்றும் நோதல் (துன்பம்) இல்லாதவன்.

A quo quis se disjunget, inde nullum dolorem patietur.

342. வேண்டினுண்டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பாலபல (௨)

துறந்த பின் ஈண்டு இயலும் (உண்டாகும்) பாலை (முறைமையை உடையவைகள்) பலவாம்; [அவைகள்] உண்டாக வேண்டினால் துறப்பாயாக.

Si optas, ut aliquid tibi obtingat, renuntia! si renuntiaris, multa tibi in hac vita poterunt obtingere.

343. அடல்வேண்டுமைந்தின்புலத்தைவிடல்வே
ண்டும்
வேண்டிய வெல்லாமொருங்கு (௩)

ஐந்தின் புலத்தை (ஐம்புலன்களையும்) அடல் (கெடுத்தல்) வேண்டும்; வேண்டியவற்றை எல்லாம் ஒருங்கு (ஒருமிக்க) விடுதல் வேண்டும்.

Desiderandum est, ut quinque sensus omnes perimantur; desiderandum est, ut desideria omnia simul ejiciantur.

344. இயல்பாகுநோன்பிற்கொன்றின்மை யுடைமை
மயலாகுமற்றும்பெயர்த்து (௪)

ஒன்றும் இல்லாதிருக்கை நோன்புக்கு (தவத்துக்கு) இயல்பாகும்; உடைமை [தவத்தை] பெயர்த்து மயல் (மயக்கம்) ஆகும்.

Nil possidere poenitentium natura est; possessio (poenitentiam) expellens etiam corruptelae erit.

345. மற்றுந்தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க்குடம்புமிகை (௫)

பிறப்பை அறுக்கலை (ஒழித்தலை) உற்றவருக்கு (மேற்கொண்டவருக்கு) உடம்பும் மிகை (பாரம்); மற்றும் (மேலும்) தொடர்ப்பாடு (பற்று உண்டாதல்) என்னாகும்?

Quid, quaeso, erit, cui adhaerescant? Qui id agunt, ut cursus ortuum praecidatur, iis ipsum corpus molestum est.

346. யானெனதென்னுஞ் செருக்கறுப்பான் வா
ேனார்க்
குயர்ந்த வுலகம் புகும் (சா)

[உடம்பை] நான் (பொருளை) என்னுடையது என்னும் (என்று நினைக்கின்ற) செருக்கை (அபிமானத்தை) அறுப்பவன் வானவர்களுக்கும் உயர்ந்த உலகத்தில் புகுவான்.

Qui arrogantiam, qua „ego" et „meum" dicitur, a se removebit, mundum intrabit (ipsis) coelestibus excelsum (i. e. liberatione absoluta fruetur).

347. பற்றிவிடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றிவிடாஅதவர்க்கு (எ)

பற்றினை பற்றிவிடாதவருக்கு பற்றிவிடாத இடும்பைகள் [இருக்கும்].

Libidinum tenacibus dolores pertinaces!

348. தலைப்பட்டார்தீரத்துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர் (அ)

தீர (முழுதும்) துறந்தவர் தலைப்பட்டவர் (முத்தியை அடைந்தவர்); மற்றையவர் மயங்கி [பிறப்பாகிய] வலையிலே அகப்பட்டவர்.

Perfecte poenitentes pervincent; ceteri confusi in rete incident.

349. பற்றற்றகண்ணே பிறப்பறுக்குமற்று
நிலையாமை காணப்படும் (கூ)

பற்றற்றபொழுதே (அப்பற்றறுதியானது) பிறப்பை அறுக்கும்; மற்று [பிறப்பிறப்பின்] நிலையாமை காணப்படும்.

Si excidantur cupiditates, (id) cursum ortuum praecidet; sin minus, non nisi inconstantia (mori et nasci; nasci et mori) cernetur.

350. பற்றுகபற்றற்றான் பற்றினையப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு (௰)

பற்றற்றவனது (கடவுளது) பற்றினை (மெய்நூலை) பற்றுவாயாக! பற்று (உன்னை) விடுவதற்கு, அப்பற்றினை (அதனிடத்து உபாயத்தை) பற்றுவாயாக.

Teneas, quod is, quem cupiditas non tenet, tenendum tradit; in eo contentum teneas, ut cupiditatem detineas.

XXXVI.

மெய்யுணர்தல். Veri cognitio.

351. பொருளல்லவற்றைப் பொருளென்றுணரு
மருளானுமாணாப் பிறப்பு (௧)

பொருளல்லாதவற்றை மொருள் என்று உணரும் மருளான் (மயக்கத்தால்) மாணா (மாட்சிமையில்லாத) பிறப்பு ஆம் (உண்டாம்.)

Ab errore, qui quod rerum veritas non est, pro veritate habet, ignobilis ortus proficiscitur.

352. இருணீங்கியின்பம் பயக்குமருணீங்கி
மாசறு காட்சியவர்க்கு (௨)

மருள் நீங்க மாசற்ற காட்சியையுடையவருக்கு [அம்மெய்யறிவு] இருள் நீங்க இன்பத்தை பயக்கும் (கொடுக்கும்).

Qui sine caecitate mentis sapientia pura utentur, beatitate fruentur sine tenebris.

353. ஐயத்தினீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணியதுடைத்து (௩)

ஐயத்திலிருந்து (சந்தேகத்திலிருந்து) நீங்கி தெளிந்தவர்க்கு வையத்தினும் (நிலவுலகத்தினும்) வானம் (வீட்டுலகம்) நண்ணுதலை (சமீபமாதலை) உடையதாம்.

Qui dubitatione vacui claram rerum scientiam assecuti sunt, iis coelum propius est quam haec terra.

354. ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயனின்றே
மெய்யுணர் வில்லாதவர்க்கு (௪)

மெய்யுணர் வில்லாதவருக்கு — ஐந்தாகிய (ஐந்து புலன்களினால் வருகிற) உணர்வை எய்தின் [தமக்கு வசப்படுத்தின] இடத்தும், [அதினாலே] பயன் இல்லை.

Etsi quis perceptionibus quinque partitis potitus sit, nihil prodest iis, qui veritatis scientia carent.

355. எப்பொருளெத்தன்மைத்தாயினுமப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு (௫)

யாதொரு பொருள் எத்தண்மையுடையதாயிருந்தும் அப்பொருளின் மெய்யாகிய பொருளை காண்பதே அறிவாம்.

Quaecumque est res et qualiscumque est, rei illius veritatem perspicere sapientia est.

356. கற்றீண்டுமெய்ப்பொருள்கண்டார்தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி (௬)

கற்று ஈண்டு மெய்யான பொருளை கண்டவர் மற்று [திருபிம்] ஈண்டு வாராத நெறியை அடைவார்.

Qui in hac vita discentes rerum veritatem perspiciebant, via potiuntur, qua non iterum huc sunt migraturi.

357. ஓர்த்துள்ளமுண்ணரினொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு (௭)

[ஒருவனது] உள்ளமானது ஒருதலையாக (நிச்சயமாக) உள்ளதை (மெய்ப்பொருளை) ஓர்த்து (ஆராயந்து) உணர்ந்தால், பிறப்பை பேர்த்து (மறுபடியும்) உள்ள (நினைக்க) வேண்டாம்.

Si intima mens intimam rerum veritatem comprehendet, non opus erit, iterum de ortu cogitare.

358. பிறப்பென்னும்பேதைமை நீங்கச் சிறப்பெ
ன்னுஞ்
செம்பொருள் காண்பதறிவு (௮)

பிறப்பாகிய பேதைமை நீங்க சிறப்பாகிய செவ்விய பொருளை காண்பதே அறிவாம்.

Summum bonum gloriae ita perspicere, ut stultitia (iterati) ortus discedat, sapientia est.

359. சார்புணர்ந்துசார்பு கெடவொழுகின் மற்றழி
த்துச
சார்தரா சார்தருநோற் (௯)

சார்பை (செம்பொருளை) உணர்ந்து சார்பு (பற்று) கெட ஒழுகினால் (நடந்தால்), சார்தரும் (சேரும்) நோய் மற்று அழித்து சேராது.

Si, quod (omnibus) inhaereat cognoscendo ita vivas, ut, in quo tu inhaeres, pereat, dolor haerens ad perniciem tibi non adhaerescet.

360. காமம்வெகுளி மயக்கமிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய் (௰)

காமம் வெகுளி (கோபம்) மயக்கமாகிய இம்மூன்றினது நாமம் (பேரும்) கெட்டால் நோய் கெடும்.

Cupiditas, ira, error — ubi horum trium ipsa nomina intereunt, etiam dolor interibit.

XXXVII.

அவாவறுத்தல். Cupiditatem evellere.

361. *அவாவென்பவெல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து* (க)

எல்லா உயிர்களுக்கும் எஞ்ஞான்றும் (எக்காலத்திலும்) தவாத (கெடாத) பிறப்பை ஈனுகின்ற விதையை அவா (ஆசை) என்றுசொல்லுவார்கள்.

Cupiditatem vocant semen, quod animis omnibus ortum parit nullo unquam tempore desiturum.

362. *வேண்டுங்கால்வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்டவரும்* (உ)

[ஒன்றை] வேண்டும் கால் (விரும்பினால்) பிறவாமையே வேண்டும்; அது — [ஒன்றையும்] வேண்டாமையை வேண்ட (விரும்பினால்) — வரும்.

Si cupias, ortuum vacuitas cupienda est; tibi obveniet, si cupiditatum vacuitatem cupies.

363. *வேண்டாமையன்ன விழுச்செல்வமீண்டில்லை
யாண்டுமஃதொப்பதில்* (௩)

வேண்டாமை போலும் விழு (சிறந்த) செல்வம் ஈண்டு இல்லை; ஆண்டும் (அவ்வுலகத்திலும்) அதற்கு ஒப்பது இல்லை.

Bonum tam desiderandum quam cupiditatum vacuitas in hac vita nullum est; etiam in altera vita simile non habet.

364. *தூஉய்மையென்பதவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்* (௪)

தூய்மை என்பது அவாவில்லாமையாம; அது — வாய்மையை வேண்ட — வரும்.

Quae puritas dicitur, est cupiditatum vacuitas; tibi obéveniet, si veritatem cupies.

365. *அற்றவரென்பாரவாவற்றார் மற்றையா
ரற்றாகவற்றதிலர்* (௫)

அவாவற்றவர் அற்றவர் என்று சொல்லப்படுவோர்; மற்றவர் அற்றாக (அத்தன்மைத்தாக) அற்றதிலர் (அற்றமையில்லாதவர் = அற்றவர் அல்லர்).

Liberi sunt a cupiditate liberi; hoc modo liberi ceteri non sunt.

366. அஞ்சுவதோருமறனே யொருவனை
வஞ்சிப்பதோருமவா (௬)

[அவாவுக்கு] அஞ்சுவதே — அறமாம்; ஒருவனை வஞ்சிப்பதே (மோசம் பண்ணிக்கெடுப்பதே) -- அவாவாம்.

Sibi cavere velle, virtus est; id quod te vult decipere, cupiditas est.

367. அவாவினையாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டுமாற்றான் வரும் (௭)

அவா (ஆசையின்) வினை [செயலை] ஆற்ற (முழுதும்) அறுத்தால், தவாத (தவாமைக்கு = கெடாமைக்கு எதுவாகிய) வினை (செயல்) தான் வேண்டும் ஆற்றான் (ஆற்றால் = வழியால்) வரும்.

Si cupiditatum opera prorsus exstinguis, via a te optata nunquam interitura opera tibi obvenient.

368. அவாவில்லார்க்கில்லாகுந் துன்பமஃதுண்டேற்
றவாஅது மேன்மேல் வரும் (௮)

அவாவில்லாதவர்க்கு துன்பம் இல்லையாகும்; அது உண்டு எல் (அது உண்டானால்); [துன்பம்] தவாமல் (ஒழியாமல்) மேலும் மேலும் வரும்.

Cupiditate carens miseria carebit. Si (cupiditas) adest, miseria sine fine magis magisque veniet.

369. இன்பமிடையறாதீண்டுமவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங்கெடின் (௯)

அவா என்கிற துன்பங்களுள்ளே [மிகுந்த] துன்பமானது கெட்டால், ஈண்டும் (இவ்வுலகத்திலும்) இன்பமானது இடையறாது (நடுவே நீங்காது).

Etiam in hac vita gaudium non desinet, si cupiditas, dolorum omnium dolor, exstinguetur.

370. ஆராவியற்கை யவாநீப்பினந்நிலையே
பேரா வியற்கை தரும் (௰)

ஆராத (நிரம்பாத) இயற்கையையுடைய அவாவை நீத்தால், அந்நிலையே (அப்பொழுதே) பேராத (மாறாத) இயற்கையை (தன்மையை) தரும்.

Si expelletur cupiditas, quae insatiabilis conditionis est, statim conditionem immutabilem afferet.

XXXVIII.

ஊழ். Fati necessitas.

371. ஆகூழாற்றோன்றுமசைவின்மைகைப்பொருள்
போகூழாற் றோன்றுமடி (க)

ஆகும் (ஆகுதற்கு காரணமாகிய) ஊழினாலே (விதியினால்) அசைவின்மை (முயற்சியானது) தோன்றும்; கைப்பொருள் போகும் ஊழினால் மடி (சோம்பலானது) தோன்றும்.

Necessitate (fatali) habendi veniet impigritas; necessitate amittendi quae quis habet pigritia veniet.

372. பேதைப்படுக்குமிழவூழறிவகற்று
மாகலூழுற்றக்கடை (உ)

இழவு (இழத்தற்கு எதுவாகிய) ஊழ் [அறிவை] பேதைப்படுக்கும் (அறியாமையாக்கும்), ஆகலாகிய ஊழ் உற்ற இடத்து அகற்றும் (விரிக்கும்).

Necessitas (fatalis) amittendi sapientiam in stultitiam convertet, necessitas habendi scientiam extendet.

373. நுண்ணியநூல்பல கற்பினுமற்றுந்த
னுண்மை யறிவேமிகும் (ங)

நுண்ணிய (நுட்பமான) நூல்களை பலவாக கற்றாலும் மற்றும் [ஊழினால்] தன்னுண்மை (தனக்குள்ள) அறிவே மிகும் (மேற்படும்).

Quantumvis subtiles discas litteras, tantum praestituta scientia supererit.

374. இருவேறுலகத்தியற்கை திருவேறு
தெள்ளியராதலும்வேறு (ச)

உலகத்தில் இயற்கையானது இருவேறு (இரண்டு கூறாயிருக்கின்றது); திரு (செல்வமுடையவராதலும்) வேறு, தெள்ளியர் (அறிவுடையவர்) ஆதலும் வேறு.

Duae in mundo differentes conditiones sunt; aliud est divitem, aliud sapientem esse.

375. நல்லவையெல்லாஅந தீயவாந்தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு (ரு)

நல்லவை எல்லாம் தீயவையாம்; தீயவை தாமும் நல்லவையாம் — செல்வத்தை செய்தற்கு.

(Necessitate fatali) bona omnia fiunt mala et mala omnia bona ad felicitatem comparandam.

376. பரியினுமாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம (௬)

பாலல்லாதவை (ஊழினால் தம்முடையவை ஆகாதவை) பரிந்தாலும் (வருந்திமுயன்றாலும்) ஆகாவாம்; தம் (தம்முடையவை) உய்த்து (புறத்தே கொண்டுபோய்) சொரிந்தாலும் (பெய்துவிட்டாலும்) போகாவாம்.

Quantumvis enitaris, quod non habet conditionem, ut tuum sit, tuum non erit; quod tuum est, quamvis projicias, a te non discedet

377. வகுத்தான்வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தலரிது (௭)

கோடியை தொகுத்தவர்க்கும் வகுத்தவன் (கடவுள்) வகுத்த வகையால் அல்லது துய்த்தல் (அநுபவித்தல்) அரிது.

Etsi quis centena millia cumularit, vix iis frui poterit ultra quam, qui tribuit (omnia), ei tribuit.

378. துறப்பார்மற்றுப்புரவில்லாருறற்பால
வூட்டாகழியு மெனின் (௮)

[ஊழ்கள்] உறல்பாலையுடையவற்றை (அடைதற்பகுப்பையுடையவற்றை) ஊட்டி (அடைவித்து) கழியும் எனின் (நீங்கும் ஆயின்) துப்புரவில்லாதவர் (அநுபவித்தல் இல்லாதவர்) துறப்பார்).

Ad inopiam redacti certe omnibus renuntiabunt, si (fatum) quod fieri statutum est, intus efficere non potest.

379. நன்றாங்கானல்லவாக் காண்பவரன்றாங்கா
லல்லற்படுவ தெவன் (௯)

நன்றாகும் கால் [அதின் இன்பங்களை] நல்லவையாக காண்பவர்கள்—[நன்று] அன்று (அல்லாதது) ஆகும் போது அல்லற் (துன்பப்) படுவானேன்.

Qui, cum bona eis eveniunt, ea ut bona intuentur, quare, quaeso, cum mala eis eveniunt, male ferunt?

380. ஊழிற்பெருவலி யாவுளமற் றொன்று
சூழினுந் தான்முந்துறும் (௰)

ஊழினும் பெரு (பெரிய) வலி (வலிமையுள்ளவை) யா (எவை) உள் (உண்டாயிருக்கின்றன)? மற்றொன்றினை சூழ்ந்தாலும் (நினைத்தாலும்) தான் முற்படும்.

Fato quid potentius est? Quodcunque excogitaveris, illud praeveniet.

பொருட்பால்.

DE BONIS.

381. ப

382.

383. தா
நீ

384.

385. இ
வெ

XXXIX.

இறைமாட்சி. Regis magnitudo.

381. படைகுடிகூழமைச்சுநட்பரணாறு
முடையானரசருளேறு (க)

படையும் (சேனையும்) குடியும் (நாடும்) கூழும் (பொருளும்) அமைச்சும் (மந்திரியும்) நட்பும அரணும் ஆகிய ஆறு [அங்கங்களையும்] உடையவன் அரசருள் ஏறு (ஆண்சிங்கம்).

Qui haec sex possidet: exercitum, populum, aurum, consilium, foedus, arcem — is leo inter reges est.

382. அஞ்சாமையீகையறிவூக்கமிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற்கியல்பு (உ)

வேந்தனுக்கு (அரசனுக்கு) இயல்பாவது அஞ்சாமையும் ஈகையும் (கொடையும்) அறிவும் ஊக்கமும் (மனவெழுச்சியும்) ஆகிய இந்த நான்கும் எஞ்சாமை (உண்டாயிருக்கை).

Haec quattuor: vacuitatem a timore, liberalitatem, prudentiam et animi robur, non deficere — regum proprium est.

383. தூங்காமைகல்வி துணிவுடைமையிம்மூன்று
நீங்கா நிலனாள்பவற்கு (௩)

நிலத்தினை ஆள்பவனுக்கு — தூங்காமையும் (சோம்பலில்லாமையும்) கல்வியும் துணிவுடைமையும் ஆகிய இம்மூன்றும் [ஒருபோதும்] நீங்கா.

Tria haec: vigilantia, eruditio, audacia, ab eo qui orbem terrarum gubernat separari nequeunt.

384. அறனிழுக்காதல்லவை நீக்கி மறனிழுக்கா
மானமுடையதரசு (௪)

அறத்திலிருந்து இழுக்காது (தவறாது) அல்லவை நீக்கி மறத்திலிருந்து இழுக்காத (தவறாத) மானத்தை உடையது — அரசாட்சியாம்.

A virtute immotum injuriam tollere et a fortitudine immotum animum excelsum habere — regnum est.

385. இயற்றலுமீட்டலுங் காத்தலுங்காத்த
வகுத்தலும் வல்லதரசு (௫)

இயற்றலும் (சம்பாதித்தலும்) ஈட்டலும் (கூட்டுதலும்) காத்தலும் காத்தவற்றை வகுத்தலும் (கடனுக்கு தக்க படி செலவு செய்தலும்) வல்லவனாயிருக்கை — அரசாட்சியாம்.

Comparare, colligere, servare et servata largiri: haec omnia posse — regnum est.

386. காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லனல்லனேன்
மீக்கூறு மன்னனிலம் (௬)

மன்னன் (அரசன்) காணுதற்கு எளியவனும் கடிய சொல்லையுடையவன் அல்லாதவனுமாயின், [அவனது] நிலத்தை [உலகம்] மீக்கூறும் (கொண்டாடும்).

Qui rex facile se praebeat visendum neque duri sermonis sit, ejus terram laudibus efferent.

387. இன்சொலாலீத்தளிக்கவல்லார்ந்தன் சொலாற்
றன் கண்டனைத்திவ்வுலகு (௭)

இனிய சொல்லுடனே ஈத்து (கொடுத்து) அளிக்க (காப்பாற்ற) வல்லவனுக்கு இந்த உலகம் தன் சொலால் (புகழை பற்றி) சொல்லை (புகழை) பற்றி தான் கண்டு அனைத்து (தான் விரும்பின அளவினதாகும்).

Qui leni verbo largiens (subditos) defendere possit, ejus laude mundus ei tantus erit, quantum ipsi libet.

388. முறைசெய்துகாப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப்படும் (௮)

[தான்] முறை செய்து [பிறரை] காப்பாற்றும் மன்னனானவன் மக்களுக்கு (மனிதர்களுக்கு) இறை (கடவுள்) என்று வைக்கப்படுவான்.

Rex, qui jus exercens (subditos) defendit, Deus est hominibus constitutus.

389. செவிகைப்பச் சொற்பொறுக்கும்பண்புடை
வேந்தன்
கவிகைக்கீழ்த்தங்குமுலகு (௯)

செவி கைப்ப (காதுக்கு கசப்பாகவு்) சொல்லை பொறுக்கும் பண்புடைய வேந்தனது கவிகையின் (குடையின்) கீழே உலகம் [சந்தோஷத்தோடு] தங்கும்.

Sub sceptro boni principis, qui verbum patitur, etiamsi auribus acerbum sit, orbis terrarum libenter commorabitur.

390. கொடையளிசெங்கோல் குடியோம்பனான்கு
முடையானும் வேந்தர்க்கொளி (௰)

கொடையும் அளியும் (அருளும்) செங்கோலும் (முறை செய்தலும்) குடி ஓம்பலும் (பேணலும்) ஆகிய இந்நான்கினையும் உடையவன் — வேந்தர்க்கு ஒளி (விளக்கு) ஆவான்.

Qui haec quattuor possidet: liberalitatem, clementiam, rectum sceptrum, subditorum curam — is lumen est regum.

XL.

கல்வி. Scientia.

391. கற்ககசடறககற்பவைகற்றபி
னிற்கவதற்குத்தக (௧)

[ஒருவன்] கற்பவை (கற்க வேண்டியவற்றை) கற்க [கடவான்]! கற்ற பின்பு கசடு (குற்றம்) அற (இல்லாமல்) அதற்கு தக (தகும் படி) நிற்க [கடவான்]!

Quae discenda sunt, sine errore disce. Postquam didiceris, ad normam eorum persevera.

392. எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விர
ண்டுங்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு (௨)

எண் என்னப்படுமவையும் (கணித நா ் களும்) ஏனை (மற்றை) எழுத்து என்னப்படுமவையும (இலக்கணநாற்களும்) ஆகிய இவ் விரண்டையும் [அறிந்தவர்] வாழும் உயிர்க்கு கண்கள் என் பார்.

Quae numerum et litteram appellant, haec duo oculos viventium dicunt (sapientes).

393. கண் ணுடையரென்பவர் கற்றோர்முகத்திரண்டு
பிண் ணுடையர் கல்லாதவர் (௩)

கற்றவரே கண்களுடையவர் என்னப்படுவோர்; கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்களுடையவர்.

Doctos oculos habere dicunt, duo in fronte ulcera habent indocti.

394. உவப்பத்தலைக்கூடி யுள்ளப்பிரித
லனைத்தே புலவர் தொழில் (௪)

புலவரது (நற்றறி நதவரது) தொழிலானது [சனங்கள்] உவக்க (பகிழும் படி) தலைக்கூடி (சேர்ந்து), [இனி எப்போது காண் போம்? என்று] உள்ள (நினைத்து வருந்தும் படி பிரிதலாகிய அனைத்தே (அத்தன்மையையுடையது).

Quod quis laeto animo eos adit et animo memori ab eis discedit, in eo virorum doctorum munus continetur.

395. உடையார்முன் னில்லார்போலேக்கற்றுங்கற்றார்
கடையரேகல்லாதவர் (௫)

உடையார் முன்னே இல்லாதவர் (வறியவர்) போல் (ஆச்சிரி யர்முன்) ஏக்கற்றும் (தாழ்ந்து நின்றும்) கற்றவராவார்; கல்லா தவர் எப்போதும்) கடையவர் (இழிந்தவராவார்).

Etiamsi submisso animo, ut pauperem coram divite, stare te oportéat, doctus (eris); infimo semper loco stabunt, qui nihil discent.

396. தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூறுமறிவு (௬)

மணலினிடத்தே கேணி (கிணறு) தொட்டு அனைத்து (தோண்டின அளவினதாக) ஊறும் (சுரக்கும்); அறிவானது கற்ற அளவினதாக ஊறும்.

Prout fodies, aqua ex arena profluet; prout disces, scientia profluet.

397. யாதானுநாடாமா லூராமாலென் னொருவன்
சாந்துணையுங்கல்லாதவாறு (௭)

[கற்றவனுக்கு] யாதாயினும் [தன்] தாடாம் [தன்] ஊராம். ஒருவன் சாந் (சாகும்) துணையும் (அளவும்) கல்லாத ஆறு என்ன?

Quaecumque est, (doctis) patria terra est, patria urbs; quae igitur vivendi via est usque ad mortem nihil discere!

398. ஒருமைக்கட்டான்கற்றகல்வி யொருவற்
கெழுமையுமேமாப்புடைத்து (௮)

ஒருமையில்-(ஒரு பிறப்பில்) தான் கற்ற கல்வியானது ஒருவனுக்கு எழுமையிலும் (எழு பிறப்பிலும்) ஏமாப்பை (உதவுதலை) உடையதாகும்.

Quod quis in hac una vita didicerit, in septem vitis ei proderit.

399. தாமின்புறுவதுலகின்புறக்கண்டு
காமுறுவர்கற்றறிந்தார் (௯)

தங்களுக்கு இன்பமானது (கல்வி) உலகத்திற்கு இன்பமாக கண்டு கற்றறிந்தவர்கள் [அதனையே] காமுறுவார்கள் (விரும்புவார்கள்).

Cum vident, quod ipsis dulce sit, id etiam mundo dulce esse, illud desiderant scientes.

400. கேடில்விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்லமற்றையவை (௰)

ஒருவனுக்கு கேடில்லாத விழு (சிறந்த) செல்வமாவது கல்வியாகும்; மற்றையவை மாடு (செல்வம்) அல்ல.

Bonum immortale et praeclarum scientia est; cetera omnia non sunt bona.

XLI.

கல்லாமை. Ignorantia.

401. அரங்கின்றிவட்டாடியற்றேநிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல் (௧)

நிரம்பிய (நிறைந்த) நூல்களை இல்லாமல் [ஒருவன்] கோட்டி கொள்ளுதல் [சபையில் பேசுதல்] அரங்கை (வகுப்பிடத்தை) இல்லாமல் வட்டாடியற்று (சூதாடியது போலும்).

Sine plena scientia in coetu (doctorum) loqui perinde est atque in tabula divisionibus carente globis projiciendis ludere.

402. கல்லாதான்சொற்காமுறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற்றற்று (௨)

கல்லாதான் சொல்லை (சொல்லுதலை) காமுறுதல் (வேண்டுதல்) இரண்டு முலைகளுமில்லாதவள் பெண்மையை காமுறுவது போலும்.

Si indoctus velit (in coetu doctorum) loqui, perinde est, ac si fēmina esse velit, cui ubera desint

403. கல்லாதவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லாதிருக்கப் பெறின் (௩)

கற்றார் முன் சொல்லாதிருக்க பெறுவாராயின் கல்லாதவரும் நனி (மிகவும்) நல்லவர் ஆவார்.

Etiam indocti valde boni erunt homines, si temperare sibi poterunt, quominus coram doctis loquantur.

404. கல்லானொட்பங் கழியநன்றாயினுங்
கொள்ளாரறிவுடையார் (௪)

கல்லாதவனது ஒட்பம் (அறிவு) கழிய (மிக) நன்றாயிருந்தாலும் அறிவுடையவர்கள் [அதனை அறிவாக] கொள்ளார்கள் (மதியார்கள்).

Indocti ingenium, quamvis sit valde bonum, docti non agnoscunt

405. கல்லாவொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வுபடும (௫)

[நூல்களை] கல்லாத ஒருவனுடைய தகைமை — தலைப்பெய்து (சபை ஒன்றாய் கூடின இடத்து) சொல்லாட (பேச) — சோர்வு படும் (சோரும்).

Facultas, quam habeat indoctus, ubi coram pleno coetu loquitur, collabitur.

406. உளரென்னுமாத்திரையரல்லாற்பயவாக்
களரனையர்கல்லாதவர் (௬)

கல்லாதவர் உளர் (இருக்கிறார்) என்னும் மாத்திரையர் (அளவினரே) அல்லாமல் பயவாத (விளையாத) களர் [நிலத்தை] அனையர் (ஒப்பாவார்).

Indocti tantum esse dici possunt; praeterea sterili agro sunt similes.

407. நுண்மாணுழைபுலமில்லானெழினல
மண்மாண் புனைபாவையற்று (௭)

நுட்பமாகிய மாட்சிமையாக [பல நூல்களிலும்] நுழைகின்ற புலமில்லாதவனது எழிலும் (அழகும்) நலமும் — மண்ணாகிய மாட்சிமையாக புனை (புனையப்பட்ட = புனைப்பட்ட = அலங்கரிக்கப்பட்ட) பாவையற்று (பாவையினது போலும்).

Qui vacat accurata eruditione, quae decus habet subtilitatis, ejus pulchritudo et bonitas statuae similis est, decore luti ornatae.

408. நல்லார்கட்பட்ட வறுமையினின்னாதே
கல்லார்கட்பட்டதிரு (௮)

கல்லாதவரிடத்து பட்ட (உண்டாகிய) திரு (செல்வம்) நல்லவரிடத்து பட்ட வறுமையினும் இன்னாவாம்.

Pejor est copia eorum, qui scientia inopes sunt, quam inopia sapientium.

409. மேற்பிறந்தாராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றாரனைத்திலர்பாடு (௯)

கல்லாதவர் மேல் (உயர்ந்த சாதியிலே) பிறந்தவராகிலும் — பாடு (பெருமையை பற்றி) கீழ் பிறந்தும் கற்றவரது அனைத்து இலா (அளவினர் அல்ல).

Qui indocti sunt, quamvis summo loco nati, eorum dignitatem non adaequant, qui, quamvis infimo loco nati, docti sunt.

410. விலங்கொடுமக்களனையரிலங்குநூல்
கற்றாரோடேனையவர் (௰)

இலங்கிய (விளங்கிய) நூலை கற்றவருடன் ஏனையவர் (மற்றையவர் = கல்லாதவர்) — விலங்கோடு (மிருகங்களோடு) மக்கள் அனையர் — [கற்றவர் மக்களையும கல்லாதவர் மிருகங்களையும் போல்வார்].

Cum bestiis comparati homines perinde se habent ac splendida scientia instructi cum ceteris comparati

XLII.

கேள்வி. Doctos audire.

411. செல்வத்துட்செல்வஞ் செவிச்செல்வமச்செ
ல்வஞ்
செல்வத்துளெல்லாந்தலை (க)

செல்வத்துள் [உயர்ந்த] செல்வமாவது செவியால் (கேள்வியால் ஆகும்) செல்வமே; அச்செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலைமையாம்.

Inter bona bonum est, quod auribus obtingit bonum; hoc bonuın bonorum omniun caput est.

412. செவிக்குணவில்லாத போழ்துசிறிது
வயிற்றுக்குமீயப்படும் (உ)

செவிக்கு (காதுக்கு) உணவு [ஆகிய கேள்வி] இல்லாத போதே வயிற்றுக்கும் சிறிது [உணவு] ஈயப்படும் (கொடுக்கலாம்).

Ubi auribus epulae (i. e. instructio) desunt, paullulum et ventri dare licet.

413. செவியுணவிற்கேள்வியுடையாரவியுணவி
ஞன்றோரோடொப்பர்நிலத்து (௩)

செவிகளின் உணவின் (உணவுள்ள) கேள்வியையுடையவர் நிலத்தில் (பூமியிலும்) அவி (வேள்வியாகிய) உணவின் (உணவினையுடைய) ஆன்றவரோடு (தேவரோடு) ஒப்பாவார்.

Qui epulis aurium aluntur, auditores, jam in terris pares sunt perfectis illis, qui cibo sacrificiorum aluntur.

414. கற்றிலனாயினுங் கேட்கவஃதொருவற்
கொற்கத்தினூற்றாந்துணை (௪)

கற்றில்லாதவனாயினும் கேட்க [கடவான்], அது ஒருவனுக்கு ஒற்கத்திலே (துன்பத்தில்) ஊற்று (ஊன்று கோலாகிய) துணையாம் (உதவியாம்).

Quamvis indoctus sis, tamen audias; id in rebus adversis adminiculum erit, ad quod aduitaris.

415. இழுக்கலுடையுழி யூற்றுக்கோலற்றே
யொழுக்கமுடையார்வாய்ச் சொல் (௫)

ஒழுக்கத்தையுடையவரது வாயிலிருந்து [வருகின்ற] சொல் இழுக்கலை (வழுக்குதலை) உடைய (சேற்று) நிலத்திலே ஊன்று கோல் போலும்.

Quod in lubrico loco baculum, idem est verbum ex ore cjus, qui honeste vitam agit.

416. எனைத்தானுநல்லவை கேட்கவனைத்தானு
மான்ற பெருமை தரும் (௬)

[ஒருவன்] நல்லவை, எனைத்தாயினும் (எவ்வளவாயினும்), கேட்க [கடவான்]; அனைத்தாயினும் (அவ்வளவாயினும்) ஆன்ற (நிறைந்த) பெருமையை தரும்.

Quantumcumque est, quod bonum est, audi; quamvis enim minimum sit, perfectam magnitudinem affert.

417. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா
ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வியவர் (௭)

[பொருள்களை] இழைத்து (நுட்பமாக) உணர்ந்து ஈண்டிய (நிறைந்த) கேள்வியை உடையவர் — பிழைத்து (குற்றமாக) உணர்ந்தும் — பேதைமையை சொல்லார்.

Quamvis vitiose percipiant, stulta non dicent, qui attente considerantes scientiae subtilis auditores sunt.

418. கேட்பினுங் கேளாத்தகையவே கேள்வியாற்
றோட்கப்படாதசெவி (௮)

கேள்வியினாலே தோட்கப்பாத (தொளைக்கப்படாத) செவிகள் — கேட்பினும் (கேட்குமானாலும்) — கேளாத் தகையை உடையனவேயாம்.

Auris, quae audiendo non est perforata, quamvis audiat, conditionem habet, ut non audiat.

419. நுணங்கிய கேள்வியரல்லார் வணங்கிய
வாயினராதலரிது (௯)

நுணங்கிய [நுட்பமாகிய] கேள்வியை உடையவர் அல்லாதவர் — வணங்கிய (வணக்கத்தைக்காட்டுகிற) வாயை உடையவராகுதல் அரிதாம்.

Quorum auris acute dicta numquam audivit, ut ii modestum os consequantur, vix potest fieri.

420. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினுமென் (௰)

செவியினால் [அறியப்படும்] சுவைகளை உணராத வாயால் [வரும்] உணர்வினை [மாத்திரம்] உடைய மனிதர் — அவிந்தாலும் (இறந்தாலும்) வாழ்ந்தாலும், என்ன?

Qui homines saporem aure non percipientes, ore tantum percipiant, quid refert, utrum moriantur an vivant?

XLIII.

அறிவுடைமை. Sapientia.

421. அறிவற்றங்காக்குங்கருவி செறுவார்க்கு
முள்ளழிக்கலாகாவரண் (க)

அறிவு, அற்றம் (கேடு) [வாராமல்] காக்கின்ற கருவி (படையாம்); செறுவார்க்கும் (பகைவர்க்கும்) அழிக்கலாகாத உள்ளாகிய அரணும் ஆம்.

Sapientia telum est perniciem avertens; intima etiam arx est, quae ab ipso hoste destrui non potest.

422. சென்றவிடத்தாற் செலவிடாதீதொரீஇ
நன்றின்பாலுய்ப்பதறிவு (உ)

[மனத்தை] சென்ற இடத்தால் (விஷயத்திலே) செல்லவிடாமல் தீது (தீயதினின்றும்) ஒரீஇ (நீக்கி) நன்றின் பால் (நல்லதினிடத்து) உய்ப்பதே (செலுத்துவதே) அறிவாம்.

Sapientia est, quae (mentem) propriam viam sequi non patiens a malo revocat et ad bonum ducit.

423. எப்பொருள்யார்யார்வாய்க்கேட்பினுமப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு (௩)

யாதொரு பொருளை எவரெவர் வாயில் கேட்டாலும், அப்பொருளினது மெய்ப்பொருளை (மெய்யாகிய பயனை) காண்பதே அறிவாம்.

Quamcumque rem e cujuscumque ore audis, rei illius veritatem perspicere, sapientia est.

424. எண்பொருளவாகச் செலச்சொல்லித்தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பதறிவு (௪)

எளிய பொருளை உடையனவாக செல்ல (மனதில் அழுந்தும்படி) தான் சொல்லி பிறருடைய வாயில் [கேட்ட] நுட்பமாகிய பொருளை காண்பதே அறிவாம்.

Sapientia est ita loqui, ut (omnia) tamquam facilia admittantur, et subtilia ex ore aliorum perspicere

425. உலகந்தழீஇய தொட்பமலர்தலுங்
கூம்பலுமில்லதறிவு (௫)

உலகத்தை (உயர்ந்தோரை) தழீஇயது [சிநேகிப்பது] ஒட்பம்

(விவேகம்) ஆம்; [அதிலே] மலர்தலும் (முன்னே விரிதலும்) கூம்பலும் (பின்னே குவிதலும்) இல்லாதது அறிவாம்.

Prudentia est ad sapientes se adjungere; in eo non (florum quorundam instar) aperiri et (postea) claudi, est sapientia.

426. எவ்வதுறைவதுலகமுலகத்தோ
டவ்வதுறைவதறிவு (௬)

உலகம் (உயர்ந்தோர்) உறைவது (நடக்கிறது) எவ்வது (எவ்விதமோ), உலகத்தோடு அவ்வது (அவ்விதமாய்) உறைவது அறிவாம.

Quemadmodum vivit mundus (i. e. viri sapientes), eodem modo cum mundo vivere, sapientia est.

427. அறிவுடையாராவதறிவாரறிவிலா
ரஃதறிகல்லாதவர் (௭)

ஆவதை (வரக்கபுவதை) அறிபவர் அறிவையுடையவர் ஆவார்; அதை அறிய கல்லாதவர் அறிவில்லாதவர் ஆவார்.

Sapientes sunt, qui futura sciunt, insipientes, qui scientiam illam non callent.

428. அஞ்சுவதஞ்சாமை பேதைமையஞ்சுவ
தஞ்சலறிவார்தொழில் (௮)

அஞ்சுவதற்கு (அஞ்சத்தகுவதற்கு) அஞ்சாமை பேதைமையாம்; அஞ்சுவதற்கு அஞ்சல் அறிபவருடைய தொழிலாம்.

Metuenda non metuere est stultitia; metuenda metuere munus sapientium est.

429. எதிர்தரக்காக்குமறிவினார்க்கில்லை
யதிரவருவதோர்நோய் (௯)

எதிர்தர (முன்னே) காக்கும் அறிவுள்ளவருக்கு அவர் அதிரும் (நடுங்கும்) படி வருவதாகிய ஒரு நோயும் இல்லை.

Sapientibus, qui obviam euntes praecavent, nullum terrorem injiciens obveniet malum.

430. அறிவுடையாரெல்லாமுடையாரறிவிலா
ரென்னுடையரேனுமிலர் (௰)

அறிவுள்ளவர் எல்லாமுடையவர் ஆவார்; அறிவில்லாதவர் என்னுடையர் (யாதுடையவர்) எனும் (எனினும் = ஆயினும்) [ஒன்றும] இல்லாதவர் ஆவார்.

Sapientes omnia possident; insipientes, quaecumque possident, (nihil) possident

XLIV.

குற்றங்கடிதல். Se ipsum castigare.

431. செருக்குஞ்சினமுஞ்சிறுமையுமில்லார்
பெருக்கம்பெருமிதநீர்த்து (௧)

செருக்கும் (மதமும்) சினமும் (கோபமும்) சிறுமையும் (காமமும்) இல்லாதவரது பெருக்கம் (செல்வம்) பெருமித (மேன்பாட்டு) நீரை (குணத்தை) உடையதாம்.

Magnitudo regis, qui jactatione, ira et libidine vacuus est, sublimem conditionem habet.

432. இவறலுமாண்பிறந்த மானமுமாணா
வுவகையுமேதமிறைக்கு (௨)

இவறலும் (உலோபத்தினால் வரும் கொடாமை) மாண்பு இறந்த(மாண்பின் நீங்கிய) மானமும் மாணாத(மாட்சிமையில்லாத) உவகையும் இறைக்கு (அரசனுக்கு) ஏதங்கள் (குற்றங்கள்) ஆம்.

Avaritia, magnitudo non magnanima, et laetitia a magnitudine abhorrens vitia principis sunt.

433. தினைத்துணையாங்குற்றம் வரினும் பனைத்து
ணையாக்
கொள்வர்பழிநாணுவார் (௩)

பழிக்கு நாணுபவர் (அஞ்சுபவர்) தினைத்துணையாகும் (தினையளவாகும்) குற்றம் வந்தாலும் [அதை] பனைத்துணையாக கொள்வார்.

Quamvis prope sit culpa, quae milii grano par sit, qui a vitiis abhorrent, eam palmae arbori parem judicabunt.

434. குற்றமேகாக்க பொருளாகக்குற்றமே
யற்றந்தரூஉம்பகை (௪)

குற்றமே அற்றம் (அழிவை) தரும் பகை; ஆதலால் பொருளாக (பயனாகக்கொண்டு) குற்றத்தை [வாராமல்] காக்க வேண்டும்.

Quum emolumento sit, tu cave vitium. Vitium est odium exitium afferens.

435. வருமுன்னர்க்காவாதான் வாழ்க்கை யெரிமு
ன்னர்
வைத்தூறுபோலக் கெடும் (௫)

குற்றவருவதற்கு முன் காவாதவனது வாழ்க்கையானது எரியின் (நெருப்பின்) முன்னர் (முன்) வைத்தூறு (வைக்கோலின் கூட்டம்) போல் கெடும்.

Qui non praecavet prius quam venerit (culpa), ejus salus absumetur ut palearum fasciculus ante ignem.

436. தன்குற்றநீக்கிப் பிறர்குற்றங்காண்கிற்பி
னென்குற்றமாகுமிறைக்கு (௬)

தனது குற்றத்தை நீக்கி பிறரது குற்றத்தை கண்டால் யாது குற்றம் அரசனுக்கு உண்டாகும்.

Si suum vitium ejiciens, vitium alterius animadvertet, quid ultra principi erit vitii?

437. செயற்பாலசெய்யாதிவறியான் செல்வ
முயற்பாலதன்றிக் கெடும் (௭)

செய்யும் பாலுள்ளவற்றை (பகுதியுள்ளவற்றை) செய்யாது இவறினவனது (உலோபம் செய்தவனது) செல்வமானது, உயல் (உள்ளதாகும்) பாலுள்ளது (தன்மையுள்ளது) அல்லாமல், கெடும்.

Qui quod facere decet non faciens avarus est, ejus fortuna servari non potest, sed destruetur.

438. பற்றுள்ளமென்னுமிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப்படுவதொன்றன்று (௮)

[பொருளை] பற்றும் உள்ளம் என்னும் இவறன்மை (உலோபத்தன்மையானது) — எவற்றுள்ளும் (எல்லாகுற்றங்களுள்ளும்) எண்ணப்படுவது (வைக்கப்படுவது) ஒன்று அன்று (மிகுந்ததாம்).

Cum avaritia animi tenacis inter omnia (vitia) nullum comparari potest.

439. வியவற்கவெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றிபயவாவினை (௯)

[ஒருவன்] எக்காலத்திலும் தன்னை வியவாதிருக்க (மதத்தினால் நன்கும் தியாதிருக்க) கடவான்; நன்றியை பயவாத வினையை நயவாதிருக்க (விரும்பாதிருக்க) கடவான்.

Noli te ipsum ullo tempore admirari; actionem, quae bonum fructum nullum ferat, noli expetere.

440. காதலகாதலறியாமையுய்க்கிற்பி
னேதிலவேதிலார்நூல் (௰)

[தனக்கு] காதல (வேண்டுமவகளை) காதலை [பிறர்] அறியாதிருக்கும் படி — உய்த்தால் (செலுத்தினால் = நடப்பித்தால்) ஏதிலார் (பகைவர்) நூல்கள் (தந்திரங்கள்) ஏதில்லாதவைகள் (பயனில்லாதவைகள்) ஆகும்.

Si in desideratis versaris desiderium tuum non patefaciens, perniciosorum hominum consilia nullam afferent perniciem.

XLV.

பெரியாரைத்துணைக்கோடல். Magnanimos sibi associare.

441. அறனறிந்துமூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்துதேர்ந்து கொளல் (க)

அறத்தினை அறிந்து மூத்த (முதிர்ந்த) அறிவுடையவரது கேண்மையை (நட்பை) — [கொள்ளும்] திறன் (வழியை) அறிந்து — தேர்ந்து (தெரிந்து) கொள்ள வேண்டும்.

Qui virtutis gnari maturae scientiae sunt, eorum amicitiam cognoscat et deligat, viam sciens.

442. உற்றநோய்நீக்கி யுறாஅமைமுற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல் (உ)

உற்ற நோயை நீக்கி [அதுபின்] உறாமை [வாராதபடி] முன்னே காக்கும் பெற்றியுள்ளவரை (தன்மையுடையவரை) பேணிக் கொள்ள வேண்டும்.

Qui praesentem calamitatem possunt pellere, venientem praecavere, eos (rex) colat.

443. அரியவற்றுளெல்லாமரிதே பெரியாரைப்
பேணித்தமராக் கொளல் (ங)

பெரியவரை பேணி தமக்குரியவராகக் கொள்ளுதல் அரியவற்றுள் எல்லாம் அரிதாகும்.

Magnos viros colendo suos reddere inter omnia difficilia est difficillimum.

444. தம்மிற்பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையுளெல்லாந்தலை (ச)

தம்மை பார்க்க பெரியவர் தமக்குரியவராகும் படி ஒழுகுதல் (நடத்தல்) வன்மையுளெல்லாம் (எல்லாவிமைகளினும்) தலையாம் (முதன்மையாம்).

Regem ita se gerere, ut, qui ipso majores sunt, suos reddat, potentiae ejus caput est.

445. சூழ்வார்கண்ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் (ரு)

சூழ்பவர் (மந்திரிகள்) கண்ணாக (மன்னவனது கண்களாயிருக்க) ஒழுகலால்; மன்னவன் சூழ்பவரை சூழ்ந்து (ஆராய்ந்து) கொள்ள வேண்டும்.

Cum rex nihil agat nisi per oculos eorum, quos circa se habet, quos circa se habeat, debet circumspicere.

446. தக்காரினத்தனாய்த்தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்ததில் (௬)

தக்கவர் (யோக்கியராகிய) இனத்தினையுடையவனாகி தான் ஒழுக வல்லவனை செற்றார் (பகைக்கிறவர்கள்) செய்யக்கிடந் தது (செய்யக்கிடந்த ஒரு துன்பமும்) இல்லை.

Qui potest efficere, ut tamquam amicum bonorum se gerat, in eum hostes nihil poterunt efficere.

447. இடிக்குந்துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந்தகைமையவர் (௭)

இடிக்கும் (கண்டித்துப்புத்தி சொல்லும்) துணையாவாரை ஆன் பவரை (உடையவரை) கெடுக்கும் தகைமையையுடையவர் யாவர்?

Quis facultatem habet eum perdendi, cui ministri sunt consiliorum, qui in eum animadvertant.

448. இடிப்பாரையில்லாதவேமரா மன்னன்
கெடுப்பாரிலானுங் கெடும் (௮)

இடிப்பவரில்லாத ஏமராத (காவலற்ற) மன்னன், கெடுப்பவர் இல்லாதிருந்தாலும்; கெடுவான்.

Qui animadversoribus carens auxilio inops est, princeps ille destruetur, quamvis nemo sit, qui destruat.

449. முதலிலார்க்கூதியமில்லை மதலையாஞ்
சார்பிலார்க்கில்லை நிலை (௯)

முதல் (முதற்பொருள்) இல்லாதவருக்கு ஊதியம் (இலாபம்,) இல்லை; மதலை (தாங்குபவரரகிய) சார்பு (துணை) இல்லாதவ ருக்கு தலை இல்லை.

Qui capite caret, ei nullae usurae: qui caret adminiculo, quo nitatur, ei nulla firmitas.

450. பல்லார்பகைகொளலிற் பத்தடுத்ததீமைத்தே
நல்லார் தொடர்கைவிடல் (௰)

[அரசன்) நல்லவரோடு தொடரை (நட்பை) கைவிடுதல் பல ரோடு பகைமை கொள்ளுதலிலும் பத்து [பங்கு] அடுத்த தீமை யையுடையதாம்.

Decies pejus est bonorum amicitiam dimittere, quam in multorum odium incurrere.

XLVI.

சிற்றினஞ்சேராமை. Plebejorum societatem vitare.

451. சிற்றினமஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும் (௧)

பெருமை சிறிய இனத்திற்கு அஞ்சும்; சிறுமை தான் [தனக்கு] சுற்றமாக [எண்ணிக்கொண்டு] சூழ்ந்து விடும்.

Animus excelsus timet consuetudinem cum viris vilibus: animus vilis eam amplectitur tamquam necessitudinem.

452. நிலத்தியல்பானீர் திரிந்தற்றாகுமாந்தர்க்
கினத்தியல்பதாகுமறிவு (௨)

நீரானது நிலத்தின் இயல்பினாலே திரிந்து (வேறுபட்டு) அற்றாகும் (அது ஆகும் = அந்நிலத்தினது தன்மையதாகும்); மனிதர்க்கு அறிவானது இனத்தின் இயல்பது (இயல்படையது) ஆகும்.

Aqua natura humi alia fit eique similis: animus humanus naturam induit consuetudine sibi conjunctorum.

453. மனத்தானாமாந்தர்க்குணர்ச்சியினத்தானா
மின்னானெனப்படுஞ்சொல் (௩)

மனிதர்க்கு உணர்ச்சி (ஐம்புலவறிவு) மனத்தினாலே உண்டாகும்; இவன் இன்னான் (இப்படிப்பட்டவன்) என்னப்படும் சொல் இனத்தினாலே உண்டாகும்.

Perceptio (rerum externarum) ex propria mente hominibus nascitur; — consuetudine nascitur, quod quis „talis“ esse dicitur.

454. மனத்துளதுபோலக்காட்டி யொருவற்
கினத்துளதாகுமறிவு (௪)

அறிவு ஒருவனுக்கு மனத்தினிடத்து உண்டாவது போல் [தன்னை] காட்டி [அவன் சேர்ந்த] இனத்தினிடத்தே உளதாகும் (உண்டாகும்).

Sapientia ex sensu interno nasci videtur; ex usu externo nascitur.

455. மனந்தூய்மைசெய்வினை தூய்மையிரண்டு
மினந்தூய்மை தூவாவரும் (௫)

மனத்தின் தூய்மையும் (பரிசுத்தமும்) செய்வினையின் (செய்தொழிலின்) தூய்மையுமாகிய இரண்டும் — இனத்தின் தூய்மை தூவாக (பற்றுக்கோடாக) வரும்.

Castitas et mentis et operum consuetudinis castitate tamquam baculo utens ingreditur.

456. மனந்தூயார்க்கெச்சநன்றாகுமினந்தூயார்க்
கில்லைநன்றாகாவினை (௬)

மனதூய்மையுள்ளவர்க்கு எச்சம் (மக்கட்பேறு) நன்றாகும்; இனம் தூய்மையுள்ளவர்க்கு நன்றாகாத வினை (கருமம்) இல்லை.

Mente puris bona provenit progenies; consuetudinc puris nulla est actio, quin prospere eveniat.

457. மனநலமன்னுயிர்க்காக்கமினநல
மெல்லாப்புகழுந்தரும் (௭)

மன்னுயிர்க்கு மனத்தின் நன்மையானது ஆக்கத்தை [தரும்]; இனத்தினது நன்மையானது எல்லா புகழ்களையும் தரும்.

Bonitas mentis viventibus felicitatem, bonitas consuetudinis omnem laudem parit.

458. மனநலநன்குடையராயினுஞ் சான்றோர்க்
கினநலமேமாப்புடைத்து (௮)

மனநன்மையை நன்காய் உடையவராயிருந்தாலும் சான்றவருக்கு இனநன்மையானது அதற்கு ஏமாப்புடையது (உறுதியாதலையுடையது).

Etiamsi animi bonitatis bona pars adsit, sapientes tamen bonitatem consuetudinis praesidium (esse) existimant

459. மனநலத்தினாகு மறுமைமற்றஃது
மினநலத்தினேமாப்புடைத்து (௯)

மனநன்மையால் மறுமை (வருபிறப்பின் சிறப்பு) உண்டாகும்; மற்று அதும் இனநலத்தினால் ஏமாப்புடையது (வலிமை பெறும்).

Ortus futuri (felicitas) ex bonitate animi proficiscitur; attamen bonitas consuetudinis ei quoque praesidio est.

460. நல்லினத்தினூங்குந் துணையில்லைத்தீயினத்தி
னல்லற்படுப்பதூஉமில் (௰)

[ஒருவனுக்கு] நல்ல இனத்தின் ஊங்கு (மிகுந்த) துணை இல்லை; தீய இனத்தின் [மிகுந்த] அல்லற் படுப்படும் (துன்பம் அநுபவித்தலும்) இல்லை.

Bona consuetudine tutela excellentior nulla est; mala consuetudine major corruptela nulla.

XLVII.

தெரிந்துசெயல்வகை. Post maturam considerationem agere.

461. அழிவதூஉமாவதூஉ மாகிவழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல் (க)

[தொழில் செய்யும் போது] அழிவதையும் ஆவதையும் (வருவதையும்) ஆகி (ஆய் நின்று) வழி (பின்னே) பயக்கும் (தரும்) ஊதியத்தை (இலாபத்தை) சூழ்ந்து (ஆராய்ந்து) செய்ய வேண்டும்.

Sumptum, effectum et fructum, qui paullatim crescet, considerans agas.

462. தெரிந்தவினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்றுமில் (உ)

தெரிந்த (தெரிந்து கொள்ளப்பட்ட) இனத்தோடு தேர்ந்து [பின்னே தாமேயும்] எண்ணி செய்பவர்க்கு அரும் பொருள் யாதொன்றும் இல்லை.

Qui agit, ubi cum sociis selectis deliberata iterum consideraverit, ei ulla res difficilis non est.

463. ஆக்கங்கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்காரறிவுடையார் (௩)

ஆக்கத்தை (இலாபத்தை) கருதி (நோக்கி) முதலையும் இழக்கும் செய்வினையை (தொழிலை) அறிவுடையவர் ஊக்கார் (மேற்கொள்ளார்).

Negotium, quo spectandis usuris perdunt caput, sapientes numquam suscipiunt.

464. தெளிவிலதனைத் தொடங்காரிளிவென்னு
மேதப்பாடஞ்சுபவர் (௪)

இளிவு (இகழ்ச்சி) என்னும் ஏதப்பாடு (குற்றத்திற்கு) அஞ்சுபவர் தெளிவில்லாததை (துணியப்படாத தொழிலை) தொடங்கார்.

Qui reprehensionis capiendae contumeliam metuunt, nihil incerti suscipiunt.

465. வகையறச்சூழாதெழுதல்பகைவரைப்
பாத்திப்படுப்பதோராறு (௫)

வகையை (திறங்களை) அற (முற்ற) சூழாது எழுதல் (செல்லு

தல்) பகைவரை பாத்திப்படுப்பது (நிலை பெற செய்வது) ஓர் ஆறாகும் (ஒப்பில்லாத வழியாகும்).

Priusquam rerum rationem diligenter consideraveris, (in arma) surgere, idem est atque hostem in campo fortiorem reddere.

466. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமையானுங் கெடும் (௬)

செய்ய தக்கவையல்லாதவற்றை செய்ய — கெடுவான்; செய்ய தக்கவற்றை செய்யாமையினாலும் கெடுவான்.

Si quis, quae facienda non sunt, facit — peribit; peribit etiam non faciendo quae facienda sunt.

467. எண்ணித்துணிக்கருமந்துணிந்தபி
னெண்ணுவமென்பதிழுக்கு (௭)

கருமத்தை எண்ணி துணிவானாக! துணிந்த பின் — எண்ணுவோம் என்று சொல்வது இழுக்காம் (குற்றமாம்).

Rem, ubi consideraveris, incipe! Post rem inceptam dicere: consideremus! vitium est.

468. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப்படும் (௮)

[தகுந்த] ஆற்றினால் வருந்தாத வருத்தம் (முயற்சியானது) — பலர் நின்று போற்றினாலும் (காத்தாலும்) — பொத்துப்படும் (குற்றப்படும்).

Labores, qui in via consideranda non laborant, quamvis multi adstantes caveant, ad irritum cadent.

469. நன்றாற்றலுள்ளுந்தவறுண்டவரவர்
பண்பறிந்தாற்றாக்கடை (௯)

அவரவருடைய பண்பை (குணங்களை) அறிந்து ஆற்றாத (செய்யாத) கடை (இடத்து) — நன்றாய் ஆற்றலுள்ளும் (செய்தலுள்ளும்) தவறு (குற்றம்) உண்டு.

Etsi rem recte feceris, error erit, nisi cujusque indole cognita eam feceris.

470. எள்ளாதவெண்ணிச்செயல்வேண்டுந்தம்மொடு
கொள்ளாத கொள்ளாதுலகு (௰)

எள்ளாதவற்றை (இகழப்படாதவற்றை) எண்ணி செய்ய வேண்டும்; தம்மோடு (தமது நிலைமையோடு) கொள்ளாதவற்றை (பொருந்தாதவற்றை) உலகம் [ஏற்றுக்] கொள்ளாது (அங்கிகரியாது).

Noli quidquam agere, vituperanda cogitans: quod te dedecet, mundo non concedit.

XLVIII.

வலியறிதல். Adversarii vires nosse.

471. வினைவலியுந்தன்வலியுமாற்றான்வலியுந்
துணைவலியுந்தூக்கிச் செயல் (௧)

வினையின் (தொழிலுடைய) வலிமையையும் தனது வலிமை யையும் மாற்றானது (பகைவனது) வலிமையையும் தூக்கி (ஆரா ய்ந்து) செய்வானாக.

Quid valeat facinus, quid valeat ipse, quid hostis valeat, quid valeant socii, bene considerans rem gerat.

472. ஒல்வதறிவதறிந்ததன்கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாததில் (௨)

ஒல்வதையும் (செய்யக்கூடுவதையும்) அறிவதையும் (அதற்கு அறிய வேண்டியதையும்) அறிந்து அதன் கண் (அதனிடத்தில்) தங்கி (நீங்காமல் நின்று) செல்பவர்க்கு செல்லாதது (முடியா தது) இல்லை.

Qui, quid effici possit, et quod (praeterea) sciendum est, scient, et in eo permanentes ad rem accedent, iis nihil non suceedet.

473. உடைத்தம்வலியறியாரூக்கத்தினூக்கி
யிடைக்கண்முரிந்தார்பலர் (௩)

உடை (உடையும் = கெடும்) தம் (தம்முடைய) வலிமையை அறியாதவராகி ஊக்கத்தினால் (மன எழுச்சியால்) ஊக்கி (செ ல்ல மேற்கொண்டு) இடைக்கண் (நடுவிலே) முரிந்தவர் (கெ ட்டவர்) பலர் ஆவார்.

Multi suam (debilem?) potentiam ignorantes insolentia elati in media re perierunt.

474. அமைந்தாங்கொழுகானளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும் (௪)

ஆங்கு (அயல் வேந்தரிடத்து) அமைந்து (பொருந்தி) ஒழுகா தவனாகியும் [தன் வலிமையினது] அளவை அறியாதவனாகியும் தன்னை வியந்தவன் (மெச்சக்கொண்டவன்) விரைந்து கெடு வான்.

Qui exteros indigne tractat et modum suum ignorans se effert, subito interit.

475. பீலிபெய்சாகாடுமச்சிறுமப்பண்டஞ்
சாலமிகுத்துப் பெயின் (௫)

பீலி (மயில் இறகை) பெய் (ஏறறப்பெற்ற) சாகாடும் (பண்டி

யும்) அச்சிறும் (அச்சுமுறியும்) — அப்பண்டத்தை சாலமி குத்து (மிகவும் அதிகப்படுத்தி) பெயின் (எற்றினால்).
Etiam in curru, pennis pavoninis onerato, diffringetur axis, si merce illa nimium eum oneraveris.

476. நுனிக்கொம்பரேறினாரஃதிறந்தூக்கி
னுயிர்க்கிறுதியாகிவிடும் (௬)

கொம்பரின் (மரக்கொம்பினது) நுனியிலே எறினவர் அதை இறந்து (கடந்து) ஊக்கினால் (மேலும் எறினால்) [அவர்] உயிர்க்கு இறுதியாகி (முடிவாகி) விடும்.
Qui postquam apicem rami ascendit, eum transsiliendo sursum tollitur, ejus vitae finis instat.

477. ஆற்றினளவறிந்தீகவதுபொருள்
போற்றி வழங்குநெறி (௭)

[பொருள் வருகின்ற] ஆற்றின் (வழியின்) அளவை அறிந்து ஈவானாக (கொடுப்பானாக); அது பொருளை போற்றி வழங்கும் (காப்பாற்றிக்கொண்டு நடக்கும்) நெறியாம் (வழியாம்).
Mensuram fluminis (pecuniae) sciens largiaris; haec ad opes servandas recta erit via.

478. ஆகாறளவிட்டிதாயினுங் கேடில்லைப்
போகாறகலாக்கடை (௮)

ஆகும் (பொருள் வருகின்ற) ஆறு (வழியினது) அளவு இட்டிதா யிருந்தாலும் (சிறியதாயிருந்தாலும்) கேடு இல்லை — [பொருள்] போகும் ஆறு அகலா (விரியாத) கடை (இடத்து).
Quamvis flumen veniens angustum sit, nihil erit detrimenti, modo ne latum sit abiens.

479. அளவறிந்து வாழாதான் வாழ்க்கையுளபோல
வில்லாகித் தோன்றாக் கெடும் (௯)

அளவை அறிந்து வாழாதவனது வாழ்க்கையானது உள்ளவை போல் [தோன்றி] இல்லையாகி தோன்றாமல் கெடும்.
Qui vivit modi nescius, ejus vita, quamvis speciem habeat, quasi prospere procedat, ad nihil redigetur et sine specie interibit.

480. உளவரைத்தூக்காத வொப்புரவாண்மை
வளவரை வல்லைக் கெடும் (௰)

உள வரை (உள்ளஅளவை) தூக்காத (ஆராயாத) ஒப்புரவாண்மைக்கு (உபகாரத்துக்கு) வள வரை (வளத்தின் அளவு) வல்லை (விரைந்து) கெடும்.
Largitione, qua modum eorum quae habes non ponderas, modus opum tuarum cito consumetur.

XLIX.

காலமறிதல். Opportunum tempus nosse.

481. பகல்வெல்லுங் கூகையைக்காக்கை யிகல்வெ
ல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது (க)

காகம் கூகையை (கோட்டானை) பகலிலே வெல்லும். இகலை (பகைவரை) வெல்லும் (வெல்ல கருதிகின்ற) வேந்தர்க்கு [அதற்கு எற்ற] பொழுது வேண்டும்.

Diurno tempore cornix cuculum vincet; regibus hostes victuris tempus (opportunum) neccssarium est.

482. பருவத்தோடொட்ட வொழுகறிருவினைத்
தீராமை யார்க்குங்கயிறு (உ)

பருவத்தோடு (காலத்தோடு) ஒட்ட (பொருந்த) ஒழுகல் திருவினையை (செல்வத்தை) தீராமை (நீங்காமல்) ஆர்க்கும் (கட்டும கயிறு.

Tempori se accommodantem agerc funis est, qui felicitatem devinciat.

483. அருவினையென்ப வுளவோ கருவியாற்
காலமறிந்து செயின் (ங)

கருவியால் (சாதனங்களுடனே) காலத்தை அறிந்து செய்தால், — அரு (செய்தற்கு அரிய) வினைகள் என்ப (என்பவை = என்னப்படுமவை) உளவோ (உண்டோ)?

Si quis agat rectis instrumentis utens, rectum tempus agnoscens nihil erit, quod opus difficile dici possit.

484. ஞாலங்கருதினுங் கைகூடுங்காலங்
கருதியிடத்தாற் செயின் (ச)

காலத்தை கருதி இடத்தால் (இடத்தோடு பொருந்த) செய்தால் ஞாலத்தை (பூமி முழுதையும் ஆள) கருதினும், [அது] கைகூடும்.

Etiamsi totum orbem terrarum expetas, tuus erit, dummodo agas opportunum tempus expetens, loco te accomodans.

485. காலங்கருதியிருப்பர்கலங்காது
ஞாலங்கருதுபவர் (ரு)

ஞாலத்தை [ஆள] கருதுபவர் (நினைப்பவர்) காலத்தை கலங்காமல் கருதியிருப்பார்.

Qui orbem terrarum spectant in opportunitate temporis spectanda perseverant, non turbati.

486. ஊக்கமுடையானொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந்தகைத்து (௬)

ஊக்கம் (வலிமை) உடையவனது ஒடுக்கம் (பின்வாங்குதல்) பொருகின்ற (போர் செய்கின்ற) தகா (ஆட்டுக்கடா) தாக்குதற்கு (பாய்தற்கு) பேருகின்ற (பின்னே கால்வாங்குகின்ற) தகையை (குணத்தை) உடைத்தாம்.

Strenui militis continentia naturam habet pugnacis arietis, qui, ut impetum capiat, retrocedit.

487. பொள்ளெனவாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பரொள்ளியவர் (௭)

ஒள்ளியவர் (அறிவுடையவர்) அங்கே (பகைவர் தீங்கு செய்த அப்பொழுதே) பொள்ளென (விரைவாக) புறத்தில் வேரார் (கோபியார்), காலத்தை பார்த்து உள்ளே வேர்ப்பார் (கோபஞ் செய்வார்).

(Rex) prudens non statim iram effundit, sed intus eum fovet, tempus exspectans.

488. செறுநரைக்காணிற் சுமக்கவிறுவரை
காணிற் கிழக்காந்தலை (௮)

செறு நரை (பகைவரை) கண்டால் சுமப்பாயாக (பணிவாயாக); இறுகின்ற (அவர் கெடுகின்ற) வரைமை (பருவத்தை) கண்டால், [அவரது] தலை கிழக்காம் (கீழ்விழும்).

Si hostem videris, submitte caput: si tempus ruinae ejus videris, ejus caput demittetur.

489. எய்தற்கரியதியைந்தக்காலந்நிலையே
செய்தற்கரிய செயல் (௯)

எய்தற்கு (பெறுதற்கு) அரியது இயைந்த (வந்து கூடிய) கால், அந்நிலையே (உடனே) செய்தற்கு அரியவற்றை செய்வாயாக!

Si se offerant, quae obtentu sunt difficilia, quae factu sunt difficilia, facias.

490. கொக்கொக்ககூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்தவிடத்து (௰)

கூம்பும் (அடங்கும்) பருவத்தில் கொக்குக்கு ஒத்திரு! மற்று சீர்த்த (வாய்த்த) இடத்து, அதின் குத்துக்கு ஒத்திரு.

Ardeam imitare opperiendi tempore; opportuno tempore impetum ejus imitare.

L.

இடனறிதல். Opportunum locum nosse.

491. தொடங்கற்கவெவ்வினையுமெள்ளற்கமுற்று
மிடங்கண்ட பின்னலல்லது (க)

[பகைவரை] முற்றும் (வளைத்துக்கொள்வதற்காகும்) இடத்தை கண்ட பின் அல்லாமல் எவ்வினையையும் (யாதொரு தொழிலையும்) தொடங்காதிருப்பாயாக! [அவரை சிறியவரென்று] எள்ளாதிருப்பாயாக (இகழாதிருப்பாயாக)!

Antequam locum delegeris (hosti) circumveniendo idoneum, noli quidquam agere, noli parvi pendere.

492. முரண்சேர்ந்தமொய்ம்பினவர்க்குமரண்சேர்ந்தா
மாக்கம்பலவுந்தரும் (உ)

முரணை (மாறுபாட்டை) சேர்ந்த மொய்ம்பினை (வலிமையை) உடையவர்க்கும் அரணை சேர்ந்து ஆம் (ஆகும்) ஆக்கம் பலவும் (பலபலன்களையும்) தரும்.

Etiam ei, qui cum ardore pugnandi conjungit validas vires, cum arce conjunctum praesidium multa emolumenta afferet.

493. ஆற்றருமாற்றி யடுபவிடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின் (ந)

இடத்தை அறிந்து [தம்மை] போற்றி (காத்துக்கொண்டு) போற்றாரிடத்து (பகைவரிடத்து) செய்தால், ஆற்றாதவரும் (வலிமையில்லாதவரும்) ஆற்றி (வலிமையுடையவராய்) அடுவார் (வெல்வார்).

Etiam viribus carentes, qui loci gnari in hostem caute (pugnam) faciant, magna vi eum caedent.

494. எண்ணியாரெண்ணமிழப்பரிடனறிந்து
துன்னியார்துன்னிச் செயின் (ச)

இடத்தை அறிந்து துன்னியவர் (சென்றவர்) துன்னி (பொருந்திநின்று) செய்தால் — [முன்பு அவரை வெல்ல] எண்ணியவர் [அந்த] எண்ணத்தை இழந்துவிடுவார்.

Qui (vincere) cogitaverant, cogitationes illas mittent, cum qui loci gnari propinquitatem assecuti sunt, prope accedent.

495. நெடும்புனலுள்வெல்லுமுதலை யடும்புனலி
னீங்கினதனைப்பிற (ரு)

முதலை நெடும்(ஆழமுள்ள)புனலில் (நீரில்) வெல்லும்; புனலினின்று நீங்கினால் அதை பிற[உயிர்களெல்லாம்]அடும்(கொல்லும்).

Crocodilus in profunda aqua vincet; si ex ea egredietur, alii eum conficient.

496. கடலோடாகால்வனெடுந்தேர்கடலோடு
நாவாயுமோடாநிலத்து (௬)

கால்வல் (வலிய உருளைகளையுடைய) நெடிய தேர் கடலில் ஓடாது; கடலில் ஓடுகின்ற நாவாயும் (மரக்கலமும்) நிலத்தில் ஓடாது.

In aqua non currit magnus currus rotis robustus; in terra non currit navis in aqua curreus.

497. அஞ்சாமையல்லாற்றுணைவேண்டாவெஞ்
சாமை
யெண்ணியிடத்தாற் செயின் (௭)

எஞ்சாமல் (குறையாமல்) எண்ணி இடத்தோடு [பொருந்த] செய்தால்; — அஞ்சாமை அல்லாமல் துணை (உதவி) வேண்டாம்.

Alio auxilio quam sine timore esse non opus habebit, qui sine errore omnia consideraus loco convenienter (pugnam) faciet.

498. சிறுபடையான்செல்லிடஞ்சேரினுறுபடையா
னூக்கமழிந்துவிடும் (௮)

சிறிய படையை (சேனையை) உடையவன் செல்லும் இடத்தை சேர்ந்தால், உறுபடையான் (பெருஞ் சேனையையுடையவனது) ஊக்கம் (பெருமை) அழிந்து விடும்.

Si quis cum minimo exercitu locum opportunum elegerit, etiam cum maximo exercitu hostis infringetur.

499. சிறைநலனுஞ்சீருமிலரெனினுமாந்த
ருறைநிலத்தோடொட்டலரிது (௯)

சிறையினது (அரணினது) நலமும் சீரும் (வலிமையும்) இல்லாதவராயினும் மனிதர் உறையும் (வாசஞ் செய்கின்ற) நிலத்தோடு ஒட்டல் (போர் செய்தல்) அரிது.

Quamvis arcis commodo careant et (praeterea) non sint bona conditione, difficile erit homines in propria terra degentes adgredi.

500. காலாழ்களரினரியடுங்கண்ணஞ்சா
வேலாண்முகத்தகளிறு (௰)

கண் அஞ்சாமல் வேலையுடைய ஆள்களை [கொம்பில் கோத்த] முகத்தையுடைய [வேலையுடைய ஆளின் முகத்தையுடைய?] களிற்றை (ஆண்யானையை) கால் ஆழும் (புதைகின்ற) களரில் (சேற்று நிலத்தில்) நரியானது அடும் (வெல்லும்).

In palude, in qua haeret pes, etiam canis aureus elephantum conficiet, qui oculo interrito vultum hastatorum habet (sive qui facie sua hastatos transfigit).

LI.

தெரிந்துதெளிதல். In ministris eligendis certum fieri.

501. அறம்பொருளின்பமுயிரச்சநான்கின்
திறந்தெரிந்து தேறப்படும் (௧)

அறமும் பொருளும் இன்பமும் உயிர் [பொருட்டுவரும்] அச்சமும் நான்கினது திறத்தினால் (வகையினால்) தெரிந்து தேறப்படுவான் (தெளியப்படுவான்).

(Exploratione) indolis respectu habito horum quattuor: virtutis, boni, voluptatis et mortis timoris — (eligendus) patefiet.

502. குடிப்பிறந்துகுற்றத்தினீங்கிவடுப்பரியு
நாணுடையான்கட்டே தெளிவு (௨)

[அரசனது] தெளிவானது [உயர்ந்த] குடியில் பிறந்து குற்றத்தினின்றும் நீங்கி வடு (பழுது நமக்குவருமென்று) பரியும் (அஞ்சி நிற்கும்) நாணமுடையவனிடத்தே.

Eligatur, qui est nobili genere natus, culpa vacuus, ab ignominia abhorrens, pudore praeditus.

503. அரியகற்றாசற்றார்கண்ணுந் தெரியுங்கா
லின்மையரிதே வெளிறு (௩)

அரியவற்றை கற்று ஆசு (மாசு) அற்றவரிடத்தும் — தெரியும் (நுட்பமாக ஆராயும்) கால் — வெளிறின்மை (அறியாமையின்மை) அரிதே.

Etiam in eo, qui difficilia didicit et culpa caret, si investiges, vacuitatem erroris vix invenies.

504. குணநாடிக்குற்றமு நாடியவற்றுண்
மிகைநாடிமிக்க கொளல் (௪)

குணங்களை நாடி (ஆராய்ந்து) குற்றங்களையும் நாடி அவற்றுள்ளும் மிகையை (மிகுந்தவைகளை) நாடி மிக்க (மிகுந்தவைகளை) கொள்ளுவானாக!

Virtutes exquirens, vitia quoque exquirens, quae praeponderat exquirens, quae praeponderant, sequaris.

505. பெருமைக்குமேனைச் சிறுமைக்குந்தத்தங்
கருமமேகட்டளைக்கல் (௫)

பெருமைக்கும் ஏனை (மற்றை) சிறுமைக்கும் தமது தமது கருமமே கட்டளைக்கல் (உரைக்கல்) ஆம்.

Viri magni et vilis actio lapis lydius est.

506. அற்றாரைத்தேறுதலோம்புகமற்றவர்
பற்றிலர் நாணார்பழி (௬)

[சுற்றம்] அற்றவரை தேறுதலை (தெளிந்து கொள்ளுதலை) ஓம்புவானாக(ஒழிவானாக!) அவர் பற்றில்லாதவராகி பழிக்கு நாணார் (அஞ்சார்).

Cave ne eligas, quos nihil tenet; cum necessitudinem nullam habeant, culpam non erubescent.

507. காதன்மைகந்தாவறிவறியார்த்தேறுதல்
பேதைமை யெல்லாந்தரும் (௭)

காதன்மை (அன்புடைமை) கந்தா (பற்றுக்கோடாக) அறிவை (அறிய வேண்டுமவைகளை) அறியாதவரை தேறுதல் பேதைமையை எல்லாம் தரும்.

Studio ignorantes eligere omnis stultitiae caussa est.

508. தேரான்பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீராவிடும்பைதரும் (௮)

தேராதவனாகி பிறனை தெளிந்தவனுக்கு [அவன்] வழி முறை (சந்ததி முறையிலும்) தீராத இடும்பை (துன்பத்தை) தரும்.

Qui non explorans exterum elegerit, ei damnum afferet ab ipsis posteris non discessurum.

509. தேறற்கயாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள் (௯)

யாரையும் தேராது தெளியாதிருப்பானாக! தேர்ந்த பின் தேறும் (தெளியும்) பொருளை தெளிவானாக!

Sine diligenti consideratione noli cuiquam confidere; si confisus es, fidei ejus munus committas ad fidem accommodatam.

510. தேரான்றெளிவுந் தெளிந்தான்கணையுறவுந்
தீராவிடும்பைதரும் (௰)

தேராதவனாகி தெளிதலும் தெளிந்து கொள்ளப்பட்டவனிடத்து ஐயுறவும் (சந்தேகப்படுதலும்) தீராத இடும்பை தரும்.

Sine diligenti consideratione confidere et deinde de eo, cui confisus es, dubitare, damnum afferet non desiturum.

LII.

தெரிந்துவினையாடல். Electos adhibere.

511. நன்மையுந்தீமையு நாடிநலம்புரிந்த
தன்மையானாளப்படும் (க)

நன்மையையும் தீமையையும் நாடி (ஆராய்ந்து) [அவ்விரண்டனுள்] நலத்தை புரிந்த (விரும்பிய) தன்மையுள்ளவன் [சிறந்த தொழிலிலே] ஆளப்படுவான்.

Qui ejus indolis est, ut bona et mala considerans, desideret bona, eo uti licet.

512. வாரிபெருக்கி வளம்படுத்துற்றவை
யாராய்வான் செய்க வினை (உ)

வாரியை (பொருள் வரும் வழியை) பெருக்கி (விரியச்செய்து) வளத்தை (செல்வத்தை) படுத்து (உண்டாக்கி) உற்றவைகளை (இடையூறுகளை) ஆராய்பவன் வினையை செய்ய கடவான்.

Qui (viam) reditus dilatans copiam pariat et impedimenta (omnia) diligenter exquirat, ille munus administret.

513. அன்பறிவுதேற்றமவாவின்மையிந்நான்கு
நன்குடையான்கட்டே தெளிவு (ங)

அன்பும் அறிவும் தேற்றமும் (கலங்காமையும்) அவாவில்லாமையும் ஆகிய் இந்நான்கினையும் நன்றாக உடையவனிடத்தே — தெளிவு.

Qui integra habet haec quattuor: amorem, scientiam, animi firmitatem, a cupiditatibus vacuitatem, in eo dubium non est.

514. எனைவகையாற்றேறியக்கண்ணும் வினைவகை
யான்
வேறாகுமாந்தர்பலர் (ச)

எனை (எல்லா) வகையாலும் தேறின இடத்தும் வினை வகையால் வேறாகும் மனிதர் பலர்.

Etsi quis omni ratione spectatus sit, qui (deinde) ratione muneris alii fiant, plurimi sunt.

515. அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கல்லால்வினைதான்
சிறந்தானென்றேவற்பாற்றன்று (ரு)

வினை தான் — அறிந்து ஆற்றி (பொறுத்து) செய்கிற்பாற்கு அல்லால் (செய்பவனுக்கு அல்லாமல்) — சிறந்தவன் என்று ஏவும் (கொடுக்கும்) பாலேயுடையது அன்று (அல்ல).

Ei soli, qui scienter agat et patienter — non ubi dicitur „optimus" — munus injungi debet.

516. செய்வானைநாடி வினைநாடிக்காலத்தோ
டெய்தவுணர்ந்து செயல் (சா)

செய்பவனை நாடி [செய்யப்படும்] வினையை நாடி [அவனையும் அதனையும்] காலத்தோடு எய்த (பொருந்த) உணர்ந்து செய் வாயாக.

Agentem considerans et actionem considerans, ubi cum tempore convenire vides, agendum tibi est.

517. இதனையிதனாலிவன்முடிக்குமென்றாய்ந்
ததனையவன்கண்விடல் (எ)

இதனை இதனால் (இக்காரணத்தினால்) இவன் முடிப்பான் என்று ஆய்ந்து (ஆராய்ந்து) அதனை அவனிடத்தே விட வேண்டும்.

„Illam rem illo instrumento ille efficiet" Hoc modo considerans rem illam illi committas.

518. வினைக்குரிமைநாடிய பின்றையவனை
யதற்குரியனாகச் செயல் (அ)

[ஒருவனை] வினைக்கு உரியனாயிருக்கையை நாடிய பின்றை (பின்பு) அவனை அதற்கு உரியவனாக செய்ய வேண்டும்.

In quo muneris facultatem spectaris, illi muneris illius potestatem committas.

519. வினைக்கண்வினையுடையான் கேண்மைவேறாக
நினைப்பானை நீங்குந்திரு (கூ)

[தனது] வினையினிடத்தே [எப்போதும்] வினையை (முயற்சியை) உடையவனது கேண்மையை (அவன் தனக்கு உறவாளி போல் நடக்கின்ற தன்மையை) வேறாக (மாறுபட) நினைப்பவனை திரு (செல்வம்) நீங்கும்.

Qui familiaritatem in officio exercendo officiosi aegre feret, eum dea felicitatis deseret.

520. நாடோறுநாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாதுலகு (ய)

மன்னவன் நாள்தோறும் நாட வேண்டும்; வினை செய்பவன் (மந்திரியானவன்) கோடாதிருக்க (கோணாதிருக்க) உலகம் கோடாது (கோணாது).

Rex quotidie exploret. Si officio fungens recte procedet, recte procedet mundus.

LIII.

சுற்றந்தழால். Consanguineos fovere.

521. பற்றற்றகண்ணும் பழமைபாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணேயுள (௧)

[ஒருவன்] பற்று (செல்வம் முதலானவைகள்) அற்ற இடத்தும், பழமை (பழக்கத்தை) பாராட்டுதல் (எடுத்துக்கொண்டாடுதல்) சுற்றத்தாரிடத்தே உண்டு.

Etsi quis ad inopiam redactus sit, antiquae conditionis observantiam in consanguineis invenies.

522. விருப்பறாச்சுற்றமியையினருப்பறா
வாக்கம்பலவுந்தரும் (௨)

விருப்பறாத (அன்பு நீங்காத) சுற்றம் இயையின் (இயைந்தால் = கிடைத்தால்) அருப்பறாத (வளர்தல் நீங்காத) பல ஆக்கங்களையும் தரும்.

Si regi obveniant cognati, qui amare non desinant, felicitatem ei parient, quae germinare non desinet.

523. அளவளாவில்லாதான் வாழ்க்கைகுளவளாக்
கோடின்றிநீர்நிறைந்தற்று (௩)

[சுற்றத்தோடு நெஞ்சு] அளவளாவுதல் (கலத்தல்) இல்லாதவனது வாழ்க்கையானது குளவளவு (பரப்பு,) கோடு (கரை) இன்றி நீர்நிறைந்தாற்போலும்.

Felicitas regis, qui consortio caret, similis est extensioni lacus aqua repleti, qui ripa caret.

524. சுற்றத்தாற்சுற்றப்படவொழுகல்செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்றபயன் (௪)

செல்வத்தை பெற்றதினால் [ஒருவன்] பெற்றபயனாவது சுற்றத்தால் தான் சுற்றப்படும் படி ஒழுகலாம்.

Ita se gerere, ut a propinquis ambiatur, fructus est qui felicitate obtenta obtinetur.

525. கொடுத்தலுமின்சொலுமாற்றினடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப்படும் (௫)

கொடுத்தலையும் இனிய சொல் (சொல்லுதலையும்) ஆற்றினால் (செய்ய வல்லவனாயிருந்தால்) அடுக்கிய சுற்றத்தாலும் சுற்றப்படுவான்.

Si rex liberalitate et affabilitate sermonis utetur, caterva propinquorum stipabitur.

526. பெருங்கொடையான் பேணான் வெகுளியவ
னின்
மருங்குடையார் மாநிலத்தில் (௬)

பெரிய கொடையையுடையவனும் வெகுளியை பேணாதவ
னும் [ஆயிருந்தால்] அவனின் (அவன் போல்) மருங்குடை
யவர் (சுற்றமுடையவர்) மகா நிலத்தில் இல்லை.

In magno terrarum orbe nemo plures habet secum facientes, quam rex, qui multa largitur neque iram fovet.

527. காக்கைகரவா கரைந்துண்ணுமாக்கமு
மன்னநீரார்க்கேயுள (௭)

காக்கை கரவாமல் (மறைக்காமல்) கரைந்து (அழைத்து) உண்
ணும்; அன்ன (அப்படிப்பட்ட) நீரை (இயல்பை) உடையவர்
க்கே ஆக்கமும் உண்டாம.

Cornix (cibum inventum) non occultans ceteras convocat et deinde comedit; similem conditionem habentibus etiam emolumentum erit.

528. பொதுநோக்கான் வேந்தன்வரிசையா நோக்கி
னதுநோக்கிவாழ்வார்பலர் (௮)

வேந்தன் [எல்லாரையும்] பொதுவாக நோக்காதவனாகி வரிசை
யாக (அவரவர் தகுதியோடு பொருந்த) நோக்கினால் — அதை
நோக்கி — அவனுடனே வாழ்பவர் பலர்.

Si rex non omnes aequaliter, sed unumquemque pro merito respiciat, hoc respicientes multos juvabit cum eo vivere.

529. தமராகித்தற்றுறந்தார் சுற்றமமராமைக்
காரணமின்றிவரும் (௯)

[முன்னே] தமராகி (சிநேகிதராகி) தம்மை துறந்தவர் (பிரிந்து
போனவர்) சுற்றம் [ஆக] — அமராமையின் (பொருந்தாமை
யின்) காரணம் இன்றி (இல்லையாக) — வரும்.

Qui prius ei addicti eum deserebant, eorum amicitia, caussa discordiae sublata, redibit.

530. உழைப்பிரிந்துகாரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந்தெண்ணிக் கொளல் (௰)

[தன்] உழையில் (இடத்தினின்று) பிரிந்து [பின்பு] காரண
த்தினால் வந்தவனை வேந்தன் [அக்காரணத்தை] இழைத்து
(செய்து) இருந்து எண்ணி (கவனமாய் ஆராய்ந்து) எற்றுக்கொ
ள்வானாக!

Qui (sine caussa) locum deserit et deinde ob aliquam caussam redit, ei rex debet morem gerere, (redeuntem) exspectare et (denique) considerate recipere.

LIV.

பொச்சாவாமை. Non pigrum esse.

531. இறந்தவெகுளியிற்றீதே சிறந்த
வுவகைமகிழ்ச்சியிற் சோர்வு (க)

சிறந்த (மிகுந்த) உவகையின் (களிப்பின்) மகிழ்ச்சியில் [வரும்] சோர்வு (மறதி) இறந்த (அளவுகடந்த) வெகுளியை பார்க்கிலும் தீதேயாம்.

Nimia ira pejor est sui oblivio in exsultatione nimiae laetitiae.

532. பொச்சாப்புக்கொல்லும் புகழையறிவினை
நிச்சநிரப்புக்கொன்றாங்கு (உ)

நிச்ச (நித்திய) நிரப்பு (தரித்திரம்) அறிவினை கொன்று ஆங்கு (கொல்வது போல்) பொச்சாப்பு (மறதி) புகழைக்கொல்லும்.

Desidia laudem destruit, ut perpetua egestas ingenium.

533. பொச்சாப்பார்க்கில்லைப்புகழ்மை யதுவுலகத்
தெப்பானூலோர்க்குந்துணிவு (ங)

பொச்சாப்பு (சோர்வு)உடையவர்க்கு புகழ்மை இல்லை! அது உலகத்தில் எப்பால்(எவ் வகை)நூலுடையவர்க்கும் துணிவாம்.

„Ignavis nulla laus!“ Cujusvis disciplinae sectatoribus hoc decretum est.

534. அச்சமுடையார்க்கரணில்லை யாங்கில்லைப்
பொச்சாப்புடையார்க்கு நன்கு (ச)

அச்சமுடையவர்க்கு அரண் இல்லை! ஆங்கு (அது போல்) பொச்சாப்புடையவர்க்கு நன்கு (செல்வம்) இல்லை.

Timidis nulla arx; ignavis nullum bonum!

535. முன்னுறக்காவாதிழுக்கியான் றன்பிழை
பின்னூறிரங்கிவிடும் (ரு)

முன்னுற (முற்பட) காவாது இழுக்கினவன் (தவறினவன்) பின்பு ஊறு (துன்ப காலத்தில்) தன் பிழையை [குறித்து] இரங்கி விடுவான் (விசனப்படுவான்).

Qui non praevidens, desidiosus vivet, (tempore) calamitatis errorem suum dolebit.

536. இழுக்காமையார்மாட்டுமென்றும்வழுக்காமை
வாயினதுவொப்பதில் (௬)

இழுக்காமை (மறவாமை) யார்மாட்டும் (எல்லாரிடத்தும்) என்றும் (எப்போதும்) வழுக்காமல் வாயின்(நேர்பட்டால்) அதனை ஒப்பது இல்லை.

Si ignaviae contraria virtus in quemcunque quovis tempore adest, hoc simile non habet.

537. அரியவென்றாகாத வில்லைப் பொச்சாவாக்
கருவியாற் போற்றிச் செயின் (௭)

பொச்சாவா (மறவாத) கருவியால் [அந்தகரணமாகிய மனத்தினால்] போற்றி (எண்ணி) செய்தால் [இவை] அரியவை என்று சொல்லப்பட்டு ஆகாதவை (முடியாதவை) இல்லை.

Nihil quod, cum dicatur difficile esse, non efficiatur, erit, si quis animo semper impigro caute agat.

538. புகழ்ந்தவைபோற்றிச்செயல்வேண்டுஞ்செய்யா
திகழ்ந்தார்க்கெழுமையுமில் (௮)

[நீதிநூல்களில்] புகழ்ந்தவற்றை போற்றி செய்ய வேண்டும்; செய்யாது இகழ்ந்தவர்க்கு எழுமையும் இல்லை(சீவன் உதவாது).

Quae (a sapientibus) laudata sunt observans agat; ita agere contemnentibus „septem vitae" non sunt (eos vita nullo modo juvat).

539. இகழ்ச்சியிற்கெட்டாரை யுள்ளுகதாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து (௯)

[அரசர்] தமது மகிழ்ச்சியினிடத்து தாம் மைந்து (மயக்கம்) உறும் போது இகழ்ச்சியில் (மறதியினால்) கெட்டவரை உள்ள (நினைக்க) வேண்டும்.

Ubi in laetitia animus confunditur, eorum meminerit, qui in contemtu (virtutis) perierunt.

540. உள்ளியதெய்தலெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின் (௰)

மற்றும் (பின்னும்) தான் உள்ளியதை (நினைத்ததை) உள்ள (எப்போதும் நினைக்க) பெற்றால் (வல்லவனானால்) — எள்ளியதை எய்தல் (அடைதல்) எளிதாம்.

Facile erit quae in animo habes obtinere, si pateris quae in animo habes in animo retinere.

LV.

செங்கோன்மை. Recti sceptri conditio.

541. ஓர்ந்துகண்ணோடாதிறைபுரிந்தி யார்மாட்டுந்
தேர்ந்துசெய்வஃதேமுறை (க)

ஓர்ந்து (நாடி) கண்ணோடாது (முகங்கொடாமல்) இறையை (நடுவுநிலைமையை) புரிந்து (விரும்பி) யாவரிடத்திலும் [குற்றத்துக்கு தகுந்த தண்டத்தை] தேர்ந்து (ஆராய்ந்து) செய்வதே — முறை (செங்கோல்).

Inquirere, nullius ratione habita, in omnes juris diligentem cognoscere et agere, justitia est.

542. வானோக்கிவாழுமுலகெல்லாமன்னவன்
கோனோக்கி வாழுங்குடி (உ)

உலகம் எல்லாம் மழையை நோக்கி வாழும்; [குடிகள்] மன்னவனது [செங்] கோலை நோக்கி வாழும்.

Pluviam suspiciens mundus vivit, sceptrum regis suspicientes subditi vivunt.

543. அந்தணர்நூற்குமறத்திற்குமாதியாய்
நின்றது மன்னவன் கோல் (௩)

அந்தணரது (பெரியோர்களுடைய) நூலுக்கும் (சாஸ்திரத்திற்கும்) அறத்திற்கும் ஆதியாய் (காரணமாய்) நின்றது (நிலைபெற்றது) — மன்னவன் [செங்] கோலாம்.

Quod, fundamentum et decretis sapientium et virtutis (exercitatio), permanet — regis sceptrum est.

544. குடிதழீஇக்கோலோச்சுமாநிலமன்ன
னடிதழீஇநிற்குமுலகு (௪)

குடிகளை தழுவி செங்கோலை ஓச்சும் (செலுத்தும்) பெரு நில மன்னனது அடியை உலகம் தழுவி நிற்கும்.

Si magnae terrae rex subditos amplectens sceptrum tenet, orbis terrarum stabit, pedes ejus amplectens.

545. இயல்புளிக்கோலோச்சுமன்னவனாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு (௫)

பெயலும் (மழையும்) விளையுளும் (விளைவும்) தொக்கு (கூடி) இயல்புளி (இயல்பால்) [செங்] கோலை ஓச்சும் மன்னவனது நாட்ட (நாட்டில்) உள்ளனவாம்.

In terra regis, qui juste sceptrum tenet, pluvia et felix messis conjungentur.

546. வேலன்றுவென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடாதேனின் (௬)

மன்னவனுக்கு வென்றி (வெற்றியை) தருவது — வேல் அல்ல, கோல் ஆகும் — அதுவும் கோடாதாயின்.

Non lancea victoriam pariet sed regis sceptrum, si illud non flectitur.

547. இறைகாக்கும்வையகமெல்லாமவனை
முறைகாக்குமுட்டாச் செயின் (௭)

இறையவன் (அரசன்) வையகம் (பூமி) எல்லாம் காப்பான்; அவனை முறை (செங்கோல்) காக்கும் — அதனை (முறையை) முட்டா (தப்பாமல்) செய்வானாயின்.

Rex tuetur totam terram, regem tuetur justitia, si sine offensione eam colit.

548. எண்பதத்தானோரா முறை செய்யா மன்னவன்
றண்பதத்தாற்றானே கெடும் (௮)

[வழக்கு அறிவிப்பவர்க்கு] எண்பதத்தான் (எளிதான சமயத்தையுடையவனாகி) ஓரா [நின்று = ஆராய்ந்து] முறை செய்யாத மன்னவன் தண் (தாழந்த) பதத்தால் (பதத்திலே = இடத்திலே நின்று) தானே கெடுவான்.

Qui non facili aditu, (in caussas) inquirens justitiam colit, rex ille propter humilem suum habitum per se ipsum destruetur.

549. குடிபுறங்காத்தோம்பிக் குற்றங்கடிதல்
வடுவன்றுவேந்தன் றொழில் (௯)

குடிகளை புறங்காத்து ஓம்பி குற்றத்தை கடிதல் வடு (குற்றம்) அல்ல — வேந்தனது தொழிலாம்.

Subditos foris defendentem, (intus) foventem, vitia eorum castigare, non vitium sed officium regis est.

550. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்பை
ங்கூழ்
களைகட்டதனொடுநேர் (௰)

வேந்து (வேந்தன்) கொடியவரை கொலையினாலே ஒறுத்தல் (தண்டித்தல்) பைங் — கூழில் (பயிரில்) களையை கட்டலோடு (பறித்தலோடு) நேராகும் (ஒப்பாம்).

Crudeles (homicidas) morte multans rex perinde facit ac qui inter segetes lolia evellit.

LVI.

கொடுங்கோன்மை. Sceptri non recti conditio.

551. கொலைமேற்கொண்டாரிற் கொடிதேயலைமே
 ற்கொண்
 டல்லவை செய்தொழுகும்வேந்து (க)

[குடிகளை] அலைத்தலை [தன்] மேல் கொண்டு அல்லாதவற்றை செய்து ஒழுகும் வேந்தன் — கொல்லுதலை [தன்] மேல் கொண்டவரினும் கொடியவனாவான்.

Iis, qui caedem tractant, crudelior est rex, qui vexationem exercens injuste agit.

552. வேலொடுநின்றானிடுவென்றதுபோலுங்
 கோலொடுநின்றானிரவு (உ)

கோலோடு நின்றவன் [ஆகிய அரசனது] இரவானது (பொருள் கேட்டலானது) வேலோடு நின்றவன் [ஆகிய கள்வன்] இடு (கொடு) என்று சொல்லுதல் போலும்.

Cum sceptro adstantem petere perinde est ac cum lancea adstantem „da“ dicere.

553. நாடோறுநாடி முறை செய்யா மன்னவ
 னுடோறுநாடு கெடும் (ங)

நாள்தோறும் நாடி முறைமையை செய்யாத மன்னவனுக்கு நாள்தோறும் நாடு கெடும்.

Regis, qui ordinem non quotidie inquirens servat, regnum quotidie magis destruetur.

554. கூழுங்குடியுமொருங்கிழக்குங் கோல்கோடிச்
 சூழாது செய்யுமரசு (ச)

சூழாது (எண்ணுமல்) கோல் கோடி (முறைதப்பி) செய்யும் அரசன் கூழையும் (பொருளையும்) குடிகளையும் ஒருங்கு (ஒருமிக்க) இழப்பான்.

Simul bona et subditos perdet rex, qui sceptrum deflectens sine consideratione aget.

555. அல்லற்பட்டாற்றாதழுதகண்ணீரன்றே
 செல்வத்தைத் தேய்க்கும் படை (ரு)

செல்வத்தை தேய்க்கும் படையாவது [குடிகள்] அல்லற்பட்டு ஆற்றாது (பொறுக்க மாட்டாமல்) அழுத கண்ணீர் அல்லவோ?

Lacrimae, quas fundunt, ubi miseriam suam tolerare jam non possunt, nonne lima est, quae felicitatem deminuat?

556. மன்னர்க்குமன்னுதல் செங்கோன்மை யஃதின்
றேன்
மன்னாவா மன்னர்க்கொளி (௬)

மன்னர்க்கு செங்கோன்மை மன்னுதல் (நிலைபெறுதல்)! அது இன்றேல் (இல்லையாயின்) மன்னர்க்கு ஒளி (புகழ்) மன்னாது.
Rectum sceptrum regi perpetuitatem (parit); si desit, nulla regi perpetua erit lux (= laus).

557. துளியின்மைஞாலத்திற்கெற்றற்றேவேந்த
னளியின்மை வாழுமுயிர்க்கு (௭)

அரசனதுஅளி (அருள்) இல்லாமையானது வாழும் உயிர்க்கு — துளி (மழை) இல்லாமையானது ஞாலத்திற்கு எற்று [எவ்வகை துன்பம் தருமோ] — அற்றே (அவ்வகை துன்பமே தரும்).
Quod defectus pluviae est terrae, idem defectus clementiae in rege est viventibus.

558. இன்மையினின்னாதுடைமைமுறைசெய்யா
மன்னவன்கோற்கீழ்ப்படின் (௮)

முறையை செய்யாத அரசனது கோலின் கீழ்ப்பட்டால் (வாழ்ந்தால்) — உடைமை இல்லாமையினும் இன்னாது (துன்பந் தரும்).
Pejus erit possidere quam egere, si subsis sceptro regis, qui justitiam non colat.

559. முறைகோடிமன்னவன் செய்யினுறைகோடி
யொல்லாதுவானம் பெயல் (௯)

மன்னவன் முறை கோடி செய்தால் உறை (பருவமழை) கோடி (இல்லாமல் போக) வானம் பெய்தல் ஒல்லாது (கூடாது).
Si rex a justitia deflectens aget, pluviae ordo deflectet neque stillare poterit nubes.

560. ஆபயன்குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன்காவானெனின் (௰)

காவலன் (அரசன்) காவான் (காப்பாற்றான்) எனின் (ஆயின்) — ஆ (பசுக்களும்) பயன் குன்றும் (குறையும்); அறு தொழிலோர் (அறு தொழில் களையுடையவர் = வேதியர்) நூல்களை (சாஸ்திரங்களை) மறப்பார்.
Vaccae fructus deficient et qui in sex operibus versantur, scientiae obliviscentur, si (subditorum) servator eos non servet.

LVII.

வெருவந்தசெய்யாமை. Terrorem injicientia non facere.

561. தக்காங்குநாடித்தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங்கொறுப்பதுவேந்து (௧)

தக்கு ஆங்கு (தக்க படி) நாடி தலைச்செல்லாத வண்ணத்தால் [பின்னும்] தலைச்செல்லாத வண்ணத்தால் (துவக்கின அநியாயம் செல்லாத படிக்கு) ஒத்து ஆங்கு (ஒத்த படி) ஒறுப்பவனே (தண்டிப்பவனே) அரசனாவான்.

Juste examinare et deinde, ne longius procedant, aeque punire regis est.

562. கடிதோச்சிமெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டுபவர் (௨)

ஆக்கம் நெடிது (நெடுங் காலம்) நீங்காமையை வேண்டுபவர் [கையை] கடிதாய் ஓச்சி (செலுத்தி) மெல்ல எறிய (அடிக்க) வேண்டும்.

Qui optant, ut felicitas in longum tempus ne discedat, debent vehementer excutere, sed leniter percutere.

563. வெருவந்தசெய்தொழுகும் வெங்கோலனாயி
னொருவந்தமொல்லைக் கெடும் (௩)

வெருவந்த (அச்சத்தை உண்டாக்குகிறவற்றை) செய்து ஒழுகும் வெங்கோலை (கொடுங்கோலை) உடையவனாயிருந்தால் ஒருவந்தமாக (நிச்சயமாக) ஒல்லை (சீக்கிரத்தில்) கெடுவான்.

Si quis atrociter agens durum sceptrum teneat, felicitas ejus haud dubie celeriter interibit.

564. இறைகடியனென்றுரைக்குமின்னாச் சொல்வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும் (௪)

இறையவன் கடியவன் என்று உரைக்கப்படுகிற இன்னாத் சொல்லையுடைய வேந்தனது உறை (வாழ்நாள்) கடுகி (குறுகி) ஒல்லை கெடுவான்.

Regis, qui in sermone non affabilis dicitur durus esse, vita celeri cursu consumetur.

565. அருஞ்செவ்வியின்னா முகத்தான்பெருஞ்செல்வம்
பேஎய்கண்டன்ன துடைத்து (௫)

அரிய செவ்வியையும் (சமயத்தையும்) இனிமையில்லாத முகத்

தையும் உடையவனது பெரிய செல்வம் — பேய் கண்டு அன்னது (கண்டது போல்வது) [ஒருகுற்றத்தை] உடையதாகும்.
Qui difficilem praebet aurem vultumque torvum, magna ejus felicitas perinde se habet, ac si daemon eam aspexisset.

566. கடுஞ்சொல்லன்கண்ணில னாயினெடுஞ்செல்வ
நீடின்றியாங்கே கெடும் (கூ)

கடிய சொல்லையுடையவனும் கண்ணோட்டமில்லாதவனுமாயின் — நெடிய செல்வம் நீடு (நீடுதல்) இன்றி (இல்லாமல்) ஆங்கே கெடும்.

Qui acerbo est ore et duro oculo, fortuna ejus ampla non amplius crescens statim destruetur.

567. கடுமொழியுங்கையிகந்த தண்டமும்வேந்த
னடுமுரண் டேய்க்குமரம் (எ)

கடிய மொழியும் கையிகந்த (அளவுகடந்த) தண்டமும் வேந்தனது [பகை] அடும் முரணை (வலி என்னும் இரும்பை) தேய்க்கும் அரங்களாம்.

Dura verba et poena, quae aequum excedunt, limae sunt, quae fortitudinem principis atterant, qua hostes vincat.

568. இனத்தாற்றியெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற்சிறுகுந்திரு (அ)

இனத்தால் (இனத்தாராகிய மந்திரிகளை கொண்டு) ஆற்றி (காரியங்களை நடத்தி) [தானும்] எண்ணாத வேந்தன் [பின்பு] சினத்தால் ஆற்றி சீறினால் (அவரை கோபித்தால்) — [அவனது] திரு (செல்வம்) சிறுகும் (குறையும்).

Qui per consiliorum socios negotia sua agens ipse ea negligat, si iracundiam exercens iis comminetur, salus ejus comminuetur.

569. செருவந்தபோழ்திற் சிறைசெய்யாவேந்தன்
வெருவந்துவெய்து கெடும் (கூ)

சிறை (அரண்) செய்யாத வேந்தன் செரு (போர்) வந்த போதில் — வெருவந்து (அச்சம்வந்து) — வெய்து (விரைவிலே) கெடுவான்.

Qui bello veniente arcem paratam non habet, terrore ei obveniente cito interibit.

570. கல்லார்ப்பிணிக்குங் கடுங்கோலதுவல்ல
திலலைநிலக்குப் பொறை (ய)

கடிய கோல், கல்லாதவரை பிணிக்கும் (கூட்டும்) அது அல்லாமல் நிலத்துக்கு பொறை (பாரம்) இல்லை.

Rudes sibi adjungit crudele sceptrum; terrae nullum gravius onus est.

LVIII.

கண்ணோட்டம். Clementia.

571. கண்ணோட்டமென்னுங் கழிபெருங்காரிகை
யுண்மையானுண்டிவ்வுலகு (க)

கண்ணோட்டம் என்னும் கழி (மிகவும்) பெரிய காரிகை (அழகு) உண்மையான் (உண்மையால் = உண்டாயிருக்கையால்) இவ்வுலகம் உண்டு.

Quod consistit decus excelsum, quod benignitas dicitur, eo consistit mundus.

572. கண்ணோட்டத்துள்ளதுலகியலஃதிலா
ருண்மைநிலக்குப் பொறை (உ)

உலகியல் (உலக நடை) கண்ணோட்டத்தில் உள்ளது (தோன்றுவதாம்), அதில்லாதவர் உண்டாதல் நிலத்துக்கு பொறையாம்.

In benignitate mundi cursus continetur. Quod inveniuntur homines sine benignitate, terrae onus est.

573. பண்ணென்னும்பாடற்கியைபின்றேற் கண்ணென்னுங்
கண்ணோட்டமில்லாதகண் (ங)

பண் (இசை) பாடற்கு (பாடலுக்கு = பாடலோடு) இயைபு (பொருத்தம்) இன்றேல் (இல்லையாயின்) — என்னும்? கண் கண்ணோட்டமில்லாத இடத்து — என்னும்?

Sonitus chordarum quid prodest, nisi cum cantu concinat? Oculus quid prodest, si desit benignitas?

574. உளபோன்முகத்தெவன் செய்யுமளவினாற்
கண்ணோட்டமில்லாதகண் (ச)

[தகும்] அளவினால் கண்ணோட்டமில்லாத கண்கள் உள்ளவை போல் [தோன்றியும்] முகத்திலே என்ன பயனை செய்யும்?

Quamvis videantur adesse fronti, quid prosunt oculi, qui clementia careant modum servanti?

575. கண்ணிற்கணிகலங் கண்ணோட்டமஃதின்றேற்
புண்ணென்றுணரப்படும் (ரு)

கண்ணோட்டம் கண்ணிற்கு அணிகலம் (அணியும் ஆபாணமாம்); அது இல்லையாயின், [கண்] புண் என்றுணரப்படும் (அறியப்படும்).

Oculis ornamentum est benignitas. Ubi deest, in fronte ulcus esse perspicitur.

576. மண்ணோடியைந்த மரத்தனையர்கண்ணோ
டியைந்துகண்ணோடாதவர் (௬)

கண்ணோடு இயைந்து [பொருந்தியிருந்தும்] கண்ணோடுதலில்லாதவர் [சஞ்சரிக்கின்றவராயிருந்தாலும்] மண்ணோடு இயைந்த மரத்து அனையர் (மரத்திற்கு ஒப்பாவார்).

Terrae infixis arboribus similes sunt, qui, quamvis in fronte oculi infixi sint, humanitate careant.

577. கண்ணோட்டமில்லவர் கண்ணிலர் கண்ணு
டையார்
கண்ணோட்ட மின்மையுமில் (௭)

கண்ணோட்டமில்லாதவர் கண்ணுடையவருமல்ல; கண்ணுடையவர் கண்ணோட்டம் இன்மையும் (இல்லாதவராதலும்) இல்லை.

Quos deficit benignitas, eos oculi deficiunt; qui oculos habent, eos defectus benignitatis deficit.

578. கருமஞ்சிதையாமற் கண்ணோடவல்லார்க்
குரிமையுடைத்திவ்வுலகு (௮)

இவ்வுலகம் [முறை செய்தலாகிய தமது] கருமம் (தொழில்) சிதையாமல் (அழியாமல்) கண்ணோடவல்லவர்க்கு உரிமையை (உரியதாந்தன்மையை) உடைத்து.

Si quis salvo officio benignitate valeat, hujus mundi ea est conditio, ut ejus proprius sit.

579. ஒறுத்தாற்றும்பண்பினார்கண்ணுங்கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பேதலை (௯)

ஒறுத்து ஆற்றும் (இடைவிடாமல் வருந்துகின்ற) பண்புடையவரிடத்தும் கண்ணோடி — பொறுத்து ஆற்றும் (இடைவிடாமல் சுமக்கின்ற) பண்பே — தலை.

Te ejus esse indolis, ut cum benignitate constanter perferas vel eum, qui ejus sit indolis, ut tibi constanter molestiam exhibeat, hoc caput est.

580. பெயக்கண்டுநஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம்வேண்டுபவர் (௰)

நய (விரும்ப) தக்க நாகரிகத்தை (தாட்சிணியத்தை) வேண்டுபவர் —' நஞ்சை [பழகினவர்] பெய்ய (இட) கண்டும் — உண்டு (அநுபவித்து) அமைவார் (அமர்ந்திருப்பார்).

Etsi (quem) videant venenum instillare, illud sument et tacebunt, qui comi urbanitati studeat.

LIX.

ஒற்றுடல். Exploratoribus uti.

581. ஒற்றுமுரைசான்ற நூலுமிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண் (க)
மன்னவன், ஒற்றனும் உரை (புகழ்) சான்ற [நீதி] நூலும் [ஆகிய] இவை இரண்டும் கண்களாக தெற்றென்க (தெளிய வேண்டும்).

Haec duo: explorationem et praeclarum librum (in quo perscripta est lex) oculos suos esse, rex clare perspicere debet.

582. எல்லார்க்குமெல்லா நிகழ்பவையெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில் (உ)
எல்லாரிடத்தும் நிகழ்பவைகளை (நடப்பவைகளை) எல்லாம் எந்நாளிலும் வல் (விரைந்து) அறிதல் — வேந்தனது தொழிலாம்.

Quaecumque ab omnibus omni tempore fiunt, statim cognoscere regis officium est.

583. ஒற்றினொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்ததில் (ங)
ஒற்றினல் ஒற்றி (ஒற்றுவித்து) [அதினல் அடையும்] பொருளை தெரியாத மன்னவன் கொற்றம் (வெற்றி) கொள்ள (அடைய) கிடந்தது இல்லை (கூடாது).

Qui emolumentum, quod fit per exploratores, explorando non intelligit, principi illi non continget, ut victoriam obtineat.

584. வினைசெய்வார்தஞ்சுற்றம்வேண்டாதாரென்றுங்
கனைவரையுமாராய்வதொற்று (ச)
[தம்முடைய] வினை செய்பவர் சுற்றத்தார் வேண்டாதவர் (பகைவர்) என்று ஆங்கு (சொல்லப்பட்ட) அனைவரையும் ஆராய்வது ஒற்றம்.

In muneribus fungentes, in socios, in adversarios, in omnes ejusmodi diligenter inquirere, hoc est explorare.

585. கடாஅவுருவொடு கண்ணஞ்சாதியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று (ரு)
கடா (கடாத = சந்தேகிக்கப்படாத) உருவோடு (வடிவோடு) — கண்ணிற்கு அஞ்சாது யாண்டும் (எப்போதும்) உகாமை (மனதிலுள்ளவைகளை வெளிப்படுத்தாதிருக்க) வல்லதே ஒற்றும்.

Si quis speciem prae se ferat, a qua suspicio absit, conspectum non

timeat, et semper in potestate sua habeat nihil prodere, haec est exploratio.

586. துறந்தார்படிவத்தராகியிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்விலதொற்று (௬)

[முழுதும்] துறந்தவரும் படிவத்தரும் (விரதி சீலமுடையவரும்) ஆகி [உள்ளே] இறந்து (புகுந்து) ஆராய்ந்து (அவ்விடத்தோர்) என்ன [துன்பம்] செய்தாலும் சோர்வில்லாதவனாயிருக்கை ஒற்றாம்.

Species poenitentium et ascetarum explorare; nec, quaecumque fiunt, mente concidere, haec est exploratio.

587. மறைந்தவைகேட்கவற்றாகி யறிந்தவை
யையப்பாடில்லதே யொற்று (௭)

மறைந்தவைகளை கேட்க வல்லவனாயிருந்து அறிந்தவைகளிலே ஐயப்பாடு (ஐயம்) இல்லாதவனே ஒற்றனாவான்.

Secreta posse cognoscere et cognita certo scire, haec est exploratio.

588. ஒற்றொற்றித்தந்த பொருளையுமற்றுமோ
ரொற்றினாலொற்றிக் கொளல் (௮)

[ஓர்] ஒற்று ஒற்றி [வந்து] தந்த (அறிவித்த) பொருளையும் மற்றும் ஓரொற்றினால் ஒற்றுவித்துக் கொள்ள வேண்டும்.

Eam rem, quam explorator, postquam exploravit, retulit, iterum per alium exploratorem explorare debes.

589. ஒற்றொற்றுணராமை யாள்கவுடன்மூவர்
சொற்றொக்க தேறப்படும். (௯)

[ஓர்] ஒற்றன் [மற்றோர்] ஒற்றனை உணராமை (உணராத படி = அறியாத படி) ஆள வேண்டும்; மூவருடைய சொற்களும் தொக்க (தொக்கவை = ஒத்தவை) தேறப்படும் (மெய்யென்று தெளியப்படும்).

Ita moderari oportet, ut explorator de exploratore nesciat. De qua re tres consentiunt, ea certa est.

590. சிறப்பறியவொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தானாகுமறை (௰)

[அரசன்] ஒற்றனிடத்து சிறப்பை — [பிறர்] அறிய செய்ய வேணடாம்; செய்தால் — மறையை [தானே] புறப்படுத்தினவனாவான்.

In exploratorem honorem (rex) ne conferat aliis consciis; si fecerit, secretum ejus in vulgus efferet.

LX.

ஊக்கமுடைமை. Animi magnitudo.

591. உடையரெனப்படுவதூக்கமஃதில்லா
ருடையதுடையரோமற்று (க)

உடையவர் என்னப்படுவது ஊக்கம் (மனவெழுச்சி) ஆம்; அதில்லாதவர் மற்று (வேறு) உடையது உடையவராவாரோ [ஆகார்]?

Qui animi magnitudinem habet, possessor dicendus est; qui non habet, quod praeterea possidet, num re vera possidet?

592. உள்ளமுடைமையுடைமைபொருளுடைமை
நில்லாது நீங்கிவிடும் (உ)

உள்ளம் (மனவெழுச்சி) உடைமையே உடைமையாம்; பொருளுடைமை நில்லாது நீங்கிவிடும்.

Animi possessio possessio est; bonorum possessio inconstans diffluet.

593. ஆக்கமிழந்தேமென்றல்லாவாரூக்க
மொருவந்தங் கைத்துடையார் (ங)

ஊக்கத்தை கைத்து (கைத்தாக = கைப்பொருளாக) ஒருவர்தம் (உறுதியாய்) உடையவர் — „ஆக்கத்தை இழந்தோம்“ என்று அல்லாவார் (மனம் அலையார்).

„Bonum amisimus“, numquam ita querentur, qui animi magnitudinem firme manibus retinebunt.

594. ஆக்கமதர்வினுய்ச் செல்லுமசைவிலா
வூக்கமுடையானுழை (ச)

அசைவில்லாத ஊக்கத்தை உடையான் உழை (உடையவனிடத்தே) ஆக்கம் (செல்வம்) அதரை (வழியை) வினவி செல்லும்.

Viam exquirens felicitas eum adibit, qui immotam habeat animi magnitudinem.

595. வெள்ளத்தனையமலர் நீட்டமாந்தர்தம்
முள்ளத்தனையதுயர்வு (ரு)

மலரது (நீர்ப்பூத்தாள்களது) நீட்டம (நீளங்கள்) வெள்ளத்து (நீரின்) அனைய (அனவினவாம்); உயர்வு மனிதரது உள்ளத்து அனையது (அனவினதாம்).

Aquae mensuram sequitur longitudo loti; hominis excelsitas ejus (animi) sequitur mensuram.

596. உள்ளுவதெல்லாமுயர்வுள்ளன்மற்றது
தள்ளினுந்தள்ளாமை நீர்த்து (௬)

[அரசன்] உள்ளுவது எல்லாம் தன் உயர்வை உள்ளல் (நினைக்க வேண்டும்); அதை [ஊழ்] தள்ளினாலும் தள்ளாமை (பழிக்கப்படக் கூடாமை) நீர் (குணம்) உடையதாம்.

Omnis mentis cogitatio magnitudinem cogitet. Etsi rejiciatur (impediatur), ea est natura, ut rejici (reprehendi) non possit.

597. சிதைவிடத்தொல்காருரவோர்புதையம்பிற்
பட்டுப்பாடூன்றுங்களிறு (௭)

உரவோர் (மனவெழுச்சியையுடையவர்) சிதைவு [வந்த] இடத்து — ஒல்கார் (தளரார்); களிறு (யானை) புதை (கட்டு) ஆகிய அம்பினாலே [புண்] பட்டு [தளராமல் தன்] பாடு ஊன்றும் [பெருமை நிலை நிறுத்தும்].

Qui magni animi sunt, etiam pereuntes non labant. Elephantus, licet fasce sagittarum feriatur, magnitudinem suam sustinet.

598. உள்ளமிலாதவரெய்தாருலகத்து
வள்ளியமென்னுஞ் செருக்கு (௮)

உள்ளமில்லாதவர் „உலகத்தாருள் வள்ளியம் (வண்மையை உடையேம்“) என்னும் செருக்கை (பெருமையை) எய்தார் (பெறார்).

Qui magni non sunt animi, ad excelsum statum dicendi „In mundo nobiles nos sumus“ non perveniunt.

599. பரியதுகூர்ங்கோட்டதாயினும்யானை
வெரூஉம் புலிதாக்குறின் (௯)

யானை பரியது (பெரிய உடம்பை உடையதும்) கூர்ங்கோட்டது (கூர்மையான கொம்பையுடையதுமானாலும்) — புலி தாக்கு உறின் (தன்னை எதிர்ப்பட்டால்) வெரூஉம் (வெருவும் = அஞ்சும்).

Quamvis magnitudine atque acutis dentibus superior sit elephantus, timidus fiet, si a tigre invadetur.

600. உரமொருவற்குள்ள வெறுக்கை யஃதில்லார்
மரமக்களாதலேவேறு (௰)

ஒருவனுக்கு உரம் உள்ள வெறுக்கை (விழுப்பொருள்) ஆம்; அதனை இல்லாதவர் மரங்கள் ஆவார்; [ஆனால்] வேறு (வேற்றுமை உண்டு அதென்ன வென்றால் மரத்தில் உண்டாம் பயனில்லாத) மக்களாதலே (மனிதவடிவாயிருக்கையே)?

Animi robur internum bonum est. Qui eo carent, arbores! Differunt tamen (ab arboribus) eo, quod sunt homines — (multo minus utiles arboribus, quae ligno fructibusque prosunt).

LXI.

மடியின்மை. Ignavum non esse.

601. குடியென்னுங்குன்றா விளக்கமடியென்னு
மாசூரமாய்ந்து கெடும் (க)

குடியாகிய குன்றாத (மழுங்காத) விளக்கமானது மடி (சோம்பல்) ஆகிய மாசு (இருள்) ஊர (நெருங்க) — மாய்ந்து (மழுங்கி) கெடும்.

Lucerna familiae nondum obscurata exstinguetur, si aer impurus languoris eam circumfundet.

602. மடியைமடியா வொழுகல்குடியைக்
குடியாகவேண்டுபவர் (உ)

குடியை [நல்ல] குடியாக வேண்டுபவர் மடி மடியாக (மடிந்து போக) ஒழுக வேண்டும்.

Qui suam familiam familiam esse velit, ita se gerat, ut desidia decedat.

603. மடிமடிக்கொண்டொழுகும் பேதைபிறந்த
குடிமடியுந்தன்னினுமுந்து (ங)

மடி (கேட்டை தரும்) மடியை [தன்னுள்ளே] கொண்டு ஒழுகும் பேதையர் (அறிவில்லாதவர்) பிறந்த குடி தன்னினும் (அவனினும்) முந்து (முற்பட) மடியும் (கெடும்).

Qui in languescente languore vitam degit, stulti illius familia ante ipsum languore consumetur.

604. குடிமடிந்துகுற்றம் பெருகுமடிமடிந்து
மாண்டவுஞற்றிலவர்க்கு (ச)

மடியிலே மடிந்து [கெடுகையில்] மாண்ட (மாட்சிமைப்பட்ட) உஞற்று (முயற்சி) இல்லாதவர்க்கு — குடி மடிந்து [கெடுகையில்] — குற்றம் பெருகும்.

Qui in languore languescentes ad decus non nituntur, eorum culpa eo major erit, quod etiam familia eorum elanguescet.

605. நெடுநீர்மறவி மடிதுயினான்குங்
கெடுநீரார்காமக்கலன் (ரு)

நெடு நீரும் (தாமதமும்) மறவியும் (மறதியும்) மடியும் துயிலும் [ஆகிய இந்த] நான்கும் கெடும் நீரை (இயல்பினை) உடையவர் காம கலன் (காமத்தோடு எறும் மரக்கலமாம்).

Tarditas, oblivio, languor, segnities: haec quattuor quasi scaphae sunt, (quibus) voluptatis (causa vehuntur) qui ad interitum proni sunt.

606. படியுடையார்பற்றமைந்தக்கண்ணு மடியுடை யார்
மாண்பயனெய்தலரிது (௬)

படியை (பூமியை) உடையவரது பற்று (செல்வம்) அமைந்த (தானே வந்து சேர்ந்த) இடத்தும் மடியுடையவர் மாண் (பெரிய) பயனை எய்தல் (பெறுதல்) அரிது.

Etsi terrarum dominis opes adhaereant, in quos dominationem habet segnities, ii magnam ex iis utilitatem percipere vix poterunt.

607. இடிபுரிந்தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்டவுஞற்றிலவர் (௭)

மடியை புரிந்து (விரும்பி) மாண்ட உஞற்றில்லாதவர் (சிநேகிதர்) இடி புரிந்து (புத்தி சொல்லி) எள்ளும் (இகழும்) சொல்லை கேட்பார்.

Quibus admoneantur et objurgentur, voces audient, qui segnitiei dediti ad decus non nitantur.

608. மடிமைகுடிமைக்கட்டங்கிற்றன் னொன்னார்க்
கடிமைபுகுத்தி விடும் (௮)

மடிமை குடிமையில் தங்கினால் [அது] தன் ஒன்னார்க்கு (பகைவர்க்கு) அடிமை புகுத்தி (அடிமையாக்கி) விடும்.

Si segnities nobilem familiam invaserit, in servitutem hostium eam adducet.

609. குடியாண்மையுள்வந்தகுற்றமொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும் (௯)

ஒருவன் மடியை ஆளுதலை மாற்ற — குடியை ஆளுதலுள் வந்த குற்றம் கெடும்.

Quod in dominationem familiae invasit vitium desinet, si dominatio desidiae ex ea tolletur.

610. மடியிலாமன்னவனெய்துமடியளந்தான்
தாஅயதெல்லாமொருங்கு (௰)

மடியில்லாத மன்னவன் — [தன்] அடியினால் [எல்லாவுலகத்தையும்] அளந்தவன் [ஆகிய கடவுள்] தாஅயது (தாவினது = கடந்தது) [ஆகிய] எல்லாம் ஒருங்கு [ஒருசேர] எய்துவான் (அடைவான்).

Rex a languore vacuus simul omnia assequetur, quae attingebat ille (deus), qui suo pede metiebatur.

LXII.

ஆள்வினையுடைமை. Sollertia.

611. அருமையுடைத்தென்றசாவாமை வேண்டும்
பெருமைமுயற்சிதரும் (க)

[இதை முடித்தல்] அருமையை உடைத்து என்று அசாவாமை (தளராமை) வேண்டும்; முயற்சி பெருமையை தரும்.

Arduum est, ita cogitans, ne despondeas! Magnum est, quod tibi affert industria.

612. வினைக்கண் வினைகெடலோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற்றீர்ந்தன்றுலகு (உ)

வினையினிடத்தே (தொழிலினிடத்தே) வினை (முயற்சி) கெடலை ஓம்பல் (ஒழிய வேண்டும்); உலகம் வினையாகிய குறையை (அவசியத்தை) தீர்ந்தாரின் (செய்யாது விட்டவரினின்றும்) தீர்ந்தன்று (நீங்கிவிட்டது).

Cave, ne opera tua desinat in medio opere; si in opere tuo defeceris, mundus a te deficiet.

613. தாளாண்மையென்னுந் தகைமைக்கட்டங்கிற்
றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு (௩)

வேளாண்மை (ஈகை) என்னும் செருக்கு (மேன்பாடு) தாளாண்மை (முயற்சி) என்னும் தகைமையில் தங்கிற்று.

Apud virtutem assiduae industriae residet decus assiduae beneficentiae.

614. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பே
டிகை
வாளாண்மைபோலக் கெடும் (ச)

தாளாண்மையில்லாதவன் வேளாண்மை — பேடியானவள் கையின் வாள் ஆளுகை போல் — கெடும்.

Beneficentia uti, qui non utatur industria, non minus male vertet, quam androgynum armis uti.

615. இன்பம்விழையான் வினைவிழைவான் றன்
கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந்தூண் (ரு)

இன்பத்தை விழையான் (விரும்பாதவிஞகி) வினையை விழைப

வன் தன் கேளிர்க்கு (சுற்றத்தாருக்கு) துன்பத்தை துடைத்து (ஒழித்து) ஊன்றும் (தாங்கும்) தூணாவான்.

Qui non laetitiam desiderat sed laborem, familiae suae moestitiam tollens, columen erit fulciens.

616. முயற்சிதிருவினை யாக்குமுயற்றின்மை
யின்மைபுகுத்திவிடும் (௬)

முயற்சி செல்வத்தை ஆக்கும் (வளர்க்கும்); முயலாமை இன்மையை (வறுமையை) புகுத்திவிடும் (அடைவித்துவிடும்).

Industria opes parit, industriae inopia inopiam adducit.

617. மடியுளாண்மாமுகடி யென்பமடியிலான்
றாளுளாடாமரையினாள் (௭)

[ஒருவனது) மடியில் உள்ளவள் மாமுகடி (பெரிய மூதேவி) மடியில்லாதவன் தாளிலே (முயற்சியிலே) உள்ளவள் தாமரையினாள் (தாமரையில் தங்கிய இலக்குமி) என்ப (என்பார்கள்).

In desidia dicunt deam infelicitatis apparere; in industria eorum, qui desidia sunt vacui, dea felicitatis vivit.

618. பொறியின்மையார்க்கும் பழியன்றறிவறிந்
தாள்வினையின்மைபழி (௮)

பொறி (செல்வத்தை தருவதாகிய ஊழ்) இல்லாமை யாவர்க்கும் பழி அன்று (அல்ல); அறிவை (அறிய வேண்டுமவைகளை) அறிந்து ஆள்வினை (முயற்சி) இல்லாமையே பழி.

Fortunae favorem deficere nemini vitio est; artem et industriam deficere, vitio est.

619. தெய்வத்தானாகாதெனினுமுயற்சிதன்
மெய்வருத்தக்கூலிதரும் (௯)

தெய்வத்தால் (விதியினால்) ஆகாதாயினும் முயற்சி தன் மெய் (உடம்பு) வருத்தத்தின் கூலியை தரும்.

Etiamsi fato non bene cedat, industria ipsa corporis tui labori mercedem dabit.

620. ஊழையுமுப்பக்கங்காண்பருலைவின்றித்
தாழாதுஞற்றுபவர் (௰)

உலைவு (அலைவு) இல்லாமல் தாழாது உஞற்றுபவர் (முயல்பவர்) ஊழையும் உப்பக்கம் காண்பார் (புறங்காண்பார் = விலக்கிவிடுவார்).

Tergum fati etiam videbunt, qui interriti et immoti assidue laborabunt.

LXIII.

இடுக்கணழியாமை. In rebus adversis non desperare.

621. இடுக்கண்வருங்கானகுகவதனை
யடுத்தூர்வதஃதொப்பதில் (க)

இடுக்கண் (துன்பம்) வருங்கால் (வரும் இடத்து), நகுக (மகிழ வேண்டும்) அதனை அடுத்து ஊர்வது (மென்மேலும் தள்ளுவது) அஃது [அம்மகிழ்சிக்கு] ஒப்பது இல்லை.

Imminente calamitate arride; eam paullatim superare cum illa re comparari non potest.

622. வெள்ளத்தனையவிடும்பையறிவுடையா
னுள்ளத்தினுள்ளக் கெடும் (உ)

வெள்ளத்துக்கு ஒத்த இடும்பை — அறிவுடையவன் உள்ளத்தினால் உள்ள (நினைக்க) — கெடும்.

Dolor fluctui similis dilabetur, ṡimul ac sapiens in mente (doloris veram naturam) meminerit.

623. இடும்பைக்கிடும்பை படுப்பரிடும்பைக்
கிடும்பைப்படாஅதவர் (ங)

இடும்பைக்கு இடும்பை படாவர் (வருந்தாதவர்) இடும்பைக்கு இடும்பை படுப்பார் (படுத்துவார்கள் = உண்டாக்குவார்கள்).

Quibus molestia molesta non est, ii molestiae ipsi molestiam exhibent.

624. மடுத்தவாயெல்லாம் பகடன்னானுற்ற
விடுக்கணிடர்ப்பாடுடைத்து (ச)

மடுத்த (தடைப்பட்ட) வாய் (இடம்) எல்லாம் (பண்டிஇழுக்கும்) பகடு (எருமைக்கடா) அன்னான் (போவிருக்கிறவனை) உற்ற (அடைந்த) இடுக்கண் [தானே] இடர்ப்பாட்டை (துன்பப்படுதலை) உடைத்தாம்.

Male procedet malum, quod eum aggreditur, qui, quacumque difficultate obveniente, bubalo est similis.

625. அடுக்கிவரினுமழிவிலானுற்ற
விடுக்கணிடுக்கட்படும் (ரு)

அடுக்கி (மேலுமேலும்) வந்தாலும் அழிவில்லாதவனை (கலங்காதவனை) அடைந்து இடுக்கண் [தானே] இடுக்கண் படும் (துன்பத்தை படும்).

Qui non fatigentur, apud eos damna ipsa facient damnum, etiamsi alia aliis superveniant.

626. அற்றேமென்றல்லற்படுபவோபெற்றேமென்
றோம்புதறேற்றாதவர் (௬)

பெற்றோம் என்று ஓம்புதலை (பேராசை செய்தலை) தேற்றாதவர் (அறியாதவர்) அற்றோம் என்று அல்லற்படுவாரோ?

Qui non curis se torquent, dicentes: habemus, num dolore affligentur, dicentes: egemus?

627. இலக்கமுடம்பிடும்பைக்கென்றுகலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாமேல் (௭)

மேல் (பெருமையானது) — உடம்பு இடும்பைக்கு இலக்கம் (குறியிடம்) என்று [தெளிந்து] — கலக்கத்தை கையாறாக (துன்பமாக) கொள்ளாதாம்.

„Quem scopum petit calamitas, corpus est"; ita cogitans res adversas in numero malorum non habet excelsus animus.

628. இன்பம்விழையானிடும்பையியல்பென்பான்
றுன்பமுறுதலிலன் (௮)

இன்பத்தை விழையாதவனாகி இடும்பையை இயல்பு என்பவன் துன்பமுறுதலில்லாதவனாவான்.

Qui voluptatem non appetens calamitatem naturalem esse scit, a doloris affectu liber est.

629. இன்பத்துளின்பம்விழையாதான் றுன்பத்துட்
டுன்பமுறுதலிலன் (௯)

இன்பத்தில் இன்பத்தை விழையாதவன் துன்பத்தில் துன்பமுறுதலில்லாதவனாவான்.

Qui in voluptate voluptatis non est appetens, in dolore dolorem non patietur.

630. இன்னாமையின்பமெனக்கொளினாகுந்தன்
னொன்னார்விழையுஞ்சிறப்பு (௰)

[ஒருவன்] இன்னாமையை இன்பமென்று கொள்ளுவானாயின் [அதனால்] தன் ஒன்னார் (பகைவர்) விழையும் சிறப்பு ஆகும் (உண்டாகும்).

Qui res asperas habet pro voluptate, ei gloria obtinget hostibus ipsis expetenda.

LXIV.

அமைச்சு. Ministri officium.

631. கருவியுங்காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையுமாண்டதமைச்சு (க)

[சேனையும் பொருளுமாகிய] கருவிகளும் (சாதனங்களும்) காலமும் செய்கையும் (செய்யும் விதமும்) செய்யும் அரிய வினையும் மாண்டது (மாட்சிமையுள்ளவைகளாயிருத்தல்) — அமைச்சு (மந்திரியின் தொழில்) ஆம்.

Haec eximia esse: instrumenta (i. e. et pecuniam et milites), tempus, modum agendi, raram actionem ipsam, officium ministri est.

632. வன்கண்குடிகாத்தல் கற்றறிதலாள்வினையோ
டைந்துடன் மாண்டதமைச்சு (உ)

வன் கண் (அசைவில்லாமை) குடிகளை காத்தல் கற்று அறிதல் ஆள்வினையோடு — [முன் சொல்லப்பட்ட அங்கங்கள்] ஐந்துடனே — மாண்டது அமைச்சாம்.

Praeter quinque illa etiam haec esse eximia: firmitudinem oculi, subditorum tutelam, sciendi sollertiam, in agendo industriam, ministri est officium.

633. பிரித்தலும்பேணிக்கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லதமைச்சு (௩)

[பகைவரை] பிரித்தலும் [தமரை] பேணிக்கொள்ளுதலும் [தம்மை விட்டு] பிரிந்தவரை பொருத்தலும் (பொருந்தச்செய்தலும்) வல்லது (வல்லவனாயிருத்தல்) அமைச்சாம்.

Dissociare, amicitiam colere, dissociatos reconciliare posse ministri est officium.

634. தெரிதலுந்தேர்ந்து செயலுமொருதலையாச்
சொல்லலும்வல்லதமைச்சு (௪)

தெரிதலும் (ஆராய்தலும்) தேர்ந்து செய்தலும் ஒருதலையாக (உறுதியாக) சொல்லுதலும் வல்லது அமைச்சாம்.

Cognoscere, re cognita agere, non dubitanter loqui posse ministri est officium.

635. அறனறிந்தான்றமைந்த சொல்லானெஞ்ஞா
ன்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித்துணை (௫)

அறங்களை அறிந்து ஆன்று (நிறைந்து) அமைந்த சொல்லையுடையவனாகி எஞ்ஞான்றும் (எந்நாளிலும்) [தொழில் செய்யும்]

திறங்களை அறிந்தவன் தேர்ச்சிக்கு (ஆலோசனைக்கு) துணையா வான்.

Qui est virtutis gnarus, apti sermonis compos, rectae rationis quovis tempore sciens, consiliorum adjutor est.

636. மதிநுட்பநூலோடுடையார்க்கதிநுட்பம்
யாவுளமுன்னிற்பவை (௬)

[இயற்கையாகிய] மதி (புத்தி) நுட்பத்தை நூலோடு உடைய வர்க்கு அதி நுட்பம் (அதிக நுட்பம்); முன் (எதிர்) நிற்பவையா (எவை) உள்ள?

Qui cum ingenii subtilitate conjungat (scientiam) libris (adquisitam), ei summa est subtilitas! Quid est, quod ei resistere possit?

637. செயற்கையறிந்தக்கடைத்துமுலகத்
தியற்கையறிந்து செயல் (௭)

செயற்கையை (செய்யும் திறத்தை) அறிந்த கடைத்தும் (அறிந்த இடத்தும்) உலகத்தினது இயற்கையை (நடையை) அறிந்து செய்ய வேண்டும்.

Etiam qui rationem agendi (ex libris) bene cognovit, debet rem gerere mundi quoque rationem bene habens cognitam.

638. அறிகொன்றறியானெனினுமுறுதி
யுழையிருந்தான் கூறல்கடன் (௮)

[அறிந்து சொல்பவனது] அறிவையும் கொன்று (தள்ளி, தானும்) அறியாதவனுயினும் உறுதிகளை [அரசனுக்கு] கூறல் இழையிருந்தவனது (மந்திரியானவனது) கடனுகும்.

Etiamsi rex aliorum scientiam perimens ipse nihil sciat, qui locum (ministri) tenet, debet eum exhortari.

639. பழுதெண்ணுமந்திரியிற் பக்கத்துட்டெவ்வோ
ரெழுபதுகோடியுறும் (௯)

பக்கத்துள் (பக்கத்திலிருந்து) பழுது எண்ணும் மந்திரியில் [அரசனுக்கு] ஓர் எழுபது கோடி தெவ் (பகைவர்) உறுவார்.

In ministro, qui regi adstans malum meditctur, hostium septuagesies centena millia continentur.

640. முறைப்படச்சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பாடிலாஅதவர் (௰)

திறப்பாடு (முடித்தற்கு ஏற்ற கூறுபாடு) இல்லாதவர் முறைப்பட (முறைமைப்பட) சூழ்ந்தும் (எண்ணியும்) முடிவில்லா வற்றை செய்வார்.

Etiamsi (rem) recte considerent, qui dexteritate carent, facient, quae effectu careant.

LXV.

சொல்வன்மை. Eloquentia.

641. நாநலமென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத்துள்ளதூஉமன்று (க)

நாநலம் என்னும் நலம் [மந்திரிகளுக்கு] உடைமை (செல்வம்) ஆம், அந்நலம் யா (எந்த) நலத்து உள்ளதும் அன்று (நல்லத்துள்ளும் அடங்குவதன்று).

Bonae linguae bonum vera possessio est; in nullo alio bono bonum hoc continetur.

642. ஆக்கமுங்கேடுமதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட்சோர்வு (உ)

ஆக்கமும் கேடும் அதினால் வருதலால் — சொல்லினிடத்து சோர்வை (தவறுதலை) காத்து ஓம்ப வேண்டும்.

Cum ex ea emolumentum et damnum nascantur, orationis negligentiam cavere debet.

643. கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய்க்கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல் (ங)

[நட்பாய்] கேட்டவரை பிணிக்கும் (கட்டும்) தகையை அவாய் (அவாவி = விரும்பி) [பகையாய்] கேளாதவரும் வேட்ப (விரும்ப) மொழிவது சொல்லாம்.

Perfectionis studiosum, quae audientes devinciant, ita dicere, ut etiam non audientes desiderio capiantur, oratio est

644. திறனறிந்துசொல்லுக சொல்லையறனும்
பொருளுமதனினூங்கில் (ச)

திறங்களை அறிந்து சொல்லை சொல்லுக (சொல்ல வேண்டும்) அதனின் ஊங்கு (மேற்பட்ட) அறனும் பொருளும் இல்லை.

(Diversas) conditiones perspiciens verba facere debet; nulla virtus, nullum bonum tam praestans est!

645. சொல்லுகசொல்லைப் பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து (ரு)

[தாம் சொல்ல கருதிய] சொல்லை அச்சொல்லை வெல்லும் சொல் [ஆகிய] பிறிதோர் சொல் இன்மை (இல்லாமையை) அறிந்து சொல்ல வேண்டும்.

Minister sermonem proferat, ubi sciverit, nullum alium esse illum sermonem victurum.

646. வேட்பத்தாஞ்சொல்லிப் பிறர்சொற் பயன்
கோடன்
மாட்சியின் மாசற்றார்கோள் (௬)

பிறர் வேட்ப (விரும்பி கேட்க) தாம் சொல்லி பிறர் சொல்லின் பயனை கோடல் (கொள்ளுதல்) மாட்சியில் மாசற்றவர் கொள்கையாம்.

Ipsos ita verba facere, ut (alii audire) desiderent, et ex verbis aliorum sensum percipere, eorum est proprium, qui in honoribus sine macula versantur.

647. சொலல்வல்லன்சோர்விலனஞ்சானவனை
யிகல்வெல்லல் யார்க்குமரிது (௭)

சொல்லுதல் வல்லவனாகி [ஒன்றிலும்] சோர்வில்லாதவனாகி அஞ்சாதவன் [ஆயிருக்கிற] அவனை இகலில் (மாறுபாட்டில்) வெல்லுதல் எவர்க்கும் அரிது.

Qui dicendi vi praeditus neque oblivioni deditus neque timidus est, eum in certamine (partium) superare omnibus erit difficile.

648. விரைந்துதொழில்கேட்குஞாலநிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் (௮)

நிரந்து (வரிசையாக கோத்து) இனிதாக சொல்லுதலில் வல்லவரை பெற்றால் — ஞாலம் (உலகம்) தொழிலை (சொல்லப்படுங் காரியங்களை) விரைந்து கேட்கும்.

Si rex obtineat, quis ordine (distincte) et suaviter dicere possit, mundus celeriter aures dabit proposito.

649. பலசொல்லக்காமுறுவர் மன்றமாசற்ற
சிலசொல்ல றேற்றாதவர் (௯)

மாசற்றவைகளாகிய சில [சொற்களை] சொல்லுதலை தேற்றாதவர் (அறியாதவர்) பல (பலவானவைகளை) சொல்ல காமுறுவார் (இச்சிப்பார்கள்).

Multa avebunt dicere, qui sine vitio pauca dicere non intelligant.

650. இணருழ்த்துநாறா மலரனையர்கற்ற
துணரவிரித்துரையாதார் (௰)

கற்றதை [பிறர்] உணர விரித்து உரையாதவர் — இணரினிடத்தே (கொத்தினிடத்தே) ஊழ்த்தும் (மலர்ந்திருக்கும்) நாறாத (வாசனை செய்யாத) மலர் அனையர் (போல்வார்).

Flori, qui in fasciculo floret, sed odorem non reddit, similis est, qui quod didicit, edere et perspicue eloqui nescit.

LXVI.

வினைத்தூய்மை. Actionum puritas.

651. துணைநலமாக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந்தரும் (க)

[காட்சி பொருளாகிய] துணையினது நலமானது ஆக்கம் [ஒன்றையே] தரும்; [கருத்துப் பொருளாகிய] வினையினது நலமானது வேண்டியவைகளை எல்லாம் தரும்.

Bonitas (externa) auxilii praebet emolumentum, bonitas (interna) actionis, quaecumque desideras.

652. என்றுமொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றிபயவாவினை (உ)

[தங்களுக்கு] புகழையும் [பிறருக்கு] நன்றியையும் பயவாத (தாராத) வினையை என்றும் (எப்போதும்) ஒருவுதல் (ஒழிதல்) வேண்டும்.

Semper vitandae sunt actiones, quae nec agenti laudem, nec caeteris bonum afferunt.

653. ஓஒதல்வேண்டுமொளிமாழ்குஞ் செய்வினை
யாஅதுமென்னுமவர் (ங)

ஆஅதும் (ஆவோம் = மேலாக கடவோம்) என்பவர் ஒளி (புகழ்) மாழ்கும் (கெடும்) தொழிலை ஓஒதில் (ஒழிதல்) வேண்டும்.

Actiones, quae laudem exstinguunt, omnino vitare debent, quibus aliquid fieri in animo est.

654. இடுக்கட்படினுமிளிவந்த செய்யார்
நடுக்கற்றகாட்சியவர் (ச)

நடுக்கற்ற (அசைவற்ற) காட்சியையுடையவர் — இடுக்கண் (துன்பத்திலே) பட்டாலும் [முன் செய்தவர்க்கு] இளி (இழிவு) வந்தவைகளை செய்யார்.

Sapientes immoti, etiamsi in damnum incidant, nihil facient, quod umquam dedecus afferat.

655. எற்றென்றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமைநன்று (ரு)

[நான் செய்தது] எற்று (எது) என்று [பின் தானே] இரங்குபவைகளை செய்ய வேண்டாம்; செய்வானாயின் — மற்று (இனிமேல்) அன்ன (அப்படிப்பட்டவைகளை) செய்யாமை நல்லது.

Noli umquam facere propter quod tibi querendum sit: (vae) quid (feci)! si tamen feceris, bonum erit non iterum talia facere.

656. ஈன்றாள்பசிகாண்பானாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (௬)

[தன்னை] ஈன்றவளது (தாயினது) பசியை காண்பானாயினும் — சான்றவர் பழிக்கும் வினையை செய்ய வேண்டாம்.

Etiamsi famem matris videris, facinus, quod a sapientibus vituperetur, noli facere.

657. பழிமலைந்தெய்தியவாக்கத்திற் சான்றோர்
கழிநல்குரவேதலை (௭)

பழியை மலைந்து (மேற்கொண்டு) எய்திய (பெற்ற) ஆக்கத்திலும் சான்றவரது கழி (மிகுந்த) நல்குரவே (வறுமை) தலை (உயர்ந்தது).

Summa paupertas sapientis melior est divitiis, quas consequaris in culpam incidens.

658. கடிந்தகடிந்தொரார் செய்தார்க்கவைதா
முடிந்தாலும் பீழைதரும் (௮)

[பெரியோர்] கடிந்தவைகளை (தள்ளியவைகளை) [தாமும்] கடிந்து ஓரார் (ஒழியாதவராக) செய்தவர்க்கு அவைதாம் — [ஒரு வழியால்] முடிந்தாலும் — பீழையை (பீடையை) தரும்.

(A sapientibus) reprehensa neque reprehendere neque evitare, etiamsi bene cedat, dolorem afferet.

659. அழக்கொண்டவெல்லாமழப்போமிழப்பினும்
பிற்பயக்குநற்பாலவை (௯)

[பிறர்] அழ கொண்ட பொருள் எல்லாம் — [தான்] அழ — போம்; நற்பாலவை (நல்ல பாலையுடையவைகள் = நல்ல தொழில்களால் சம்பாதித்த பொருள்கள்) — இழந்தாலும் — பின் பயக்கும் (பயன் கொடுக்கும்).

Quae cum lacrimis (aliorum) assequaris, cum lacrimis (tuis) dilabentur. Bonum juste partum, etsi amittatur, post fructum feret.

660. சலத்தாற்பொருள்செய்தேமார்த்தல்பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇயற்று (௰)

சலத்தால் (தீய தொழில்களால்) பொருளை செய்து (சம்பாதித்து) ஏமார்த்தல் (காப்புச்செய்தல்) பசிய மண்ணின் கலத்துள் நீரை பெய்து (வார்த்து) இரீஇயற்று (இருக்கச்செய்தல் போலும்).

Per nefas pecuniam facere et in tuto collocare, idem est atque in vas ex cruda argilla fictum aquam velle infundere et asservare.

LXVII.

வினைத்திட்பம். Firmitas agendi.

661. வினைத்திட்பமென்பதொருவன்மனத்திட்ப
மற்றைய வெல்லாம்பிற (௧)

வினை [செய்யும் இடத்து] திட்பம் (வலிமை) என்னப்படுவது ஒருவனது மனத்தினது திட்பமாம்; மற்றைய எல்லாம் பிற (திட்பம் அல்ல).

Quae vis agendi dicitur, animi vis est, cetera omnia aliena sunt.

662. ஊறொராலுற்றபினொல்காமையிவ்விரண்டி
னாறென்பராய்ந்தவர்கோள் (௨)

[நீதி நூலை] ஆராய்ந்தவரது கோள் (துணிவு) — ஊறு (இடையூற்றை) ஒரால் (ஒருவுதலும் = ஒழிதலும்) உற்ற பின் ஒல்காமையும் (தளராமையும்) ஆகிய இவ்விரண்டினது ஆறு (வழி) ஆகும்.

Impedimenta evitare, et si adsint, non timide retrocedere, haec duo dicunt esse rationem sapientis ministri propriam.

663. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்
கொட்கி
னெற்றா விழுமந்தரும் (௩)

[செய்ய போகிற தொழிலை பிறர்] கடைசியிலே கொள்ள (உணர) செய்ய தக்கது (தக்கவனாயிருக்கல்) ஆண்மையாகும் இடையிலே கொண்டால் (உணர்ந்தால்) எற்றாத (நீக்கப்படாத) விழுமத்தை) தரும்.

Ita agere, ut (alii) re finita demum animadvertant, est fortiter agere; si jam media re animadvertant, damnum pariet, quod averti nequeat.

664. சொல்லுதல்யார்க்குமெளியவரியவாஞ்
சொல்லியவண்ணஞ் செயல் (௪)

சொல்லுதல் எவர்க்கும் எளியதாகும்; [அதனை] சொல்லிய வண்ணம் (படி) செய்தல் அரியதாம்.

Dicere omnibus est facile, dicta dicto modo facere difficile est.

665. வீறெய்திமாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தியுள்ளப்படும் (௫)

வீறு (சிறப்பை) எய்தி (பெற்று) மாண்டவரது வினைத்திட்பம் வேந்தனிடத்து ஊறு (ஊறுதலை) அடைந்து உள்ளப்படும் (நன்கு மதிக்கப்படும்).

Strenuitas eorum, qui honorem adepti laude excellunt, auctoritate apud principem adepta, aestimabitur.

666. எண்ணியவெண்ணியாங்கெய்துப வெண்ணி
யார்
திண்ணியராகப் பெறின் (௬)

எண்ணியவற்றை எண்ணிய படியே எண்ணினவர் எய்துவார் — திண்ணியராக (வலிமையுடையவராக) பெற்றால்.

Optantes optata ratione optata obtinebunt, si eo pervenerint, ut vi agendi sunt praediti.

667. உருவுகண்டெள்ளாமை வேண்டுமுருள்பெ
ருந்தேர்க்
கச்சாணியன்னாருடைத்து (௭)

உருவு (வடிவை) கண்டு எள்ளாமை (இகழாமை) வேண்டும்; [உலகம்] உருளாநின்ற பெரிய தேர்க்கு அச்சினிடத்தே ஆணி போல் இருக்கிறவர்களை உடையது.

Noli speciem spectans vili pendere. Inveniuntur, qui similes sint clavo in axi magni currus, qui rotis volvitur.

668. கலங்காதுகண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங்கடிந்து செயல் (௮)

[மனம்] கலங்காது கண்ட வினையினிடத்து துளங்காது (அசையாமல்) தூக்கத்தை கடிந்து (ஒழித்து) செய்ய வேண்டும்.

In rebus, quas gerendas esse animo indubio (certo) perspexisti, noli haesitare; omnem desidiam expellens, eas geras.

669. துன்பமுறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம்பயக்கும்வினை (௯)

துன்பம் (வருத்தம்) உற (மிக) வந்தாலும் — இன்பத்தை பயக்கும் வினையை துணிவு ஆற்றி (வலிமையுடையவராய்) செய்ய வேண்டும்.

Negotium, quod suavem ferat fructum, quamvis grave sit, perficias, animum obfirmans.

670. எனைத்திட்பமெய்தியக்கண்ணும் வினைத்திட்
பம்
வேண்டாரை வேண்டாதுலகு (௰)

எந்த திட்பத்தை எய்திய (பெற்ற) இடத்தும் — வினைத்திட்பத்தை வேண்டாதவரை உலகம் வேண்டாது.

Quamcunque obtinuerit vim, qui vim agendi non expetat, eum mundus non expetet.

LXVIII.

வினைசெயல்வகை. Modus agendi.

671. சூழ்ச்சிமுடிவு துணிவெய்தலத்துணிவு
தாழ்ச்சியுட்டங்குதறீது (௧)

சூழ்ச்சிக்கு (ஆலோசனைக்கு) முடியாவது துணிவை எய்தல்; அத்துணிவு [பின்] தாழ்ச்சியுள் (ஆலசியத்தில்) தங்குதல் தீது (குற்றம்).

Consilium capere consultationis finis est, si consilium illud in animo fracto haerebit, malum erit.

672. தூங்குகதூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும்வினை (௨)

தூங்கி (ஆலசியித்து) செயற்பால (செய்யும் பாலை உடையவற்றை) தூங்குக (தூங்கி செய்ய வேண்டும்); தூங்காது செய்யும் வினையை தூங்கற்க (தூங்காது செய்ய வேண்டும்).

Quod lente faciéndum est, in eo lentus sis; quod non lente faciendum est, in eo noli esse lentus.

673. ஒல்லும்வாயெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல் (௩)

ஒல்லும் (கூடும்) வாய் (இடத்து) எல்லாம் வினை [செய்தல்] நல்லது; ஒல்லாது இடத்து செல்லும் வாய் (முடிக்கும் உபாயம்) நோக்கி செய்ய வேண்டும்.

Ubicunque viae patent, (statim) agere praeclarum erit; sin minus, via, qua prospere procedas, investigata agendum tibi est.

674. வினைபகையென்றிரண்டினெச்சநினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும் (௪)

[செய்ய தொடங்கிய] வினையும் [அழிக்க தொடங்கிய] பகையும் என்னப்பட்ட இரண்டினது எச்சமும் (ஒழிவுகளும்) — நினைக்கும் இடத்து — தீயினது எச்சம் போல் தெறும் (கெடுக்கும்).

Quod ex his duobus: negotio et hoste, reliquum sit, si recte consideras, non minus in periculum adducet, quam quod ex igne sit reliquum.

675. பொருள்கருவிகாலம்வினையிடனோடைந்து
மிருடீர வெண்ணிச் செயல் (௫)

பொருளும் கருவியும் (சாதனமும்) காலமும் வினையும் இடனோடு (இடமும்) ஆகிய ஐந்தும் — இருள் (ஐயம்) தீர — எண்ணி செய்ய வேண்டும்.

Si quinque haec: pecuniam, instrumenta, tempus, actionem, locum adeo perspexeris, ut dubium nullum maneat, agendum tibi erit.

676. முடிவுமிடையூறு முற்றியாங்கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல் (௬)

முடிவையும் (முடிதற்கான முயற்சியையும்) இடையூற்றையும் முற்றினால் ஆங்கு எய்தும் பெரும் பயனையும் பார்த்து செய்ய வேண்டும.

Rei gerendae (laborem) et difficultates et gestae magnum emolumentum capiendum considerans eam geras.

677. செய்வினைசெய்வான் செயன்முறையவ்வினை
யுள்ளறிவானுள்ளங்கொளல் (௭)

செய்வினையை செய்பவன் செய்யும் முறைமையாவது அவ்வினையினது உள் (உளப்பாட்டை) அறிபவனது உள்ளத்தை (கருத்தை) கொள்ளுதல் (அறிதல்).

Rectus erit agendi modus, si quis rem velit gerere, sententiam eorum comperire, qui ejus gerendae periti sunt

678. வினையான்வினையாக்கிக் கோடனனைகவுள்
யானையால் யானையார்த்தற்று (௮)

செய்யப்படுகின்ற வினையினாலே [வேறொரு] வினையை ஆக்கிக்கொள்ளுதல் — நனைந்த கவுளை (கபோலத்தை) உடைய யானையினால்(வேறொரு)யானையை ஆர்த்தற்று(கட்டுதல் போலும்).

Negotio (aliud) negotium conficere perinde est ac per elephantum, *madido* tempore praeditum, elephantum capere.

679. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
யொட்டாரை யொட்டிக் கொளல் (௯)

நட்டார்க்கு (நட்பினருக்கு) நல்லவற்றை செய்தலினும் ஒட்டாரை (ஒட்டாதவரை = பகைவரை) ஒட்டிக்கொள்ளுதல் (நட்பினராக்கிக்கொள்ளுதல்) விரைந்ததே (விரைந்து செய்ய தகுவதாம்).

Expedit citius, qui non sunt foedere sociati socios reddere, quam amicis amice facere.

680. உறைசிறியாருண்ணடுங்கலஞ்சிக்குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப்பணிந்து (௰)

உறை (ஆளும் இடம்) சிறியவர் — உள்நடுங்கல் (தமருடைய நடுங்குதலுக்கு) அஞ்சி — குறையை (அந்நிலைக்கு வேண்டிய சந்தியை) பெற்றால் பெரியவரை பணிந்து [அதனை ஏற்றுக் கொள்வார்].

Infirmi suorum timorem timentes, si quod desiderant, inveniant, cupide accipient, firmis se submittentes.

LXIX.

தூது. Legatio.

681. அன்புடைமையான்ற குடிப்பிறத்தல் வேந்த வாம்
பண்புடைமை தூதுரைப்பான்பண்பு (க)
அன்புடையவனுதலும் ஆன்ற (சிறந்த) குடியிலே பிறத்தலும் வேந்து அவாம் (அவாவும் = விரும்பும்) பண்புடையவனு தலும் தூதுரைப்பவனுக்குப் பண்பாம்.
(In suos?) caritas, praeclara nobilitas, indoles, quae regi placeat, ejus est indoles, qui legationem suscipit.

682. அன்பறிவாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றியமையாதமூன்று (உ)
அன்பும் அறிவும் ஆராய்ந்தவற்றை சொல்லும் வலியும் தூதுரைப்பவர்க்கு இன்றியமையாத (அவசியமாக வேண்டிய) மூன்று.
Amore (in regem?), scientia, facultate bene considerata bene eloquendi, his tribus, qui legatione functurus est, carere non potest.

683. நூலாருணூல்வல்லனுகுதல்வேலாருள்
வென்றிவினையுரைப்பான்பண்பு (௩)
வேலோருள் (வேலினையுடையவரிடத்து [தன் அரசனுக்கு] வென்றி (வெற்றியை தருகின்ற) வினை (தொழிலை) உரைப்பவனுக்கு பண்பாவது [நீதி] நூலாருள் (நூலை அறிந்த மந்திரிகளிடத்து தான் அந்த) நூலில் வல்லவன் ஆகுதல் [தான்].
Apud doctos doctrinae peritum fieri est indoles ejus, qui verba tractans inter armatos victoriam obtineat.

684. அறிவுருவாராய்ந்தகல்வியிம்மூன்றின்
செறிவுடையான் செல்கவினைக்கு (௪)
[இயற்கையாகிய] அறிவும் உருவும் ஆராய்ந்த கல்வியும் [என்னும்] இம்மூன்றினது செறிவை (கூட்டத்தை) உடையவன் [தூது] வினைக்கு செல்லலாம்.
Ingenium, forma, scientiae subtilitas, in quo haec tria juncta sunt, is legationem obeat.

685. தொகச்சொல்லித்தூவாத நீக்கிநகச்சொல்லி
நன்றிபயப்பதாந் தூது (௫)
தொகுத்து சொல்லியும் தூ (பகையான) வாதம் (சொற்களை) நீக்கியும் நக (மகிழ) சொல்லியும் நன்றியை பயப்பது தூது [தொழில்] ஆம்.

Breviter loquentem, sermonem odiosum evitantem, gratis utentem verbis, (regi) emolumentum comparare, haec legatio est.

686. கற்றுக்கண்ணஞ்சான் செலச்சொல்லிக் கால்த்தாற்
றக்கதறிவதாந் தூது (௬)

கற்று செல (மனம் கொள்ள) சொல்லி கண்ணஞ் சாதவனுய் காலத்துக்கு தக்கதை அறிவது தூது [தொழில்] ஆம்.

(Necessaria) didicisse atque oculo interrito ita ut capiantur loqui, et quid tempori conveniat, habere cognitum, haec legatio est.

687. கடனறிந்துகாலங்கருதியிடனறிந்
தெண்ணியுரைப்பான்றலை (௭)

கடனை அறிந்து காலத்தை கருதி இடத்தை அறிந்து எண்ணி உரைப்பவன் [தூதில்] தலை [மிக்கவன்].

Qui officii sui gnarus tempus considerans, loci sciens, considerate loquitur, legatorum caput est.

688. தூய்மைதுணைமை துணிவுடைமையிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான்பண்பு (௮)

[அரசன் சொல்லிய] வழியே உரைப்பவனது பண்பாவது தூய்மையும் துணைமையும் துணிவுடைமையும் இம்மூன்றின் (இம்மூன்றனோடு கூடிய) வாய்மையும் (மெய்மையும்) ஆம்.

Morum integritas, sociorum auxilium, animi fortitudo et praeter haec tria veracitas ejus sunt, qui legatione recte fungitur.

689. விடுமாற்றம்வேந்தர்க்குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்கணவன் (௯)

வடுமாற்றம் (பழுதான வார்த்தையை) வாய் சோர்ந்து சொல்லாத வன்கண்ணுடையவன் [தன்அரசன் சொல்லி] விடும் மாற்றத்தை வேந்தர்க்கு உரைப்பான்.

Qui oculo intrepido ne verbum quidem emittit, quod vitiosum sit, is verba regis sui apud reges exponit.

690. இறுதிபயப்பினு மெஞ்சாதிறைவற்
குறுதிபயப்பதாந் தூது (௰)

[தனக்கு] இறுதியை (முடிவை) பயந்தாலும் (தருமானுலும்) — எஞ்சாது இறைவனுக்கு உறுதியை (மிகுதியை) பயப்பது தூது [தொழில்] ஆம்.

Etiamsi ipsi afferat mortem principi afferre salutem, hoc legati munus est.

LXX.

மன்னரைச்சேர்ந்தொழுகல். Quomodo legatus cum regibus versari debeat.

691. அகலாத ணுகாது தீக்காய்வார்போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார் (க)
இகலை (மாறுபடுதலை) உடைய வேந்தரை சேர்ந்து ஒழுகுப வர் அவரை அகலாமலும் அணுகாமலும் (நெருங்காமலும்) தீயில் [குளிர்] காய்பவர் போல்க (போலிருக்க வேண்டும்).
Nec prope nec procul, sed eodem modo, quo ad ignem corpus calefaciunt, cum bellicoso rege versandum est.

692. மன்னர்விழைப விழையாமை மன்னரான்
மன்னியவாக்கந்தரும் (உ)
மன்னவர் விழைப (விரும்புமவற்றை) விழையாமை மன் னரால் மன்னிய (நிலைபெற்ற) ஆக்கத்தை தரும்.
Quae a regibus appetantur, non appetere, per reges ipsos mansuram afferet mercedem.

693. போற்றினரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்குமரிது (ங)
[மந்திரி தம்மை] போற்றினல் [பொறுத்தற்கு] அரியவை [தம்மி டத்தில் வாராமல்] போற்ற வேண்டும்; [அரசன்] கடுத்த (சந்தே கித்த) பின் — தேற்றுதல் (தெளிவித்தல்) யாவருக்கும் அரிது.
Si cavere vis, gravem (culpam) cave. Ubi (rex) dubitaverit, tranquillare omnibus erit difficile.

694. செவிச்சொல்லுஞ்சேர்ந்த நகையுமவித்தொழுக
லான்றபெரியாரகத்து (ச)
ஆன்ற (நிறைந்த) பெரியவர் அகத்து (இடத்து) செவியிலே சொல்லுதலையும் [பிறனோடு] சேர்ந்து நகையும் அவித்து (நீக்கி) ஒழுக வேண்டும்.
In aures insusurrare vel sibi invicem arridere coram viris illustribus evitandum est.

695. எப்பொருளுமோரார் தொடரார்மற் றப்பொ
ருளை
விட்டக்காற் கேட்கமறை (ரு)
யாதொரு பொருளையும் [செவிகொடுத்து] ஓராதவராகியும், தொடராதவராகியும் (முடுகிவினவாதவராகியும்) — அப் பொருளை [அரசனே] விட்டகால் (அடக்காமல் சொன்னல்) — மறையை (இரகசியத்தை) கேட்கலாம்,
Nihil investigans, nihil interrogans, si sponte (illam rem) emittat, secretum audias.

696. குறிப்பறிந்துகாலங்கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச்சொலல் (௬)

குறிப்பை அறிந்து காலத்தை கருதி வெறுப்பில்லாதவற்றையும் வேண்டுமவற்றையும் வேட்ப (விரும்பி கேட்கும் படி) சொல்ல வேண்டும்.

Verba tecta perspiciens et tempus animadvertens, quae odio careant, et quae grata sint, ita dicas, ut grate audiaris.

697. வேட்பனசொல்லி வினையிலவெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லாவிடல் (௭)

[அரசன்] வேட்பவற்றை சொல்லி — வினை (பயன்) இல்லாதவற்றை எந்நாளும் — [தானே] கேட்டாலும் — மந்திரி சொல்ல வேண்டாம்.

Grata dicens futilia noli dicere, etiamsi (rex) aurem praebeat.

698. இளையரினமுறையரென்றிகழார்நின்ற
வொளியோடொழுகப்படும் (௮)

இவர் [எமக்கு] இளையவர் — இனமுறையினர் என்று இகழாதவராகி [அவரிடத்து] நின்ற ஒளியோடு [பொருந்த] ஒழுக (நடக்க) தகும்.

Me natu minor est, consanguineus est, ita dicens, noli regem despicere, sed dignitatem semper illustrem considerans eum eo verseris.

699. கொளப்பட்டேமென்றெண்ணிக்கொள்ளாத
செய்யார்
துளக்கற்றகாட்சியவர் (௯)

துளக்கு (அசைவு) அற்ற காட்சியையுடையவர் அரசனால் கொள்ளப்பட்டேம் (நன்கு மதிக்கப்பட்டோம்) என்று எண்ணி [அவன்] கொள்ளாதவைகளை (விரும்பாதவைகளை) செய்யார்.

Sapientis immoti, quoniam ipsi sibi videantur grati esse, quae ingrata sunt, numquam facient.

700. பழையமெனக்கருதிப்பண்பல்ல செய்யுங்
கெழுதகைமைகேடுதரும (௰)

[அரசனுக்கு] பழையம் (பழைமையோம்) என்று கருதி (நினைத்து) பண்பல்லாதவற்றை செய்யும் கெழுதகைமை (உரிமையானது) கேட்டை தரும்.

Amicitia, quae cogitans: familiaritate ejus utor, indecora faciat, ruinam afferet.

LXXI.

குறிப்பறிதல். Mentem percipere.

701. கூறாமைநோக்கிக் குறிப்பறிவானெஞ்ஞான்று
மாறாநீர்வையக்கணி (க)

[அரசனது] குறிப்பை — [அவன்] கூறாதிருந்தாலும் — [முகத்தை] நோக்கி அறிபவன் எந்நாளும் மாறாத (வற்றாத) நீராலே [சூழப்பட்ட] வையத்துக்கு அணியாவான்.

Qui etsi (rex) nihil voce ostendat, quid intendant, visu perspicit, hic orbi, qui aquis circumfunditur numquam mutatis, ornamento est.

702. ஐயப்படாஅதகத்ததுணர்வானைத்
தெய்வத்தோடொப்பக் கொளல் (உ)

[ஒருவனது] அகத்திலே [நிகழ்வதை] ஐயப்படாது (சந்தேகப்படாமல்) உணர்பவனை தெய்வத்தோடு ஒப்ப (சமானமாக) கொள்ள வேண்டும்.

Qui intima sine dubitatione perspiciat, eum Dei similem existima.

703. குறிப்பிற்குறிப்புணர்வாரையுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல் (ங)

[தமது] குறிப்பினால் பிறர் குறிப்பை (குறித்ததை) உணர்பவரை — உறுப்பினுள் (பொருள் நாடு முதலாகிய அங்கங்களுள்?) யாதொன்றை கொடுத்தும் — [தமக்கு துணையாக] கொள்ள வேண்டும்.

Qui (sua) mente in (aliorum) mentem penetrat, eum, etiamsi membrum (corporis ? an regii status ?) dare opus sit, retineri oportet.

704. குறித்ததுகூறாமைக் கொள்வாரோடேனை
யுறுப்போரனையரால்வேறு (ச)

[ஒருவன்] குறித்ததை [அவன்] கூறாமல் [உணர்ந்து] கொள்பவரோடு ஏனை (ஒழிந்தவர்கள்) — உறுப்பினால் (அவயவத்தால்) ஓரனையர் (ஒருதன்மையுள்ளவர்) — ஆனால் [அறிவால்] வேறு [ஆவார்].

Ab iis, qui etiamsi quis non ostendat, quid intendat, perspiciunt, ceteri diversi sunt, similes (tantum), ad membra.

705. குறிப்பிற்குறிப்புணராவாயினுறுப்பினு
ளென்னபயத்தவோகண் (ரு)

குறிப்பினால் குறிப்பை உணராவாயின் (உணராவிட்டால்) உறுப்பினுள் கண்கள் [வேறே] என்ன பயத்தவோ (பயனை உடையனவோ)?

Nisi quis (sua) mente mentem (aliorum) detegat, quid, quaeso, in membris ejus prodest oculus?

706. அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம் (௬)

[தன்னை] அடுத்ததை காட்டும் பளிங்கினை போல் நெஞ்சத்தில் கடுத்ததை (மிகுந்ததை) முகம் காட்டும்.

Ut speculum repraesentat, quae propinquant, ita vultus repraesentat, quae in animo prominent.

707. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினுங்
காயினுந் தான்முந் துறும் (௭)

முகம் போல் முதுக்குறைந்தது (அறிவு மிகுந்தது) உண்டோ? [உயிரானது] உவந்தாலும் காய்ந்தாலும் (வெறுத்தாலும்) — தான் [அவைகளுக்கு] முந்துறும் (முற்பட்டு நிற்கும்).

Num quid est, quod scientia vultum praestet? Sive quis exsultat sive incenditur (ira) vultus praecedit — (praeconis instar).

708. முகநோக்கி நிற்க அமையும் அகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின் (௮)

அகத்தை நோக்கி உற்றதை உணர்பவரை பெற்றால் — முகத்தை நோக்கி நிற்க — அமையும் (போதும்).

Si inveniuntur, qui animum perspicientes (i. e. mutuus conspectus sufficit, ut alterius mentem alter capiat?) recte intelligunt, vultum intueri satis erit.

709. பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின் (௯)

கண்ணின் வகைமையை உணர்பவரை பெற்றால் பகைமையையும் கேண்மையையும் (நட்பையும்) கண் உரைக்கும்.

Odium et amicitiam oculi loquuntur, si inveniuntur, qui proprietatem oculorum intelligunt.

710. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற (௰)

நுண்ணியம் (நுட்பத்தை உடையோம்) என்றிருக்கிறவர்கள் அளக்கும் கோலானது — காணுமிடத்து — கண் அல்லாமல் பிற (வேறு) இல்லை.

Qui dicunt: „acri sumus judicio“, eorum regula, si diligenter consideras, nil nisi oculus est.

LXXII.

அவையறிதல். Coetum discernere.

711. அவையறிந்தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றொகையறிந்த தூய்மையவர் (௧)

சொல்லின் தொகையை (கூட்டத்தை) அறிந்த தூய்மையையுடையவர் [அப்போதுள்ள] அவை (சபையை) அறிந்து ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

Coetu cognito considerate verba faciat verborum thesaurum habens cognitum vir purus.

712. இடை தெரிந்துநன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்தநன்மையவர் (௨)

சொல்லின் நடையை தெரிந்த நன்மையையுடையவர் இடை (சமையத்தை) தெரிந்து நன்றாய் உணர்ந்து சொல்லவேண்டும்.

Opportunitatem sciens bono judicio verba faciat cursum dicendi sciens vir bonus.

713. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉமில் (௩)

அவையை அறியாதவராகி சொல்லுதலை [தம்] மேற் கொள்பவர் சொல்லின் வகையையும் அறியாதவராவார் [அவருக்கு] வல்லதும் (வலிமையும்) இல்லை.

Qui coetum ignorantes dicere suscipiant, modum dicendi nesciunt; neque quidquam efficiunt.

714. ஒளியார்முன் னொள்ளியராதல் வெளியார்முன்
வான்சுதைவண்ணங் கொளல் (௪)

[அறிவால்] ஒள்ளியாருக்கு முன் ஒள்ளியராக வேண்டும்; வெளியாருக்கு (மூடர்களுக்கு) முன் வான் சுதை வண்ணம் (வெண் சுண்ணச்சாந்து நிறத்தை) கொள்ள வேண்டும்.

Coram splendidis (i. e. doctis) splendidus sis, coram nubilis (i. e. indoctis) nubis colorem induas.

715. நன்றென்றவற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்துகிளவாச் செறிவு (௫)

முதுவருள் (தம்மின் மிகுந்தவருள்) முந்து (முற்பட்டு) கிளவாத (சொல்லாத) செறிவு (அடக்கம்) நன்று என்றவற்றுள்ளும் நல்லதாகும்.

Virtutum omnium optima est reverentia, qua (adductus) inter te superiores ne primus loquere.

716. ஆற்றினிலைதளர்நதற்றேவியன்புல
மேற்றுணர்வார் முன்னரிழுக்கு (௬)

வியன்புலம் (விரிந்த நூல்களை) ஏற்று (உட்கொண்டு) உணர்பவருக்கு முன் [சொல்] இழுக்கு [படுதல்] ஆற்றினின்றும் நிலைதளர்ந்து (வீழ்தல்) போலும்.

Qualis lapsus in via, talis est lapsus coram viris copiosae scientiae.

717. கற்றறிந்தார்கல்விவிளங்குங்கசடறச்
சொற்றெரிதல்வல்லாரகத்து (௭)

கசடு (குற்றம்) அற (இல்லாமல்) சொல் (சொற்களை) தெரிதல் (ஆராய்தலில்) வல்லவரிடத்தே கற்று அறிந்தவரது கல்வி விளங்கும்.

Scientia doctorum coram iis splendet, qui facultatem habent sermonem sine errore dijudicandi.

718. உணர்வதுடையார்முற் சொல்லல்வளர்வதன்
பாத்தியுணீர்சொரிந்தற்று (௮)

உணாவதை (அறிவை) உடையவருக்கு முன் சொல்லுதல் வளர்வதின் (வளர்வதாகிய பயிருள்ள) பாத்தியினுள் நீரை சொரிந்தாற் போலும்.

Coram doctis dicere perinde est ac crescenti segeti aquam infundere.

719. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்கநல்ல
வையு
ணன்கு செலச்சொல்லுவார் (௯)

நல்ல அவையுள் நன்றாய் செல்ல (மனம் கொள்ள) சொல்பவர் புல் (புன்மையுள்ள) அவையுள் — பொச்சாந்தும் (மறந்தும்) சொல்ல வேண்டாம்.

Qui in coetu bonorum bona ita dicat, ut capiantur, in coetu vilium ne per oblivionem quidem dicat.

720. அங்கணத்துளுக்கவமிழ்தற்றாற்றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல் (ω)

தங்கணத்தர் (தம் இனத்தவர்) அல்லாதவருக்கு முன் கோட்டி கொள்ளுதல் (சொல்லுதல்) அங்கணத்துள் (சேற்றினுள்) உக்க (வீழந்த) அமிழ்தற்று (அமிழ்தம்) போலும்.

Coram iis dicere, qui te sint inferiores, idem erit atque ambrosiam in lutum projicere.

LXXIII.

அவையஞ்சாமை. Coetum non timere.

721. வகையறிந்துவல்லவை வாய்சோரார்சொல்லின்
றொகையறிந்த தூய்மையவர் (க)

[சபையின்] வகையை அறிந்து [கற்று] வல்ல அவையில் வாய் சோரார் (பிழைபட சொல்வார்) சொல்லின் தொகையை அறிந்த தூய்மையானவர்கள்.

(Coetus) conditionem perspicientes, numquam ore titubant thesaurum verborum perspicientes viri puri.

722. கற்றருட்கற்றரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச் சொல்லுவார் (உ)

கற்றவரிடத்தே [தாம்] கற்றவைகளை செல்ல [அவர் மனம் கோள்ளும் படி] சொல்லுபவர் கற்றவருள் கற்றவர் என்னப் படுவார்.

Docti dicuntur inter doctos, qui coram doctis, quae edocti sunt, ita dicunt, ut capiantur.

723. பகையகத்துச்சாவாரெளியரரிய
ரவையகத்தஞ்சாதவர் (ங)

பகையினிடத்து சாகவார் (சாகல்லவர்) எளியர் (பலர்); அவையினிடத்து அஞ்சாதவர் அரியர் (சிலர்).

Qui coram hoste velint mori, facile invenies, difficulter, qui coram coetu non timeant.

724. கற்றார்முற்கற்ற செலச்சொல்லித்தாங்கற்ற
மிக்காருண்மிக்க கொளல் (ச)

கற்றவரிடத்து கற்றவைகளை செல்ல சொல்லி தாம் கற்றவைகளினும் மிக்கவைகளை மிக்கவருள் [அறிந்து] கொள்ள வேண்டும்.

Coram doctis quae edoctus es, ita dicens, ut grate accipiatur, a te doctioribus accipe, quae doctrinam tuam superent.

725. ஆற்றினளறிந்துகற்கவவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு (ரு)

அவையில் அஞ்சாமல் மாற்றம் (எதிர் மொழி) கொடுத்தல் பொருட்டு ஆற்றின் (ஆற்றினால் = தக்க வழியாய் = சொலிலக்கண வழியால்?) அளவு (அளவை நூலை) அறிந்து கற்க வேண்டும்.

Discas artem logicam secundum regulam (post regulam grammaticam?) percipiens, ut respondere queas, coetum non timens.

726. வாளோடென்வன்கண்ணரல்லார்க்குநூலோ டென்
னுண்ணவையஞ்சுபவர்க்கு (௬)

வன்கண்ணில்லாதவர்க்கு வாளுடன் என் (என்ன சம்பந்தம் உண்டு) நுண் (நுட்பமுடைய) அவையில் அஞ்சுபவர்க்கு நூலோடு என்?

Qui firmi oculi non sint, quid iis cum gladio est negotii? qui coetum timent, quid iis cum libro?

727. பகையகத்துப்பேடிகையொள்வாளவையகத்
தஞ்சுமவன்கற்றநூல் (௭)

அவையில் அஞ்சுபவன் கற்ற நூல் — பகையில் பேடியின் கையிலிருக்கிற ஒள் [கூர்] வாளை போலும்.

Quod coram hoste est acutus gladius in manu hermaphroditi, idem ejus est scientia, qui coetum timeat.

728. பல்லவைகற்றும் பயமிலரேநல்லவையு
ணன்கு செலச்சொல்லாதார் (௮)

நல்ல அவையுள் நன்கு (நல்லவற்றை) செல்ல சொல்லாதவர் — பல்லவைகற்றும் — பயமில்லாதவரே (பயனில்லாதவரே).

Etiamsi plurima didicerint, inutiles sunt, qui coram bonis bona dicere non possint, ut grate accipiantur.

729. கல்லாதவரிற்கடையென்பகற்றறிந்து
நல்லாரவையஞ்சுவார் (௯)

கற்று அறிந்தும் — நல்லவர் சபைக்கு அஞ்சுபவரை கல்லாதவரினும் கடை (கடையர் = இழிந்தவர்கள்) என்ப (என்பார்கள்).

Eorum, qui nihil didicerunt, ultimi dicentur, qui, quamvis docti sint, bonorum coetum timeant.

730. உளரெனினுமில்லாரோடொப்பர்களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லாதார் (௰)

களன் (சபைக்கு) அஞ்சி [தாம்] கற்றவைகளை செல்ல சொல்லாதவர் — உளர் (உயிரோடிருக்கிறவர்) எனினும் (ஆனாலும்) — இல்லாரோடு (இறந்தவரோடு) ஒப்பர் (ஒப்பார் = ஒப்பாவார்).

Quamvis dicantur vivere, mortuis sunt similes, qui coetum timentes, quae didicerunt, non ita possint dicere, ut grate audiantur.

LXXIV.

நாடு. Territorium.

731. தள்ளாவிளையுளுந்தக்காருந்தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு (க)
தள்ளாத (குன்றாத) விளையுளும் (பிளைவும்) தக்காரும் (அறவோரும்) தாழ்வில்லாத செல்வமுமுடையவரும் சேர்வது (கூடிவாழ்வதே) நாடாம்.
Terra est, ubi fertilitas numquam deficiens, boni viri et divites, quorum pecunia non minuitur, congregantur.

732. பெரும்பொருளாற் பெட்டக்கதாகியருங்கே
ட்டா
லாற்ற விளைவது நாடு (உ)
பெரும் பொருளால் பெட்டக்கதாகி (விரும்ப தக்கதாகி) அரிய கேட்டால் (கேடில்லாமையோடு கூடி) ஆற்ற (மிக) விளைவதே நாடாம்.
Quae propter magna bona desideranda habeatur, et propter raras calamitates largas ferat messes, ea terra est.

733. பொறையொருங்குமேல்வருங்காற்றாங்கியிறை
வற்
கிறையொருங்குநேர்வது நாடு (ந)
பொறை (பாரம்) ஒருங்கு மேல்வரும் கால் (இடத்து) தாங்கி இறைவனுக்கு இறை [முழுதையும்] ஒருங்கு நேர்வதே (சந்தோஷமாக கொடுப்பதே) நாடாம்.
Quae mala, quibus simul opprimatur, sustineat, et regium vectigal simul solvat, ea terra est.

734. உறுபசியுமோவாப்பிணியுஞ் செறுபகையுஞ்
சேராதியல்வது நாடு (ச)
உறு (அதிக) பசியும் ஓவாத (நீங்காத) பிணியும் (வியாதியும்) செறு (அழிவு செய்யும்) பகையும் சேராது இயல்வதே (இனிது நடப்பதே) நாடாம்.
Quae durae fami, non remittenti morbo et hostibus opprimentibus non obnoxia, fortuna prospera utatur, ea terra est.

735. பல்குழுவும்பாழ்செய்யுமுட்பகையும் வேந்
தலைக்குங்
கொல்குறும்புமில்லது நாடு (ரு)
[மாறுபட்டு கூடும்] பல் (பல) குழவும் (கூட்டமும்) பாழாக செய்யும் உட்பகையும் வேந்தனை அலைக்கின்ற கொலை [பொருந்திய] குறும்பும் இல்லாததே நாடாம்.

In qua nullus sit seditiosorum coetus, nullum destruens internum discidium, nullum receptaculum sicariorum regem vexans, ea terra est.

736. கேடறியாக்கெட்டவிடத்தும் வளங்குன்று
நாடென்ப நாட்டிற்றலை (௬)

கேடு அறியாததும் கெட்ட இடத்தும் வளம் குன்றுததுமான நாட்டை [எல்லா] நாடுகளிலும் தலை என்பார்கள்.

Quae nullum damnum sentiat, nec — si in damnum incurrat, opibus deficiat, terra illa terrarum caput dicitur.

737. இருபுனலும்வாய்ந்த மலையும்வருபுனலும்
வல்லரணுநாட்டிற்குறுப்பு (௭)

இருபுனலும் (கீழ்நீரும் மேனீரும்) வாய்ந்த (சேர்ந்த) மலையும் [அதிலிருந்து] வருவதாகிய புனலும் வல்ல அரணும் (நகரியும்) நாட்டினுக்கு உறுப்பாம் (அவயவமாம்).

Duplex aqua, adjacentes montes, aqua (inde) veniens et inexpugnabilis regio, membra sunt, quae terram constituunt.

738. பிணியின்மைசெல்வம் விளைவின்பமேம
மணியென்பநாட்டிற்கிவ்வைந்து (௮)

பிணியில்லாமையும் செல்வமும் [பயிர்] விளையும் இன்பமும் ஏமமும் (காவலும்) இவ்வைந்தினையும நாட்டிற்கு அணியா கும் என்பார்கள்.

Salubritas, salus, laeta sata, suavis vita, securitas, quinque haec terrae ornamenta dicuntur.

739. நாடென்பநாடா வளத்தனநாடல்ல
நாடவளந்தரு நாடு (௯)

நாடா (தேடிவருந்தாத) வளத்தன (வளத்தையுடையவைகளை) நாடுகள் என்பார்கள்; நாட (தேடிவருந்த) வளத்தை தரும் நாடுகள் அல்ல.

Quod etiamsi non quaeras, copias suas porrigat, regnum est, quod non nisi quaeras, eas porrigat, regnum non est.

740. ஆங்கமைவெய்தியக்கண்ணும் பயமின்றே
வேந்தமைவில்லாத நாடு (ய)

வேந்தனோடு அமைவில்லாத (பொருந்துதலில்லாத) நாடானது — ஆங்கு அமைவு எய்திய (மேற்சொல்லிய குணங்களால் எல்லாம் நிறைந்த இடத்தும்) — [அவைகளாலே] பயனில்லா ததாம்.

Quamvis cum omnibus his bonis conjunctum sit, regnum cum rege (mutuo amore) non conjuncto nullum fert fructum.

LXXV.

அரண். Arx.

741. ஆற்றுபவர்க்குமரண்பொருளஞ்சித்தற்
போற்றுபவர்க்கும் பொருள் (க)

அரண் (கோட்டையானது) ஆற்றுபவர்க்கும் (பகைவர் மேல் சேல்பவர்க்கும்) பொருளாகும் (சிறந்ததாகும்); அஞ்சி தன்னையே போற்றுபவர்க்கும் (காக்க விரும்புகிறவர்களுக்கும்) பொருளாகும்.

Qui aliquid agere velint, iis arx est praesidio; qui timide se tegere velint, iis est etiam praesidio.

742. மணிநீருமண்ணுமலையுமணிநிழற்
காடுமுடையதரண் (உ)

அரணானது மணி [போல் நிறத்தையுடைய] நீரும் மண்ணும் (வெளிநிலமும்) மலையும் அணி (அழகிய) நிழலை [உடைய] காடும் உடையதே ஆம்.

Quae aquam habeat gemmae similem, nudam planitiem, montem et nemus pulchram umbram praebens, ea arx est.

743. உயர்வகலந்திண்மையருமையிந்நான்கி
னமைவரணென்றுரைக்குநூல் (ங)

உயர்வும் அகலமும் திண்மையும் [சேர்தற்கு] அருமையும் [ஆகிய] இந்நான்கினது அமைவை (நிறைவை) அரண் என்று நூல் உரைக்கும்.

Altitudinis, amplitudinis, firmitatis et (adeundi) difficultatis: horum quattuor copiam scientia arcem dicit.

744. சிறுகாப்பிற்பேரிடத்ததாகியுறுபகை
யூக்கமழிப்பதரண் (ச)

அரணானது சிறுகாப்பின் (காக்க வேண்டும் இடம் சிறிதாய்) பேரிடத்ததாகி (பரந்த இடத்தை உடையதாய்) உறு (தன்னை சூழ்ந்த) பகைவரது ஊக்கத்தை (மனவெழுச்சி) அழிப்பதேயாம்.

Quae defensionis parum indigens amplum spatium possidens animos hostium frangat, ea arx est.

745. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த்தாகியகத்தார்
நிலைக்கெளிதாநீரதரண் (ரு)

அரணானது [புறத்தோராலே] கொள்ளுதற்கு அரிதாய் [உட்] கொண்ட கூழை (உணவை) உடையதாகி அகத்தாரது [போர்] நிலைக்கு எளிதாம் நீரை (குணத்தை) உடையதேயாம்.

Quae eam conditionem habeat, ut expugnatio sit difficilis, commeatu abundans et iis, qui intus sunt, facile reddat consistere, ea arx est

746. எல்லாப்பொருளுமுடைத்தாயிடத்துதவு
நல்லாளுடையதரண் (௬)

அரணானது எல்லாப்பொருள்களையும் உடையதாகி [தோற்பு வரும்] இடத்து உதவும் நல்லாட்களையும் உடையதாம்.

Quae necessariis omnibus instructa milites habeat, qui opportune auxilium praebeant, ea arx est.

747. முற்றியுமுற்றாதெறிந்துமறைப்படுத்தும்
பற்றற்கரியதரண் (௭)

அரணானது — முற்றியும் (சூழ்ந்தும்) முற்றாது எறிந்தும் [கீழ்] அறை படுத்தும் (பெற்றும்) பற்றுதற்கு அரியதேயாம்.

Quae, sive eam circumveniant, sive non circumvenientes oppugnent, sive suffodiant, difficilis sit expugnatu, ea arx est.

748. முற்றாற்றிமுற்றிய வரையும்பற்றாற்றிப்
பற்றியார் வெல்வதரண் (௮)

அரணானது முற்று (சூழ்தல்) ஆற்றி (வல்லவராகி) முற்றின வரையும் (வந்து சூழ்ந்தவரையும்) [தன்னை] பற்றினவர் பற்று ஆற்றி (பற்றிய இடம் விடாதே நின்று) வெல்வதேயாம்.

Talis sit arx, ut defensores in defendendo perseverantes etiam obsessores in obsidendo perseverantes devincant.

749. முனைமுகத்துமாற்றலர்சாய வினைமுகத்து
வீறெய்திமாண்டதரண் (௯)

அரணானது — முனை முகத்து (போர் தொடங்கின அளவிலே) மாற்றலர் (பகைவர்) சாய [உள்ளிடத்தோர்] வினைமுகத்து (தொழிலை பற்றி) வீறு (பெருமையை) எய்தி மாண்டதே (மாட்சிபட்டதேயாம்).

Quae (defensorum) intuens praestantiam ea gloria ornata est, ut hostis pugnam intuens animum despondeat, ea arx est.

750. எனைமாட்சித்தாகியக்கண்ணும் வினைமாட்சி
யில்லார்கணில்லதரண் (௰)

அரணானது எனை (எந்த) மாட்சியை உடைத்தாகிய கண்ணும் (இடத்தும்) — வினை மாட்சி இல்லார்கண் (இல்லாதவரிடத்து) [அதெல்லாம்] இல்லது (இல்லதாம்).

Arx, quamcumque habet laudem, nihil est in manu eorum, qui operis praestantiam non habent.

LXXVI.

பொருள்செயல்வகை. Aerarii augendi modus.

751. பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லதில்லை பொருள் (௧)

[ஒரு] பொருள் அல்லவரை (அல்லாதவரை பொருளாக மதிக்கப்படாதவரை) பொருளாக செய்யும் பொருளை அல்லது (அல்லாமல்) பொருள் இல்லை.

Nihil habet, qui id non habet, quo magni habentur, qui pro nihilo habentur.

752. இல்லாரை யெல்லாருமெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர்சிறப்பு (௨)

[பொருள்] இல்லாதவரை எல்லாரும் எள்ளுவார் (இகழ்வார்); செல்வரை எல்லாரும் சிறப்பு செய்வார் (புகழ்வார்).

Qui nihil habent, eos omnes pro nihilo habebunt; qui divites fiunt, ab omnibus magni fient.

753. பொருளென்னும்பொய்யா விளக்கமிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று (௩)

பொருள் என்னும் பொய்யாத (கெடாத) விளக்கம் எண்ணிய (நினைத்த) தேசத்தில் சென்று (பகை என்னும்) இருளை அறுக்கும்.

Splendor divitiarum numquam deficiens ad quodcumque (regi) lubet regnum perveniens, tenebras (odii) expellet.

754. அறனீனுமின்பமுமீனுந்திறனறிந்து
தீதின்றிவந்த பொருள் (௪)

[சம்பாதிக்கும்] திறத்தை அறிந்து தீது இல்லாமல் வந்த பொருள் அறத்தையும் ஈனும் (உண்டாக்கும்) இன்பத்தையும் ஈனும்.

Quod quis justam viam sciens, sine injuria comparat bonum, virtutem pariet, voluptatem pariet.

755. அருளொடுமன்பொடும்வாராப் பொருளாக்கம்
புல்லார்புரளவிடல் (௫)

அருளோடும் அன்போடும் வாராத பொருள் ஆக்கத்தை [அரசர்] புல்லாதவர் (பொருந்தாதவராகி) புரளவிட (தள்ளிப்போட) வேண்டும்.

Quaestum divitiarum, qui sine benignitate et amore veniat, nos non amplecti oportet, sed abjicere.

756. உறுபொருளுமுல்குபொருளுந்தன்னொன்னார்த்
தெறுபொருளும்வேந்தன் பொருள் (௬)

உறு [உடையவர் இல்லாமையால் தானே வந்த] பொருளும் உல்கு (சுங்கமாகிய) பொருளும் தன் ஒன்னாரை (பகைவரை) தெறும் (அழித்து திறையாக கொள்ளும்) பொருளும் வேந்தன் பொருளாம்.

Quae sponte obtingunt bona, quae vectigalibus colliguntur bona, quae hosti adimuntur bona, bona regia sunt.

757. அருளென்னுமன்பீன்குழவிபொருளென்னுஞ்
செல்வச் செவிலியாலுண்டு (௭)

அன்பு ஈனும் அருள் என்னும் குழவி (குழந்தை) பொருள் என்னும் செல்வத்தையுடைய செவிலியால் (வளர்க்குந்தாயால்) உண்டு (வளரும்).

Filia ex amore nata, quae dicitur benignitas, vivit per divite millam nutricem, quae pecunia dicitur (sine pecunia nulla beneficientia!).

758. குன்றேறியானைப்போர்கண்டற்றாற்றன்கைத்
தொன்
றுண்டாகச் செய்வான்வினை (௮)

தன் கைத்து (கையது) ஆகிய [பொருள்] ஒன்று உண்டாக (உண்டாயிருக்க) செய்பவனது வினை — குன்று [மேல்] ஏறி [நின்று] யானைகளது போரை கண்டற்று (காணுதல் போலும்).

Negotium ejus, qui pecunia, quae in manu est, utitur, perinde habet, ac si quis ex loco edito elephantos pugnare videat. (Divitiae sine labore acquiruntur).

759. செய்கபொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற்கூரியதில் (௯)

பொருளை செய்ய வேண்டும்! [அது] செறுநரது (பகைவரது) செருக்கை அறுக்கும் எஃகு (ஆயுதம்) ஆம்: அதனின் கூரியது இல்லை.

Pecuniam facias. Culter est, qui superbiam hostium praecidat. Nihil eo acutius!

760. ஒண்பொருள்காழ்ப்பவியற்றியார்க்கெண்
பொரு
ளேனையிரண்டுமொருங்கு (௰)

ஒள் (நல்ல வழியால் வரும்) பொருள் காழ்ப்ப (மிகவதிகமாக) இயற்றினவர்க்கு (உண்டாக்கினவர்க்கு) எனை இரண்டும் (மற்றை அறமும் இன்பமும்) ஒருங்கு எளிய பொருள்களாம்.

Qui pulchra bona affatim cumularint, iis reliqua duo (virtus et voluptas) sunt bona, quae facile acquiruntur.

LXXVII.

படைமாட்சி. Exercitus excellentia.

761. உறுப்பமைந்தூறஞ்சா வெல்படைவேந்தன்
வெறுக்கையுளெல்லாந்தலை (க)

[யானை முதலாகிய] உறுப்புகள் அமைந்து (பொருந்தி) — [போரிலே] ஊறு (ஊற்றுக்கு = காயம்படுதலுக்கு) அஞ்சாது வெல்லும் படையானது வேந்தனது வெறுக்கையுள் (செல்வத்தில்) எல்லாம் தலை.

Exercitus, qui membris rite compositus, vulnera non timens, hostem superat, inter omnia regis bona pulcherrimum est.

762. உலைவிடத்தூறஞ்சாவன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக்கல்லாலரிது (உ)

[தான்] தொலைவு (சிறிதாகிய) இடத்தும் — உலைவிடத்திலே (அழிவு வந்தால்) ஊற்றுக்கு அஞ்சாதவன் கண் (சௌரியமானது) தொல் (பழைய) படைக்கு அல்லால் (அல்லாமல்) அரிது.

Oculum firmum, qui in caede non tremat, etiam in paucitate, praeter milites veteranos, in ceteris non facile invenies.

763. ஒலித்தக்காலென்னுமுவரி யெலிப்பகை
நாகமுயிர்ப்பக் கெடும் (ங)

உவரி (கடல் போல் இருக்கிற) எலிப்பகை (எலிகளாகிய பகை) ஒலித்த (இரைந்த) கால் (இடத்து) என்னும்? நாகம் உயிர்ப்ப (மூச்சு எறிய) கெடும்.

Si murium exercitus hostilis strepitu suo mare aequat, quid faciet? Simulac coluber sibilum ediderit, interibit.

764. அழிவின்றறைபோகாதாகிவழிவந்த
வன்கணதுவேபடை (ச)

படையானது அழிவு இல்லாமல் [பகைவரால்] அறைபோகாததாகி (கீழறுக்கப்படாததாகி) வழி வந்த (பழமையாக வந்த) வன்கண் (சௌரியம்) உடையதே.

Qui neque deleri neque subrui se patiatur et expertae sit audaciae — exercitus est.

765. கூற்றுடன்றுமேல்வரினுங் கூடியெதிர்நிற்கு
மாற்றலதுவேபடை (ரு)

படையானது — கூற்றவன் உடன்று (கோபித்து) மேல் வந்தாலும் — கூடி எதிர் நிற்கும் ஆற்றலையுடையதேயாம்.

Qui, etiamsi ipse deus mortis iratus invadat, tamen se conglobare et resistere audeat, exercitus est.

766. மறமானமாண்ட வழிச்செலவுதேற்ற
மெனநான்கேயேமம் படைக்கு (௬)

மறமும் (சௌரியமும்) மானமும் மாண்ட வழியிலே செல்லு தலும் தேற்றமும் (நம்பிக்கையும்) என இந்நான்குமே படைக்கு ஏமம் (அரணும்).

Virtus, honestas, incessus in via laudis, fiducia, haec quatuor exercitui sunt praesidio.

767. தார்தாங்கிச்செல்வதுதானைதலைவந்த
போர்தாங்குந்தன்மையறிந்து (௭)

தானை (சேனையாவது) தலை வந்த (தன் மேல் வந்த) போரை தாங்கும் (விலக்கும்) தன்மையை (வகையை) அறிந்து [பகை வரது] தாரை (தூசிப்படையை) தாங்கி [தான் அதன் மேலே) செல்வதேயாம்.

Qui pugnam in se irruentem sustinendi modum bene sciens (primam) aciem sustinens ipse irruat, — exercitus est.

768. அடற்றகையுமாற்றலுமில்லெனினுந்தானை
படைத்தகையாற்பாடு பெறும் (௮)

தானை — அடல் தகையும் (சென்று போர் செய்யும் சௌரியமும்) ஆற்றலும் (வந்த பகைவரை பொறுக்கும் வலிமையும்) இல்லையாயினும் — படைத்தகையால் (தக்க தோற்ற பொலிவாலே) பாடு (பெருமையை) தரும்.

Exercitus, quamvis neque ad invadendum sit idoneus, neque vim habeat resistendi, apparatu idoneo, laudem consequi poterit.

769. சிறுமையுஞ்செல்லாத்துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும்படை (௯)

சிறுமையும் செல்லாத (நீங்காத) துனியும் (அச்சமும்) வறுமையும் இல்லையாயின் படை வெல்லும்.

Cui desint imbecillitas, pavor, qui abire nequeat, et inopia, is exercitus vincet.

770. நிலைமக்கள்சாலவுடைத்தெனினுந்தானை
தலைமக்களில்வழியில் (௰)

நிலையையுடைய மக்களை (வீரரை) சால (மிக) உடையதாயினும் — தலை மக்கள் (தனக்கு தலைவராகிய வீரர்) இல்வழி (இல்லாதவிடத்து) தானை இல்லை.

Quamvis viris abundet, qui loco suo non cedant, si desit dux, exercitus nullus est

LXXVIII.

படைச்செருக்கு. Animus militaris.

771. என்னைமுன்னில்லன்மின்றெவ்விர்பலரென்னை
முன்னின்றுகன்னினறவர் (க)

தெவ்விர் (பகைவரே) என் ஐ (தலைவன்) முன் நில்லன்மின் (நில்லாதேயுங்கள்)! என் ஐ முன் நின்று [இறந்து பின்] கல்லிலே நின்றவர் பலர்!

Ante ducem meum ne consistatis, hostes! Multi ante ducem meum consistebant et nunc consistunt e lapide (exsculpti).

772. கானமுயலெய்தவம்பினில்யானை
பிழைத்தவேலேந்தலினிது (உ)

கானத்தில் [ஓடுகின்ற] முயலை எய்த அம்பினில் (அம்பினை எந்தலில்) யானையை [எறிந்து] பிழைத்த (தப்பிய) வேலை எந்தல் (தாங்குதல்) இனிது.

Dulcius est, jaculum gerere, quod elephantum frustra petat, quam sagittam, quae lepus silvae feriat.

773. பேராண்மையென்பதறுகணொன்றுற்றக்கா
லூராண்மைமற்றதனெஃகு (ஙு)

தறுகண் (மறம்) பேராண்மையாகும்; ஒன்று உற்ற கால் (பகைவர்க்கு ஒரு தாழ்வு வந்த போது) ஊராண்மை (உபகாரியாம் தன்மை) அதற்கு எஃகு (கூர்மையாகும்) என்பார்கள்.

Virtutem bellicam dicunt ferociam, in victum hostem humanitas fastigium ejus est.

774. கைவேல்களிற்றொடுபோக்கிவருபவன்
மெய்வேல்பறியாநகும் (ச)

[தன்] கை [ப்படையாகிய) வேலை, களிற்றொடு (யானையோடு) போக்கி [எறிந்து விட்டு] வருபவன் (திரிபவன்) — மெய்யில் [இருந்த] வேலை [கண்டு] பறித்து நகுவான் (மகிழ்வான்).

Qui pergit quae in manu habet jacula in elephantum effundere, corpori suo jaculum eripiens ridebit.

775. விழித்தகண்வேல்கொண்டெறியவழித்திமைப்பி
னோட்டன்றோவன்கணவர்க்கு (ரு)

[சௌரியமாக] விழித்த (கோபித்துப்பார்த்த) கண் — [பகைவர்] வேலை கொண்டு எறிய — [பயத்தினால் அப்பார்வையை] அழித்து இமைக்குமாயின் [அது] வன்கண்ணுடையவர்க்கு (வீரர்க்கு) ஓட்டன்றோ (தோற்பல்லவா?)

Si intrepidus oculus in ictu jaculi (intrepiditatem) perdens nictetur, nonne hoc viro firmi oculi detrimento est?

776. விழுப்புண்படாதநாளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன்னாளை யெடுத்து (௬)

தன் நாட்களை எடுத்து [எண்ணி] விழுப்புண் (சிறந்த காயம்) படாத நாட்கள் எல்லாம வழுக்கினுள் (பயன் படாது கழிந்த நாட்களுள்) வைப்பான்.

Dies suos numerans omnes eos dies in perditis ponet, quibus vulnus honoris ei non obtigerit.

777. சுழலுமிசைவேண்டிவேண்டாவுயிரார்
கழல்யாப்புக்காரிகைநீர்த்து (௭)

[பூமியை] சுழலும் இசையை (புகழை) வேண்டி உயிர் [வாழ்தலை] வேண்டாதவர் [ஆகிய வீரருடைய] கழல்யாப்பு (கட்டுதல்) காரிகை (அலங்கார) நீர்த்து (நீரை உடையதாம்).

Qui laudem, quae terram cingat, non vitam cupiant, iis annulus, qui pedem cingit, pulchrum decus est.

778. உறினுயிரஞ்சாமறவரிறைவன்
செறினுஞ்சீர்குன்றலிலர் (௮)

[மோசம்] உறின் (உண்டானால்) உயிர் [பொருட்டு] அஞ்சாத மறவர் — இறைவன் (அரசன்) செறினும் (கோபித்தாலும்) சீர் (வீரம்) குன்றுதல் இல்லாதவராவார்.

Viri fortes, qui, cum instat (periculum), vitae non timent, etiamsi a rege reprimantur, in via gloriae non opprimuntur.

779. இழைத்ததிகவாமைச்சாவாரையாரே
பிழைத்ததொறுக்கிற்பவர் (௯)

[தாம்] இழைத்தது (செய்ய தொடங்கினது) இகவாமை (தப்பாமல் பொருட்டு) சாவாரை (சாக வல்லவரை) „பிழைத்தது“ [என்று] ஒறுக்கிற்பவர் (இகழ்பவர்) யாவர்?

Qui moriatur, ne propositum perdat, quis eum reprehendere possit (dicens): proposito excidit.

780. புரந்தார்கண்ணீர்மல்கச்சாகிற்பிற்சாக்கா
டிரந்துகோட்டக்கதுடைத்து (௰)

புரந்தார் (அரசரது) கண்கள் நீர் மல்க (பெருக) சாகிற்பின் (செத்தால்) — சாக்காடு (அச்சாவு) — இரந்து [ஆயினும்] கோள் தக்கது (கொள்ளும் தகுதியை) உடையது.

Ita mori, ut rex lacrimas effundat, etiamsi precibus impetrandum sit, desiderari debet.

LXXIX.

நட்பு. Amicitia.

781. செயற்கரியயாவுள நட்பினது போல்
வினைக்கரியயாவுளகாப்பு (௧)

நட்பு போல் செய்தற்கு (சம்பாதித்ததற்கு) அரிய (அரியவை) யா (எவைகள்) உள (இருக்கின்றன)? அது போல் [பகைவரது] வினைக்கு அரிய காப்பு (காவலானவை) யா உள?

Nihil tam difficili paritur negotio quam amicitia. Nulla arx hosti tam difficile negotium parit.

782. நிறைநீரநீரவர் கேண்மைபிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு (௨)

நீரவர் (நீருள்ளவரது = நல்லவர்களது) கேண்மைகள் பிறை [போல்] நிறையும் நீர (நீரையுடையனவாம்); பேதையாரது நட்புகள் [நிறைந்த] மதி (சந்திரன்) போல் பின்னே [குறையும்] நீரையுடையனவாம்.

Amicitia virorum bonae indolis ut luna nova indolem habet crescendi, amicitia virorum stultorum ut luna plena indolem habet decrescendi.

783. நவிறொறுநூனயம் போலும் பயிறொறும்
பண்புடையாளர் தொடர்பு (௩)

பண்புடையாளர் (நற்குணமுடையவர்) தொடர்பு (நட்பு) பயிலும் (பழகும்) தோறும் [பழகுபவருக்கு இன்பம் செய்தல்] நூல் நவிலும் (கற்கும்) தோறும் [கற்பவர்க்கு] நயம் [செய்தல்] போலும்.

Ut scientia (sapientibus), quoties tractant, voluptati est, ita etiam viris bonis amicitia, quoties colunt.

784. நகுதற்பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென்றிடித்தற் பொருட்டு (௪)

நட்டல் (நட்பு செய்தல்) நகுதல் பொருட்டு அல்ல; மிகுதிகண் (ஆகாதவற்றை செய்யும் இடத்து) மேல் சென்று இடித்தல் (கண்டித்தல்) பொருட்டு.

Non ad ridendum fit amicitia, sed ad invehendum et objurgandum, si vitium inciderit.

785. புணர்ச்சிபழகுதல் வேண்டாவுணர்ச்சிதா
னட்பாங்கிழமைதரும் (௫)

புணர்ச்சியும் (ஓர் இடத்து இருத்தலும்) பழகுதலும் வேண்டாம்: உணர்ச்சி [ஒத்த அறிவு] தான் நட்பாகும் கிழமையை (உரிமையை) தரும்.

Uno loco esse et frequenter convenire ad amicitiam non opus est; mentis aequalitas amicitia fit et familiaritatem affert.

786. முக நக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு (௬)

முகம் [மாத்திரம்] நக (மலர) நட்பது — நட்பு அல்ல; நெசத்தின் அகம் (உள்ளம்) நக நட்பது — நட்பாம்.

Ita amare, ut vultus rideat, non est amicitia; ita amare, ut intimus animus rideat, amicitia est.

787. அழிவினவைநீக்கி யாறுய்த்தழிவின்க
ணல்லலுழப்பதாநட்பு (௭)

நட்பாவது, அழிவினவை (அழிவை தருகிறவைகளை) நீக்கி [நல்ல] ஆறு (ஆற்றிலே) உய்த்து (நடத்தி) அழிவின் கண் (இடத்து) அல்லல் (அத்துன்பத்தை) உழப்பதாம் (உடனிருந்து அநுபவிப்பதேயாம்).

Quae damnum afferant, prohibere, in (rectam) viam reducere, et dolorem cum amico (fortiter) ferre, amicitia est.

788. உடுக்கையிழந்தவன் கைபோலவாங்கே
யிடுக்கண்களைவதாநட்பு (௮)

நட்பாவது உடுக்கை (ஆடை) இழந்தவனது (குலைந்தவனது) கை போல் ஆங்கே இடுக்கண் (துன்பத்தை) களைவதாம் (நீக்குவதாம்).

Ad instar manus illius, cui vestis delabitur, malum quodcumque illico prohibere, amicitia est.

789. நட்பிற்குவீற்றிருக்கையாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வாயூன்றுநிலை (௯)

நட்பிற்கு வீற்றிருக்கை (அரசிருக்கை) யாது என்றால் கொட்பு (வேறுபடுவது) இன்றி (இல்லாமல்) ஒல்லும் (கூடும்) வாய் (இடத்தெல்லாம்) ஊன்றும் (தளராமல் தாங்கும்) நிலை (திண்மை).

Quae est amicitiae firma regia sedes? Status ille firmus, in quo sine ulla mutatione quovis modo sustentatur.

790. இனையரிவரெமக்கின்னம்யாமென்று
புனையினும் புல்லென்னுநட்பு (௰)

இவர் எமக்கு (எங்களுக்கு) இனையர் (இவ்வளவன்பினர்) யாம் (நாங்கள்) இன்னம் (இவ்வளவன்பினேம்) என்று [ஒருவரை ஒருவர்] புனைந்தாலும் (சிறப்பித்தாலும்) — புல் என்னும் நட்பாகும்.

Quantumvis (se invicem) laudent: ille mihi tanti est; ego illi sum tanti — amicitia tamen nihili esse potest.

LXXX.

நட்பாராய்தல். In amicis eligendis cautum esse.

791. *நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்*
வீடில்லை நட்பாள்பவர்க்கு (க)

நாடாது (ஆராயாது) நட்டலின் (சினேகித்தல் போல்) கேடு இல்லை; நட்பாள்பவர்க்கு (சினேகிப்பவர்க்கு) — நட்டபின் — விடுதல் இல்லை.

Nihil tam perniciosum est, quam rebus non quaesitis amicitiam jungere; (nam) post junctam amicitiam iis, qui amicitiam colunt, nulla separatio est.

792. *ஆய்ந்தாய்ந்துகொள்ளாதான்கேண்மைகடைமுறை*
தான்சாந்துயரந்தரும் (உ)

ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதவன் [செய்த] கேண்மை [நட்பு] கடைமுறை (கடைசியில்) தான் சாகும் துயரத்தை தரும்.

Commercium ejus, quem non explorans et iterum explorans (amicum) delegerit, mortiferam molestiam afferet.

793. *குணனுங்குடிமையுங் குற்றமுங்குன்றா*
வினனுமறிந்தியாக்கநட்பு (ந)

குணத்தையும் குடிப்பிறப்பையும் குற்றத்தையும் குன்றா (குறைவற்ற) இனத்தையும் அறிந்து நட்பு (சினேகம்) ஆக்க (செய்ய வேண்டும்).

Postquam indolem, genus, vitia, cognationem macula carentem cognoveris, amicitiam facias.

794. *குடிப்பிறந்துதன் கட்பழிநாணுவானைக்*
கொடுத்துங் கொளல்வேண்டுநட்பு (ச)

[உயர்ந்த] குடியின் பிறந்து தன் கண் (தன்னிடத்து) பழிக்கு நாணுபவனை — [விலை] கொடுத்தும் — நட்பாக கொள்ள வேண்டும்.

Qui nobili familia ortus culpam metuat, eum, etiamsi (pretium) dare opus sit, amicum facias.

795. *அழச்சொல்லியல்லதிடித்துவழக்கறிய*
வல்லார்நட்பாய்ந்து கொளல் (ரு)

[நீதி] அல்லதை [செய்ய நினைத்தால்] அழும் வகை சொல்லியும் அல்லதை [செய்தலின்] இடித்தும் வழக்கை (உலக நடையை) அறிய வல்லவரை ஆய்ந்து நட்பு கொள்ள வேண்டும்.

Qui lacrimas movens et in injuriam increpans, quae cum more conveniant, possit exponere, eligens amicum facias.

796. கேட்டினுமுண்டோருறுதிகிளைஞரை
நீட்டியளப்பதோர்கோல் (௬)

கேட்டினிடத்தும் ஓர் உறுதி (நன்மை) உண்டு; [அதென்ன வென்றால்] கிளைஞரை (நட்பாகிய நிலத்தை) நீட்டி (குறையாமல்) அளப்பதாகிய ஒரு கோலாம்.

In ipsa fortuna adversa bonum continetur. Regula est, ad quam propinquos recte dimetiri possis.

797. ஊதியமென்பதொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇவிடல் (௭)

ஒருவனுக்கு ஊதியம் என்னப்படுவது பேதையார் கேண்மையை ஒருவி (ஒழிந்து) விடுதல்.

Amicitiam stultorum perdere, lucrum vocandum est.

798. உள்ளற்கவுள்ளஞ்சிறுகுவகொள்ளற்க
வல்லற்கணாற்றறுப்பார்நட்பு (௮)

உள்ளம் (மனம்) சிறுகுவ (சுருங்குதற்கு ஏதுவாகிய காரியங்களை) உள்ளற்க (உள்ள வேண்டாம்); அல்லற்கண் (அல்லவிடத்து) ஆற்றறுப்பவரது (வலியழிப்பவரது) நட்பை கொள்ளற்க (கொள்ள வேண்டாம்).

Noli in animo habere, quibus animo cadas. Noli cum iis amicitiam jungcre, qui in dolore tibi fulcro non sunt.

799. கெடுங்காலைக்கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினுமுள்ளஞ்சுடும் (௯)

கெடும் காலத்தில் கைவிடுபவர் கேண்மை — [கூற்றுவன்] அடும் (கொல்லும்) போது உள்ளினும் — உள்ளத்தை சுடும்.

Amicitia eorum, qui tempore calamitatis te dcstituant, etiamsi tempore mortis ejus reminiscaris, animum tuum uret.

800. மருவுகமாசற்றார் கேண்மையொன்றீந்து
மொருவுக வொப்பிலார்நட்பு (௰)

மாசற்றவரது கேண்மையை மருவுக (பொருந்த வேண்டும்); [உலகத்தோடு]ஒப்பு(ஒத்தல்)இல்லாதவரது நட்பை — ஒன்றை ஈந்தும் (கொடுத்தும்) — ஒருவுக (விட வேண்டும்).

Amicitiam eorum, qui culpa carent, firmitcr amplectaris; ab usu eorum, qui moribus carcnt, etiamsi quid dare opus sit, te sejungas.

LXXXI.

பழைமை. Familiaritas.

801. பழைமையெனப்படுவதியாதெனின் யாதுங்
கிழமையைக்கீழ்ந்திடாநட்பு (க)

பழைமை என்னப்படுவது யாது என்றால் [அது] கிழமையை (உரிமையாலே செய்தவைகளை) யாதும் (சிறிதாயினும்) — கீழ்ந்திடாத (சிதைக்காமல் உடன் படும்) நட்பாம்.

Familiaritas quid est? Amicitia, quae actiones familiares ne minimum quidem impediat.

802. நட்பிற்குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல்சான்றோர்கடன் (உ)

நட்பிற்கு உறுப்பாவது (அவயவமாவது) கெழுதகைமை (உரிமை); அதற்கு உப்பு (இனிமையர்) ஆதல் சான்றோர்க்கு கடன்.

Amicitiae membrum (necessarium) est familiaritas. Ei condimento fieri sapientum est officium. (Familiaritas sapiens amici veluti cibus est, quem sapiens — simili familiaritate — condire debet).

803. பழகியநட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங்கமையாக்கடை (ரு)

கெழுதகைமைக்கு (உரிமையினாலே செய்தவைகளுக்கு) செய்து ஆங்கு (தாம் செய்தவைகளை போல்) அமையா (அமையாத = உடன்படாத) கடை (இடத்து) பழகிய நட்பு எவன் (என்ன பயனை) செய்யும்.

Vetus familiaritas quid proderit, nisi quis iis, quae familiariter fiant, consentiat, quasi fecisset ipse.

804. விழைதகையான்வேண்டியிருப்பர் கெழுதகை
யாற்
கேளாதுநட்டார் செயின் (சு)

நட்பினர் கெழுதகையால் [தம்மை] கேளாது செய்தால் — [அது] விழை (விழையப்படும்) தகையால் (தன்மை பற்றி) அதனை வேண்டியிருப்பார்.

Si amici cum familiaritate agant, non quaerentes, hoc quia per se gratum est, grate accipietur.

805. பேதைமையொன்றோ பெருங்கிழமை யென்
றுணர்க
நோதக்கநட்டார் செயின் (ரு)

நோ (நோக) தக்க (தக்கவைகளை) நட்பினர் செய்தால் — [அதற்கு காரணம் ஊழால் வரும்] பேதைமை ஒன்றோ; பெரிய கிழ

மையுமாம் (ஊழால் என்னல் வரக்கடவது ஒற்றுமை மிகுதி பற்றி அவரால் வந்தது?) என்று உணர வேண்டும்.
Unum est stultitia; vel etiam magnae familiaritati tribuas, si amicus quid fecerit, quod dolorem afferat.

806. எல்லைக்கணின்ருர் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்கணின்ருர் தொடர்பு (சா)

[நட்பின்] எல்லையிலே (வரம்பிலே) நின்றவர் [தம்மோடு] தொல்லையில் (பழைமையில்) நின்றவரது தொடர்பை — [அவரா லே] தொலைவு [வந்த] இடத்தும் — துறவார் (விடார்).
Qui intra limites (amicitiae) consistant, etiam cum suo periculo eos non deserunt, qui in veteri familiaritate consistant.

807. அழிவந்தசெய்யினுமன்பருரன்பின்
வழிவந்த கேண்மையவர் (எ)

அன்பின் (அன்புடனே) வழி வந்த (பழைமையாக வந்த) கேண்மையையுடையவர் — [நட்பினர்] அழிவு வந்தவைகளை செய்தாலும் — அன்பு அருர் (நீங்கார்).
Etiamsi amici quid fecerint, unde damnum veniat, amorem non deserent, qui amicitiam habeant — cui in amore vetustas venerit.

808. கேளிழுக்கங்கேளாக்கெழுதகைமைவல்லார்க்கு
நாளிழக்கநட்டார் செயின் (அ)

கேள் [நட்பினர்] இழுக்கத்தை [பிறர் சொன்னலும்] கேளாத கெழுதகைமையை [அறிய] வல்லவர்க்கு — நட்பினர் இழுக்கத்தை செய்தால் — [அது நல்ல] நாளாம்.
Qui familiaritatis sunt compotes, quae delictum familiaris ne audire quidem velit, iis, si amicus deliquerit, dies (festus) est.

809. கெடாஅவழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர்விழையுமுலகு (கூ)

கெடாது வழி வந்த கேண்மையையுடையவரது கேண்மையை விடாதவரை உலகு விழையும் (விரும்பும்).
Eorum mundus est cupidus, qui amicitiam eorum non abjiciant, qui amicitiam habeant longo tempore spectatam.

810. விழையார்விழையப்படுப்பழையார்கட்
பண்பிற்றலைப்பிரியாதார் (ய)

பழையார் கண் (பழைய நட்பினரிடத்து) [தம்] பண்பின் தலைப்பிரியாதவர் (நீங்காதவர்) விழையார் (பகைவராலும்) விழையப்படுப (விழையப்படுவார்).
Etiam malevoli eum volunt, qui erga veteres amicos a vetere bonitate non discedat.

LXXXII.

தீநட்பு. Amicitia cum malis.

811. பருகுவார்போலினும் பண்பிலார்கேண்மை
பெருகலிற்குன்றலினிது (௧)

[ஆசை மிகுதியால்] பருகுபவர் (உண்பவர்) போன்றவராயினும் — பண்பில்லாதவரது கேண்மை பெருகலினும் (வளர்தலினும்) குன்றல் (குறைதல்) இனிது.

Etsi videantur (tui esse cupidi quasi) haurire te (velint), melius est amicitiam malorum decrescere quam crescere.

812. உறினட்டறினொரூஉமொப்பிலார்கேண்மை
பெறினுமிழப்பினுமென் (௨)

[பயன்] உறின் (உண்டானால்) நட்டு (சினேகித்து), [அது] அறின் [இல்லாதிருந்தால்] ஒரூஉம் (ஒருவும் = ஒழியும்) ஒப்பில்லாதவரது கேண்மையை பெற்றாலும் [என்ன] இழந்தாலும் என்ன?

Amicitiam eorum, qui (ad alios) sese non conformant, si quid redundet, tibi amici sint, si nihil, recedant, quid refert, utrum obtineas an perdas?

813. உறுவதுசீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங்கள்வருநேர் (௩)

[நட்பினால்] உறுவதை (வரும் பிரயோசனத்தை) சீர் தூக்கும் நட்பினரும் [கொடுப்பாரை கொள்ளாமல்] பெறுவதை (கொடுப்பதை) கொள்வாரும் (கொள்ளும் பரத்தையரும்) கள்வரும் [தம்முள்] நேர் (ஒப்பாவார்).

Amicitiae, quae, quid redundet, ponderat, (amica) quae pretium quodcumque accipit, et latro inter se aequales sunt.

814. அமரகத்தாற்றறுக்குங்கல்லாமாவன்னார்
தமரிற்றனிமைதலை (௪)

அமரிடத்து (போரில்) ஆற்றறுக்கும் (தள்ளிவிட்டுப்போகின்ற) கல்லாத மா (குதிரை) அன்னார் (போல்பவராகிய) தமரின் தனிமை (தனியாதலே) தலை.

Praestat solum esse quam amicum habere, non instituto equo similem, qui in media pugna te destituit.

815. செய்தேமஞ்சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலினெய்தாமைநன்று (௫)

ஏமம் செய்து (செய்தாலும்) சாராத (நிலைநில்லாத) சிறியவரது புன் கேண்மையை எய்தலின் (பெறுதலின்) எய்தாமை நன்று.

Praestat non obtinere, quam obtinere miseram amicitiam vilium illorum, qui a defensione, quam susceperint, desistant.

816. பேதைபெருங்கெழீஇ நட்பினறிவுடையா
ரேதின்மை கோடியுறும் (௬)

பேதையரது பெருங் கெழீஇ (மிக நெருங்கிய) நட்பின் (நட்பை பார்க்கிலும்) அறிவுடையவரது எதின்மை (பகைமை) கோடி உறும் (கோடி பங்கு நல்லது).

Decies centies millies odium sapientium melius est stultorum summa amicitia.

817. நகைவகையராகிய நட்பிற்பகைவராற்
பத்தடுத்த கோடியுறும் (௭)

நகுதல் வகையர் [ஆதற்கு எது] ஆகிய நட்பால் [வருபவைகளின்] பகைவரால் [வருபவை] பத்து அடுத்த கோடி உறும் (பத்து கோடு மடங்கு நல்லவையாம்).

Decies centies millies majora ab hostibus, quam ex amicitia eorum, qui (tantummodo) risum moveant.

818. ஒல்லுங்கருமமுடற்றுபவர்கேண்மை
சொல்லாடார் சோரவிடல் (௮)

ஒல்லும் (கூடும்) கருமத்தை உடற்றுபவர் (வெறுப்போடு செய்பவரது) கேண்மையை — சொல்லாடாதவராகி — சோர விட வேண்டும்.

Amicitiam eorum, qui quod facere possunt, aegre faciant, dimittas, ne verbum quidem mittens.

819. கனவினுமின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறுபட்டார் தொடர்பு (௯)

வினை வேறு சொல் வேறு பட்டவரது தொடர்பு கனவினும் இன்னாது.

Usus eorum, quorum alia sunt verba, alia opera, vel in somnio acerbus est.

820. எனைத்துங்குறுகுதலோம்பன்மனைக்கெழீஇ
மன்றிற்பழிப்பார் தொடர்பு (௰)

மனையில் (வீட்டில்) கெழீஇ (நட்பாடி) மன்றில் (புறத்தில்) பழிப்பவரது தொடர்பு — எனைத்தும் (எவ்வளவு சிறிதாயினும்) — தம்மை குறுகுதல் (சேர்தலை) ஓம்பல் (ஓம்ப வேண்டும்).

Eorum amicitiam ne minimum quidem patiaris ad te accedere, qui domi amice se gerant, foris tibi detrahant.

LXXXIII.

கூடாநட்பு. Amicitia simulata.

821. சீரிடங்காணினெறிதற்குப்பட்டடை
நேராநிரந்தவர் நட்பு (க)

[அகத்தில்] நேரா (உடன்படாமல்) [புறத்தில்] நிரந்தவரது (கலந்தவரது) நட்பு — சீர் (வாய்க்கும்) இடத்தை கண்டால் — எறிதற்கு (தாக்குதற்கு) பட்டடையாகும்.

Amicitia eorum, qui (amore) non conjuncti se adjungant, si occasio se ostendat, incus erit, in qua tundatur.

822. இனம்போன்றினமல்லார் கேண்மைமகளிர்
மனம்போல வேறுபடும் (உ)

இனம் போன்று இனமல்லாதவரது கேண்மை மகளீரது மனம் போல் வேறுபடும்.

Familiaritas eorum, qui amicis similes amicitia careant, ut mens mulierum mutabitur.

823. பலநல்லகற்றக்கடைத்து மனநல்ல
ராகுதன்மாணார்க்கரிது (ங)

பல நல்ல [நூல்களை] கற்ற கடைத்தும் (இடத்தும்) மனநல்லவராகுதல் மாணார்க்கு (பகைவர்க்கு) அரிது.

Quamvis multa didicerint bona, bonam consequi voluntatem inimici vix poterunt.

824. முகத்தினினியர்நகாஅவகத்தின்னா
வஞ்சரையஞ்சப்படும் (ச)

முகத்தின் (முகத்தால்) இனிய இனிமையுள்ளவராக நகா [நின்று] அகத்தால் இன்னா (இனியராகாத) வஞ்சகரை அஞ்சல் வேண்டும்.

Qui in vultu dulcem risum ostendant, sed intus amarum tegant odium, timendi sunt.

825. மனத்தினமையாதவரையெனைத்தொன்றுஞ்
சொல்லினாற்றேறற்பாற்றன்று (ரு)

மனத்தால் [தம்மோடு] அமையாதவரை எனைத்து ஒன்றும் (யாதொன்றிலும்) சொல்லினால் தேறல் (தெளிதல்) பாற்று அன்று (முறைமையுடையது அல்ல).

Qui intus tecum non conjuncti sint, eorum verbis vel minimum confidere, non justum est.

826. நட்டார்போனல்லவை சொல்லினுமொட்டார்சொ
லொல்லையுணரப்படும் (௬)

நட்பினர் போல் நல்லவற்றை சொன்னாலும் — ஒட்டார் (பகைவர்) சொல் ஒல்லை (விரைவிலே) உணரப்படும்.

Quamvis ut amici bona loquantur verba, verba hostium statim dignoscuntur.

827. சொல்வணக்கமொன்னார்கட் கொள்ளற்கவில்வணக்கந்
தீங்குகுறித்தமையான் (௭)

வில்லினது வணக்கம் தீங்கை குறித்தமையான் (குறித்ததினால்) சொல்லால் [மாத்திரம் தோன்றும்] ஒன்னார் கண் (பகைவரிடத்து) வணக்கத்தை [ஏற்றுக்] கொள்ள வேண்டாம்.

Inclinationem oratione (tantummodo conspicuam) in hostibus noli accipere; quia inclinatio arcus malum spectat.

828. தொழுதகையுள்ளும்படையொடுங்குமொன்னா
ரழுதகண்ணீருமனைத்து (௮)

தொழுத (கும்பிட்ட) கையுள்ளும் படை ஒடுங்கும் (மறைந்திருக்கும்); ஒன்னார் அழுத கண்ணீரும் அனைத்து (அப்படியே).

Etiam in manibus ad subjectionem significandam sublatis telum occultatur: lacrimae hostium similes sunt.

829. மிகச்செய்துதம்மெள்ளுவாரைநகச்செய்து
நட்பினுட்சாப்புல்லற்பாற்று (௯)

[புறத்திலே நட்பினர் போல்] மிக செய்து [உள்ளே] தம்மை எள்ளுபவரை — [அவர்] நக (மகிழ) செய்து — நட்பினுள் சாக புல்லல் (சேர்தல்) பாற்று (நீதியாகும்).

Qui, quamvis (amicitiae specie) multa faciant, te contemnant, in eos grata faciens, eos debes omni utens amicitia complectendo necare.

830. பகைநட்பாங்காலம் வருங்கான்முகநட்
டகநட்பொரீஇவிடல் (௰)

பகை நட்பாகும் காலம் வரும் கால் [தாமும்] முகத்தால் நட்டு அகத்தால் நட்பை ஒரீஇ (ஒருவி = நீங்கி) விட வேண்டும்.

Quando venerit tempus, quo hostes amice faciant, tunc et tu in vulta amicus, in animo amicitiam a te removeas.

LXXXIV.

பேதைமை. Insipientia.

831. பேதைமையென்பதொன்றியாதெனினேதங்
கொண்
டூதியம்போகவிடல் (க)

பேதைமை என்பது ஒன்று [அது] யாதென்றால், ஏதம் (தோற்பு தருமவைகளை) கொண்டு (கைக்கொண்டு) ஊதியம் (ஆக்கம் தருமவைகளை) போக விடுதல்.

Unicum quid est, quod stultitia dicitur; quidnam? Damnum amplectentem lucrum rejicere.

832. பேதைமையுளெல்லாம் பேதைமைகாதன்மை
கையல்லதன்கட் செயல் (உ)

பேதைமை எல்லாவற்றுள்ளும் [மிகுந்த] பேதைமையாவது கை (ஒழுக்கம்) அல்லதின் கண் (அல்லாததிலே) காதன்மையை (ஆசையை) செய்தல்.

Stultitia est omni stultitia major vita flagitiosa voluptatem sectari.

833. நாணாமைநாடாமைநாரின்மையாதொன்றும்
பேணாமைபேதைதொழில் (ங)

நாணாமையும் [நாட வேண்டுமவைகளை] நாடாமையும் நாரின்மையும் (அன்பில்லாமையும்) யாதொன்றையும் பேணாமையும் பேதை (மூடனது) தொழில்கள் ஆம்.

Nullum pudorem habere, nullum finem sequi, nulla uti comitate, nihil curare, stultorum est negotium.

834. ஓதியுணர்ந்தும்பிறர்க்குரைத்துந்தானடங்காப்
பேதையிற்பேதையாரில் (ச)

[அடங்குதற்கு ஏதுவாகிய நூல்களை] ஓதியும் உணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தான் அடங்காத பேதையர் போல் பேதையர் இல்லை.

Insipientium omnium nemo est insipientior quam is, qui sapientiam didicerit, intelligat, aliis exponat, et tamen se ipsum non coërceat.

835. ஒருமைச்செயலாற்றும்பேதையெழுமையுந்
தான்புக்கழுந்துமளறு (ரு)

பேதை (மூடனவன்) எழுமையிலும் (வரும்பிறவிகளில்) தான்புக்கு அழுந்தும் அளறு (நாகத்தை) ஒருமையிலே (இவ்வொரு பிறப்புள்ளே) செயல் ஆற்றும் (சம்பாதித்துக்கொள்ள வல்லவனாவான்).

Stultus capax est in una vita sibi infernum comparare, in quod per (omnes) septem vitas demergatur.

836. பொய்படுமொன்றோபுனைபூணுங்கையறியாப்
பேதைவினைமேற்கொளின் (௬)

கை (செய்யும் முறைமை) அறியாத மூடன் வினையை மேற் கொண்டால் — பொய்படும் [அது] ஒன்றோ; [அன்றியும் அவன்] புனை (தளை) பூணும் (பூணுவான்).

Si quis, quamvis aliquid perficere non intelligat, opus suscipiat, non modo non succedet, sed et ipse laqueos sibi injiciet.

837. ஏதிலாராரத்தமர்பசிப்பர்பேதை
பெருஞ்செல்வமுற்றக்கடை (௭)

மூடன் பெரிய செல்வத்தை உற்ற (அடைந்த) கடை (இடத்து) — ஏதிலார் (பிறர்) ஆர (நிறைய) தமர் (சுற்றத்தார்) பசிப்பார்.

Alieni replebunt (ventrem), sui famem patientur, si stultus divitias obtineat.

838. மையலொருவன்களித்தற்றாற்பேதைதன்
கையொன்றுடைமைபெறின் (௮)

மூடன் தன் கையில் ஒன்றை உடைமையாக பெற்றால் — மையல் (மயக்கமான) ஒருவன் [கள்ளுண்டு] களித்தற்று (களித்தல் போலும்).

Si stulto aliquid pecuniae in manum venerit, perinde est, ac si mente captus vino inebrietur.

839. பெரிதினிதுபேதையார்கேண்மைபிரிவின்கட்
பீழைதருவதொன்றில் (௯)

பேதையரது கேண்மை பெரிது (மிகவும்) இனிது! பிரிவினிடத்து பீழை (துன்பத்தை) தருவதாகிய ஒன்று இல்லை.

Dulcissima est amicitia stultorum. Nihil est, quod in discessu maestitiam afferat.

840. கழாஅக்கால்பள்ளியுள்வைத்தற்றாற்சான்றோர்
குழாஅத்துப்பேதைபுகல் (௰)

சான்றோர் குழாஅத்து (சபையினிடத்து) மூடன் புகுதல் கழுவாத காலை பள்ளியுள் (சயனத்தின் மேல்) வைத்தற்று (வைத்தல் போலும்).

Si insipiens coetum sapientum intret, perinde est ac si quis in peristromate illoto pedem ponat.

LXXXV.

புல்லறிவாண்மை. Inscitia.

841. அறிவின்மையின்மையுளின்மை பிறிதின்மை
யின்மையாவையாதுலகு (க)

இல்லாமையுள் [மிகுந்த] இல்லாமையாவது அறிவில்லாமை; பிறிது (பொருள்) இல்லாமையை உலகு இல்லாமையாக வை யாது (கொள்ளாது).

Scientiae defectus inter defectus defectus est; ceterarum rerum defectum mundus defectum non existimat.

842. அறிவிலானெஞ்சுவந்தீதல்பிறிதியாது
மில்லைபெறுவான்றவம் (உ)

அறிவில்லாதவன் — நெஞ்சு உவந்து (மகிழ்ந்து) — ஈதல் (ஈதலுக்கு காரணம்) பெறுகின்றவனது தவமே, பிறிதியாதும் (வேறொன்றும்) இல்லை.

Si inscius animo laetans largiatur, accipientis meritum (castimonia comparatum) est, nihil aliud.

843. அறிவிலார்தாந்தம்மைப்பீழிக்கும்பீழை
செறுவார்க்குஞ் செய்தலரிது (ங)

அறிவில்லாதவர் தாமே தங்களை பீழிக்கும (வருத்தும்) பீழை யை செறுவார்க்கும் (பகைவர்க்கும்) செய்தல் அரிதாம்.

Cruciatum, quo inscii semet ipsi cruciant, vix ipsi hostes poterunt efficere.

844. வெண்மையெனப்படுவதியாதெனி னொண்மை
யுடையம்யாமென்னுஞ் செருக்கு (ச)

வெண்மை (புல்லறிவு) என்னப்படுவது யாதென்றால் — ஒண்மை (அறிவு) உடையம் (உடையோம்) யாம் (நாம்) என் னும் செருக்கு (மயக்கம்).

Quae est stupiditas? Arrogantia, qua quis dicat: sapientiam nos possidemus.

845. கல்லாதமேற்கொண்டொழுகல்கசடற
வல்லதூஉமையந்தரும் (ரு)

கல்லாதவற்றை மேற் கொண்டு ஒழுகல் கசடு (குற்றம்) அறவ ல்லதும் (கற்றவைற்றை) ஐயந்தரும் (சந்தேகப்படுத்தும்).

In iis versari, quae non didiceris, dubitandi locum dabit etiam de iis, quorum sine errore compos sis.

846. அற்றமறைத்தலோ புல்லறிவுதம்வயிற்
குற்றமறையாவழி (௬)

தம் வயின் (தம்மிடத்து உண்டான) குற்றத்தை மறையாத இடத்து — அற்றம் (மறைக்க தக்க அவயவத்தை) மறைத்தலே புல்லறிவாகும் (அற்ப அறிவாகும்).

Quaenam inscitia, ubi culpam suam non tegat, verenda tegere!

847. அருமறைசோருமறிவிலான் செய்யும்
பெருமிறைதானேதனக்கு (௭)

[உபதேசப்பொருளாகிய?] அரிய மறையை [பெற்றாலும்] சோரும் (உட்கொள்ளாது போக்கும்) அறிவில்லாதவன் தானே தனக்கு பெரும் இறை (வருத்தத்தை) செய்வான்.

Inscius, qui rarum secretum (eruditionis?) effutiat, ipse sibi magnam molestiam afferet.

848. ஏவவுஞ்செய்கலான்றான்றேறானவ்வுயிர்
போஒமளவுமோர்நோய் (௮)

[அறிவுடையவர்] ஏவவும (உறுதி சொல்லவும்) செய்கலான் (செய்யான்) — தான் (தானாக) தேறான் (அறியான்) அந்த உயிர் போகும் அளவும் [எல்லாருக்கும்] ஒரு நோய் [ஆம்].

Quamvis admonitus non facit, ipse nescit — dum anima illa discedet, (vera) pestis erit.

849. காணாதாற்காட்டுவான்றான்காணான்காணாதான்
கண்டானாந்தான்கண்டவாறு (௯)

காணாதவனை (புல்லறிவுடையவனை) காட்டுபவன் (அறிவிப்பவன்) தான் காணாதவனாயிருப்பான்; காணாதவன் தான் கண்ட (அறிந்த) ஆறு (படி) கண்டவனாயிருப்பான்.

Qui efficere vult, ut non videns videat, ipse non videns est; non videns (semper) videns erit eo modo quo vidit.

850. உலகத்தாருண்டென்பதில்லென்பான்வையத்
தலகையாவைக்கப்படும் (௰)

உலகத்தார் உண்டு என்னப்படுகிறவைகளை இல்லை என்று சொல்பவன் வையத்தில் அலகையாக (பேயாக) வைக்கப்படுவான்.

Qui neget, quae mundus affirmet in mundo daemon habebitur.

LXXXVI.

இகல். Animus hostilis.

851. இகலென்பவெல்லாவுயிர்க்கும்பகலென்னும்
பண்பின்மைபாரிக்கு நோய் (க)

எல்லா உயிர்களுக்கும் பகுதல் (பிரிதல்) என்னும் பண்பின்மை (தீய குணத்தை) பாரிக்கும் (உண்டாக்கும்) நோயை இகல் (மாறுபாடு) என்ப (என்பார்கள்).

Animum aversum dicunt morbum, qui in animantibus omnibus monstrum discidii pariat.

852. பகல்கருதிப்பற்ரு செயினுமிகல்கருதி
யின்ஞசெய்யாமைதலை (உ)

பகுதலை கருதி பற்ரு (பொருந்தாதவற்றை) [ஒருவன்] செய்தாலும் — இகல் (மாறுபடுதலை) கருதி இன்ஞததை செய்யாமை தலை.

Etiamsi quis discidium cogitans odiosa faciat, ne (ipse) odium cogitans mala facias, praecipue (tibi cavendum est).

853. இகலென்னுமெவ்வநோய்நீக்கிற்றவலில்லாத்
தாவில்விளக்கந்தரும் (௩)

[ஒருவன்] இகல் என்னும் எவ்வ (துன்பத்தை செய்யும்) நோயை [தன் மனத்தினின்று] நீக்கிஞல் — தவலில்லாத (குறைவில்லாத) தாவு (கேடு) இல்லாத விளக்கத்தை (புகழை) தரும்.

Si odii molestum morbum expellas, laudem tibi pariet macula carentem, fine carentem.

854. இன்பத்துளின்பம்பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட்டுன்பங் கெடின் (௪)

இகல் என்னும் [எல்லா] துன்பத்துள் [மிகுந்த] துன்பமானது கெட்டால் — [எல்லா] இன்பத்துள் [மிகுந்த] இன்பத்தை பயக்கும் (உண்டாக்கும்).

Gaudium pariet omni gaudio majus, si moriatur malum omni malo majus — odium.

855. இகலெதிர்சாய்ந்தொழுகவல்லாரையாரே
மிகலூக்குந்தன்மையவர் (௫)

[தம் மனத்தில் தோன்றும்] இகலிற்கு எதிர் சாய்ந்து ஒழுக (நடக்க) வல்லவரை மிகல் (வெல்லுதலை) ஊக்கும் (மேற்கொள்ளும்) தன்மையையுடையவர் யாவர்?

Quis est, qui suscipiat eos frangere, qui ita possint vivere, ut odium (oriens) declinent.

856. இகலின்மிகலினிதென்பவன்வாழ்க்கை
தவலுங் கெடலுநணித்து (௬)

இகலில் (மாறுபடுதலில்) மிகல் (மேலுமேலும் எழும்பல்) [எனக்கு] இனிது என்பவனது வாழ்க்கையானது தவலும் (வழுவுதலும) [முழுதும்] கெடலும் நணித்து (சிறுது பொழுதில் உண்டாம்).

Cui in inimicitia crescere placet, prope est, ut felicitas ejus decrescat, atque adeo destruatur.

857. மிகன்மேவுமெய்ப்பொருள்காணாரிகன்மேவு
மின்னாவறிவினவர் (௭)

இகல் மேவும் (பொருந்திய) இன்னா (துன்பம் செய்கின்ற) அறிவையுடையவர் மிகல் (மகிமை) மேவும் மெய்ப் பொருள்களை காணார்.

Qui acerbam scientiam habeat odio plenam, bonum veritatis non videbit gloria plenum.

858. இகலிற்கெதிர்சாய்தலாக்கமதனை
மிகலூக்கினூக்குமாங்கேடு (௮)

இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம்; அதனை ,மிகல் (மிகும் படி) ஊக்கின் (மேற்கொண்டால்) கேடு ஊக்கும் (எழும்பும்) ஆம்.

Odium (oriens) declinare emolumentum affert. Si illud fovere adgrediaris, calamitas te aggredietur.

859. இகல்காணானாக்கம்வருங்காலதனை
மிகல்காணுங்கேடுதரற்கு (௯)

[விதியினால் ?] ஆக்கம் வரும் இடத்து [ஆக்கத்தை கெடுக்கும்] இகலை காணான் (நினையான்); [தனக்கு] கேடுதரற்கு (தருதலுக்கு = தரும் படியாக) அதனை — மிகல் (மிகும் ஆறு) — காண்பான் (நினைப்பான்).

Ubi venit felicitas (propter laetitiam), de odio non cogitant, simulac venit calamitas, illud fovere cogitant. — Vel: Ubi venit felicitas, homines de odio non cogitant (quia, si cogitarent, felicitas venire non posset; nam) perniciei sibi comparandae causa illud fovere cogitant.

860. இகலானாமின்னாதவெல்லாநகலானா
நன்னயமென்னுஞ்செருக்கு (௰)

இகலால் இன்னாத எல்லாம் ஆம் (உண்டாகும்); நகலால் (நட்பினால்) நல்ல நயம் (நீதி) என்னும் செருக்கு (பெருஞ்செல்வம்) ஆம் (உண்டாகும்).

Ab animo averso quidquid mali proficiscitur, ab animo benigno laus bonorum morum.

LXXXVII.

பகைமாட்சி. Odium prudens.

861. வலியார்க்குமாறேற்றலோம்புகவோம்பா
மெலியார்மேன்மேகபகை (௧)

வலியவர்க்குமாறு (பகையை) ஏற்றல் (ஏற்றுக்கொள்ளுதலை) ஓம்புக (ஒழிய வேண்டும்); மெலியவர் மேல்பகை [ஆதலை] ஓம்பா (ஒழியாது) மேக (விரும்ப வேண்டும்).

Cave ne validis repugnes, invalidis repugnare non cavendum est, sed expetendum.

862. அன்பிலனான்றதுணையிலன்றான்றுவ்வா
னென்பரியுமேதிலான்றுப்பு (௨)

[தன் சுற்றத்தார் மேல்] அன்பில்லாதவன் ஆன்ற (வலிய) துணையில்லாதவன், தான் துவ்வாதவன் (வலியில்லாதவன்) — எதிலான் (பகைவனது) துப்பை (வலிமையை) என் (எப்படி) பரியும் (அறுப்பான்).

Qui amore (suorum) careat, qui firmo praesidio careat, qui ipse viribus careat, quomodo is vires hostium franget?

863. அஞ்சுமறியானமைவிலனீகலான்
றஞ்சமெளியன்பகைக்கு (௩)

அஞ்சுபவன், அறிவில்லாதவன், [பிறரோடு] அமையில்லாதவன் — ஈகலாதவன் (கொடாதவன்) பகைவர்க்கு தஞ்சம் (மிக) எளியவனாவான்.

Qui sit metuens, inscius, dissociabilis, aegre largiens, hostibus facillimum praebet negotium.

864. நீங்கான்வெகுளிநிறையிலனெஞ்ஞான்றும்
யாங்கணும்யார்க்குமெளிது (௪)

வெகுளி (கோபத்தினின்றும்) நீங்காதவன், நிறையில்லாதவன் — எந்நாளும் யாங்கணும் (எவ்விடத்தும்) யாவர்க்கும் எளிமை.

Qui neque iram abjiciat, neque fidem servat omni tempore, omni loco, omni hosti facilis erit superatu.

865. வழிநோக்கான்வாய்ப்பன செய்யான்பழிநோ
க்கான்
பண்பிலன்பற்றார்க்கினிது (௫)

[நீதி நூலாகிய] வழியை நோக்காதவன், வாய்ப்பன (தக்கவைகளை) செய்யாதவன், பழியை நோக்காதவன், பண்பில்லாதவன் — பகைவர்க்கு இன்பம்.

Qui neque viam (legibus sancitam) curet, neque honesta faciat, neque reprehensionem curet, neque bonae indolis sit, hostibus erit gaudio.

866. காணாச்சினத்தான்கழிபெருங்காமத்தான்
பேணாமை பேணப்படும் (௬)

[ஒன்றையும்] காணாத சினத்தையுடையவன் கழி பெரும் (அதிக) காமத்தையுடையவன் பேணாமை (பகைவனாதல்) பேணப்படும் (விரும்பப்படும்).

Qui caecam iram et profusam libidinem sectatur, ejus malevolentiam libenter volent.

867. கொடுத்துங்கொளல்வேண்டுமன்றவடுத்திருந்து
மாணாத செய்வான்பகை (௭)

[தொழிலை] அடுத்திருந்து (தொடங்கியிருந்து) மாணாத (மாணாதவைகளை — அதற்கு எற்காதவைகளை) செய்பவனது பகைமையை — [விலை] கொடுத்தாயினும் — மன்ற (நிச்சயமாக) கொள்ளுதல் வேண்டும்.

Etiamsi pretium dandum sit, ejus odium accipias, qui, ubi inceperit, inhoneste agat.

868. குணனிலனாய்க்குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனாமேமாப்புடைத்து (௮)

[ஒருவன்] குணமில்லாதவனாய் குற்றம் பல ஆயின் (பலவாகிய இடத்து) [அது] மாற்றார்க்கு எமாப்பு (மிகுந்தகளிப்பை) உடைத்து [எனெனில்] இனனிலன் (இனமில்லாதவன்) ஆம் (ஆவான்).

Ubi quis sine virtute est, vitia autem multa sunt, hoc hostibus — (quia) sine amicis erit — magnam laetitiam affert.

869. செறுவார்க்குச்சேணிகவாவின்பமறிவிலா
வஞ்சும்பகைவர்ப் பெறின் (௯)

அறிவில்லாத அஞ்சும் (அஞ்சுகின்ற) பகைவரை பெற்றால், செறுவார்க்கு (அவரை வெல்லும் பகைவருக்கு) சேண் (உயரச்சியும்) இன்பம் (சந்தோஷமும்) இகவா (நீங்கா).

Odio affectos superbia laetitiaque non deficiet, si hostes inscios et timidos adipiscentur.

870. கல்லான்வெகுளுஞ்சிறுபொருளெஞ்ஞான்று
மொல்லானை யொல்லாதொளி (௰)

கல்லாதவனோடு வெகுளும் (பகைக்கும்) சிறு (எளிய) பொருள் (முயற்சியை) ஒல்லானை (எற்றுக்கொள்ளாதனை) எந்நாளும் ஒளி (புகழ்) ஒல்லாது (சேராது).

Qui ad facillimum illum laborem non accedet cum inexercitato hoste pugnandi, ad eum gloria non accedet.

LXXXVIII.

பகைத்திறந்தெரிதல். Inimicitiae peritum esse.

871. பகையென்னும்பண்பிலதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற்றன்று (௧)

ஒருவன் பகை என்னும் குணமில்லாததை நகையேயும் (விளையாட்டிடத்தேயானாலும்) வேண்டுதல் பாற்று (இயல்புடையது) அன்று.

Vitium illud, quod odium dicitur, vel per jocum expetere nefas est.

872. வில்லேருழவர்பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லேருழவர்பகை (௨)

வில் எராக உழுபவரோடு (வீரரோடு) பகை கொண்டாலும் — சொல் எராக உழுபவரோடு (மந்திரிகள் முதலானவர்களோடு) பகை கொள்ள வேண்டாம்.

Etsi inimicos tibi reddas, qui aratro arcus utuntur, noli cum iis inimicitias suscipere, qui aratro verbi utuntur.

873. எழுற்றவரினுமேழைதமியனாய்ப்
பல்லார்பகைகொள்பவன் (௩)

[தான்] தமியனாய் (தனியனாய்) இருந்து பலரோடும் பகை கொள்பவன் எழுற்றவரினும் (பித்தம் கொண்டவரினும்) எழை (மூடன் ஆவான்).

Mente capto est miserior, qui, quamvis solus sit, multorum inimicitias suscipiat.

874. பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடை
யாளன்
றகைமைக்கட்டங்கிற்றுலகு (௪)

பகையை நட்பாக [செய்து] கொண்டு நடக்கும் பண்பையுடை அரசனது தகைமையுள்ளே உலகம் தங்கிற்று.

In praestantia boni illius principis, qui ita agit, ut inimicitiam in amicitiam mutet, totus mundus requiescet.

875. தன்றுணையின்றாற்பகையிரண்டாற்றானொருவ
னின்றுணையாக்கொள்கவற்றினொன்று (௫)

தனக்கு துணை இன்று (இல்லை) — பகை இரண்டு —; [இப்படி இருக்கிற போது] தான் ஒருவன் (ஒருவனாகிய தான்) அவற்றின் ஒன்றை இனிய துணையாக கொள்ள வேண்டும்.

Qui adjutorem habeat nullum, inimicos vero duos, inter hos unum carum adjutorem reddat.

876. தேறினுந்தேறாவிடினுமழிவின்கட்
டேறான்பகாஅன்விடல் (௬)

[பகைவன் முன்] தெளிந்தவனாயினும் தெளியாதவனாயினும் — [ஒரு தொழிலால்] அழிவின் கண் (அழிவு வந்த போது) — தேறான் (கூடாதவனாகியும்) பகாஅன் (பகாதவனாகியும் = நீங்காதவனாகியும்) விடல் (நடுவே விட்டு வைக்க வேண்டும்).

Sive consentias, sive dissentias, in rerum discrimine et quod consensioni sit et quod odio omittas.

877. நோவற்கநொந்ததறியார்க்கு மேவற்க
மென்மைபகைவரகத்து (௭)

[கருத்து] நொந்ததை அறியாதவருக்கு நோவற்க (தன் நோவு சொல்ல வேண்டாம்)! பகைவரிடத்து மென்மையை (வலியில்லாமையை) மேவற்க (மேலிட்டுக்கொள்ள வேண்டாம்).

Coram iis, qui eum ignorent, dolorem tuum ne doleas, coram hostibus infirmitati ne indulgeas.

878. வகையறிந்துதற்செய்துதற்காப்பமாயும்
பகைவர்கட்பட்டசெருக்கு (௮)

[தொழில் செய்யும்] வகையை அறிந்து தற்செய்து (தனக்கு செய்ய வேண்டியவைகளை செய்து) தற்காப்ப (தன்னை காக்கவே) — பகைவரிடத்து பட்ட (உண்டான) செருக்கு (களிப்பு) மாயும் (கெடும்).

Si quis rectam rationem habens cognitam se muniat et sibi caveat, spiritus hostium frangentur.

879. இளைதாகமுண்மரங் கொல்ககளையுநர்
கைகொல்லும் காழ்த்தவிடத்து (௯)

இளையதாயிருக்க — முள்ளு மரத்தை கொல்க (களைய வேண்டும்); காழ்த்த (முதிர்ந்த) இடத்து களைபவரது கையை கொல்லும்.

Dum tenera est, arborem spinosam caedas; firmitatem adepta manum caedentis ipsa caedet.

880. உயிர்ப்பவுளரல்லர் மன்றசெயிர்ப்பவர்
செம்மல்சிதைக்கலாதார் (௰)

[தம்மோடு] செயிர்ப்பவர் (பகைப்பவரது) செம்மல் (செருக்கை) சிதைக்காதவர் — உயிர்க்க (மூச்சுவிடும் மாத்திரத்திற்கு) — மன்ற (நிச்சயமாக) உளர் (உள்ளவர் = இருக்கின்றவர்) அல்லர்.

Qui spiritus hostium comprimere omittat, is si quis spirat, non amplius erit

LXXXIX.

உட்பகை. Inimicitia occulta.

881. *நிழனீருமின்னாதவின்னாதமர்நீரு*
மின்னாவாமின்னா செயின் (க)

நிழலும் நீரும் இன்னாத (நோய் செய்வன) இன்னா (இனியன அல்ல); தம்மவர் நீரும் (இயல்புகளும்) — துன்பம் செய்தால் — இன்னா (இனியன அல்ல) ஆம்.

Quae umbra et aqua malefaciunt, mala sunt. Ita natura propinquorum, si malefaciunt, mala erit.

882. *வாள்போல்பகைவரையஞ்சற்கவஞ்சுக*
கேள்போல்பகைவர் தொடர்பு (உ)

வாள் போல் [வெளிப்பட்டு நிற்கும்] பகைவரை அஞ்ச வேண்டாம்; கேள் (உறவினர்) போல் [மறைந்து நிற்கும்] பகைவரது தொடர்பை அஞ்ச வேண்டும்.

Hostes gladio similes noli timere; eorum hostium, qui amicis sint similes, societatem time.

883. *உட்பகையஞ்சித்தற்காக்கவுலைவிடத்து*
மட்பகையின்மாணத் தெறும் (ந)

உட்பகையானவர்க்கு அஞ்சி தன்னை காக்க வேண்டும்; உலை விடத்து (தளர்ச்சி வந்த இடத்து) [மட்கலத்தை அறுக்கும்] மட்பகையை போல் மாண (மிகவும்) தெறும் (கெடுப்பான்)

Hostem internum timens caveas; in calamitate tua gravius te incidit, quam figulus (argillam incidit).

884. *மனமாணாவுட்பகைதோன்றினினமாணா*
வேதம்பலவுந்தரும் (ச)

மனம் மாணா (திருந்தாத) உட்பகை தோன்றினால் — இனமும் மாணா (வசப்படாமல்) — ஏதம் (குற்றம்) பலவும் தரும்.

Si internus hostis animo abjecto oriatur, etiam propinqui se abjicientes plurima tibi damna afferent.

885. *உறன்முறையானுட்பகைதோன்றினிறன்மு*
றையா
னேதம்பலவுந்தரும் (ரு)

[புறத்தில்] உறன்முறையான் (உறன்முறையால் = உறவு முறை தன்மையோடு கூடிய) உட்பகை தோன்றினால், இறன்முறையான் (இறத்தன் முறையோடு கூடிய) குற்றம் பலவும் தரும்.

Si specie cognationis internus hostis oriatur, specie corruptionis multum damni afferet.

886. ஒன்றாமையொன்றியார்கட்படினெஞ்ஞான்றும்
பொன்றாமை யொன்றலரிது (௬)

ஒன்றாமை (பகைமை) ஒன்றியார் (ஒன்றினவர் = தனக்கு உள்ளானவர்) கண் (இடத்து) படின் (பட்டால் = உண்டானால்) — பொன்றாமை (இறவாமை) ஒன்றல் (கூடுதல்) அரிது.

Si inter conjunctos disjunctio fiat, quin interitus se adjungat, vix potest fieri.

887. செப்பின்புணர்ச்சிபோற்கூடினுங்கூடாதே
யுட்பகையுற்றகுடி (௭)

செப்பு [மேன்முடியோடு புணர்ந்த] புணர்ச்சி போல் கூடினும், உட்பகை உற்ற குடி [மனவொற்றுமையில்] கூடாதே.

Domus interni discidii plena, quamvis instar junctionis capsulae jungatur, disjuncta tamen est.

888. அரம்பொருதபொன்போலத்தேயுமுரம்பொரு
துட்பகையுற்றகுடி (௮)

உட்பகை உற்ற குடியில் — [உட்பகை] பொருது (தேய்த்து) — அரம் பொருத (தேய்த்த) பொன் போல், உரம் (வலிமை) தேயும் (அழியும்).

Ut aurum lima impugnatum, ita in domo interni odii plena vires (internô odio) impugnatae se conterunt.

889. எட்பகவன்னசிறுமைத்தேயாயினு
முட்பகையுள்ளதாங்கேடு (௯)

உட்பகை எள் பகவு (பிளப்பு) அன்ன (போலிருந்த) சிறுமை யுடைய தேயாயினும், கேடு உள்ளதாம் (அதின் அகத்ததாம்).

Odium internum, quamvis tam minutum sit quam particula seminis sesàmi, perniciem tamen continet.

890. உடம்பாடிலாதவர்வாழ்க்கைகுடங்கருட்
மாம்போடுடனுறைந்தற்று (௰)

உடம்பாடு (மனப்பொருத்தம்) இல்லாதவர் [கூடி] வாழ்தல் குடங்கருள் (ஒரு குடிசையுள்) பாம்போடு உடனுறைந்தற்று (உடன் வாசம் பண்ணுதல் போலும்).

Cum iis vivere, qui interno amore careant, idem est atque in humili casa simul cum serpente habitare.

XC.

பெரியாரைப்பிழையாமை. Magnos non laedere.

891. ஆற்றுவாராற்றலிகழாமை போற்றுவார்
போற்றலுளெல்லாந்தலை (௧)

ஆற்றுவார் (நினைக்கப்பட்டதை முடிக்க வல்லவருடைய) வல்லமையை இகழாமை (அவமதியாமையே) [தம்மை] போற்றுவார் (காப்பவருடைய) போற்றலுள் (கர்வலுள் = காவலுக்கு) எல்லாம் தலை.

Potentiam potentium non despicere, omnis cautionis caventium est caput.

892. பெரியாரைப்பேணாதொழுகிற் பெரியாராற்
பேராவிடும்பைதரும் (௨)

பெரியவரை பேணாது நடந்தால் [அது அந்த] பெரியவரால் பேராத (நீங்காத) துன்பத்தை தரும்.

Si magnos magni non faciens vitam degas, id per magnos perpetuum tibi dolorem afferet.

893. கெடல்வேண்டிற்கேளாதுசெய்கவடல்வேண்டி
னாற்றுபவர்கணிழுக்கு (௩)

[தான்] கெடல் வேண்டின் கேளாது, [பகையாளியை [அடல் (கொல்லுதல்) வேணடின், ஆற்றுபவர் (அதை செய்ய வல்லவர்) கண் (இடத்து) இழுக்கை செய்ய வேண்டும்.

Si velis interire, iis damnum inferas, qui, si velint te interficere possunt:

894. கூற்றத்தைக்கையால்விளித்தற்றாலாற்றுவார்க்
காற்றாதாரின்னா செயல் (௪)

ஆற்றாதவர் ஆற்றுபவர்க்கு இன்னாதவைகளை செய்தல் கூற்றத்தை (இயமனை) கையால் விளித்தற்று (அழைத்தல் போலும்).

Si impotens potenti male faciat, idem erit ac si deum mortis (nutu) manus ad se vocet.

895. யாண்டுச்சென்றியாண்டுமுளராகார் வெந்து
ப்பின்
வேந்து செறப்பட்டவர் (௫)

வெந்துப்பின் (வெவ்விய வல்லமையின்) வேந்தனால் செறப்பட்டவர் (கோபிக்கப்பட்டவர்), எங்கே சென்றும்; எங்கும் உளர் (உயிர்வாழ்பவர்) ஆகார்.

Quocumque fugiat nusquam mortem effugit, cui irascatur dominus severam dominationem exercens.

896\. எரியாற்சுடப்படினுமுய்வுண்டாமுய்யார்
பெரியார்ப்பிழைத்தொழுகுவார் (௬)

தீயால் சுடப்பட்டாலும், உய்வு (உயிர் பிழைத்தல்) உண்டாம்; பெரியவர்க்கு பிழை செய்து நடப்பவர் உய்யார் (உயிர் பிழையார்).

Etsi quis igne uratur, vivere poterit; vivere non poterit, qui magnis damnum inferat.

897\. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு
மென்னாந்
தகைமாண்டதக்கார் செறின் (௭)

தகை (பெருமையால்) மாண்ட (மாட்சிமைப்பட்ட தக்கவர் = அருந்தவர்) செறின் (கோபித்தால்) — வகை (அங்கங்களால்) மாட்சிமைப்பட்ட வாழ்க்கையும் பெரும் பொருளும் என்னாம்?

Dominatio auxiliis insignis et grandis pecunia quid erunt, si viri virtute insignes irascantur.

898\. குன்றன்னார்குன்றமதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து (௮)

குன்று (மலை) போலிருக்கிற [அருந்தவரை] குன்ற (குறைய) மதித்தால், நின்றன்னார் (நிலை பெற்றாற் போலுள்ளவர்) குடியோடு நிலத்தில் மாய்வார்.

Si parvi aestimentur, qui montibus similes, qui consistentibus sunt similes cum familia sua a terra tollentur.

899\. ஏந்தியகொள்கையார்சீறினிடைமுரிந்து
வேந்தனும் வெந்து கெடும் (௯)

ஏந்திய (உயர்ந்த) கொள்கையார் (செய்கையுடையவர்) சீறின் (கோபித்தால்) வேந்தன் இடை முரிந்து (நிலை இழந்து) வெந்து கெடுவான்.

Si viri excelsae virtutis irascantur, rex statum suum omittens flammis absumetur.

900\. இறந்தமைந்தசார்புடையாராயினுமுய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின் (௰)

சிறந்து அமைந்த (நிறைந்த) சீரார் (சீருடையவர்) செறின் (கோபித்தால்), — [கோபிக்கப்பட்டவர்] இறந்து (மிகுந்து) அமைந்த [அரண் படை பொருள் நட்பு என்னும்] சார்பையுடையவராயினும் — உய்யார்.

Etiamsi quis subsidiis abundet, si viri insignes, qui honore abundant, irascantur, servari non poterit.

XCI.

பெண்வழிச்சேறல். Non sinere se ab uxore regi.

901. மனைவிழைவார்மாண்பயனெய்தார் வினைவி
ழைவார்
வேண்டாப் பொருளுமது (க)
மனையாளை விழைவார் (விரும்பி நடப்பவர்) மாண் (பெரிய) பயன் [ஆகிய அறத்தை] எய்தார் (அடையார்); [பொருள் சம்பாதிக்கிறதற்கு] வினையை விரும்பி நடப்பவர் [அதற்கு விரோதமென்று] வேண்டாத (இகழும்) பொருளும் அது (அவ்வின்பம்).
Uxoris amatores insigne emolumentum i. e. virtutem non consequentur; etiam negotii amatoribus illa res expetenda non est.

902. பேணுதுபெண்விழைவானுக்கம் பெரியதோர்
நாணுக நாணுத்தரும் (உ)
[ஒன்றையும்] பேணுது பெண்ணை விரும்பி நடப்பவனது ஆக்கம் — பெரியது [ஆகிய] ஒரு நாணாக (நாணமுண்டாக) — நாணு (நாணுதலை) தரும்.
Felicitas ejus, qui uxorem appetat, magna ignominia parta pudorem ei afferet.

903. இல்லாள்கட்டாழ்ந்தவியல்பின்மையெஞ்ஞா
ன்று
நல்லாருணுணுத்தரும் (ங)
இல்லாள் கண் (இடத்து) தாழ்ந்த இயல்பின்மை (ஆண்மையில்லாமை) நல்லவருள் எந்நாளும் நாணுதலை தரும்.
Qui uxori se submittat, ejus infirmitas apud optimum quemque pudore eum afficiet.

904. மனையாளையஞ்சுமறுமையிலாளன்
வினையாண்மைவீறெய்தலின்று (ச)
மனையாளை அஞ்சும் மறுமையிலாளன் (மறுமையை நோக்காதவனது) வினையை ஆளும் தன்மை வீறு (புகழை) அடைதல் இன்று.
Si quis uxorem timens futurae vitae non vivat, actiones ejus nullam obtinebit laudem.

905. இல்லாளையஞ்சுவானஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல் (ரு)
இல்லாளை அஞ்சுவான் (அஞ்சுபவன்) எந்நாளும் நல்லவர்க்கு நல்லவைகளை செய்ய அஞ்சுவான்.
Qui uxorem timeat, semper timebit bonis bene facere.

906. இமையாரின்வாழினும்பாடிலரேயில்லா
ளமையார்தோளஞ்சுபவர் (௬)

இல்லாளுடைய அமை ஆர் (வேய் போலும்) தோளுக்கு அஞ்சுபவர் — இமையாரின் (இமையாத தேவர் போல்) வாழ்ந்தாலும் — பாடு (பெருமை) இலர் (இல்லாதவர்).

Etiamsi tamquam coelestes vivant, magnitudine carent, qui brachium uxoris timeant arundini (bambus) simile.

907. பெண்ணேவல்செய்தொழுகுமாண்மையினா
ணுடைப்
பெண்ணேபெருமையுடைத்து (௭)

பெண்ணின் ஏவலை செய்து நடக்கும் ஆண்மையிலும் நாணுடைய பெண்மையே பெருமையுடைத்து.

Multo praestantius est verecundum ingenium muliebre ingenio virili, quo quis vivat mulieris voluntati obsequens.

908. நட்டார்குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாட்
பெட்டாங்கொழுகுபவர் (௮)

நன்னுதலாள் (நன்னுதலையுடைய மனையாள்) பெட்டு ஆங்கு (வேண்டிய படி) நடப்பவர் [தம்மோடு] நட்டார் (நட்பு செய்தவரது) குறையை முடியார்; [மறுமைக்கு உதவும்] நன்றை ஆற்றார் (செய்ய மாட்டார்).

Qui vivat voluntati obediens pulchra fronte praeditarum, neque necessitatibus amicorum succurret neque virtuti vivet.

909. அறவினையுமான்ற பொருளும்பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்கணில் (௯)

அறவினையும் ஆன்ற (சிறந்த) பொருளும் [இன்பச்செயலாகிய] பிறவினையும் மனையாள் ஏவலை செய்பவரிடத்து இல்லை.

Qui uxoris dicto obediant, in iis neque actionem virtutis neque honestas divitias neque reliquam actionem (ad gaudium spectantem) invenies.

910. எண்சேர்ந்தநெஞ்சத்திடனுடையார்க்கெஞ்ஞா
ன்றும்
பெண்சேர்ந்தாம்பேதைமையில் (௰)

[காரிய உபாயங்களை] எண்ணுதல் சேர்ந்த நெஞ்சத்து (நெஞ்சத்தோடு) இடன் (செல்வத்தை) உடையவர்க்கு பெண் சேர்ந்து ஆம் (விளையும்) பேதைமை (அறியாமை) எக்காலத்தும் இல்லை.

Qui animo cogitationi dedito felicitate fruatur, is in stultitiam non incidet inde profectam, quod uxori deditus est.

XCII.

வரைவின்மகளிர். Meretrices.

911. அன்பின்விழையார் பொருள்விழையுமாய்
தொடியா
ரின்சொலிழுக்குத்தரும் (க)

அன்பினால் [ஒருவனை] விழையார் (விரும்பாதவராகி) பொருளை விரும்பும் ஆய் (ஆய்ந்த = ஆராய்ந்த) தொடியார் (தொடியையுடைய பெண்களது = வேசையர்களது) இனிய சொல் இழுக்கு (துன்பம்) தரும்.

Perniciei erunt dulcia verba (meretricis) selecta armilla ornatae, quae non amore (te ipsum), sed tuam pecuniam concupiscat.

912. பயன்றூக்கிப்பண்புரைக்கும்பண்பின்மகளிர்
நயன்றூக்கிநள்ளாவிடல் (உ)

[பெரும்] பயனை தூக்கி (அளந்தறிந்து) பண்புள்ளவற்றை உரைக்கும் . பண்பில்லாத மகளிரது நயன் (நடக்கையை) தூக்கி [அவரை] நள்ளா விடல் (பொருந்தாமல் விட வேண்டும்).

Mulieri, quae indecora decora loquatur, emolumentum ponderans, noli te conjungere mores ejus ponderans.

913. பொருட்பெண்டிர்பொய்ம்மை முயக்கமிரு
ட்டறையி
லேதில்பிணந்தழீஇயற்று (ங)

பொருளை [மாத்திரம் விரும்பும்] மகளிரது பொய்மையை [உடைய] முயக்கம் (தழுவுதல்) — இருட்டு அறையில் ஏதில் (அயல்) பிணத்தை தழுவினால் போலும்.

Fallaces amplexus meretricis perinde se habent ac si quis in cubiculo extraneum cadaver amplectatur.

914. பொருட்பொருளார்புன்னலந்தோயாரருட்
பொரு
ளாயுமறிவினவர் (ச)

பொருள் பொருளார் (பொருளை பொருள் என்கிற மகளிரது) புல்லிய நலத்தை அருள் [ஆகிய] பொருளை ஆயும் (ஆராயும்) அறிவையுடையவர் தோயார் (தீண்டார்).

Bonum vile meretricis, cui tantum fortunae bona bona sunt, sapientes, qui bonum virtutis investigant, non tangunt.

915. பொதுநலத்தார்புன்னலந்தோயார்மதிநலத்தின்
மாண்டவறிவினவர் (ரு)

மதி நன்மையால் மாண்ட (மாட்சிமைப்பட்ட) அறிவையுடை

யவர் பொது நலத்தார் (பொதுவாக தங்கள் நல்லத்தை கொடுக்கிற பெண்களது) புல்லிய நலத்தை தோயார்.
Bonum vile eorum, quae bonum suum commune habeant, sapientes non tangunt bono scientiae ornati.

916. தந்நலம்பாரிப்பார் தோயார்தகைசெருக்கிப்
புன்னலம்பாரிப்பார்தோள் (௬)
[ஆடல் பாடல் அழகு முதலிய] தகையால் செருக்கி (களித்து) புல்லிய நலத்தை பாரிப்பார் (பரப்புகிறவர்களது) தோளை தமது நலம் (புகழை) பரப்புகிறவர்கள் தீண்டார்.
Qui suum, i. e. quod in se habeant, bonum exponent, humeros earum non tangunt, quae, artibus exsultantes, vile bonum exponant.

917. நிறைநெஞ்சமில்லவர்தோய்வர்பிறநெஞ்சிற்
பேணிப்புணர்பவர்தோள் (௭)
நெஞ்சினால் பிற (வேறு பொருள்களை) பேணி (விரும்பி) புணர்பவரது தோளை நிறை [உள்ள] நெஞ்சமில்லாதவரே சேர்வார்.
Ii tantum, qui vili sunt animo, humeros earum tangent, quae in animo aliud sectantes te complectantur.

918. ஆயுமறிவினரல்லார்க்கணங்கென்ப
மாயமகளிர்முயக்கு (௮)
மாய (வஞ்சித்தல் வல்ல) மகளிரது முயக்கு (புணர்ச்சியை) ஆயும் அறிவுடையவரல்லாதவர்க்கு [காமவழியால் உயிர்கொள்ளும்] அணங்கு [தாக்குதல்] என்ப (என்பார்).
Qui sapientia careant (verum) investigandi, iis amplexus fallacis mulieris damno esse dicitur.

919. வரைவிலாமாணிழையார் மென்றோள்புரையி
லாப்
பூரியர்களாழுமளறு (௯)
வரைவில்லாத மாண் இழையார் (மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடையவரது = மகளிரது) மெல்லிய தோள் புரை (மேன்மை) இல்லாத பூரியர்கள் (கீழ்மக்கள்) ஆழும் (அழுந்தும்) அளறு (நரகம்).
Mollis humerus mulieris prostitutae pretiosis gemmis ornatae lutum infernum est, in quod homines infimi demerguntur.

920. இருமனப்பெண்டிருங்கள்ளுங்கவறுந்
திருநீக்கப்பட்டார் தொடர்பு (௰)
இருமனத்தையுடைய மகளிரும் கள்ளும் கவறும் (சூதும்) திருமகளால் நீக்கப்பட்டவர்க்கு (விடப்பட்டவர்க்கு) தொடர்பு (பரிவாரம்).
Ambiguae mulieres, potus inebrians et alea iis sunt comites, a quibus fortuna recessit.

XCIII.

கள்ளுண்ணமை. Ab ebriositate abstinere.

921. உட்கப்படாஅரொளியிழப்பரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகுவார் (க)

கள் (கள்ளின் மேல்) காதல் (ஆசை) கொண்டு நடப்பவர் எந்நாளும் உட்கப்படாஅர் (அஞ்சப்படாதவராகி) ஒளி (புகழை) இழப்பார்.

Neque amplius metuentur et in perpetuum splendorem (laudis) amittant, qui vivant potum inebriantem cupientes.

922. உண்ணற்ககள்ளையுணிலுண்கசான்றோரா
னெண்ணப்படவேண்டாதார் (உ)

கள்ளை உண்ண வேண்டாம்; சான்றோரான் (சான்றோரால்) எண்ணப்பட வேண்டாதவர் [அதை] உணில் (உண்டால்) உண்க (உண்ணலாம்).

Potum inebriantem potare noli: si quis potat, illi potent, qui a perfectis aestimari nolunt.

923. ஈன்றாண்முகத்தேயுமின்னாதாலென்மற்றுச்
சான்றோர்முகத்துக்களி (ங)

ஈன்றாள் (தாய்) முகத்தேயும் (முன்பாயினும்) களி (கள்ளுண்டு களித்தல்) இன்னாது; [ஆகையால்] மற்று சான்றோர் முன்பு என் (யாதாகும்).

Si ebrietas oculis etiam matris molesta sit, qualis erit oculis perfectorum.

924. நாணென்னுநல்லாள்புறங்கொடுக்குங்கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத்தார்க்கு (ச)

கள்ளு என்னும் [யாவரும்] பேணா (விரும்பாத) பெரிய குற்றத்தை உடையவர்க்கு நாணமாகிய நல்லாள் (நல்ல பெண்) புறம் கொடுப்பாள்.

Honesta mulier, quae verecundia dicitur, iis tergum obvertet, qui ingenti peccato serviant a laude vacuo, quod dicitur ebrietas.

925. கையறியாமையுடைத்தேபொருள்கொடுத்து
மெய்யறியாமைகொளல் (ரு)

பொருளை கொடுத்து மெய் [தன்னை] அறியாமையை கொள்ளுதல் — கையறியாமையை (ஒழுக்க மறதியை) உடைத்து.

Pecuniam dare eaque sui oblivionem emere, omnis decoris est oblivio.

926. துஞ்சினார்செத்தாரின்வேறல்லரெஞ்ஞான்று
நஞ்சுண்பார்கள்ளுண்பவர் (௬)

துஞ்சினவர் (தூங்கினவர்) செத்தவரின் வேறல்லர் (வேறல்லாதவர்); கள்ளுண்பவர் எக்காலத்தும் நஞ்சை உண்பவர் [ஆவார்].

Dormientes mortuis non sunt dissimiles. Inebriantia bibentes omni tempore venenum bibunt.

927. உள்ளொற்றியுள்ளூர்நகப்படுவரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக்கண்சாய்பவர் (௭)

கள்ளொற்றி (கள்ளை மறைந்து) கண் சாய்பவர் (சாய குடிப்பவர்) — உள்ளூர் [வாழ்பவரால்] உள்ளே [நடக்கிறதை] ஒற்றி (உய்த்தறிந்து) எந்நாளும் நகப்படுவார்.

Qui potandi causa semper recessum quaerentes oculos deprimi patiantur, iis oppidani irridebunt penitus perspicientes.

928. களித்தறியேனென்பதுகைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉமாங்கேமிகும் (௮)

களித்து (கள்ளுண்டு) அறியேன் என்று சொல்லுதலை கைவிடவேண்டும்; நெஞ்சத்தில் ஒளித்ததூஉம் (மறைந்ததும்) ஆங்கே (சீக்கிரமாய்) மிகும் (வெளிப்படும்).

„Crapulàm nescio", noli dicere: etiam quod in pectore absconditum est (vitium), repente effundetur.

929. களித்தானைக்காரணங்காட்டுதல்கீழ்நீர்க்
குளித்தானைத்தீத்துரீஇயற்று (௯)

[கள்ளுண்டு] களித்தவனை காரணம் காட்டி தெளிவித்தல் கீழ் நீர் (நீருள்ளே) குளித்தானை (குளித்தவனை = மூழ்கினவனை) தீ (தீயினால் = விளக்கினால்) துரீஇயற்று (தேடுதலை போலும்).

Potationi deditum meliora edocere idem est atque aqua mersum lucerna quaerere.

930. கள்ளுண்ணாப்போழ்திற்களித்தானைக்காணுங்கா
லுள்ளான்கொலுண்டதன்சோர்வு. (௰)

கள்ளை உண்ணாத பொழுதில் களித்தவனை காணும் போது [தான்] உண்ட [போது உண்டான்] தன் சோர்வை உள்ளான் கொல் (உள்ள மாட்டானோ)?

Qui ipse non potus bene potum adspiciat, nonne vilitatem potationis suae perspiciet?

XCIV.

சூது. Ludus.

931. வேண்டற்கவென்றிடினுஞ்சூதினை வென்ற
தூஉந்
தூண்டிற்பொன்மீன்விழுங்கியற்று (க)
வென்றாலும் சூதினை விரும்ப வேண்டாம்; வென்றதும் தூண்டில் இரும்பை மீன் விழுங்கியது போலும்.
Aleam, etiamsi vincas, noli appetere. Vincere perinde est, ac si piscis ferrum hami deglutiat.

932. ஒன்றெய்தி நூறிழக்குஞ்சூதர்க்குமுண்டாங்கொ
னன்றெய்திவாழ்வதோராறு (உ)
ஒன்றினை எய்தி நூற்றினை இழக்கும் சூதர்க்கும் (சூதாடுபவர்க்கும்) நன்றினை எய்தி வாழ்வதாகிய ஒரு ஆறு (வழி) உண்டாமோ?
Aleatori, qui semel lucratur, centies perdit, num vel una est via, qua bonum lucrans bene vivat?

933. உருளாயமோவாதுகூறிற் பொருளாயம்
போஒய்ப்புறமேபடும் (ங)
உருளும் ஆயம் (சூதாட்டத்தினால் அகப்பட்ட ஆதாயத்தை) ஓவாது (இடைவிடாமல்) கூறினால் [சம்பாதித்த] பொருளும் ஆயமும் போய் புறமே படும்.
Si princeps aleae lucrum semper in ore habeat, thesaurus atque vectigalia in alienas manus pervenient.

934. சிறுமைபலசெய்து சீரழிக்குஞ்சூதின்
வறுமைதருவதொன்றில் (ச)
சிறுமை (துன்பங்கள்) பலவும் செய்து [உள்ள] சீர் (புகழையும்) அழிக்கும் சூது போல் வறுமையை தருவதாகிய ஒன்று இல்லை.
Nihil tam inopem reddit, quam alea, quae multam cladem affert, omnem laudem aufert.

935. கவறுங்கழகமுங்கையுந்தருக்கி
யிவறியாரில்லாகியார் (ரு)
[முற்காலத்தில்] இல்லாகியார் (இல்லாதவரானவர்) — கவற்றையும் (சூதையும்) கழகமும் (ஆடும் இடத்தையும்) கையும் (ஆடுதற்கு வேண்டும் தொழிலையும்) தருக்கி (களிப்போடு மேற்கொண்டு) இவறியார் (ஆசைப்பட்டவர்).
(Reges) qui (olim) in nihilum interibant, tales erant, qui alea, consessu lusorum et ludendi negotio delectati lucri essent avidi.

936. அகடாராரல்லலுழப்பர்சூதென்னு
முகடியான் மூடப்பட்டார் (௬)

சூது என்னும் முகடியால் (மூதேவியால்) மூடப்பட்டார் (விழுங்கப்பட்டவர்) அகடு (வயிறு) ஆரார் (நிறையப் பெறார்); அல்லல் (துன்பம்) உழப்பர் (அனுபவிப்பார்).

Neque ventrem implebunt et miseriam patientur a dea infelicitatis, quae dicitur alea, devorati.

937. பழகியசெல்வமும்பண்புங் கெடுக்குங்
கழகத்துக்காலைபுகின் (௭)

காலை (காலம்) கழகத்தில் புகின் (புகுந்து கழிந்தால்) [அது] பழகிய செல்வத்தையும் பண்பையும் கெடுக்கும்.

Pecunia et animi generositas a majoribus acceptae peribunt, si in consessu lusorum tempus teratur.

938. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇயருள் கெடுத்
தல்லலுழப்பிக்குஞ்சூது (௮)

சூதானது பொருளை கெடுத்து பொய்யை மேற்கொள்ள பண்ணி அருளை கெடுத்து துன்பத்தை உழப்பிக்கும் (அடைவிக்கும்).

Pecuniam perdit, ad mendacium inducit, benignitatem perdit et ad miseriam adducit alea.

939. உடைசெல்வமூணொளி கல்வியென்றைந்து
மடையாவாமாயங்கொளின் (௯)

[ஒருவன் சூதாடுதலால் வரும்] ஆயத்தை கொளின் (கொண்டால் = விரும்பினால்) உடையும், செல்வமும், ஊணும், ஒளியும், கல்வியும் என்று ஐந்தும் [அவனை] அடையாவாம் (சேராவாம்).

Vestis, pecunia, victus, gloria, scientia, haec quinque cum eo nihil habent commune, qui lucrum aleae sectatur.

940. இழத்தொறூஉங்காதலிக்குஞ் சூதேபோற்றுன்ப
முழத்தொறூஉங்காதற்றுயிர் (௰)

இழக்கும் தோறும் [சூதாடலின் மேல்] காதலிக்கும் (ஆசை செய்யும்) சூதனே போல், உயிரானது துன்பம் உழக்கும் (அநுபவிக்கும்) தோறும் [உயிர்வாழ்தலின் மேல்] காதற்று (காதலை உடைத்து = ஆசை செய்யும்).

Ut lusor, quoties perdit, ludendi desiderium accipit, ita vita, quoties patitur, vivendi desiderium accipit.

XCV.

மருந்து. Medicina.

941. மிகினுங்குறையினுநோய்செய்யுநூலோர்
வளிமுதலாவெண்ணியமூன்று (க)
[உணவும் செயலும்] மிகுமாயினும் குன்றுமாயினும் [ஆயுள்] நூலுடையவர் அளி (வாதம்) முதலாக எண்ணின மூன்று நோயை செய்யும்.
Et ubi excessus erit et ubi defectus, dolorem creabunt a peritis enumerata illa tria, quorum primum est ventus (cetera bilis et phlegma).

942. மருந்தெனவேண்டாவாம் யாக்கைக்கருந்திய
தற்றதுபோற்றியுணின் (உ)
[ஒருவன் முன்] அருந்தியது (உணப்பட்டது) அற்றது (சேரணித்த படியை) போற்றி (குறிகளால் அறிந்து) [பின்] உண்டால், யாக்கைக்கு (உடம்புக்கு) மருந்து என்றது வேண்டாவாம்.
Si quomodo concoquantur cibi, bene considerans cibum sumas, corpori quod medicina dicitur non erit necessarium.

943. அற்றலளவறிந்துண்கவஃதுடம்பு
பெற்றனெடிதுய்க்குமாறு (ங)
அற்றல் (சேரணிக்கப்பட்டால்) அளவு அறிந்து உண்ண வேண்டும்; அது உடம்பை பெற்றவன் [அதனை] நெடிது (நெடுங்காலம்) உய்க்கும் (கொண்டு செலுத்தும்) ஆறு.
Si facile concoquatur, comedas mensurae sciens; haec via est, qua qui corpus abstinuit, diu (illud) servabit.

944. அற்றதறிந்துகடைப்பிடித்து மாறல்ல
துய்க்கதுவரப்பசித்து (ச)
[முன் உண்ணப்பட்டது] அற்றது (அற்ற படியை) அறிந்து கடைப்பிடித்து (அதிலே துணிந்து நின்று) துவர (மிக) பசித்து மாறல்ல (விரோதமில்லாதவைகளை) துய்க்க (உண்ண வேண்டும்).
Quae facile concoquantur, sciens, in iis mane, fame demum urgente, quae non contraria sunt, comede!

945. மாறுபாடில்லாதவுண்டி மறுத்துண்ணி
னூறுபாடில்லையுயிர்க்கு (ரு)
மாறுபாடில்லாத உண்டியை [மனம் வேண்டிய அளவாக] மறுத்து [பிணி வாராத அளவில்] உண்டால், உயிர்க்கு ஊறுபாடு (இடையூறு = வியாதி) இல்லை.
Si cibos non contrarios diminuens comedas, nulla cita erit aegritudo.

946. இழிவறிந்துண்பான்கணின்பம்போனிற்குங்
கழிபேரிரையான்கணோய் (௬)

[தனக்கு ஏற்ற] இழிவு (குறைவை) அறிந்து உண்பான் கண் (உண்பவனிடத்து) இன்பத்தை போல் கழி (மிக) பேர் (பெரிய) இரையான் கண் (இரையை விழுங்குபவனிடத்து) நோய் நிற்கும்.

Ut cibum prudenter diminuenti voluptas, ita homini multi cibi molestia semper adstabit.

947. தீயளவன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயளவின்றிப்படும் (௭)

[சரீரத்துக்கு ஏற்ற உணவு அளவு காலம் முதலானவைகள்) தெரியாதவனாகி [வயிற்று] தீ அளவன்றி (அளவல்லாமல்) பெரிது (மிக) உண்டால் நோய் அளவின்றி படும்.

Si supra modum caloris multa comedas, dolores sine modo ingruent.

948. நோய்நாடிநோய்முதனாடியதுதணிக்கும்
வாய்நாடிவாய்ப்பச் செயல் (௮)

[வைத்தியன்] நோயை நாடி நோயின் முதல் (காரணத்தை) நாடி அதனை தணிக்கும் (தீர்க்கும்) வாய் (உபாயத்தை) நாடி வாய்ப்ப (பிழைப்படாமல்) செய்ய வேண்டும்

Medicus aegritudinem inquiret, causam aegritudinis inquiret, remedium dolorem leniens inquiret et deinde sine vitio aget.

949. உற்றானளவும் பிணியளவுங்காலமுங்
கற்றான்கருதிச் செயல் (௯)

[ஆயுள் வேதத்தை] கற்றவன் [நோய்] உற்றவன் அளவையும் பிணி அளவையும் காலத்தையும் கருதி செய்ய வேண்டும்.

Modum aegri et modum aegritudinis et tempus considerans agat, qui artem calleat.

950. உற்றவன்றீர்ப்பான் மருந்துழைச் செல்வா
னென்
றப்பானாற் கூற்றேமருந்து (௰)

நால் கூற்றே (பகுதியையுடைய) மருந்தாவது — [பிணி] உற்றவன், [அதனை] தீர்ப்பவன் (வைத்தியன்), மருந்து, உழைச் செல்பவன் (இயற்றுவான்) என்று [சொல்லப்பட்ட] அப்பால் [உடையது].

Aegrotus, medicus, remedium, aegrotum curans, haec artis medicae quattuor partes constituunt.

XCVI.

குடிமை. Nobilitas.

951. இற்பிறந்தார்கண்ணல்லதில்லையியல்பாகச்
செப்பமு நாணுமொருங்கு (௧)

செம்மையும் நாணமும் ஒருங்கு இல் (உயர்ந்த குடியில்) பிறந்தவரிடத்து அல்லாமல் [பிறரிடத்தே] இயல்பாக இல்லை.

Nonnisi in nobili loco natis animi nobilitas et verecundia naturaliter conjunctae sunt.

952. ஒழுக்கமும்வாய்மையு நாணுமிம்மூன்று
மிழுக்கார் குடிப்பிறந்தார் (௨)

[உயர்ந்த] குடியிலே பிறந்தவர் [தமக்குரிய] ஒழுக்கமும் மெய்மையும் நாணமும் [ஆகிய] இம்மூன்றிலும் இழுக்கார் (தவறார்).

Nobili loco natis haec tria: boni mores, veracitas, verecundia numquam desunt.

953. நகையீகையின்சொலிகழாமைநான்கும்
வகையென்ப வாய்மைக்குடிக்கு (௩)

வாய்மை (மெய்மையையுடைய) குடிக்கு நகையும் (முகமலர்ச்சியும்) ஈகையும் இன் சொல்லும் இகழாமையும் [ஆகிய] இந்நான்கும் [உரிய] வகையாகும் [நூலோர்] என்ப (என்பார்கள்).

Vultus hilaritas, manus largitas, sermonis affabilitas et nullius contemptio verae nobilitatis dicuntur esse propria.

954. அடுக்கியகோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவசெய்தலிலர் (௪)

[பலவாக] அடுக்கிய கோடி [அளவாகிய பொருளை] பெற்றாலும், குடிப்பிறந்தவர் [தம் ஒழுக்கம்] குன்றுவ (குன்றும் தொழில்களை) செய்தல் இலர் (செய்தல் இல்லாதவர் = செய்யார்).

Etiamsi multiplicata centena milia lucrentur, nobili genere nati nihil umquam committent, quod vitiosum sit.

955. வழங்குவதுள்வீழ்ந்தக்கண்ணும்பழங்குடி
பண்பிற்றலைப்பிரிதலின்று (௫)

பழங்குடி வழங்குவது (கொடுக்கும் பொருள்) உள்வீழ்ந்த (சுருங்கிய) இடத்தும் பண்பின் (குணமுடைமையில்) தலைப் பிரிதல் இன்று (நீங்காது).

Quamvis opes intus corruant, vetus nobilitas non degenerat.

956. சலம்பற்றிச்சால்பில செய்யார்மாசற்ற
குலம்பற்றிவாழ்துமென்பார் (௬)

மாசற்ற குலம் பற்றி (குலத்தினோடு ஒத்து) வாழ்தும் (வாழ்
வோம்) என்பவர்கள் சலம் (வஞ்சனையை) பற்றி (பொருந்தி)
சால்பில (சால்பில்லாதவைகளை = அமைவில்லாதவைகளை)
செய்யார்.

Respectu mendacii indecore non agent, qui respectu familiae suae vitio carentis vivere volunt.

957. குடிப்பிறந்தார்கண்விளங்குங்குற்றம்விசும்பின்
மதிக்கண்மறுப்போலுயர்ந்து (௭)

குடிப்பிறந்தவரிடத்தே .[உண்டாகிற] குற்றம் விசும்பில்
(ஆகாயத்தில்) மதி கண் (சந்திரனிடத்து) மறு (களங்கம்) போல்
உயர்ந்து விளங்கும். ⸍

Vitium hominum sublimi loco natorum haud secus ac macula lunae in coelo, sublime apparet.

958. நலத்தின்கணாரின்மைதோன்றினவனைக்
குலத்தின்கணையப்படும் (௮)

[குல] நலத்தின் கண் (நலமுடையவனிடத்து) நாரின்மை
(அன்பில்லாமை) தோன்றினால், [உலகம்] அவனை குலத்தின்
கண் (அக்குலப்பிறப்பிடத்தே) ஐயப்படும் (சந்தேகப்படும்).

In quo etsi in bona familia nato benignitatis defectus apparebit, eum familia illa natum esse dubitabunt.

959. நிலத்திற்கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற்பிறந்தார்வாய்ச்சொல் (௯)

நிலத்தில் கிடந்ததை கால் (முளை) காட்டும்; குலத்தில் [கிடந்
ததை அதில்] பிறந்தவர் வாய்ச்சொல் காட்டும்.

Quid in terra lateat germen indicat; (quid in familia lateat) verbum ex ore eorum, qui in ea nati sunt.

960. நலம்வேண்டினாணுடைமை வேண்டுங் குலம்
வேண்டின்
வேண்டுகயார்க்கும்பணிவு (௰)

ஒருவன் தனக்கு நலம் [உடைமையை] வேண்டினால், நாண
முடைமை வேண்டும்; குலம் [உடைமையை] வேண்டினால்,
யாவரிடத்தும் பணிவு (வணங்குதலை) வேண்ட கடவான்.

Si (morum) bonitatem optas, verecundia optanda est; si nobilitatem optas, animum in omnes submissum opta.

XCVII.

மானம். Honestas.

961. இன்றியமையாச்சிறப்பினவாயினுங்
குன்றவருபவிடல் (க)

[செய்தல்] இன்றி அமையாத (அடைய கூடாத) சிறப்புடையவையாயினும் [தங்குடி பிறப்பு] குன்ற (தாழ) வரும் செயல்களை விட வேண்டும்.

Etiamsi gloriam tibi afferant, quam aliter obtinere nequeas, ea, quae dignitatem tuam imminuant, dimittas.

962. சீரினுஞ்சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மைவேண்டுபவர் (உ)

சீரோடு பேராண்மை (மானத்தை) வேண்டுபவர் — சீரினும் (சிறப்பு கொண்டாலும் = புகழ் சம்பாதிக்கும் இடத்தும்) — சீரல்லாதவைகளை செய்யார்.

Etiamsi tamquam nobilia laudentur, ignobilia non facient, qui cum nobilitate honestatem expetant.

963. பெருக்கத்துவேண்டும் பணிதல்சிறிய
சுருக்கத்துவேண்டுமுயர்வு (ங)

பெருக்கத்தில் (செல்வத்தில்) பணிதல் (வணக்கம்) வேண்டும்; சிறிய சுருக்கத்தில் (வறுமையில்) உயர்வு வேண்டும்.

In rebus prosperis submissione opus est, in parvis elatione.

964. தலையினிழிந்தமயிரனையர் மாந்தர்
நிலையினிழிந்தக்கடை (ச)

மனிதர் [தம்முயர்ந்த] நிலையிலிருந்து இழிந்த (தாழ்ந்த) கடை (இடத்து) — தலையிலிருந்து இழிந்த (வீழ்ந்த) மயிர் அனையர் (போல்வார்).

Viri, qui infra statum suum decidant, similes sunt capillis, qui ex capite decidant.

965. குன்றினனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றியனைய செயின் (ரு)

குன்றின் அனையாரும் (மலை போல் உயர்ந்தவரும்) — குன்றுவ (தாழ்தற்கு ஏதுவாகிய செயல்களை) குன்றி அனைய (அளவினவாயினும்) செய்தால் — குன்றுவார் (தாழ்வார்).

Quamvis montibus sint similes, humiles fiunt, qui humile quid faciant, etiamsi semini cunri sit simile.

966. புகழின்றாற் புதேணாட்டுய்யாதாலென்மற்
றிகழ்வார்பின் சென்றுநிலை (௬)

[தம்மை] இகழ்பவர் பின்னே சென்றுநிலை (நிற்கை) புகழின்று, தேவருலகத்தில் உய்யாது (செலுத்தாது); மற்று என் (யாது)?

Si neque laudi locum faciat, neque ad regnum coelestium tc adducat, quid, quaeso, post tergum incedens, iis servies, qui te contemnant?

967. ஒட்டார்பின்சென்றொருவன்வாழ்தலினந்நி
லையே
கெட்டானெனப்படுதனன்று (௭)

ஒட்டார் (தன்னை இகழ்வார்) பின்னே சென்று ஒருவன் வாழ்தலினும் அந்நிலையிலே [நின்று] கெட்டான் என்னப்படுதல் நன்று (நல்லது).

Melius est dici „Statim (a statu suo immotus?) periit,“ quam post tergum hostium incedcntem vivere.

968. மருந்தோமற்றூனோம்பும் வாழ்க்கை பெருந்த
கைமை
பீடழியவந்தவிடத்து (௮)

பெருந்தகைமை (உயர்ந்த குடிப்பிறப்பு) பீடு (தன் வலியாகிய மானம்) அழிய வந்த இடத்து [இறந்து போகாமல்] ஊண் (உடம்பை) ஓம்பும் (காக்கும்) வாழ்க்கை மற்று மருந்தோ?

Si nobili loco nato honestas deficiat, num vita etiamtum corpus tuens, remedium erit?

969. மயிர்நீப்பின்வாழாக்கவரிமாவன்னா
ருயிர்நீப்பர் மானம்வரின் (௯)

ஒரு மயிரை நீப்பின் (இழந்து விட்டால்) வாழாத கவரிமாவை அன்னார் (ஒப்பவர்) — மானம் (வெட்கம்) வரின் (வந்தால்) — உயிரை நீப்பர் (விடுவார்).

Qui animali „*Caverima*“ dicto sunt similes — quod, si pilum amittat, non vult vivere — ubi dedecus venerit, potius vitam amittent.

970. இளிவரின்வாழாதமானமுடையா
ரொளிதொழுதேத்துமுலகு (௰)

இளி (அவமானம்) வந்தால் [உயிர்] வாழாத மானமுடையவரது ஒளி (புகழை) உலகம் தொழுது எத்தும்.

Pudentis illius, qui, si dedecus vencrit, vivere nolit, gloriam mundus adorans laudibus effert.

XCVIII.

பெருமை. Magnitudo.

971. ஒளியொருவற்குள்ளவெறுக்கையிளியொருவற்
கஃதிறந்து வாழ்துமெனல் (க)

ஒருவனுக்கு ஒளியாவது மனவெழுச்சி; ஒருவனுக்கு இளியாவது அஃது (அதுக்கொத்த செயலை) இறந்து (ஒழிந்து) வாழ்தும் (வாழ்வோம்) எனல் (என்று நினைத்தல்).

Splendor est animi elatio; dedecus, si quis dicat: sine illa lubet vivere.

972. பிறப்பொக்குமெல்லாவுயிர்க்குஞ்சிறப்பொ
வ்வா
செய்தொழில் வேற்றுமையான் (உ)

எல்லா [மக்கள்] உயிர்க்கும் பிறப்பு ஒக்கும்; செய்யும் தொழில்களது வேற்றுமையால் — (பெருமை சிறுமை என்னப்பட்ட) சிறப்பு ஒவ்வாது.

Omnibus hominibus ortus est similis; dignitas operum diversitate non est similis.

973. மேலிருந்துமேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல்லவர் (ஙு)

மேலல்லார் (சிறியவற்றை செய்கிறவர்) — மேலிருந்தும் (உயர்ந்த நிலத்தில் இருந்தாலும்) — மேலல்லர் (பெரியவராகார்); கீழல்லவர் (பெரியவற்றை செய்கிறவர்) — கீழிருந்தும் — கீழல்லார் (சிறியவராகார்).

Quamvis excelsum locum teneant, qui excelsum animum non habeant, excelsi non sunt; quamvis humilem locum teneant, qui humilem animum non habeant, humiles non sunt

974. ஒருமைமகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகினுண்டு (ச)

[மன] ஒருமையையுடைய [கற்புள்ள] மகளிர் (மாதரை) போல், பெருமையும் தன்னை தான் [காத்து] கொண்டு ஒழுகினால், உண்டு (நிற்கும்).

Si simplici animo mulieris instar magnitudo sese custodiat, manebit.

975. பெருமையுடையவராற்றுவாராற்றி
னருமையுடைய செயல் (ரு)

பெருமையுடையவர் அருமையுடைய செயல்களை [அவை செய்ய வேண்டிய] ஆற்றின் (வழியால்) ஆற்றுவார் (செய்வார்).

Magnitudine praediti recta via rara opera patrant.

976. சிறியாருணர்ச்சியுளில்லைப் பெரியாரைப்
பேணிக்கொள்வேமென்னுநோக்கு (சா)

பெரியவரை பேணிக்கொள்ளுவோம் (வழிபட்டுக்கொள்ளுவோம்) என்னும் நோக்கு (கருத்து) சிறியவரது உணர்ச்சியுள் (மனத்தில்) இல்லை.

Animis parvis numquam in animum venit: magnos magni facere volumus.

977. இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல்லவர்கட்படின் (எ)

சிறப்பும் தான் சீரல்லாதவரிட்த்து பட்டால் (உண்டாமானால்), இறப்பே (மிகுதியை) புரிந்த (உண்டாக்கும்) தொழிற்று ஆம் (தொழிலையுடையதாம்).

Si honos inhonestis obtingat, actiones insolentiae gignet.

978. பணியுமாமென்றும் பெருமைசிறுமை
யணியுமாந்தன்னை வியந்து (அ)

பெருமை எப்போதும் பணியும் (அடங்கி நடக்கும்); சிறுமை தன்னை வியந்து (மெச்சி) அணியும் சிறப்பிக்கும்.

Animus magnus semper se submittet; animus parvus se adorans amabit.

979. பெருமைபெருமிதமின்மைசிறுமை
பெருமிதமூர்ந்துவிடல் (கூ)

பெருமையாவது பெருமிதமின்மை (செருக்கில்லாதிருத்தல்); சிறுமையாவது பெருமிதம் ஊர்ந்து விடல் (செருக்கினை ஏற்றிக்கொண்டு அதிலே நின்று விடுதல்).

Animus magnus est magna de se non praedicare; animus parvus in eo consistit, quod magna de se praedicat.

980. அற்றமறைக்கும் பெருமைசிறுமைதான்
குற்றமேகூறிவிடும் (ώ)

பெருமை [பிறர்] அற்றம் (அவமானத்தை) மறைக்கும்; சிறுமை [பிறர்] குற்றத்தை கூறி விடும் (சொல்லி விடும்).

Magnus animus nuda tegit; animus parvus vitia divulgat.

XCIX.

சான்றாண்மை. Perfectio.

981. கடனென்ப நல்லவை யெல்லாங்கடனறிந்து
சான்றாண்மைமேற்கொள்பவர்க்கு (க)

கடன் அறிந்து சான்றாண்மை [நற்குணங்களால் நிறைந்து அவைகளை ஆளுதலை] மேற்கொள்பவர்க்கு நல்லவை எல்லாம் கடன் என்ப (என்பார்கள்).

Dicunt, qui officii sui sciens integritatem exercere suscipiat, ei omne bonum officium esse.

982. குணநலஞ்சான்றோர் நலனேபிறநல
மெந்நலத்துள்ளதூஉமன்று (உ)

சான்றோர் நலமாவது குணநலம் (குணங்களால் ஆகிய நலமே); பிற நலம் எந்தநலத்திலுமுள்ளதும் அன்று (அல்ல).

Animi bonitas bonum integritatis est; aliud quodcumque bonum bonitate caret.

983. அன்புநாணொப்புரவுகண்ணோட்டம்வாய்மை
யோ
டைந்துசால்பூன்றியதூண் (ங)

அன்பும் நாணமும் ஒப்புரவும் (உபகாரஞ் செய்தலும்) கண்ணோட்டமும் வாய்மையும் [ஆகிய] ஐந்து [குணங்கள்] சால்பிற்கு ஊன்றிய (அசையாமல் நிற்கும்) தூண்கள்.

Amor, verecundia, beneficentia, respectus, veracitas, haec quinque integritatis firmae columnae sunt.

984. கொல்லாநலத்தது நோன்மைபிறர்தீமை
சொல்லாநலத்ததுசால்பு (ச)

தவமாவது கொல்லாத நலத்தது (நலத்தினிடத்ததாம்); சால்பாவது பிறர் தீமையை சொல்லாத நலத்தினிடத்ததாம்.

Benignitas, quae non interficit, poenitentia est; benignitas, quae in alios nihil mali loquitur, est integritas.

985. ஆற்றுவாராற்றல் பணிதலதுசான்றோர்
மாற்றாரைமாற்றும்படை (ரு)

[ஒரு கருமத்தை] ஆற்றுவார் (ஆற்றுபவரது = செய்து முடிப்பவரது) ஆற்றல் (வலிமையாவது) பணிதல்; அது சான்றோர் மாற்றாரை (பகைவரை) மாற்றும் (வெல்லும்) படை [ஆம்].

Valor eorum, qui valent, animi submissio est; his armis vir integer hostibus resistet.

986. சால்பிற்குக்கட்டளை யாதெனிற்றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல் (௬)

சால்பிற்கு கட்டளை (உரைகல்) யாது என்றால், தோல்வியை (தோற்பை) துலயல்லார் கண்ணும் (இழிந்தவரிடத்தும்) கொள்ளுதல்.

Quis integritatis lapis lydius est? Etiam inferioribus victas dare manus.

987. இன்னாசெய்தார்க்குமினியவே செய்யாக்கா
லென்னபயத்ததோசால்பு (௭)

இன்னாதவைகளை செய்தவர்க்கும் இனியவைகளை செய்யாக்கால் (செய்யாவிட்டால்) சால்பு என்ன பயத்ததோ (பயனுடையதோ)?

Nisi in eos etiam, qui in te ingrata fecerunt, grata facias, quid prodest integritas?

988. இன்மையொருவற்கிளிவன்றுசால்பென்னுந்
திண்மையுண்டாகப்பெறின் (௮)

சால்பு என்னும் திண்மை (வலிமை தன்னிடத்து) உண்டாக பெற்றால், ஒருவனுக்கு இன்மை (வறுமை) இளிவு (இகழ்வு) அன்று.

Inopia dedecus non erit, si rebus abstinere possis, quae integritas dicitur.

989. ஊழிபெயரினுந்தாம்பெயரார்சான்றாண்மைக்
காழியெனப்படுவார் (௯)

ஊழி (காலம? — ஊழ்?) பெயரினும் (ஊழ் பெயர்ந்தாலும் =வேறுபட்டாலும்) தாம் பெயராதவர் சான்றாண்மைக்கு (சான்றாண்மை ஆகிய கடலுக்கு) ஆழி (கரை) என்னப்படுவார்.

Qui, etsi fatum (tempus?) mutetur, se ipsos non mutent, littus integritatis vocabuntur.

990. சான்றவர்சான்றாண்மைகுன்றினிருநிலந்தான்
றாங்காதுமன்னோ பொறை (௰)

சான்றவர் சான்றாண்மை குன்றின் (குறைந்தால்) இருநிலம் (பெரிய பூமி) தான் [தன்] பொறையை தாங்காது.

Si integritas integrorum deficiat, ampla terra suum onus sustinere non poterit.

C.

பண்புடைமை. Boni mores.

991. எண்பதத்தாலெய்தலெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு (௧)

யார்மாட்டும் (யாவரிடத்தும்) எளிய பதத்தால் (சமயத்தராயி ருக்கிறதினால்) பண்புடைமை என்னும் வழக்கு (நலவழியை) எய்தல் (அடைதல்) எளிது என்பார்கள்.

Viam bonorum morum facile inire poterit, qui omnibus facilem aditum praebcat.

992. அன்புடைமையான்ற குடிப்பிறத்தலிவ்விர
ண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு (௨)

அன்புடைமையும் ஆன்ற (நல்) குடியில் பிறத்தலும் இவ்விரண் டும் [ஆகிய] பண்புடைமை என்னும் வழக்கு [ஆம்]

Esse amore praeditum et nobili natum familia — haec duo bonorum morum sunt via.

993. உறுப்பொத்தன்மக்களொப்பன்றால் வெறு
த்தக்க
பண்பொத்தலொப்பதாமொப்பு (௩)

[உடம்பின்] உறுப்புகளால் ஒத்தல் — மக்களோடு ஒப்பு அன்று; ஒப்பதாம் (ஒப்பதாகிய = பொருந்துவதாகிய) ஒப்பா வது வெறு (நெருங்க ?) தக்க பண்பால் ஒத்தல்.

Corporis similitudo (vera) hominis similitudo non est; similitudo animi, qui castigari (?) potest, vera est similitudo.

994. நயனொடுநன்றிபுரிந்த பயனுடையார்
பண்புபாராட்டுமுலகு (௪)

நயனொடு (நீதியோடு) நன்றியை புரிந்த பயன் [படுதல்] உடையவரது பண்பை உலகம் பாராட்டும் (புகழும்).

Qui utilitatem in se contineant in eo positam, quod cum aequitate bona faciant, eorum bonos mores mundus laudabit.

995. நகையுள்ளுமின்னாதிகழ்ச்சி பகையுள்ளும்
பண்புளபாடறிவார்மாட்டு (௫)

இகழ்ச்சி நகையுள்ளும் விளையாட்டினிடத்தும் இன்னாது; பாடு (இயல்பை) அறிவார் மாட்டு (அறிபவரிடத்து) பகையுள்ளும் [இனிமையாகிய] பண்புள (பண்புகளே உண்டாவனவாம்).

Etiam in ridendo contemptus dolore afficit; etiam in irascendo qui mores sciunt ea facient, quae cum moribus conveniant.

996. பண்புடையார்ப்பட்டுண்டுலகமதுவின்றேன்
மண்புக்குமாய்வதுமன் (௬)

மண்புடையவரிடத்தே பட்டு உலகம் (உலகியல்) உண்டு (நிற்கும்); [அங்கே படுதல்] இன்றேல் (இல்லையாயின்), அது பண்ணிலே புக்கு (புகுந்து) மாய்வது (கெடுவதாம்).

In bene moratis mundus nititur; sin minus, certe in pulverem se abdens peribit.

997. அரம்போலுங்கூர்மையரேனுமரம்போல்வர்
மக்கட்பண்பில்லாதவர் (௭)

மக்கள் பண்பில்லாதவர் — அரத்தை போலும் கூர்மையயுடையரேயாயினும் — மரம் போல்வார்.

Quamvis limae acumen habeat, ligno est similis, qui humanis moribus careat.

998. நண்பாற்றாராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றாராதல்கடை (௮)

நட்பினை ஆற்றாராகி (செய்யாதவராகி) நயமில்லாதவைகளை செய்பவர்க்கும் பண்புகளை ஆற்றாதவராதல் கடை (இழிவாம்).

Etiam in eos, qui amicitiam non ineuntes injuriam faciant, ea facere, quae cum bonis moribus non conveniant, animi vilis est.

999. நகல்வல்லரல்லார்க்குமாயிருஞாலம்
பகலும்பாற்பட்டன்றிருள் (௯)

[ஒருவரோடு கலந்து] நகல் (மனமகிழ்தல்) வல்லவரல்லாதவர்க்கு மாயிரு (மிகவும் பெரிய) ஞாலம் பகலிலும் இருள் (இருளினிடத்தே) பால் பட்டன்று (கிடந்ததாம்).

Qui (ceteris) jucundos se praebere non possunt, iis terra late patens etiam interdiu in tenebris est (i. e. iis omnia sunt injucunda).

1000. பண்பிலான்பெற்றபெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமையாற்றிரிந்தற்று (௰)

பண்பில்லாதவன் பெற்ற பெரிய செல்வம் — நல்ல பால் கலத்தினது தீமையால் (குற்றத்தால்) திரிதல் போலும்.

Amplissimae fortunae, quas obtinent male morati, haud secus ac vasis vitio bonum lac, mutabuntur.

CI.

நன்றியில்செல்வம். Opulentia inutilis.

1001. வைத்தான்வாய்சான்ற பெரும்பொருளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்ததில் (க)
வாய் (வீடு) சான்ற (நிறைந்த) பெரிய பொருளை வைத்தான் (வைத்தவனாகி) அதனை உண்ணாதவன் (அனுபவியாதவன்) செத்தானும்; [அதனிடத்து அவனாலே] செய்ய கிடந்தது இல்லை.
Qui divitias domum replentes deponit iisque non fruitur, mortuus est; otiosae ibi jacent.

1002. பொருளானாமெல்லாமென்றீயாதிவறு
மருளானாமாணாப்பிறப்பு (உ)
பொருளால் எல்லாம் ஆம் (உண்டாகும்) என்று ஈயாது (கொடாது) இவறும் (உலோபஞ்செய்யும்) மருளான் (மயக்கத்தினால்) மாணா (மாட்சிமையில்லாத) பிறப்புஆம் (உண்டாகும்).
Stultitiae, qua quis cogitans, pecunia omnia fieri, nihil largiens tenax sit, vilem ortum pariet.

1003. ஈட்டமிவறியிசைவேண்டாவாடவர்
தோற்றநிலக்குப் பொறை (௩)
ஈட்டம் (சம்பாதித்தலை) விரும்பி புகழை விரும்பாத ஆடவர் (மக்களது) தோற்றம் நிலத்திற்கு பொறையாம்.
Eos (in scenam vitae) prodire, qui cumulandi cupidi laudem non cupiant, terrae onus est.

1004. எச்சமென்றென்னெண்ணுங்கொல்லோவொருவரா
னச்சப்படாஅதவன் (௪)
ஒருவரான் (ஒருவராலும்) நச்சப்படாதவன் (இச்சிக்கப்படாதவன்) [தான் செத்த இடத்து] எச்சமென்று (எச்சமாக = இங்கே ஒழிந்து நிற்பதாக) என் (எதை) எண்ணும் கொல்லோ (எண்ணுவானோ)?
A nemine dilectus quid, quaeso, ille relinquere cogitat?

1005. கொடுப்பதூஉந்துய்ப்பதூஉமில்லார்க்கடுக்கிய
கோடியுண்டாயினுமில் (௫)
கொடுப்பதும் அனுபவிப்பதும் இல்லாதவர்க்கு — அடுக்கிய கோடி [ப்பொருள்] உண்டாயினும் [ஒன்றும்] இல்லை.

Qui neque largiantur neque fruantur, etsi centena milia cumulata jaceant, nihil habent.

1006. ஏதம்பெருஞ்செல்வந்தான்றுவ்வான்றக்கார்
க்கொன்
றீதலியல்பிலாதான் (௬)

தான் துவ்வான் (அனுபவியாதவனாகி) தக்கவர்க்கு ஒன்றை ஈதலியல்பில்லாதவனுக்கு பெரிய செல்வம் ஏதம் (ஒரு நோய்).

Qui neque ipse fruatur neque ad largiendum bonis propensus sit, ei afflictio splendida fortuna est.

1007. அற்றார்க்கொன்றாற்றாதான் செல்வமிக நலம்
பெற்றாடமியண்மூத்தற்று (௭)

[பொருள்] அற்றவர்க்கு ஒன்றினை ஆற்றாதான் (கொடாதவனது) செல்வமானது மிகுந்த நலம் (அழகினை) பெற்றாள் (பெற்ற பெண்) தமியள் (கண்வனில்லாமல் தனியளாய்) மூத்தல் போலும்.

Qui egentibus nihil largiatur, ejus divitiae perinde se habent, ac si mulier pulcherrima sola senescat.

1008. நச்சப்படாதவன் செல்வநடுவூரு
ணச்சுமரம் பழுத்தற்று (௮)

[ஒன்றும் கொடாமையால்] நச்சப்படாதவனது செல்வம் நடுவூருள் (ஊர் நடுவுள்ள) நச்சு மரம் பழுத்தல் போலும்.

Fortunae (propter avaritiam) non dilecti perinde sunt, ac si in medio pago arbor venenata fructus ferat.

1009. அன்பொரீஇத்தற்செற்றறநோக்காதீட்டிய
வொண்பொருள் கொள்வார்பிறர் (௯)

அன்பு [செய்தலை] ஒரீஇ (ஒருவி = ஒழிந்து) தன்னை செற்று (வருத்தி) அறன் நோக்காது ஈட்டிய (சம்பாதித்த) ஒள் பொருளை கொள்பவர் பிறர்.

Splendida bona, quae quis cumulet, amorem deserens, se ipsum crucians, virtutem non respiciens, extranei heriditate accipient.

1010. சீருடைச்செல்வர் சிறுதுனிமாரி
வறங்கூர்ந்தனையதுடைத்து (௰)

சீருடைய செல்வமுடையவரது சிறு (சிறிய காலம் நிற்பதாகிய) துனி (வறுமை) மாரி (மேகம்) வறம் (வறுமை) கூர்ந்து (மிகுந்தது) அனையது (போல்வதோரியல்பினை) உடைத்து.

Brevis egestas divitis laude ornati similiter comparata est, ac si quando nubes egens fiat.

CII.

நாணுடைமை. Pudor.

1011. கருமத்தானாணுதனாணுத்திருநுத
னல்லவர்நாணுப்பிற (௧)

நாணுவது கருமத்தால் (கருமம் காரணமாக) நாணுதலாம்; பிற (மற்ற நாணம்) திருநுதலை (அழகிய நெற்றியை உடைய) நல்லவர் (நல்ல மகளிரது) நாணமாம்.

Aliquem actionis pudere pudor est; alius pudor est pudor honestarum mulierum pulchra fronte praeditarum.

1012. ஊணுடையெச்சமுயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமைமாந்தர்சிறப்பு (௨)

ஊணுடைமையும் எச்சமும் (ஒழிந்தவைகளும்) உயிர்க்கெல்லாம் வேறல்ல (பொதுவாம்); நாணமுடைமை மனிதருக்கு சிறப்பாம்.

Victus, possessio et reliqua (victus, vestitus et reliqua) omnibus animantibus sunt communia; possessio pudoris hominis insigne est.

1013. ஊனைக்குறித்தவுயிரெல்லா நாணென்னு
நன்மைகுறித்ததுசால்பு (௩)

உயிர்களெல்லாம் ஊனை [தமக்கிருப்பிடமாக] குறித்தன; சால்பு (நற்குணம்) நாணம் என்னும் நன்மையை குறித்தது.

Omnis vita corpus quaerit; perfecta virtus bonum pudoris quaerit.

1014. அணியன்றோ நாணுடைமைசான்றோர்க்கஃதி
ன்றேற்
பிணியன்றோபீடுநடை (௪)

சான்றோர்க்கு நாணமுடைமை அணி அன்றோ (அல்லவோ)? அது இன்றேல் (இல்லையாயின்) பீடு (பெருமித) நடை [கண்டவர்க்கு] பிணி (நோய்) அல்லவோ?

Nonne integris ornamentum est verecundia? Ubi deest, nonne fastidio est inflatum incedere.

1015. பிறர்பழியுந்தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதியன்னுமுலகு (௫)

பிறர் பழியையும் தம் பழியையும் [ஒப்பாக மதித்து] நாணுவாரை உலகம் நாணத்திற்கு உறைபதி (இருப்பிடம்) என்னும்.

Quem alieni atque proprii vitii pudet, eum mundus pudoris arcem vocat.

1016. நாண்வேலிகொள்ளாதுமன்னோவியன்ஞாலம்
பேணலர் மேலாயவர் (௬)

மேலாயவர் (மேலானவர்) நாணாகிய வேலி (காப்பை) கொள்ளாது (கொள்ள கூடாதாயின்) வியன் (பரப்பான்) ஞாலம் (பூமியை) பேணலர் (பேணார்).

Nisi pudorem munimentum possint sumere, vastam hanc terram non magni faciunt homines excelsi animi.

1017. நாணாலுயிரைத்துறப்பருயிர்ப்பொருட்டா
னாண்டுறவார் நாணாள்பவர் (௭)

நாணத்தை ஆள்பவர் (விடாது நடப்பவர்) நாணால் உயிரை துறப்பார் (நீக்குவார்); உயிர்ப்பொருட்டான் (உயிர்ப் பொருட்டால் = உயிர் அழியாமல் பொருட்டு) நாணத்தை துறவார்.

Pudentes pudoris causa vitam omittent, minime vero vitae causa pudorem.

1018. பிறர் நாணத்தக்கது தானாணானாயி
னறநாணத்தக்கதுடைத்து (௮)

பிறர் [கண்டாகிலும் கேட்டாகிலும்] நாண தக்கதை [ஒருவன்] தான் நாணான் ஆயின் (நாணாது செய்வான் ஆயின்) அறம் [அவனை விட்டு] நாண தக்கது (தக்க குற்றத்தை) உடையது.

Si te ipsum non pudeat quorum ceteros pudeat necesse est, hoc ita se habet, ut virtutem tui pudeat necesse sit.

1019. குலஞ்சுடுங்கொள்கை பிழைப்பினலஞ்சுடு
நாணின்மை நின்றக்கடை (௯)

கொள்கை (ஒழுக்கம்) பிழைப்பின் (வழுவினால்), குலத்தை சுடும் (கெடுக்கும்); நாணில்லாமை நின்ற இடத்து, [அது அவன்] நலம் [யாவையும்] சுடும் (அழிக்கும்).

Si mos dilabetur, (id) familiam tuam destruet; ubi habitat impudentia, bonum omne destruet.

1020. நாணகத்தில்லாரியக்கமரப்பாவை
நாணாலுயிர்மருட்டியற்று (௰)

அகத்து நாணத்தை இல்லாதவர் இயக்கம் (சஞ்சரிப்பு) மரத்தால் [செய்யப்பட்ட] பாவை நாணால் (கயிற்றினால்) உயிர் [உடையதாக] மருட்டியற்று (மயக்குதல் போலும்).

Qui in animo pudorem non habeat, ejus incessus perinde est ac si pupa lignea funiculo vitam simulet.

CIII.

குடிசெயல்வகை. Modus familiam promovendi.

1021. கருமஞ்செயவொருவன்கைதூவேனென்னும்
பெருமையிற் பீடுடையதில் (௧)

ஒருவன் கருமம் செய்ய „கை தூவேன் (விடேன்)“ என்னும் பெருமை போல் பீடுடையது (மேன்பாடுடையது) இல்லை.

Praestantia, qua quis dicat: ut negotium conficiam, manum non demitto, nullum decus majus est.

1022. ஆள்வினையுமான்றவறிவுமெனவிரண்டி
னீள்வினையானீளுங்குடி (௨)

ஆள்வினையும் (முயற்சியும்) ஆன்ற (நிறைந்த) அறிவும் என்னும் இரண்டின் நீள் (நீளும் ஒழியாத) வினையால் (தொழிலால்) குடி நீளும் (பெருகும்).

Virili industria et solida peritia — in his duabus assidue perseverando familia dilatabitur.

1023. குடிசெய்வலென்னுமொருவற்குத் தெய்வ
மடிதற்றுத்தான்முந்துறும் (௩)

குடியை [உயர] செய்வேன் என்னும் ஒருவனுக்கு தெய்வமானது மடி (உடையை) தற்று (இறுகவுடுத்திக்கொண்டு) தான் முந்துறும் (முற்பட்டு நிற்கும்).

Qui dicat: familiae meae volo operam praestare, ante eum deá (felicitatis) incedet, vestem succingens.

1024. சூழாமற்றானே முடிவெய்துந்தங்குடியைத்
தாழாதுஞற்றுபவர்க்கு (௪)

தமது குடியை தாழாது (தாமதியாமல்) உஞற்றுபவர்க்கு (உயர்த்த முயல்பவர்க்கு) [தொழில்] சூழாமல் (ஆலோசியாமல்) தானே முடிவு எய்தும் (பெறும்).

Qui sine intermissione familiae ʼserviant, iis sine cogitatione omnia sponte succedent.

1025. குற்றமிலனாய்க்குடிசெய்துவாழ்வானைச்
சுற்றமாச்சுற்றுமுலகு (௫)

குற்றமில்லாதவனாகி குடியை [உயர] செய்து வாழ்பவனை [அவனுக்கு] சுற்றமாக [வேண்டி] உலகத்தார் [போய் அவனை] சுற்றுவார்.

Qui sine culpa familiam suam augere studeat, ei tamquam consanguinitate conjunctus mundus se adjunget.

1026. நல்லாண்மையென்பதொருவற்குத்தான்பிறந்த
வில்லாண்மையாக்கிக் கொளல் (௬)

ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று சொல்லப்படுவது — தான் பிறந்த இல் (குடியை) ஆளுதல் தன்மையை [தனக்கு] ஆக்கி (உண்டாக்கிக்) கொள்ளுதல்.

Rectus ei animus virilis inesse dicetur, qui familiae, ex qua natus est, virilem operam tribuat.

1027. அமரகத்துவன்கண்ணர் போலத்தமரகத்து
மாற்றுவார்மேற்றே பொறை (௭)

அமரிடத்து [போர்தாங்குதல்] வன்கண்ணர் [மேலதாகுதல்] போல், பொறை (பாரம் பொறுத்தல்) தமரிடத்திலும் ஆற்றுபவர் (மேலதேயாம்).

Ut viri duri oculi in medio certamine, ita qui inter suos laborant, pondus sustinent.

1028. குடிசெய்வார்க்கில்லைப்பருவமடிசெய்து
மானங்கருதக் கெடும் (௮)

குடியை [உயர] செய்பவர்க்கு பருவம் [காலநியதி] இல்லை; [ஏனெனில்] மடி (சோம்பல்) செய்து மானத்தையும் கருதிலுல் — கெடும்.

Qui domum suam velint augere, eis nulla est opportunitas (expectanda). Si tardi sint et superbiam cogitent, pessum dabitur.

1029. இடும்பைக்கேகொள்கலங் கொல்லோ குடும்ப
த்தைக்
குற்றமறைப்பானுடம்பு (௯)

குடும்பத்தை குற்றம் (குறை) மறைப்பான் (அடையாமல் காப்பவனது) உடம்பு இடும்பைக்கே (முயற்சி துன்பத்திற்கே) கொள்கலம் (பாத்திரம்) அல்லவோ?

Qui familiam suam a detrimento tueri velit, nonne corpus ejus vas est labore repletum?

1030. இடுக்கண்கால்கொன்றிட வீழுமடுத்தூன்று
நல்லாளிலாதகுடி (௰)

அடுத்து (முட்டுக்கொடுத்து) ஊன்றும் (தாங்கும்) நல்ல ஆண் [மகன்] இல்லாத குடி இடுக்கண் (துன்பம்) கால் (அடியை) கொன்றிட (கொல்ல = அழிக்க) வீழும் (கெடும்).

Nisi vir impiger sustentans ei adstet, calamitate fundamentum subruente, domus corruet.

CIV.

உழவு. Agricultura.

1031. சுழன்றுமேர்ப்பின்னதுலகமதனா
லுழந்துமுழவே தலை (௧)

உலகு [வருத்தமில்லாத தொழில்களை செய்து] சுழன்றும் (திரிந்தும்) ஏர் [உடையவர்] பின்னது (வழியதாயிற்று); அதனாலே — உழந்தும் (வருத்தமுற்றும்) — உழவே தலை.

Mundus, quantumvis se torqueat, aratrum sequitur. Itaque aratio, quamvis ardua, caput est.

1032. உழுவாருலகத்தார்க்காணியஃதாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து (௨)

உழுபவர் அஃது (அவ்வுழுதலை) ஆற்றாது (செய்ய மாட்டாமல்) எழுவாரை (பிற தொழில்களை மேற்கொள்பவரை) எல்லாம் பொறுத்து (தாங்கி) உலகத்தார் [ஆகிய தேர்க்கு] ஆணி (அச்சாணி) ஆவார்.

Agricolae in (curru) mundi clavus sunt axem firmans, quia (ceteros) omnes qui (arandi) laborem non sustinentes alia tractant, sustenant.

1033. உழுதுண்டுவாழ்வாரே வாழ்வார்மற்றெல்லாந்
தொழுதுண்டுபின்செல்பவர் (௩)

உழுது உண்டு (சீவனம் பண்ணி) வாழ்பவரே [தமக்குரியராய்] வாழ்வார்; மற்றவர் எல்லாரும் [பிறரை] தொழுது உண்டு [அவரை] பின் செல்பவர்.

Qui arando vivunt, vivunt; ceteri omnes, qui adorando vivunt, post alios eunt.

1034. பலகுடைநீழலுந்தங்குடைக்கீழ்க்காண்ப
ரலகுடைநீழலவர் (௪)

அலகு (நெல்லையுடைய) நீழலவர் (தண்ணளியுள்ளவர்) பல [வேந்தர்] நீழலும் (குடை நிழலில் தங்கிய பூமியையும்) தம் [வேந்தர்] குடைக்கீழே காண்பார்.

Qui frumenti divites latam umbram diffundant, umbellarum multarum umbram sub umbella sua videbunt.

1035. இரவாரிரப்பார்க்கொன்றீவர்கரவாது
கைசெய்தூண்மாலையவர் (௫)

கையால் செய்து ஊண் (உண்ணுதலை) மாலையவர் (இயல்பாக உடையவர்) இரவார்; இரப்பவர்க்கு [அவர் வேண்டியது] ஒன்றை கரவாது (ஒளிக்காது) ஈவர் (ஈவார் = கொடுப்பார்).

Qui manu laborantes cibum habeant natura sibi proprium, neque ipsi mendicant et mendicis largiuntur, nihil occultantes.

1036. உழவினார்கைம்மடங்கினில்லைவிழைவதூஉம்
விட்டேமென்பார்க்குநிலை (௬)

உழுதலையுடையவரது கை மடங்கினால், [யாவரும்] விழைவதூஉம் (விரும்பும் உணவும்) விட்டேம் (துறந்தோம்) என்பவர்க்கும் [துறவறத்திலே] நிலை (நிற்றல்) இல்லை.

Si aratorum manus componuntur, etiam iis, qui dicunt „omnia, quae expetunt ceteri, nos dimisimus“ (i. e. ascetae), nullum erit fundamentum.

1037. தொடிப்புழுதிகஃசாவுணக்கிற்பிடித்தெருவும்
வேண்டாதுசாலப்படும் (௭)

[உழுதவன்] ஒரு தொடி (பலம்) புழுதி கஃசா (காற்பலமாம் படி) உணக்கின் (காயவிட்டால்) பிடித்து (பிடியில் அடங்கிய) எருவும் வேண்டாது [பயிர்] சாலப்படும் (செழித்து விளையும்).

Si terrae unciam, ut quarta pars unciae fiat, exsicces, (ager) erit ferax, ut fimo non opus habeat quantum manus possit capere.

1038. ஏரினுநன்றாலெருவிடுதல்கட்டபி
னீரினுநன்றதன்காப்பு (௮)

ஏரினும் (உழுதலினும்) எரு விடுதல் (போடுகிறது) நல்லது; கட்ட (களை பிடுங்கிய) பின், அதின் காப்பு நீரினும் (நீர் பாய்ச்சலினும்) நன்று.

Praestat fimum projicere quam arare; si agrum mundaris, praestat custodire quam irrigare.

1039. செல்லான்கிழவனிருப்பினிலம்புலந்
தில்லாளினூடிவிடும் (௯)

கிழவன் (நிலத்துக்கு உரியவன்) செல்லாதவனாகி [வீட்டில்] இருந்தால், நிலம் இல்லாளின் (மனைவி போல்) புலந்து (வெறுத்து) ஊடி (பிணங்கி) விடும்.

Si herus ipse non visitans procul absit, ager succensens sese subtrahet mulieri similis.

1040. இலமென்றசைஇயிருப்பாரைக்காணி
னிலமென்னுநல்லாணகும் (௰)

இலம் (வறியேம்) என்று அசைஇ இருப்பாரை (சோம்பி இருப்பவரை) கண்டால், நிலம் என்னும் நல்லாள் (பெண்) நகும் (நகுவாள் = சிரிப்பாள்).

Si quos videat, qui: pauperes sumus! dicentes otiosi sedeant, bona mulier, quae arvum dicitur, ridebit.

CV.

நல்குரவு. Paupertas.

1041. இன்மையினின்னாததியாதெனினின்மையி
னின்மையேயின்னாதது (க)

இன்மையின் (வறுமை போல்) இன்னாதது (இனிமையில்லாதது) யாது என்றால், வறுமை போல் இன்னாதது வறுமையே.

Si quaeris, quid tam acerbum sit quam inopia; (respondeo:) tam acerba quam inopia est sola inopia. (Vel: Si quaeris, quid acerbius sit quam inopia, respondeo: inopia acerbior sola est inopia'; i. e. inopia acerbius nihil; sed sunt inopiae gradus).

1042. இன்மையெனவொருபாவி மறுமையு
மிம்மையுமின்றிவரும் (உ)

இன்மை என்னும் ஒரு (ஒப்பற்ற) பாவி — மறுமை [இன்பமும்] இம்மை [இன்பமும்] இன்றி (இல்லையாக) — வருவான்.

Unica illa peccatrix — inopia — ita venit, ut et haec et altera vita intereant.

1043. தொல்வரவுந்தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குரவென்னுநசை (௩)

நல்குரவு (வறுமை) என்னும் நசை (ஆசை) தொல் (பழைய) [குடி] வரவினையும் தோலும் (அழகினையும்) தொகையாக (ஒரு சேர) கெடுக்கும்.

Et veterem nobilitatem et (nobile) decus aviditas, quae inopia dicitur, simul destruit.

1044. இற்பிறந்தார்கண்ணேயுமின்மையிளிவந்த
சொற்பிறக்குஞ்சோர்வுதரும் (௪)

இன்மை இல் (உயர்ந்த குடி) பிறந்தவரிடத்தேயும் இளிவந்த (இழிவான) சொல் பிறக்கும் சோர்வினை தரும்.

Etiam nobili loco natis paupertas stuporem affert, qui vilem sermonem parit.

1045. நல்குரவென்னுமிடும்பையுட்பல்குரைத்
துன்பங்கள் சென்றுபடும் (௫)

நல்குரவு என்னும் இடும்பையுள் பல் (பலவாகிய) துன்பங்கள் சென்று (வந்து) படும் (விளையும்).

In uno malo paupertatis multi dolores emergunt.

1046. நற்பொருணன்குணர்ந்து சொல்லினுநல்கூ
ர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும் (கஈ)

நல்ல [நூல்] பொருளை நன்கு (நன்றாய்) உணர்ந்து சொன்னு லும், நல் கூர்ந்தார் (வறுமைப்பட்டவரது) சொல்லின் பொருள் சோர்வு படும் (இல்லாமையாகும்).

Quamvis quae optimam habent sententiam optime sciat et eloquatur, verba pauperis inania sunt.

1047. அறஞ்சாரா நல்குரவீன்றதாயானும்
பிறன்போல நோக்கப்படும் (எ)

அறம் (தருமம்) சாரா (சேராத) நல்குரவு [உள்ளவன் தன்னை] ஈன்றதாயானும் (பெற்றதாயினுலும்) பிறன் போல் நோக்கப்படுவான்.

Inopia virtutis inops a propria matre extranea habetur.

1048. இன்றும்வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றதுபோலுநிரப்பு (அ)

நெருநலும் (நேற்றும்) கொன்றது போலும் (கொன்றது போல் துன்பம் செய்த) நிரப்பு (வறுமை) இன்றும் (இன்றைக்கும்) வருவது கொல்லோ (வரக்கடவதோ)?

Paupertas, quae heri me quasi interfecit, — num hodie quoque ventura est?

1049. நெருப்பினுட்டுஞ்சலுமாகுநிரப்பினுள்
யாதொன்றுங்கண்பாடரிது (கூ)

நெருப்பினுள் துஞ்சலும் (தூங்கலும்) ஆகும் (கூடும்) நிரப்பினுள் (வறுமையுள்) யாதொன்றுலும் கண்பாடு (தூங்குதல்) அரிது.

In medio igne somnus capi potest; in paupertate vel minimum oculos claudere difficile est.

1050. துப்புர்வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங்காடிக்குங்கூற்று (ய)

துப்புரவு [உணவு] இல்லாதவர் துவர (முழுதும்), துறவாமை [பிறர் வீட்டிலுள்ள] உப்பிற்கும் காடிக்கும் (காடி நீருக்கும்) கூற்று (யமன்).

Nisi cibi inopes omnibus renuncient (moriendo scil.), id sali et oryzae (aliorum) mortem afferet (illorum mendicatione scil.).

CVI.

இரவு. Mendicatio.

1051. இரக்கவிரத்தக்கார்க்காணிற்கரப்பி
னவர்பழி தம்பழியன்று (க)

இர தக்கார் (இரத்தற்கு ஏற்புடையவரை) கண்டால், இரக்க (இரக்கலாம்); [அவர்] கரப்பின் (மறைத்தால்) அவர்க்கு பழியே, தமக்கு பழி அல்ல.

Si videas, a quibus peti possit, petas; si negaverint, ipsis, non tibi, vitio erit.

1052. இன்பமொருவற்கிரத்தலிரந்தவை
துன்பமுறு அவரின் (உ)

இரந்தவை துன்பம் உறுஅ (உறுமல் = அடையாமல்) வந்தால், ஒருவனுக்கு இரத்தலும் இன்பமே.

Suave erit etiam petere, si petitum sine molestia venit.

1053. கரப்பிலாநெஞ்சிற்கடனறிவார்முன்னின்
றிரப்புமோரேஎருடைத்து (ங)

கரப்பிலா (ஒளித்தலில்லாத) நெஞ்சின் (நெஞ்சமுடைய) கடன் அறிபவர் முன் நின்று இரப்பும் (யாசித்தலும்) ஓர ழகை உடைத்து.

Si coram iis te sistas, qui animo negandi nescio officium suum sciant, ipsa mendicatio pulchritudinem quandam habebit.

1054. இரத்தலுமீதலேபோலுங்கரத்தல்
கனவிலுந் தேற்றுதார்மாட்டு (ச)

[தமக்கு உள்ளதை] கரத்தல் (மறைத்தலை) கனவிலும் (சொப்பனத்திலும்) தேற்றுதார் மாட்டு (அறியாதவரிடத்து) இரத்தலும் ஈதலே போலும்.

Coram iis, qui etiam in somnio negare nesciant, ipsa mendicatio largitioni erit par.

1055. கரப்பிலார்வையகத்துண்மையாற்கண்ணின்
றிரப்பவர்மேற்கொள்வது (ரு)

இரப்பவர் [பொருளுடையவர்க்கு] கண் (முன்) நின்று [இரத்தலை] மேற்கொள்வது — கரப்பில்லாதவர் வையகத்து (உலகத்தில்) உண்மையால் (இருக்கின்ற படியினாலே).

Quia in mundo sunt, qui negare nesciant, (pauperes) suscipiunt petentes oculis se sistere.

1056. கரப்பிடும்பையில்லாரைக்காணினிரப்பி
டும்பை
யெல்லாமொருங்குகெடும் (௬)

கரப்பு [ஆகிய] இடும்பையில்லாதவரை கண்டால், நிரப்பு [ஆகிய] இடும்பை (வறுமையினால் உண்டாகும் துன்பங்கள்) எல்லாம் ஒருங்கு கெடும்.

Si inveneris, qui malum tenacitatis non habeat, malum paupertatis statim interibit.

1057. இகழ்ந்தெள்ளாதீவாரைக்காணின்மகிழ்ந்
துள்ள
முள்ளுளுவப்பதுடைத்து (௭)

[தம்மை] இகழ்ந்து எள்ளாது (இழிவு சொல்லாமல்) கொடுப்பவரை கண்டால், [இரப்பவரது] உள்ளம் மகிழ்ந்து உள்ளுள்ளே உவப்பது (உவக்கும் தன்மையை) உடையது.

Si invenitur, qui sine objurgatione et conviciis largiatur, id ita comparatum est, ut (petentis) animus in intimo pectore diffusus exsultet.

1058. இரப்பாரையில்லாயினீர்ங்கண்மாஞால
மரப்பாவை சென்றுவந்தற்று (௮)

இரப்பவர் இல்லையாயின் ஈர்ங்கண் (குளிர்ந்த இடமுடைய) மா (பெரிய) ஞாலம் — [உயிரில்லாமல் சூத்திரத்தால் ஆடும்] மரப்பாவை சென்று வந்தால் போலும்.

Si nulli essent mendici, ampla terra locis frigidis plena pupae ligneae instar iret et rediret.

1059. ஈவார்கண்ணென்னுண்டாந்தோற்றமிரந்து
கோண்
மேவாரிலாஅக்கடை (௯)

இரந்து கோள் (கொள்ளுதலை) மேவார் (விரும்புவார்) இலாஅ (இல்லாத) கடை (வழி) ஈவார் கண் (கொடுப்பவரிடத்து) என் தோற்றம் (புகழ்) உண்டாம்?

Quae largientibus esset laus, si deessent, qui vellent petentes accipere?

1060. இரப்பான்வெகுளாமைவேண்டுநிரப்பிடும்பை
தானேயுஞ்சாலுங்கரி (௰)

இரப்பவன் வெகுளாமை (கோபியாதிருக்க) வேண்டும்; நிரப்பிடும்பை தானேயும் [கரப்பவனது குற்றத்துக்கு] சாலும் (சிறந்த) கரி (சாட்சியே).

Mendico acerbitas non convenit; acerbitas paupertatis ipsa locuples testis est (avari culpae).

CVII.

இரவச்சம். Mendicationem timere.

1061. *கரவாதுவந்தீயுங்கண்ணன்னார்கண்ணு*
மிரவாமை கோடியுறும் (க)

கரவாது (ஒளியாது) உவந்து (மகிழ்ந்து) ஈயும் (கொடுக்கும்) கண்ணன்னார் கண்ணும் (கண் போல் சிறந்தவரிடத்தும்) இரவாமை (இரவாது வறுமை படுதல்) — [இரந்து செல்வம் அடைதலில்] கோடியுறும் (மடங்கு நன்றாகும்).

Etiam ab iis, qui (praestantia) oculis similes sine ulla tenacitate summo gaudio largiantur, nihil mendicare tanti est, quanti decies centena milia.

1062. *இரந்துமுயிர்வாழ்தல் வேண்டிற்பரந்து*
கெடுகவுலகியற்றியான் (உ)

உலகத்தை இயற்றியான் (இயற்றினவன் = உண்டாக்கினவன்) இரந்தும் உயிர்வாழ்தல் (சீவனம் செய்தலே) வேண்டின் (வேண்டி விதித்தானாயின்) [அக்கொடியவன் தானும் எங்கும்] பரந்து (திரிந்து) கெட கடவான்!

Si effector mundi (homines) etiam mendicantes vivere velit, (ipse) errabundus intereat!

1063. *இன்மையிடும்பையிரந்துதீர்வாமென்னும்*
வன்மையின்பாட்டதில் (௩)

இன்னாமையினால் [வரும்] இடும்பையை இரந்து தீர்வாம் (நீக்குவோம்) என்னும் வன்மை போல் வன்பாட்டது (வலிமைபாடுடையது) இல்லை.

Duro ejus pectore, qui dicat: ,,mendicando malum paupertatis amovebo", durius nihil est.

1064. *இடமெல்லாங்கொள்ளாத்தகைத்தேயிடமி*
ல்லாக்
காலுமிரவொல்லாச்சால்பு (௪)

இடம் (பொருள்) இல்லாத காலும் (போதும்) இரவுக்கு ஒல்லா (உடன்படாத) சால்பு (நிறைவு) — இடம் (உலகம்) எல்லாம் கொள்ளாத தகைத்தே (பெருமையுடைத்தே).

Virtus, quae etiam cum nullus ei locus est, mendicare non possit, praestantiam habet, quam omnis locus capere non possit.

1065. *தெண்ணீரடுபுற்கையாயினுந்தாடந்த*
துண்ணலினூங்கினியதில் (௫)

தெளிந்த நீர் [போல்] அடு (சமைத்த) புற்கை (கூழே) ஆயி

னும் தாள் (முயற்சி) தந்ததை உண்ணலின் (உண்ணுதற்கு) ஊங்கு (மேல்) இனியது இல்லை.

Etiamsi jusculum sit aquae liquidae simile, nil dulcius est quam labore partum comedere.

1066. ஆவிற்குநீரென்றிரப்பினுநாவிற்
கிரவினிளிவந்ததில் (௬)

ஆவிற்கும் (பசுவுக்கும்) நீர் [வேண்டும்] என்று இரப்பினும் (இரந்தாலும்) இரவின் (இரவுபோல்) நாவிற்கு இளி (அவமானம்) வந்தது இல்லை.

Quamvis tantummodo aquam vaccae mendicet, nihil linguae turpius obvenit quam mendicare.

1067. இரப்பனிரப்பாரை யெல்லாமிரப்பிற்
கரப்பாரிரவன்மினென்று (௭)

இரப்பின் (இரந்தால்) கரப்பவரை இரவன்மின் (இரவாதிருங்கள்) என்று இரப்பவரை எல்லாம் [நான்] இரப்பன் (இரப்பேன்).

Ab omnibus mendicis mendico: si mendicetis, ab homine tenaci nolite mendicare.

1068. இரவென்னுமேமாப்பிற்றோணிகரவென்னும்
பார்தாக்கப்பக்குவிடும் (௮)

இரவு என்னும் ஏமாப்பில் [காவலற்ற] தோணி கரவு என்னும் பார் (வன்னிலத்தோடு) தாக்க — பக்கு விடும் (பிளந்து போம்).

Vacillans navicula, quae dicitur mendicatio, frangetur, si ad scopulum, qui negatio dicitur, allidatur.

1069. இரவுள்ளவுள்ளமுருகுங்கரவுள்ள
வுள்ளதூஉ மின்றிக் கெடும் (௯)

[இரப்பவன்] இரவு (இரந்து நிற்றலின் கொடுமையை) உள்ள (நினைக்க) — உள்ளம் உருகும்; கரவை (இல்லை என்றலை) உள்ள — [உள்ளம்] உள்ளதூஉம் (நினைப்பும்) இன்றி கெடும்.

Si mendicationem intus sentias, mens intima liquescet; si negationem intus sentias, peribit, memoriam perdens.

1070. கரப்பவர்க்கியாங்கொளிக்குங் கொல்லோ
விரப்பவர்
சொல்லாடப் போஒமுயிர் (௰)

கரப்பவர்க்கு [உயிர்] யாங்கு (எவ்விடத்து) ஒளிக்கும்? இரப்பவர் சொல்லாட (விண்ணப்பம் செய்ய) உயிர் போம்.

Ubinam, quaeso, (vita) negantis se abscondet? In mendicante, ut vocem emittit, vita discedit.

CVIII.

கயமை. Vilium hominum conditio.

1071. மக்களேபோல்வர் கயவரவரன்ன
வொப்பாரியாங்கண்டதில் (க)

கயவர் (கீழவர்) மக்களே போல்வார்; அவர் அன்ன (மக்களை யொத்தது போன்ற) ஒப்பாரி (ஒப்பு) யாம் (நாம்) கண்டதில்லை.

Viles hominibus sunt similes; quod ipsis simile sit, (vel: quod tam simile sit, sc. hominibus, quam illi) numquam vidi.

1072. நன்றறிவாரிற் கயவர்திருவுடையர்
நெஞ்சத்தவலமிலர் (உ)

நன்றியை அறிபவரின் கயவர் திரு (நன்மை) உடையவர்! [ஏனெனில்] நெஞ்சத்தில் அவலம் (கவலை) இல்லாதவர்.

Boni sciente felicior est homo vilis; in animo cura est vacuus.

1073. தேவரனையர் கயவரவருந்தா
மேவன செய்தொழுகலான் (ங)

கயவர் தேவர் அனையர் (போல்வார்) — அவரும் தாம் மேவன் (விரும்புமவைகளை) செய்து ஒழுகலான் (ஒழுகலால் = நடத்தலால்).

Diis similes sunt homines viles; quia etiam illi, quae concupiscunt, statim efficiunt.

1074. அகப்பட்டியாவாரைக்காணினவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங்கீழ் (ச)

கீழ்மை [தன்னில்] அகபட்டியாவாரை (குறைந்த பட்டியாய் நடப்பவரை) கண்டால், அவரின் மிகப்பட்டு (மேன்பட்டு) செம்மாக்கும் (இறுமாக்கும் = அகங்கிரிக்கும்).

Viles si videant, qui vilem agant vitam, statim se majores aestimant et valde gloriantur.

1075. அச்சமேகீழ்களதாசாரமெச்ச
மவாவுண்டேலுண்டாஞ்சிறிது (ரு)

கீழோரது ஆசாரத்திற்கு [காரணம்] அச்சமே! எச்சம் (அது ஒழிந்தால்) அவா (அவாவப்படும் பொருள்) உண்டேல் (உண்டாமாகில்) சிறிது உண்டாம்.

Virtus (?) vilium timor est; praeterea, si cupiditas eos stimulat, aliquantulum (boni) efficietur.

1076. அறைபறையன்னர் கயவர்தாங்கேட்ட
மறைபிறர்க்குய்த்துரைக்கலான் (சா)

தாங்கள் கேட்ட மறையை உய்த்து (கொண்டு போய்) பிறர்க்கு உரைக்கலால் — கயவர் அறையப்படும் பறை போல்வார்.

Homines viles pulsato tympano sunt similes; auditum enim secretum statim aliis renuntiant.

1077. ஈர்ங்கைவிதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கையரல்லாதவர்க்கு (எ)

கயவர் — கொடிறு (கதுப்பினை) உடைக்கும் கூன் (வளைந்த) கையினையுடையவர் அல்லாதவர்க்கு — [தாம் உண்டு] ஈர்ங்கை (பூசிய கையை) விதிரார் (தெறியார்).

Viles homines cavent, ne humidam manum (cui fortasse aliqua grana adhaerent) excutiant, nisi coram iis, qui habent manum compressam buccas percussuram.

1078. சொல்லப்பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப்பயன்படுங்கீழ் (அ)

சான்றோர் — [குறையை] சொல்ல — [இரங்கி] பயன்படுவர் (பிரயோசனப்படுவார்); கீழ்மை — கரும்பை போல் கொல்ல (நருக்க) — பிரயோசனப்படும்.

Sapientes utiles erunt, si verbum loquaris; homines viles erunt utiles, si ut arundinem sacchari eos tundas.

1079. உடுப்பதூஉமுண்பதூஉங் காணிற்பிறர்மேல்
வடுக்காணவற்றாகுங்கீழ் (கூ)

கீழ்மை உடுத்தலையும் உண்ணுதலையும் கண்டால், [அவை பொறாமல்] பிறர் மேல் வடு (குற்றத்தை) காண வற்றாகும் (வல்லதாகும்).

Vilis homo, si vestem et cibum videat, ad vitia aliorum videnda admodum est idoneus.

1080. எற்றிற்குரியர் கயவரொன்றுற்றக்கால்
விற்றற்குரியர் விரைந்து (ய)

கயவர் எதற்கு உரியவர்? ஒன்று (ஒரு துன்பம்) உற்ற கால் (இடத்து) விரைந்து [தம்மை பிறர்க்கு] விற்றலுக்கு உரியவரே.

Ad quid aptus est homo vilis? Ad se ipsum statim vendendum, si quid ei acciderit, est aptissimus.

காமத்துப்பால்.

DE AMORE.

1081.

1082.

1083.

1084.

CIX.

தகையணங்குறுத்தல். Puellae pulchritudine turbari.

1081. அணங்குகொலாய்மயில்கொல்லோ கனங்
குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு (க)

கனத்த குழை (குழையென்றகாதாபரணமுடையவள்) அணங்கு கொல் (தெய்வப்பெண்ணோ)? ஆய் (தெரிந்துகொள்ளப்பட்ட) மயிலோ? மாதர் கொல் (மானிடப்பெண்ணோ)? என் நெஞ்சு (மனம்) மாலும் (மயங்குகின்றது).

Dominus dominam adspiciens dubitatione afficitur:
Quae graves inaures gerit num dea est? num selecta pavo? num puella (terrestris)? animus meus perturbatur.

1082. நோக்கினாணோக்கெதிர் நோக்குதாக்கணங்கு
தானைக்கொண் டன்னதுடைத்து (உ)

நோக்கினாள் (அழகையுடைவள்) நோக்கு (என் பார்வைக்கு) எதிரே நோக்குதல் தாக்கணங்கு (இலக்குமி) தானை (சேனையை) கொண்டன்னது (கொண்டு வந்தது போலும் தன்மையை) உடைத்து.

Dominus, eam puellam (terrestrem) esse intelligens, ejus adspectu commotam sollicitudinem describit:
Facie pulchra meam intueri faciem perinde est, ac si dea pugnax (Lakshmi) admoveret aciem.

1083. பண்டறியேன்கூற்றென் பதனையினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க்கட்டு (ந)

கூற்றனென்பதனை பண்டு (முன்) அறியேன் (நான் கண்டு அறியவில்லை); இனி அறிந்தேன்; பெண் தகையால் (தகையுடனே = குணங்களுடனே) பேர் (பெரிய) அமர் (போர் செய்கின்ற) கட்டு (கண்களையுடையது).

Mors quondam mihi ignota fuit; nunc novi; cum natura muliebri oculos habet valde pugnaces.

1084. கண்டாருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்ட
கைப்
பேதைக்கமர்த்தனகண் (ச)

பெண் தகையுடைய பேதைக்கு (பெண்ணிற்கு) கண்களானவை கண்டார் (கண்டவரது) உயிரை உண்ணும் தோற்றத்தால் அமர்த்தன (மாறு கொண்டிருந்தன).

Adspectu, qui adspicientis consumit vitam, oculi puellae cum natura muliebri pugnant.

1085. கூற்றமோகண்ணோ பிணையோமடவர
ணோக்கமிம்மூன்றுமுடைத்து (௫)

மடவரல் (இளம் பெண்ணின்) நோக்கம் 'யமனோ கண்ணோ பிணையோ (பெண் மானோ)? இம்மூன்றின் குணங்களையும் உடைத்து.

Num mors? num oculus? num cerva? adspectus puellae tria illa simul possidet.

1086. கொடும்புருவங்கோடா மறைப்பினடுங்கஞர்
செய்யலமன்னிவள்கண் (௬)

கொடும் புருவங்கள் [இவ்வளவு அழகோடு] கோடா (வளையாமல்) மறைத்தால்; இவள் கண்கள் நடுங்குதற்கு அஞர் (துன்பத்தை) செய்யல (செய்யாவாம்).

Flexa (crudelia?) supercilia, si non flexa tegerent (illius oculos) ii, tremulum dolorem certe non parerent.

1087. கடாஅக்களிற்றின்மேற் கட்படாமாதர்
படாஅமுலைமேற்றுகில் (௭)

இம்மாதருடைய படாஅ (சாயாத) முலைகள் மேல் [இட்ட] துகிலானது கடா அக்களிற்றின் (மதயானையின்) மேல் [இட்ட] கண் (முக) படாம் (சீலையே).

Quod frontem elephantis libidine saevientis tegit tegumen, puellae pectoris tegumen est.

1088. ஒண்ணுதற்கோஒ வுடைந்ததேஞாட்பினு
ணண்ணாருமுட்குமென்பீடு (௮)

ஞாட்பினுள் (போர்க்களத்துள்) நண்ணாரும் (பகைவரும்) உட்கும் (அஞ்சும்) என் பீடு (வலிமை) ஒண்ணுதற்கு (ஒள்ளிய நெற்றிற்கு) ஓ! ஓ! உடைந்தது.

Vae mihi! vis mea, quam etiam hostes in pugna timebant, illius candida fronte infracta est.

1089. பிணையேர்மடநோக்கு நாணுமுடையாட்
கணியெவனோ வேதிலதந்து (௯)

பிணையேர் (பெண்மான் போன்ற) மடமை [பொருந்திய] நோக்கினையும் நாணத்தையும் உடையாட்கு (உடையவளுக்கு) எதில் (வேறுபரணங்களை) தந்து அணி (அணிதல்) எவனோ (என்ன பிரயோசனம்)?

Ei, quae teneram faciem venustate cervae atque pudorem habet, alia induere, quid esset ornamenti?

1090. உண்டார்கணல்லதடுநறாக்காமம்போற்
கண்டார்மகிழ்செய்தலின்று (௰)

அடுநறா (காய்ச்சப்பட்ட மதுவானது) உண்டவரிடத்து அல்லாமல் காமம் போல் கண்டவரிடத்து மகிழ் செய்தல் (மகிழ்ச்சி தருதல்) இன்று.

Dominus mentem dominae perspiciens dicit:

Mustum bibentes solos, non, ut amor, intuentes laetitia afficit.

CX.

குறிப்பறிதல். Mentem intelligere.

1091. இருநோக்கிவளுண்கணுள்ளதொருநோக்கு
நோய்நோக்கொன்றந்நோய் மருந்து (௧)

இவளுடைய [மை] உண்ணும் கண்களில் உள்ளது (இருக்கின்றது) — இரண்டு நோக்கு: ஒரு நோக்கு நோய் [செய்யும்] நோக்காம்; ஒன்று அந்நோக்கு மருந்தாம்.

Dominus dominae mentem ex illius vultu intelligit:

In nigro illius oculo duo adspectus insunt: unus dolori est; alter hujus doloris est remedium.

1092. கண்களவுகொள்ளுஞ் சிறுநோக்கங்காமத்திற்
செம்பாகமன்றுபெரிது (௨)

[இவளுடைய] கண்கள் களவு கொள்ளும் சிறிய பார்வை காமத்தில் (மெய்யுறு புணர்ச்சியில்) செம்பாகம் (ஒத்த பாதி அளவு) அன்று; [அதனிலும்] பெரிது (மிகும்).

Brevis adspectus, quem oculus illius surripit, ad foedus amoris jungendum non dimidiam partem confert, sed majorem.

1093. நோக்கினாணோக்கியிறைஞ்சினாளஃதவள்
யாப்பினுளட்டியநீர் (௩)

அவள் நோக்கினாள், நோக்கி தலை இறைஞ்சினாள் (குனிந்தாள்); அது யாப்பினுள் (புணர்ச்சி ஆகிய பயிருள்) அட்டிய (வார்த்த) நீர் [ஆயிற்று].

Dominus dominae mentem ex illius ore pudoreque intelligit:

Adspexit et adspiciens demisit caput. Ea aqua est, quam foederi nostro instillavit.

1094. யானோக்குங்காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்லநகும் (௪)

யான் (நான்) நோக்கும் காலை (போது) நிலத்தை நோக்கு-
வாள், [நான்] நோக்காத கால் (போது) தான் நோக்கி மெல்ல
நகுவாள்.

Dominus dominae mentem ex illius pudore ac laetitia intelligit:
Me illam intuente, ea intuetur terram; me illam non intuente ea me intuens leniter arridet.

1095. குறிக்கொண்டுநோக்காமையல்லாலொருகண்
சிறக்கணித்தாள் போல நகும் (௫)

[நேரே] குறிக்கொண்டு நோக்காமை அல்லால் (மாத்திரமே
யல்லது) ஒரு கண்ணை சிறக்கணித்தாள் (சுருக்கினவள்) போல்
நகுவாள்.

Recta me non intuens sed uno oculo quasi connivens subridet.

1096. உறாஅதவர்போற்சொலினுஞ் செறாஅர்சொல்
லொல்லையுணரப்படும் (௬)

உறாஅதவர் (அயலார்) போல் [கடுஞ்சொல்] சொன்னாலும்;
[உள்ளே] செறாஅர் (பகையாதவர்) சொல் ஒல்லை (சீக்கிரம்)
அறியப்படும்.

Dominus a socia remotus illius mentem intelligens secum dicit:
Etiamsi dicant, quasi sint non amici, sermo eorum, qui sunt non inimici, facile agnoscetur.

1097. செறாஅச்செறுசொல்லுஞ்செற்றார்போனோ
க்கு
முறாஅர்போன்றுற்றார்குறிப்பு (௭)

[உள்ளே] செறாஅ (செறாது = பகையாமல்) செறு சொல்
லும் (சொல்லும் கடுஞ்சொல்லும்) செற்றார் போல் (பகைத்த
வர் போன்ற) நோக்கும் உறாஅர் (அயலோர்) போன்று (போ
லிருந்து) உற்றார் (நட்பாயினவர்) குறிப்பு.

Sermo (simulatione) inimicus (revera) non inimicus et vultus iratum imitans eorum sunt indices, qui, inimicitiam simulantes, amici sunt.

1098. அசையியற்குண்டாண்டோரேஎர்யானோக்கப்
பசையினள்பைய நகும் (௮)

யான் (நான்) நோக்க (இரந்து பார்க்க) பசையினள் [இரங்
கும் தன்மையுள்ள அவள்] பைய (மெல்ல) நகுவாள், அசையி
யற்கு (அசைந்த இயலையுடையவளுக்கு) ஆண்டு (அந்நகை
யினிடத்து) ஒரே (ஒப்பில்லாத) ஏர் (அழகு) உண்டு.

Lenis illa intuenti mihi leniter arridet; mobilem naturam habenti (illi) in ea re unica venustas est.

1099. ஏதிலார்போலப்பொதுநோக்குநோக்குதல்
காதலார்கண்ணேயுள (௯)

அயலோர் போல் [ஒருவரை ஒருவர்] பொது நோக்கு (பார்வையாக) நோக்குதல் காதலார் கண் (ஆசையையுடையவரிடத்து) உண்டு.

Socia secum loquitur:

Ut alienas inter se aspicere in iis, qui desiderio amoris affecti sunt, deprehenditur.

1100. கண்ணொடுகண்ணிணை நோக்கொக்கின்வாய்ச்
சொற்க
ளென்னபயனுமில (௰)

[இருவருள் ஒருவரது] கண்களோடு [ஒருவர்] கண்ணிணை (கண்கள்) நோக்கு (நோக்கில்) ஒக்கின் (ஒக்குமாயின்), வாய்ச்சொற்கள் எப்பயனுமில்லாதவைகளாம்.

Si oculi cum oculis adspectu congruunt, oris sermo prorsus inutilis est.

CXI.

புணர்ச்சிமகிழ்தல். De conjunctione laetari.

1101. கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியுமைம்புலனு
மொண்டொடிகண்ணேயுள (க)

கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்து (மோந்தும்) உற்று (தீண்டியும்) அறியும் (அனுபவிக்கும்) ஐம்புலன்களும் ஒண் (ஒள்ளிய) தொடிகண்ணே (வளையையுடையவளிடத்தே) உண்டாயின்.

Naturali i. e. clandestino conjugio facto dominus dicit:

Quaecumque visu, auditu, gustu, olfactu, tactu sentiuntur, puellae insunt fulgentem armillam habenti.

1102. பிணிக்குமருந்துபிறமனணியிழை
தன்னோய்க்குத்தானேமருந்து (௨)

பிணிகளுக்கு மருந்தாவன [அவைகளுக்கு] பிற (மாறுகிய குணத்தையுடையனவாம்); அணியிழை (அணிந்த ஆபரணத்தையுடையவள்) தன் (தன்னால் ஆகிய) நோய்க்கு தானே மருந்துமாயினள்.

Dominus ad locum constitutum veniens dicit:

(Ceteroquin) a morbo remedium differt; pulchris gemmis ornata doloris, quem attulit, ipsa remedium est.

1103. தாம்வீழ்வார்மென்றோட்டுயிலினினிதுகொ
றாமரைக்கண்ணானுலகு (௩)

தாம் வீழ்வார் (விரும்பும் மகளிரது) மென்றோள் (மெல்லிய தோள்களிடத்து) துயிலின் (துயில் போல்) தாமரைக்கண்ணனது உலகம் இனிதோ?

Socio, qui dixit: ad „magnum gaudium“ (i. e. gaudium coeleste) destinatum „parvo gaudio“ (i. e. gaudio terrestri) te dedere te non decet — dominus respondet:

Num dulcius est coelum dei cum oculis nelumbio similibus (i. e. Vishni) quam dormire in molli humero ejus, quam expetas.

1104. நீங்கிற்றெறூஉங்குறுகுங்காற்றண்ணென்னுந்
தீயாண்டுப்பெற்றாளிவள் (௪)

[தன்னை] நீங்கினால் தெறூஉம் (சுடும்); குறுகும் (நெருங்கும்) கால் (போது) தண்ணென்னும் (குளிரும்); [இப்படிப்பட்ட] தீயை யாண்டு (எங்கே) இவள் பெற்றாள்.

Dominus, post conjunctionem per sociam factam, dicit:

Recedentem urit, accedentem refrigerat: talem ignem unda nacta est?

1105. வேட்டபொழுதினவையவைபோலுமே
தோட்டார்கதுப்பினாடோள் (௫)

தோட்டு ஆர் கதுப்பினாள் (மலரால் நிறைந்த கூந்தலையுடையவளது) தோள்கள் [மிகவும் இனிய பொருள்களை பெற] வேட்ட (விரும்பிய) பொழுதின் (போது) அவை அவை போலுமே (அவ்வப்பொருள்கள் போல் வந்து இன்பம் செய்யும்).

Humeri nodum habentis floribus repletum, similes sunt, ac si appetendi tempore haec et illa accipias.

1106. உறுதோறுயிர்தளிர்ப்பத்தீண்டலாற்பேதைக்
கமிழ்தினியன்றனதோள் (௬)

[தன்னை பெறாது வாடிய என்] உயிர் [பெற்று] உறுந்தோறும் தளிர்க்கும் படி தீண்டலால் பேதைக்கு தோள்கள் அமிழ்தினாலே இயன்றன (செய்யப்பட்டன).

Quoties tango, vita mea tactu germinat. Ex ambrosia igitur facti sunt puellae humeri.

1107. தம்மிலிருந்துதமதுபாத்துண்டற்றா
லம்மாவரிவைமுயக்கு (எ)

அம் (அழகிய) மா (பொன் நிறத்தையுடைய) அரிவை (மாதின்) முயக்கு (புணர்ச்சியானது) தம்மில் (தமக்குரிய மனையில்) இருந்து தமது (தமக்குண்டான பொருளை) பாத்து (தென்புலத்தார் முதலானவர்களுக்கு பங்கிட்டு) உண்டற்று (தமது பங்கை உண்பது போல் இன்பம் செய்யும்).

Socia domino dixerat: „communi virtuti domesticae te accommodantem, qua in sua quisque domo suo sorte fructur, illam publice domum ducere te oportet.“ Dominus (abnuens) respondet:

Puellam aureo colore amplecti aeque est (dulce) atque in domo sua distribuentem suis frui.

1108. வீழுமிருவர்க்கினிதேவளியிடை
போழப்படாஅமுயக்கு (அ)

[ஒரு பொழுதும்] வளியிடை (காற்றினல்) போழப்படாஅ (இடையறுக்கப்படாத) புணர்ச்சியானது [ஒருவரை ஒருவர்] வீழும் (விரும்புகிற) இருவர்க்கும் இனிதே.

Socia domino dixerat: „quia aequalem habens amorem conjugium expetis, quod separari nequeat, illam domum ducere te oportet.“ Dominus (abnuens) respondet:

Duobus inter ipsos appetentibus, amplexus, quem nullus ventus separet, abunde satisfacit.

1109. ஊடலுணர்தல்புணர்தலிவைகாமங்
கூடியார் பெற்றபயன் (கூ)

ஊடலும் உணர்தலும் புணர்தலும் [என்கிற] இவை [விவாகம் செய்து கொண்டு] காமத்தை [இடைவிடாது] கூடியார் (கூடினவர்) பெற்ற பயன்கள்.

Socia domino dixerat: „quia perpetuum, inquit, conjugium, quod occultare non opus sit, gratum est, illam domum ducere te oportet.“ Dominus abnuit, commoda conjugii ironice extollens:

Inter se succensere, in concordiam redire, conjungi, eorum sunt bona, qui amorem jungunt.

1110. அறிதோறறியாமைகண்டற்றாற்காமஞ்
செறிதோறுஞ்சேயிழைமாட்டு (ய)

அறி (கற்றுக்கொள்ளும்) தோறும் [முன்னை] அறியாமை கண்டற்று (காணப்படுதல் போல்) செறி (புணரும்) தோறும் சே (செய்ய = அழகிய) இழை மாட்டு (ஆபரணத்தையுடையவளிடத்து) காமம் [காணப்படுகின்றது].

Dominus, qui cum domina se conjunxit, et jam eam in perpetuum secum ducit, cum sine illa vivere non possit, secum dicit:

Ut quoties scientia augeris, inscientia apparet, ita ad pulchris gemmis ornatam quoties accedis, desiderium apparet.

CXII.

நலம்புனைந்துரைத்தல். Venustatem laudare.

1111. *நன்னீரைவாழியனிச்சமேநின்னினு*
மென்னீரள்யாம்வீழ்பவள் (க)

அனிச்சமே நல்ல (மெல்லிய) நீரை (குணமுடையே)! [ஆகி லும்] யாம் (எம்மால்) விரும்பப்பட்டவள் நின்னினும் (உன் னிலும்) மெல்லிய நீரள் (குணத்தையுடையவள்) — [ஆகை யால்] வாழி (வாழ்வாயாக!)

Dominus.

Post conjugium clandestinum factum dominus dicit:

Tenera natura es, vale flos Anitscha! quam ego desidero, teneritate tibi praestat.

1112. *மலர்காணின்மையாத்தி நெஞ்சேயிவள்கண்*
பலர்காணும்பூவொக்குமென்று (உ)

நெஞ்சே! இவள் கண்களை பலராலும் காணப்படும் பூ (மலர் கள்) ஒக்கும் என்று [நினைத்து], மலர்களை கண்டால், மயங் கிறாய்.

Dominus, postquam ad locum constitutum venit, dicit:

Anime mi, quos multi vident flores, illius oculis similes esse putans, cum flores videris, perturbaberis.

1113. *முறிமேனிமுத்தமுறுவல் வெறி நாற்றம்*
வேலுண்கண்வேய்த்தோளவட்கு (௩)

வேய் (மூங்கில் போலும்) தோளவட்கு (தோளவளுக்கு = தோள்களையுடையவளுக்கு) முறி (தளிர் போலும்) மேனி (உடலும்) முத்தம் [போலும்] முறுவல் (பல்லும்) வெறி (நல்ல வாசனை போலும்) நாற்றமும் வேல் [போலும்] உண் கண்ணும் [இருக்கின்றன].

Dominus socio, qui suscepit conveniendi aditum parare, dominae naturam describit:

Humeros, habenti bambas arundinem, corpus germen, dens margarita, spiritus suavis odor, niger oculus jaculum est.

1114. காணிற்குவளை கவிழ்ந்துநிலனோக்கு
மாணிழைகண்ணொவ்வேமென்று (௪)

குவளை காணின் (காண கூடுமானால்) மாண் (மாட்சிமைப்பட்ட) இழை கண் (ஆபரணங்களையுடையவளது கண்களை) ஒவ்வோம் என்று [நாணத்தினால்] கவிழ்ந்து (தலை குனிந்து) நிலத்தை நோக்கும்.

Dominus per socium cum domina congressus dicit:

Si flos loti illam videret, capite demisso terram intuens diceret: oculos fulgentes gemmas habentis non aequo.

1115. அனிச்சப்பூக்கால்களையாள் பெய்தாள்நுசுப்
பிற்கு
நல்லபடாஅபறை (௫)

[தன் மென்மை நினையாமல்] அனிச்சப்பூவை — கால்களையாள் (தாள்களையாதவளாகி) – பெய்தாள் (சூடினாள்); நுசுப்பிற்கு (இடைக்கு) நல்ல (நல்லவையாகிய) பறைகள் படாஅ (ஒலியா) — (பாரம் பொறுமையால் இடை முரியும்; அப்போது செத்தவர்க்கு உரிய நெய்தற்பறையே ஒலிக்கும்).

Dominus in loco ad interdiu conveniendum constituto illius ornatum florum adspiciens, dicit:

Caulibus non sublatis florem Anitscha induit medio corpori; faustum non sonabit tympanum (i. e. corpus pondus non sustinens collabetur; tum tympanum funebre sonabit).

1116. மதியுமடந்தைமுகனுமறியா
பதியிற்கலங்கியமீன் (௬)

மீன்(நட்சத்திரங்கள்)மதியும்(சந்திரனையும்)மடந்தை (மாது) முகத்தையும் அறியாமல் பதியின் (நிலையினின்று) கலங்கிய (கலங்கி திரிந்தன).

In loco ad noctu conveniendum constituto lunam adspiciens dicit:

Lunam et puellae faciem non dignoscentes stellae conturbatae loco cesserunt.

1117. அறுவாய்நிறைந்தவவிர்மதிக்குப்போல
மறுவுண்டோமாதர்முகத்து (௭)

[முன்] அறு (குறைந்த) வாய் (இடம்) நிறைந்த, அவிர் (விளங்கும்) மதிக்கு (சந்திரனிடத்து இருக்கின்ற) போல் மாதர் முகத்தினிடத்து மறு (களங்கம்) உண்டோ?

Ut in luna, cujus lumen, postquam decrevit, crescit (i. e. semper mutatur) num in facie puellae macula est?

1118. மாதர்முகம்போலொளிவிடவல்லையேற்
காதலைவாழிமதி (௮)

மதி (சந்திரனே) மாதர் முகம் போல் ஒளி விட (வீச) வல்லையேல் (வல்லாயாகில்) [நீயும் என்னால்] காதலை (விரும்பப்படுவாய்) [நீ ஒளி வீச கூடாத படியினால்), வாழி (வாழ்வாயாக)!

Si posses ut facies puellae radios fundere, amica mea esses. Vale, luna!

1119. மலரன்னகண்ணாண்முகமொத்தியாயிற்
பலர்காணத்தோன்றன்மதி (௯)

சந்திரனே! மலர் அன்ன (போலும்) கண்களையுடையவளது முகத்தை ஒத்தி (ஒக்க வேண்டும்) ஆயின் (ஆனால்), பலர் காண தோன்றல் (தோன்றாதே).

Luna! si faciem puellae, quae oculos habet similes floribus, adaequare cupis, cave, ne a multis conspiciaris.

1120. அனிச்சமுமன்னத்தின்றூவியுமாத
ரடிக்குநெருஞ்சிப்பழம் (௰)

அனிச்ச மலரும் அன்ன பறவையின் தூவி (இறகும்) மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம் [போல் வருத்தம் செய்யும்].

Socia proponit, ut una eant. Dominus abnuit, difficultatem ostendens:

Flos Anitscha et pluma cygni pedi puellae fructus (spinae) „neruntschi“ sunt.

CXIII.

காதற்சிறப்புரைத்தல். Eximium amorem manifestare.

1121. பாலொடுதேன்கலந்தற்றேபணிமொழி
வாலெயிறூறியநீர் (௧)

பணி (மெல்லிய) மொழியையுடையவளது வால் (வெண்). எயிறு (எயிற்றில் = பல்லில்) ஊறிய நீரானது பாலோடு தேன் கலந்தற்று (கலந்தாற் போலும்).

Dominus exeunte congressu amorem suum ostendit:

Aqua, quae manat in candidis dentibus placidam vocem habentis, similis est, ac si cum melle lac misceatur.

1122. உடம்பொடுயிரிடையென்னமற்றன்ன
மடந்தையோடெம்மிடைநட்பு (௨)

மாதோடு எம்மிடை (எம்மிடத்து உண்டாகிய) நட்பு (சினேகங்கள்) — உடம்போடு உயிரிடத்து என்ன (எப்படிப்பட்டனவோ) — அன்ன (அப்படிப்பட்டனவாகும்).

Dominus de metu discessus dicit:

Qualis est amor animae erga corpus, talis est amor meus erga puellam.

1123. கருமணியிற்பாவாய்நீ போதாயாம்வீழுந்
திருநுதற்கில்லையிடம் (௩)

[என் கண்ணின்] கருமணியில் [இருக்கிற] பாவையே! நீ [அவ்விடம் விட்டு] போதாய் (போவாயாக) யாம் (எம்மால்) வீழும் (விரும்பப்படுகின்ற) திரு (அழகிய) நுதற்கு (நெற்றியையுடையவளுக்கு) இடம் இல்லை.

Domina abeunte dicit:

Pupilla in oculo, abi! quam desidero pulchram frontem habenti locus non est.

1124. வாழ்தலுயிர்க்கன்னளாயிழைசாத
லதற்கன்னணீங்குமிடத்து (௪)

ஆய் (ஆராய்ந்து கொள்ளப்பட்ட) இழை (ஆபரணத்தையுடையவள்) [புணருமிடத்து] உயிருக்கு வாழ்தல் அன்னள் (போலாகின்றாள்) நீங்குமிடத்து அதற்கு சாதல் அன்னள் (போலாகின்றாள்).

Dominus in loco interdiu conveniendo constituto, congressione facta dicit:

Quod vita est animae, idem mihi est selecto ornatu fulgens; discedens est instar mortis.

1125. உள்ளுவன்மன்யான் மறப்பின் மறப்பறியே
னொள்ளமர்க்கண்ணாள்குணம் (௫)

யான் (நான்) ஒள் (ஒள்ளிய) அமர் (போர் செய்யும்) கண்ணுடையவளது குணங்களை மறப்பின் (மறந்தேனாயின்), உள்ளுவன் (உள்ளுவேன் = நினைப்பேன்); ஆனால் மறப்பு (மறத்தல்) அறியேன்.

Sociae interroganti: a negotiis rediens num nostri recordaberis? dominus respondet:

Recordarer, si oblivisscerer; sed puellae oculo pugnaci fulgentis oblivisci non possum.

1126. கண்ணுள்ளிற்போகாரிமைப்பிற்பருவரார்
நுண்ணியரெங்காதலவர் (௬)

எங்காதலவர் (எம்முடைய தலைவர்) கண்ணுள்ளில் (கண்ணுள்ளே நின்றும்) போகார்; [அறியாமல் கண்] இமைத்தால் [அதனால்] பருவரார் (வருந்தார்); நுண்ணியர் (காணப்படாத நுட்பமானவர்).

Domina.

Dum dominus negotii causa abest, domina timens, ne socia indolem ejus reprehendat, submissa voce, sed ita tamen, ut illa audiat, secum dicit:

Ex intimo meo oculo non discedit; si oculum claudo, nihil patitur, perquam sublimis est a me amatus.

1127. கண்ணுள்ளார்காதலவராகக்கண்ணு
மெழுதேங்கரப்பாக்கறிந்து (௭)

காதலவர் கண்ணுள்ளார் (இருக்கின்றவர்) ஆக (ஆதலால்) கண்ணினையும் [மையினால்] எழுதேம் — [அவ்வளவு காலமும் அவர்] கரப்பாக்கு (மறைதலை) அறிந்து.

Oculo meo insidet amatus; itaque oculum non pingo, de occultatione cogitans.

1128. நெஞ்சத்தார்காதலவராக வெய்துண்ட
லஞ்சுதும்வேபாக்கறிந்து (௮)

காதலவர் நெஞ்சத்தார் (நெஞ்சுள் இருக்கின்றவர்) ஆக (ஆதலால்) வெய்து (சூடுள்ளதை) உண்டல் (உண்ணுதற்கு) அஞ்சுதும் (அஞ்சுகிறோம்) [அவர் அதனாலே] வேபாக்கு (சூடு பெறுதலை) அறிந்து.

Visceribus meis insidet amatus, itaque timeo cibos calidos edere de adustione cogitans.

1129. இமைப்பிற்கரப்பாக்கறிவலனைத்திற்கே
யேதிலரென்னுமிவ்வூர் (௯)

இமைத்தால் [உள்ளிருக்கிற காதலர்] கரப்பாக்கு (மறைதல்) அறிவேன் [ஆதலால் இமையேன்]; அனைத்திற்கே (அவ்வளவுக்கே) இவ்வூர் [தூங்காத நோய் செய்த அவர்] ஏதிலர் (அன்பில்லாதவர்) என்னும்.

Dum dominus abest, ut sumtus nuptiales comparet, socia ei vitio tribuit, quod tam diu exspectare cogitur. Illa respondet:

Oculo claudendo me illum occultare scio; nihilominus „en crudelem illum (somnum relictae eripientem)!“ dicit hoc oppidum.

1130. உவந்துறைவருள்ளத்துளென்றுமிகந்துறைவ
ரேதிலரென்னுமிவ்வூர் (௰)

உள்ளத்துள் என்றும் (எப்போதும்) உவந்து உறைவர் (வாசஞ் செய்கிறார்); [அதனை அறியாமல்] இவ்வூர் ஏதிலர் (அன்பில்லாதவராக) இகந்து (பிரிந்து) உறைவர் (இருக்கிறார்) என்னும்.

In visceribus meis laetus commoratur; „alienus factus procul commoratur"; dicit hoc oppidum.

CXIV.

நாணுத்துறவுரைத்தல். De pudore abjiciendo dicere.

1131. காமமுழந்துவருந்தினார்க்கேம
மடலல்லதில்லைவலி (க)

காமத்தை அனுபவித்து [பின் அது பெறாமல்] வருந்தினவர்க்கு ஏமம் (காப்பாக) மடல் (மடன்மா = புலம்பல்) அல்லது வலியது இல்லை.

Dominus procul se commorari non amplius perferens dicit:

Qui amore ruebantur et nunc cruciantur dolore, iis „equus palmyrae" (i. e. lamentatio) manet refugium, aliud auxilium est nullum.

1132. நோனாவுடம்புமுயிருமடலேறு
நாணினை நீக்கி நிறுத்து (உ)

[அவ்வருத்தத்தை] நோனா (பொறாத) உடம்பும் உயிரும் மடல் ஏறும் (புலம்பும்) — நாணினை நீக்கி நிறுத்து (ஒழித்து விட்டு).

Socia illum dehortoatur, ne equum palmyrae conscendat, dicens: „quo es pudore id conficere non potes." Dominus respondet:

Non perferens, corpus cum anima equum palmyrae conscendit pudore deposito.

1133. நாணொடுநல்லாண்மைபண்டுடையேனின்று
டையேன்
காமுற்றாரேறுமடல் (௩)

நாணத்தோடு மிகுந்த ஆண்மையையும் பண்டு (முன்னே) உடையேன்; இன்று காமமுற்றவர் ஏறும் மடலை உடையேன்.

Sociae dicenti: „qui tibi est, animus virilis cum pudore conjunctus, id conficere non poteris“ dominus respondet:

Animus virilis ac pudor olim mihi crant propria; nunc equus, quo vehuntur amantcs, mihi proprius est.

1134. காமக்கடும்புனலுய்க்குமேநாணொடு
நல்லாண்மை யென்னும் புணை (௪)

காமம் என்னும் கடிய புனல் (வெள்ளமானது) நாணமும் நல்லாண்மையும் [ஆகிய] புணை (தெப்பத்தை) உய்க்குமே (கொண்டு போகுமே).

Sociac dicenti „animus virilis ac pudor in flumine, quod est impctus amoris, navis sunt; eidem non cedunt,“ dominus respondet:

Amoris vehemens flumen navem abripit, quae est animus virilis cum pudorc conjunctus.

1135. தொடலைக்குறுந்தொடிதந்தாண்மடலொடு
மாலையுழக்குந்துயர் (௫)

மாலை [காலத்தில்] உழக்கும் (அனுபவிக்கும்) துயர் (துன்பத்தையும்) மடலையும் தொடலை (மாலை போல் தொடர்ந்த) குறுந்தொடி (சிறிய வளையலையுடையவள்) தந்தாள்.

Socia domino dieit: „en impatientiam illam, qua cupis cquum palmyrac conscenderc, quomodo incidisti? Dominus respondet:

Parvam armillam habens corollae similcm cum „equo palmyrae“ dolorem mihi dedit vespere perfcrendum.

1136. மடலூர்தல்யாமத்துமுள்ளுவேன்மன்ற
படலொல்லாபேதைக்கென்கண் (௬)

பேதைக்கு (மாது காரணமாக) என் கண்கள் படல் (நித்திரை) ஒல்லா (பொருந்தாவாம்); யாமத்தும் (பாதியிரவிலும்) மடல் ஊர்தல் (புலம்பலையே) உள்ளுவேன் (நினைப்பேன்).

Sociac dicenti: tempus „cquum palmyrae“ conscendendi hodie praeteriit. Dominus rcspondet:

De „cquo palmyrae“ conscendendo etiam media noctc cogitabo; propter stultam puellulam illam cilia mea submitti nequeunt.

1137. கடலன்னகாமமுழந்துமடலேறாப்
பெண்ணிற்பெருந்தக்கதில் (௭)

கடலன்ன (கடல்போன்ற == கரையற்ற) காம [நோயை] அனுபவித்தும் மடல் எறாமல் [பொறுத்திருக்கிற] பெண்ணின் (பெண்ணை போல்) மிகுந்த தகுதியையுடையது இல்லை.

Socia offensa, quod „stultam puellulam“ dicit, domino: „sapientes viri nonne multo plùs perpeti possunt quam stultae mulieres?“ Dominus respondet:

Majoris animi nemo est quam mulier, quae, quamvis amore vexctur, cum oceano comparanda, „equum palmyrac“ non conscendat.

1138. நிறையரியர்மன்னளியரென்னாதுகாம
மறையிறந்துமன்றுபடும் (௮)

நிறையால் அரியர் [என்று அஞ்சாமலும்] மன்னளியர் என்னாது (என்று இரங்காமலும்) காமம் மறை (மறைத்தலை) இறந்து (கடந்து) [சபையிடத்து] மன்றுபடும் (வெளிப்படும்).

Domina, cui crescente custodia crescit desiderium, dicit:

„Natura sumus ingenuac ct admodum tenerae.“ Id non respiciens, amor secretum egrediens in lucem prodit.

1139. அறிகிலாரெல்லாருமென்றேயென்காம
மறுகின்மறுகுமருண்டு (௯)

[நான் முன் அடங்கியிருக்கையால்] எல்லாரும் [என்னை] அறிகிலார் (அறிந்திலர்) என்று என் காமமானது மறுகில் (தெருவில்) மருண்டு (மயங்கி) மறுகும் (சுழல்கின்றது).

„Nemo novit“, ita cogitans amor meus in plateis perturbatus circumerrat.

1140. யாங்கண்ணிற்காணநகுபவறிவில்லார்
யாம்பட்டதாம்படாவாறு (௰)

நான் கண்ணால் காண அறிவில்லாதவர் [என்னை] நகுப (நகுவார் = சிரிக்கின்றார்) — நான் பட்டவைதாம் படாத ஆறே (படியால்).

Socia, dominae succensens, quod illius statum tristem derisit, secum dicit:

Ut oculis meis videam, me derident inscii — quia, quod ego patior, illi non patiuntur.

CXV.

அலரறிவுறுத்தல். Rumorem indicare.

1141. *அலரெழவாருயிர்நிற்குமதனைப்*
பலரறியார்பாக்கியத்தால் (க)

அலர் (பலர் அறிந்து தூற்றல் = பழி கூறல்) எழ [அவளை பெறுது வருந்துகின்ற என்] அரிய உயிர் [அவளை பெற்றது போல்] நிற்கும் (நிலை பெறும்); அதனை பாக்கியத்தால் (நல்லூழால்) [தூற்றுகின்ற] பலரும் அறியார்.

Socia domino, qui congressu nocturno praetermisso postero die adest, de rumore oppidanorum certiorem facit et de nuptiis interrogat. Dominus respondet:

Rumore (ad conjugium nostrum maturandum idoneo) surgente, animus meus confirmatur. Prospera fortuna vulgus id nescit.

1142. மலரன்னகண்ணாளருமையறியா
தலரெமக்கீந்ததிவ்வூர் (உ)

மலர் போலும் கண்களையுடையவளது [அடைதற்கு] அருமையை அறியாது இந்த ஊரானது அலர் [கூறலை] எமக்கு [உபகாரமாக] ஈந்தது (கொடுத்தது).

(Puellae) quae oculos habet floribus similes, raram naturam ignorans, hoc oppidum rumore suo nos donavit.

1143. *உறுஅதோவூரறிந்தகௌவையதனைப்*
பெறுஅதுபெற்றன்னநீர்த்து (௩)

ஊர் அறிந்த கௌவை (அலரானது) எனக்கு உறுஅதோ (இராதோ)? அதனை (புணர்ச்சியை) பெறுஅது (பெறுதிருந்தே) பெற்றன்ன (பெற்றது போலும்) நீர்த்து (குணமுடைத்து).

Nonne sermo maledicus per urbem datus adest? Hic ita se habet, quasi non impetratum jam impetratum sit.

1144. கௌவையாற்கௌவிதுகாமமதுவின்றேற்
றவ்வென்னுந்தன்மையிழந்து (௪)

[என்] காமம் கௌவியால் (அலரால்) கௌவிது (பெருகும்); அது இன்றேல் (இல்லையாயின்) [தனது] தன்மை இழந்து தவ்வென்னும் (சுருங்கிப்போகும்).

Sermonibus maledicis amor crescit, si deessent, suavitate amissa marcesceret.

1145. களித்தொறுங்கள்ளுண்டல்வேட்டற்றாற்காமம்
வெளிப்படுந்தோறுமினிது (௫)

களிக்கும் தோறும் கள்ளுண்டலை வேட்டற்று (விரும்புதல் போல்) காமமானது வெளிப்படும் தோறும் இனிதாம்.

Ut quo quis magis mero se complet eo magis merum bibere desiderat, ita amor meus quo notior eo suavior.

1146. கண்டதுமன்னுமொருநாளலர்மன்னுந்
திங்களைப்பாம்புகொண்டற்று (௬)

[தலைவனை நான்] கண்டது (காண பெற்றது) ஒரு நாளே! [அதனால் உண்டான] அலரானது திங்களை (சந்திரனை) பாம்பு கொண்டாற்போலும்.

Domina, quae propter obstantia impedimenta et congressum nocturnum praetermissum cum domino conjungi non potuit, dum ille extra claustra manet, cum socia sermonem confert. Illam de rumore vulgi certiorem factam de nuptiis interrogat:

(Eum) videre — unus dies! rumor similis est, ac si serpens lunam corripiat (i. e. omnium oculi in me se dirigant).

1147. ஊரவர்கௌவையெருவாகவன்னைசொன்
னீராகநீளுமிந்நோய் (௭)

இந்நோய் [ஆகிய பயிர்] ஊரவர் [எடுக்கின்ற] அலர் எருவாக [வும் அதை கேட்டு கோபித்து] அன்னை (தாய்) [சொல்லுகின்ற] சொல் நீராக [வும்] நீளும் (வளரும்).

Socia, quae sciens, dominum extra claustra versari, sermonem instituit, dominae morem nuptiarum non toleranti dicit: „rumorem vulgi et reprehensionem matris respiciens debes patientiam discere.“ Domina respondet:

Quasi esset sermo vulgi fimus, reprehensio matris aqua, hic dolor crescit.

1148. நெய்யாலெரிநுதுப்பேமென்றற்றாற் கௌ
வையாற்
காமநுதுப்பேமெனல் (௮)

அலரால் காமத்தை நுதுப்பேம் (அவிப்போம்) எனல் (என்று நினைத்தல்) நெய்யால் எரி (நெருப்பை) அவிப்போம் என்றற்று (என்றால் போலும்).

Rumore amorem velle exstinguere idem est ac si velis oleo ignem exstinguere.

1149. அலர்நாணவொல்வதோவஞ்சலோம்பென்றார்
பலர்நாணநீத்தக்கடை (௯)

[உன்னை விட்டு நீங்கேன்] அஞ்சல் ஓம்பு (ஒழி) என்றவரே [இன்று கண்டவர்] பலர் நாண (நாணும் வகை) [நம்மை விட்டு] நீத்த கடை (நீங்கிய பின்) அலருக்கு நாண ஒல்லதோ (கூடுமோ)?

Domina, quae post abitum domini ad sumtus nuptiales acquirendos patientiam amiserat, sciens jam eum rediisse et extra claustra manere, sociae, quae dixerat: „rumorem timens debes patientia uti“ — respondet:

Ab eo, qui dicebat ne timeas, ita desertam, ut jam multas pudeat, num me rumoris pudeat?

1150. தாம்வேண்டினல்குவர்காதலர்யாம்வேண்டுங்
கௌவையெடுக்குமிவ்வூர் (௰)

நாம் [உடன் போதற்கு காரணமாதல் பற்றி] வேண்டும் அலரை இவ்வூர் எடுக்கும் காதலர் [நாம்] வேண்டினால் தாமும் நல்குவார் (அதற்கு உடன்படுவார்).

Domino extra claustra manente socia dominam de rumore vulgi certiorem facit et ad una eundum exhortatur:

Si optamus, amatus concedet. — Oppidum rumorem spargit a nobis optatum.

CXVI.

பிரிவாற்றாமை. Separationem non tolerare.

1151. செல்லாமையுண்டேலெனக்குரைமற்றுநின்
வல்வரவுவாழ்வார்க்குரை (௧)

[நீ] செல்லாமை (பிரியாமை) உண்டேல் (உண்டாயின்), எனக்கு [அதனை] உரை (சொல்லு)! மற்று (அது நீங்க) நின் (உன்) வல்வரவு (விரைந்து வருதலை) [அப்போது] வாழ்வார்க்கு சொல்லு.

Domino dicenti se iturum esse et statim rediturum domina respondet:

Si non eas, mihi nunties, si eas te statim rediturum esse, (tum adhuc) viventibus nunties (i. e. dolori separatione creato superstites non erimus).

1152. இன்கணுடைத்தவர்பார்வல்பிரிவஞ்சும்
புன்கணுடைத்தாற் புணர்வு (௨)

அவர் பார்வல் (பார்வை) [மாத்திரமும்] இன்கண் (இன்பம்) உடைத்து (உடையது); [இன்று] புணர்வு பிரிவுக்கு அஞ்சும் புன்கண் (துன்பத்தை) உடைத்து.

Domina, quae, significatione a domino data, discessum ejus intelligit, sociae dicit:

Olim ipse illius adspectus erat plenus laetitiae; nunc ejus amplexus est plenus doloris discessum timentis.

1153. அரிதரோதேற்றமறிவுடையார்கண்ணும்
பிரிவோரிடத்துண்மையான் (௩)

[நம் பொருமையை] அறிந்தவரிடத்தும் பிரிவு ஓரிடத்து (ஒரு காலத்தில்) உண்மையான் (உண்டாதலால்) [நம்மேல் அன்புடையர் என்னும்] தேற்றம் (தெளிவு) அரிது.

Si umquam etiam scientis (quid ipse promiserit, et quid ego passura sim) discessus fieri potest, confidere erit difficile.

1154. அளித்தஞ்சலென்றவர்நீப்பிற்றெளித்தசொற்
றேறியார்க்குண்டோதவறு (௪)

அளித்து (அன்பாய்), [பிரியேன்] அஞ்சல் (அஞ்சாதிரு) என்றவர் [பின்னே] நீப்பின் (பிரிந்தால்) தெளித்த (அவரால் தெளிவிக்கப்பட்ட) சொல்லை [மெய் என்று] தேறியார்க்கு (தேறினவர்க்கு = தெளிந்தவர்க்கு) தவறு (குற்றம்) உண்டோ?

Si ejus, qui blande dixit: „noli timere“ discessus fiat, num earum est culpa, quae verbo firmo firmiter confidebant?

1155. ஓம்பினமைந்தார்பிரிவோம்பன்மற்றவர்
நீங்கினரிதாற்புணர்வு (௫)

[என் உயிரை] ஓம்பின் (காப்பாற்ற வேண்டுமாயின்) அமைந்தவரது பிரிவை ஓம்பல் (ஒழிப்பாயாக)! மற்று அவர் நீங்கின் [பின்பு] புணர்வு அரிதாம்.

Si me sustinere cupis, mihi conjuncti discessus impediendus est.
Si discesserit, iterum conjungi erit difficile.

1156. பிரிவுரைக்கும்வன்கண்ணராயினரிதவர்
நல்குவரென்னுநசை (௬)

அவர் [நம்முன்னின்றும்] பிரிவை உரைக்கும் வன்கண்ணுடையவராயின் [நம் பொருமையை அறிந்து வந்து] நல்குவர் (தலையளி செய்வார்) என்னும் நசை (ஆசை) அரிது.

Sociae narranti dominum discessum suum significasse domina respondet:

Si ille tam crudelis est, ut de discessu dicat, mihi difficile est optare, ut mihi faveat.

1157. *துறைவன்றுறந்தமைதூற்றாகொன்முன்கை*
யிறையிறவாநின்றவளை (எ)

துறைவன் (நெய்தனிலத்தலைவன்) துறந்தமை (பிரிந்தமையை) [என்] முன்கை இறையினின்றும் இறவா (கழலா) நின்ற வளையல்கள் தூற்றா கொல் (அறிவியாவோ)?

Annulus de brachio delabens nonne discessum principis enuntiat?

1158. *இன்னாதினனில்லூர்வாழ்தலதனினு*
மின்னாதினியார்ப்பிரிவு (அ)

இனனில் (இனமில்லாத) ஊரிலே வாழ்தல் இன்னாது; இனியார் (காதலர்) பிரிவு அதனினும் இன்னாது.

In oppido amicorum inopi vita tristis est; discessus ejus, quem diligo, etiam tristior est.

1159. *தொடிற்சுடினல்லதுகாமநோய்போல*
விடிற்சுடலாற்றுமோதீ (கூ)

தீயானது [தன்னை] தொடின் (தொட்டால்) சுடின் (சுட்டால்) [சுடல்?] அல்லது காம நோயை போல் — [தன்னை] விட்டால் — சுடல் ஆற்றுமோ (வல்லதோ)?

Tangentem ignis uret; num uret, ut dolor amoris discedentem

1160. *அரிதாற்றியல்லனோய்நீக்கிப்பிரிவாற்றிப்*
பின்னிருந்துவாழ்வார்பலர் (௰)

அரிது ஆற்றி (பொறுத்து) அல்லல் (துன்ப) நோயை நீக்கி, பிரிவை பொறுத்து பின்னும் இருந்து வாழும் மகளிர் பலர்!

Socia dominae: multae mulieres, inquit, dolorem tolerant, tu non toleras — domina respondet (ironice):

Quae gravia tolerent, accrbum dolorem depellant, discessum tolerent et in vita maneant, multae sunt!

CXVII.

படர்மெலிந்திரங்கல். Tristitia consumi et lamentari.

1161. மறைப்பேன்மன் யானிஃதோநோயையிறை
ப்பவர்க்
கூற்றுநீர்போலமிகும் (க)

யான் (நான்) நோயை மறைப்பேன்; [மறைக்கவும்] இதோ இறைப்பவர்க்கு ஊற்று நீர் போல் மிகும்.

Socia dominae: dolorem, inquit, amoris ostendere, tuum pudorem dedecet.— domina ei respondet:

Dolorem occultare volo, sed, ut aqua scaturiens haurientibus, sic augetur.

1162. கரத்தலுமாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத்தரும் (உ)

இந்நோயை கரத்தலும் (மறைத்தலும்) ஆற்றேன் (எனக்கு முடியாது); நோயை செய்தார்க்கு உரைத்தலும் [எனக்கு] நாணம் தரும்.

Socia dominae: aut his, inquit, occultare aut illis nuntiare te oportet (te dolorem non amplius tolerare) — domina respondet:

Ut dolorem occultem, efficere nequeo. Qui dolorem attulit, eidem cum nuntiare pudori est.

1163. காமமுநாணு முயிர்காவாத்தூங்குமென்
னோனாவுடம்பினகத்து (௩)

காமமும் நாணும் நோனா (பொறாத) என் உடம்பினகத்து (உடம்பினிடத்து) உயிர் காவா (காவடித்தண்டாக) தூங்கும் (தொங்கும்).

In corpore meo ad sustinendum inepto amor et pudor a portica animi mei pari momento dependent.

1164. காமக்கடன்மன் னுமுண்டேயதுநீந்து
மேமப்புணைமன் னுமில் (௪)

காமக்கடலே உண்டு; அதை நீந்தும் (கடக்கும்) ஏம (காப்பாகிய) புணை இல்லை.

Socia dominae honestae mulieres, inquit, in mare libidinis non incidunt, si vero incidant, idonea navi illud trajicere possunt — domina respondet:

Mare amoris certe adest, sed qua illud trajiciam certa navis nulla adest.

1165. துப்பினெவனாவர் மற்கொறுயர்வரவு
நட்பினுளாற்றுபவர் (௫)

நட்பினுள் துயர் (துன்பத்தின்) வரவினை ஆற்றுபவர் (செய்ய வல்லவர்) துப்பின் (பகைமையில்) எவன் [என்னம்] ஆவர் கொல் (ஆவாரோ = செய்ய வல்லவரோ?).

Domina sociae succensens, quod nuntiam se fore negavit, dicit:

Qui in ipsa amicitia dolorem parant, in odio quid facient?

1166. இன்பங்கடன்மற்றுக்காமமஃதடுங்காற்
றுன்பமதனிற்பெரிது (௬)

[காமத்தால் வரும்] இன்பம் கடலே; [ஆகிலும்] காமமஃது (காமமானது) அடும் (மிகவும் வருத்தும்) போது [அந்த] துன்பம் அதனின் பெரிது.

Sociae dicenti: Qui ex amore voluptatem perceperint, eos etiam dolor eo allatus affliget — domina respondet:

Mare quidem est gaudium (amoris), amoris vero cruciantis dolor est etiam major.

1167. காமக்கடும்புனனீந்திக்கரைகாணேன்
யாமத்தும்யானேயுளேன் (௭)

காமம் [ஆகிய] கடிய புனலை நீந்தி [அதற்கு] கரை காணேன்; யாமத்தும் (பாதியிரவிலும் = ஒருதுணையில்லாமல்) யானே உளேன் (இறவாதிருக்கிறேன்).

Sociae dicenti: navi virtutis mare amoris trajici potest — domina respondet:

In amoris rapido flumine natans littus non video. Ipsa media nocte sum (auxilii inops et tamen superstes).

1168. மன்னுயிரெல்லாந்துயிற்றியளித்திரா
வென்னல்லதில்லைதுணை (௮)

இரா (இரவு) மன் (நிலைபெற்ற) உயிர்களை எல்லாம் துயிற்றி (தூங்கச்செய்து) அளித்து (அன்பு காட்டும்); [தூங்காத] என்னை அல்லது [வேறு] துணை [அவ்விரவுக்கு] இல்லை.

Domina, de duritia noctis loquens, lamentatur:

Mitissima est nox! Viventes omnes somno sopiens me solam sociam retinet.

1169. கொடியார்கொடுமையிற்றாங்கொடியவிந்நா
ணெடியகழியுமிரா (௯)

இந்நாள்களிலே நெடிய (நெடியவைகளாய்) கழியும் (செல்கின்ற) இரவுகள் [அந்த] கொடியவரது கொடுமையின் தாம் கொடிய (கொடுமையுள்ளவைகளாம்)!

Duritia duri illius duritia ejus est major; hisce diebus tarde labuntur noctes.

1170. உள்ளம்போன்றுள்வழிச்செல்கிற்பின்வெள்
ளநீர்
நீந்தலமன்ஞேவென்கண் (ம)

உள்ளம் (மனம்) போன்று [காதலர்] உள்வழி (இருக்கிற இடத்திற்கு) செல்கிற்பின் (செல்லுமாயின்) என் கண்கள் வெள்ளம் [ஆகிய தந்] நீரை நீந்தல் (நீந்தா = நீந்த கூடாது).

Sociae dicenti: noli flere; si flebis, oculorum magna pulchritudo evanescet — domina respondet:

Mentis instar ad illum contendens meus oculus flumen lacrimarum trajicere non potest.

CXVIII.

கண்விதுப்பழிதல். Oculos desiderio consumi.

1171. கண்டாங்கலுழ்வதெவன் கொலோதண்டா
நோய்
தாங்காட்டயாங்கண்டது (க)

க்ண் தாம் கலுழ்வது (அழுகிறது) எவன் (யாது?) தாம் [தலை வரை] காட்ட, தண்டாத (தீராத) நோயை நாம் கண்டது [உண்டு].

Domina:

Oculus ipse quid dolet? Cum videntem me faceret, hunc dolorem videbam numquam desinentem.

1172. தெரிந்துணராநோக்கியவுண்கண்பரிந்துணா
ராப்
பைதலுழப்பதெவன் (உ)

தெரிந்து (ஆராய்ந்து) உணரா (அறியாமல்) நோக்கிய [மை] உண்ணும் கண்கள் பரிந்து கூறுபடுத்தியறியாமல் பைதல் (துன்பம்) அனுபவிப்பது எவன் (யாது?)

Qui modo incauto circumspiciebant nigri oculi, quid nunc modo iniquo dolorem patiuntur?

1173. கதுமெனத்தானோக்கித்தாமேகலுழு
மிதுநகத்தக்கதுடைத்து (௩)

[அன்று] தாமே கதுமேன (விரைந்து) நோக்கி [இன்றும்] தாமே கலுழும்! இது நக தக்கது (இயல்பை) உடைத்து.

Qui alacri vultu circumspiciebant, ipsi fundunt lacrimas. Hoc sane ridendum est.

1174. பெயலாற்றா நீருலர்ந்தவுண்கணுயலாற்றா
வுய்வினோயென்கணிறுத்து (௪)

உண் கண்கள் உயல் ஆற்றா [நான் பிழைக்க மாட்டாமைக்கு எதுவாகிய] உய்வில் (உய்வில்லாத) நோயை என்கண் (எனிடத்து) நிறுத்து (வைத்து) பெயல் ஆற்றா (அழ மாட்டாத வகை) நீர் உலர்ந்தன (வற்றிவிட்டன).

Dolorem insanabilem, qua fiam ad vivendum non potens, mihi inferentes nigri oculi, ad flendum non petentes exsiccantur.

1175. படலாற்றாபைதலுழக்குங்கடலாற்றாக்
காமநோய் செய்தவென்கண் (௫)

கடல் ஆற்றா (கடலும் சிறிதாய் படி பெரிதாகிய) காம நோயை செய்த என் கண்கள் [தாமும்] படல் ஆற்றா (தூங்க மாட்டாமல்) பைதல் (துன்பத்தை) அநுபவிக்கின்றன.

Somnum non capiens nunc dolet oculus meus, qui dolorem mihi inferebat, quem ne mare quidem capiat.

1176. ஓஒவினிதேயெமக்கிந்நோய் செய்தகண்
டாஅமிதற்பட்டது (௬)

எமக்கு இந்நோயை செய்த கண்கள் தாமும் இதில் பட்டது ஓ ஒ இனிதே!

Quam dulce est! Qui me hoc dolore afficiebant, oculi ipsi in eo haerent.

1177. உழந்துழந்துண்ணீ ரறுகவிழைந்திழைந்து
வேண்டியவர்க்கண்டகண் (௭)

இழைந்து (உட் குழைந்து) இழைந்து வேண்டியவர் (விரும்பியவரை) கண்ட கண்கள் [இன்று] உழந்து (வருந்தி) உழந்து உள் (தம்முளிருக்கிற) நீர் அறுக (அற்றுப்போகுக).

Qui emolliti, emolliti exoptatum intuebantur oculi, afflicti afflicti lacrimas effundant.

1178. பேணாதுபெட்டாருளர்மன்னோமற்றவர்க்
காணாதமைவிலகண் (௮)

பெட்டார் (விரும்பியவர்) பேணாது [இங்கே] உளர் (இருக்

கிருர்); மற்று கண்கள் அவரை காணுது அமைவில (பொறு மையில்லாதனவாம்).

Sociae dicenti: Amatus non abiit; hic adest; patienter eum exspectare debes — domina respondet:

Qui mei desiderio ardebat, mei negligens hic commoratur; eum non videns oculus meus patientia caret.

1179. வாராக்காற்றுஞ்சாவரிற்றுஞ்சாவாயிடை
யாரஞருற்றனகண் (கூ)

[காதலர்] வாராத காலத்தில் [எனது] கண்கள் துஞ்சா; வரின் துஞ்சா; ஆயிடை (ஆதலால்) ஆர் (அரிய) [துன்பத்தை] அஞர் உற்றன (உடையனவாம்).

Sociae dicenti: te ipsam patientia et oculum tuum somno uti oportet — domina respondet:

Ubi non venerit, somnum non capiet; si venerit, somnum non capiet; itaque gravem dolorem patitur.

1180. மறைபெறலூரார்க்கரிதன்றாலெம்போ
லறைபறைகண்ணாரகத்து (ம)

எம்மை போலும் அறைபறை [ஆகிய] கண்ணேயுடையவர் அகத்தில் மறை இரகசியத்தை பெறல் ஊரார்க்கு அரிது அன்று.

Sociae dicenti: ne incusetur, crudelitatem ejus celare debes — domina respondet:

Quae, ut ego, oculos habent pulsatis tympanis similes, ex eorum animis secretum elicere non erit difficile.

CIX.

பசப்புறுபருவரல். De pallido colore dolere.

1181. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்த
வென்
பண்பியார்க்குரைக்கோபிற (க)

[என்னை] நயந்தவர்க்கு (விரும்பிய தலைவர்க்கு) நல்காமை (பிரிவை) நேர்ந்தேன் (உடன்பட்டேன் [ஆதலால்] பசந்த (பசப்பு நிறம் அடைந்த) என் பண்பை யார்க்கு உரைப் பேன்?

Domina, quae discessum probaverat, jam discessus impatiens dicit:

Amanti ad non amandum consentiebam. De facie mea pallida facta quocum conquerar?

1182. அவர்தந்தாரென்னுந்தகையாலிவர்தந்தென்
மேனிமேலூரும்பசப்பு (௨)

பசப்பானது அவர் [என்னை] தந்தார் (உண்டாக்கினார்) என்னும் தகையால் (குணத்தினால்) என் மேனி மேல் இவர் தந்து (ஏறி) ஊரும்.

Sociae timenti ne dolori succumbat, se non succumbere persuadens, dicit:

Ab illo collatam se profitens pallor obortus in corpore meo insidet.

1183. சாயலுநாணுமவர்கொண்டார்கைம்மாறா
நோயும்பசலையுந்தந்து (௩)

[பிரிகின்ற போதே] சாயலும் (அழகையும்) நாணத்தையும் அவர் கொண்டார் (கொண்டு போனார்) — [அவ்விரண்டிற்கும்] கைம்மாறாக நோயையும் பசலையும் தந்து.

Sociae dicenti: venustas et pudor ne detrimentum capiant, patientem te esse oportet:

Pulchritudinem et pudorem ademit, aegritudinem et dolorem pro eis dedit.

1184. உள்ளுவன்மன்யானுரைப்பதவர்திறமாற்
கள்ளம்பிறவோபசப்பு (௪)

நான் [அவர் சொற்களை] உள்ளுவன் (உள்ளுவேன் = நினைக்கின்றேன்); [நான்] உரைப்பதும் அவர் திறம் (நற்குணமே); பசப்பு [வந்து நின்றது] கள்ளமே.

Sociae dicenti: quid praemiserit et quas virtutes habeat, te non fugit, cito redibit — domina respondet:

Memor sum, et quod memoro illius virtus est; itaque hic pallor merum mendacium est.

1185. உவக்காணெங்காதலர் செல்வாரிவக்காணென்
மேனிபசப்பூர்வது (௫)

உவக்காண் (உங்கே) எமது காதலர் [பிரிந்து] செல்வார் [ஆக] என் மேனி பசப்பு ஊர்வது (அடைவது) இவக்காண் (இங்கே).

Socia dominae: illo breve tantum spatium, inquit, discedente patientiam rumpis. Domina prius facta in memoriam revocat:

Aspice, ibi dilectus meus abit; aspice hic corpori meo pallor adrepit.

1186. விளக்கற்றம்பார்க்குமிருளேபோற்கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும்பசப்பு (௬)

விளக்கினது அற்றம் பார்க்கு (சோர்வு பார்த்து நெருங்கி வரும்) இருளே போல் பசப்பு தலைவனது முய்க்கு (புணர்ச்சியின்) அற்றம் பார்க்கும்.

Ut nox, quae finem lucis exspectat, ita pallor, qui finem amplexus exspectat.

1187. புல்லிக்கிடந்தேன்புடைபெயர்ந்தேனவ்வளவி
லள்ளிக்கொள்வற்றேபசப்பு (௭)

[காதலரை] புல்லி (தழுவி) கிடந்தேன்; [அறியாது] புடைபெயர்ந்தேன் (சற்றுவிலங்கினேன்); அவ்வளவிலே பசப்பு அள்ளிக்கொள்வற்றே (அள்ளிக்கொள்ளப்படுவது போல் வந்து நிறைந்தது).

Ilium amplexa jacebam; paullulum recedenti pallor mili statim aderat, quasi prehendi potuissct.

1188. பசந்தாளிவளென்பதல்லாலிவளைத்
துறந்தாரவரென்பாரில் (௮)

[பொறுத்திராமல்] இவள் பசந்தாள் என்பது அல்லால் (அல்லது) இவளை அவர் துறந்து போனார் என்பார் (என்று சொல்பவர்) இல்லை.

Sociae dicenti: te non decet ita pallescere, domina subirata respondet:

Dicunt: illam pallorcm acccpisse; non dicunt: ille eam deseruit.

1189. பசக்கமற்பட்டாங்கென்மேனிநயப்பித்தார்
நன்னிலையராவரெனின் (௯)

[இப்பிரிவை] நயப்பித்தார் (நான் உடன்படும் வகை சொல்லியவர்) நல்ல நிலையர் (நிலையினர்) ஆவரெனின் (ஆவாரெனின்) -- என் மேனி பட்டாங்கு பசக்க (பசலை நிறம் அடையக்கடவது).

Dummodo ille, qui mihi persuadebat, bene sc habeat, corpus meum, ut se habet, pallorem accipiat.

1190. பசப்பெனப்பேர்பெறுதன்றே நயப்பித்தார்
நல்காமைதூற்றாரெனின் (௰)

[அன்று] நயப்பித்தார் (குறை நயப்பித்து கூடினவர்க்கு) நல்காமை (இன்று அருளாமையை) தூற்றாராயின், பசப்பென (பசப்பு தான் ஆயினாள் என்று) பேரை பெறுதல் [எனக்கு] நன்றாம்.

Socia, ut dominae dolorem mitiget, dominum reprehendit — domina ejus defensionem suscipit:

Modo ne, qui mihi, ut amarem, persuadebat, ipsum accusent, crudelitatis, — mihi pallidae nomen imponi per me licet.

CXX.

தனிப்படர்மிகுதி. Doloris solitarii magnitudo.

1191. தாம்வீழ்வார்தம்வீழப் பெற்றவர்பெற்றாரே
காமத்துக்காழில்கனி (௧)

தம்மாலே வீழ்வார் (விரும்பப்பட்ட கணவர்) தம்மை விரும்ப பெற்ற மகளிர் காமத்து (காமானுபவத்தின்) காழில் (வித்தில்லாத) கனி (பழத்தை) பெற்றாரே.

Socia dominae: amatus, inquit, te impatientior cito adveniat; tum magna cum eo voluptate perfrueris — domina respondet:

Quae obtinuit, ut, quem amet, ipsam redamet, fructum amoris obtinuit nucleó carentem.

1192. வாழ்வார்க்குவானம்பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வாரளிக்குமளி (௨)

விரும்புகிற மகளிர்க்கு விரும்புகிற கணவர் அளிக்கும் அளி [அன்பு] வாழ்வார்க்கு வானம் [மழை] பயந்தற்று (பெய்வது போலும்).

Amor, quem amator amatae confert, similiter se habet ac si nubes viventibus bona confert.

1193. வீழுநர்வீழப்படுவார்க்கமையுமே
வாழுநமென்னுஞ்செருக்கு (௩)

[தம்மால்] வீழுநர் (விரும்பப்படுகிற கணவரால்) விரும்பப்படுகிற மகளிர்க்கு வாழ்வோம் என்னும் செருக்கு (தருக்கு) அமையுமே (ஏற்புடைத்தாம்).

Iis solis, qui ab amatis amantur, convenit gloriari: vivimus.

1194. வீழப்படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப்படாஅரெனின் (௪)

[கற்புடைய மகளிராலே] வீழப்படுவார் (நன்குமதிக்கப்படுவாரும்) தாம் வீழ்வார் (விரும்பும் கணவரால்) வீழப்படாஅர் (விரும்பப்பட்டார்) எனின் (ஆயின்), கெழீ — இயிலர் (நல்வினையில்லாதவர்).

Socia dominae: divina tibi, inquit, fidelitas est, quod timens, ne dilectum reprehendant, illum te non diligere, retices; itaque fideles maritae magni te facient — domina respondet:

Etiam dilectae infelices sunt, nisi ab eo, quem ipsae diligant, diligantur.

1195. நாங்காதல்கொண்டார்நமக்கெவன்செய்பவோ
தாங்காதல் கொள்ளாக்கடை (௫)

நம்மாலே காதல் கொள்ளப்பட்டவர் நமக்கு எவன் (என்ன இன்பத்தை) செய்ப (செய்வார்)! — நாமும் (நம்மிடத்து) காதல் செய்யாத இடத்து.

Socia dominae: cum illum ames, inquit, animum ejus habens cognitum patientia usa es — domina respondet:

Qucm cgo carum habeo, quid praestare mihi poterit, nisi ipse me caram habeat.

1196. ஒருதலையானின்னாதுகாமங்காப்போல
விருதலையானுமினிது (௬)

காமம் ஒருதலையான் (ஓரிடத்தில் உண்டாயின்) இன்னாது; கா (காவடிப்பாரம்) போல் இருதலையானும் (இரண்டிடங்களிலும் உண்டாயின்) இனிது.

Amor si unius tantum partis est propria[1], dulcis non est; si porticam, qua portatur, imitans utrique cst communis, dulcis est.

1197. பருவரலும்பைதலுங்காணான்கொல்காம
னொருவர்கணின்றொழுகுவான் (௭)

ஒருவர்கண் (ஒருவனிடத்தே நின்று) ஒழுகுவான் (போர் செய்கின்றவனாகிய) காமன் பருவரலும் நோயையும் பைதலும் துன்பத்தையும் காணானோ?

Solam me petit Amor. Num dolorcs et angores mei eum fugiunt?

1198. வீழ்வாரினின்சொற்பெறாஅதுலகத்து
வாழ்வாரின்வன்கணாரில் (௮)

வீழ்வாரின் (தம்மால் விரும்பப்படும் காதலரிடத்திருந்து) இனிய சொல்லை பெறாது உலகத்தில் வாழ்வாரின் (வாழ்கின்றமகளிர் போல்) வன்கணார் (தைரியமுடையவர்) இல்லை.

Domina, nullum nuntium videns a domino advenire, dicit:

Duriore animo est nemo, quam quae, etsi nullum ab amico amicum verbum accipiat, in vita maneat.

1199. நசைஇயார்நல்காரெனினுமவர்மாட்
டிசையுமினியசெவிக்கு (௯)

நசை இயார் (விரும்பப்பட்ட தலைவர்) நல்கார் (அருள் செய்யார்) எனினும் (ஆயினும்), அவர் மாட்டு (இடத்து) இசையும் (எச்சொற்களும்) செவிக்கு இனிய.

Etsi amatus mihi non faveat, ipse illius sonus auri dulcis est.

1200. உறாஅர்க்குறுநோயுரைப்பாய்கடலைச்
செறாஅஅய்வாழியநெஞ்சு (௰)

[உன்னோடு] உறாதவர்க்கு உறு நோயை உரைப்பாய் — நெஞ்சே வாழ்வாயாக! கடலை செறாஅஅய் (தூர்க்கமுயலு).

A domino nullo nuntio accepto ipsa ei nuntium mittere meditans secum dicit:

Qui tuus non est, ei tuum dolorem effundis. (Ipsum) mare imple. Vale mi anime!

CXXI.

நினைந்தவர்புலம்பல். Memorum lamentatio.

1201. உள்ளினுந்தீராப்பெருமகிழ்செய்தலாற்
கள்ளினுங்காமமினிது (௧)

உள்ளினும் (நினைத்தாலும்) தீராத பெரு மகிழ்ச்சியை செய்தல்லால் கள்ளினும் காமம் இனிது.

Dominus nuntium perferenti socio dicit:

Tantummodo cogitanti summam voluptatem adfert; itaque mulso dulcior est amor.

1202. எனைத்தொன்றினிதேகாண்சாமந்தாம் வீழ்வார்
நினைப்பவருவதொன்றில் (௨)

காமம் எனைத்து? ஒன்று இனிதே காண்! தம்மால் விரும்பப்படுவோரை நினைப்ப (நினைத்தால்) வருவதொன்று (துன்பம்) இல்லை.

Amor qualis est? Ecce amica ejus suavitas! De iis, quae nos amant, cogitantibus nihil damni nobis accidet.

1203. நினைப்பவர்போன்று நினையார்கொறும்மல்
சினைப்பதுபோன்றுகெடும் (௩)

[எனக்கு] தும்மல் சினைப்பது [அரும்புதல்] போன்று (போலே தோன்றி) கெடும்; [அதனால் தலைவர் என்னை] நினைப்பவர் போன்று நினையார் கொல்.

De domino anxie cogitans domina sociae dicit:

Quamvis de me cogitare videatur, num cogitat? Sternutatio mca, quamvis ori videatur, moritur.

1204. யாமுமுளேங்கொலவர்நெஞ்சத்தெந்நெஞ்சத்
தோஒவுளரேயவர் (௪)

எமது நெஞ்சத்தில் அவர் ஊரே (இருக்கிறாரே) அவரது நெஞ்சத்திலும் யாமும் (நாமும்) உளேம் (இருக்கிறோம்) கொல்?

Egone sum in illius animo? Ille in meo animo est.

1205. தந்நெஞ்சத்தெம்மைக்கடிகொண்டார்நாணா
ர்கொ
லெந்நெஞ்சத்தோவாவரல் (௫)

தமது நெஞ்சிடத்து [நான் செல்லாமல்] என்னை கடி (காவல்) கொண்டவர் — என் நெஞ்சினிடத்து ஓவாது வருதலுக்கு நாணாரோ?

Ex suo animo me exclusit. Nonne illum pudet in meum animum perpetuo intrare?

1206. மற்றியானென்னுளேன்மன்னோவவரோடியா
னுற்றநாளுள்ளவுளேன் (௬)

நான் அவரோடு உற்ற (புணர்ந்த) நாளை உள்ள (நினைக்க) உளேன் (உயிர்வாழ்கின்றேன்); மற்று (அது இல்லையாயின்) யான் (நான்) [வேறே] என் (எதினால்) உளேன்.

Socia: voluptates, inquit, prioris conjunctionis recordans curis vexaris, ejus rei oblivisci debes. Domina respondet:

Quonam vivo? Eo vivo, quod dierum, quibus cum illo conjunctus fui, memoria in me vivit.

1207. மறப்பினெவனாவன் மற்கொன் மறப்பறியே
னுள்ளினுமுள்ளஞ்சுடும் (௭)

மறப்பறியேன் (மறப்பறியேனாகி) உள்ளினும் (நினைக்கவும்) உள்ளத்தை சுடும்; [அப்படி பிரிவு பொறாத நான்] மறந்தால், எவனாவன் (என்னமாவேன்)?

Si obliviscar, quid de me fiet? Etiamsi, quae oblivisci nequeo, recorder, cor uritur.

1208. எனைத்துநினைப்பினுங்காயாரனைத்தன்றோ
காதலர்செய்யுஞ்சிறப்பு (௮)

காதலர் — எனைத்து (எவ்வளவு) நினைத்தாலும் — [அதற்கு] காயார் (கோபியார்); [அவர் எனக்கு] செய்யும் சிறப்பு அனைத்து (அவ்வளவு) அன்றோ?

Socia dominae: dominus, inquit, dolorem tuum agnoscens redibit te consolaturus. Domina respondet:

Quantumvis de eo cogitem, non offenditur. Tantus est honor, quem mihi praestat; nonne ita est?

1209. விளியுமென்னின்னுயிர்வேறல்லமென்பா
ரளியின்மையாற்ற நினைந்து (௯)

[முன் எல்லாம் நாம் இருவரும்] வேறல்லம் (வேறல்லேம்) என்பவரது அளியின்மை (அருளில்லாமையை) ஆற்ற (மிகவும்) நினைத்து என் இன் (இனிய) உயிர் விளியும் (கெடும்).

Si illius, qui dicebat: nos unum sumus, vehementer recorder, dulcis vita mea evanescet.

1210. விடாஅதுசென்றாரைக்கண்ணினாற்காணப்
படாஅதிவாழிமதி (௰)

மதி (சந்திரனே) [என் நெஞ்சை] விடாது சென்றவரை கண்ணினால் (கண்ணளவாலாயினும்) காண (எதிரப்படும் வகை) படாஅதி (மறையாதிருப்பாயாக!) — வாழ்வாயாக!

Luna! noli te occultare, ut illum (qui simul te intuetur) oculis conspiciam, qui, non (a corde meo) discedens, procul abiit. Vale luna!

CXXII.

கனவுநிலையுரைத்தல். Visum nocturnum enarrare.

1211. காதலர்தூதொடுவந்தகனவினுக்
கியாதுசெய்வேன்கொல்விருந்து (௧)

காதலரது தூதொடு (தூதை கொண்டு) [என்னிடத்து] வந்த கனவினுக்கு விருந்தாக யாது செய்வேன்?

Domina, quae vidit nuntium domini venientem, dicit:

Somnio, quod nuntium dilecti afferebat, quas dabo epulas?

1212. கயலுண்கண்யானிரப்பத்துஞ்சிற்கலந்தார்க்
குயலுண்மைசாற்றுவேன்மன் (௨)

கயல் [போலும்] உண் கண் — நான் இரக்க — துஞ்சுமாயின், கலந்தார்க்கு (தலைவர்க்கு) உயல் [நான் பொறுத்து உயிர் வாழ்கிற] உண்மையை சாற்றுவேன் (விரிய) சொல்லுவேன்.

Domina, nuntium missura, dicit:

Si, me rogante, niger oculus, pisci (qui dicitur) kajel similis somnum ceperit, mecum conjuncto, quo modo re vera vivam, dicam: i. e. somnio ego ipsa dilecto dicam, quod patiar.

1213. நனவினானல்காதவரைக்கனவினாற்
காண்டலினுண்டெனுயிர் (௩)

நனவினால் நல்காதவரை கனவினால் காண்டலின் (காணுத லால்) என் உயிர் உண்டு (நீங்காது).

Socia timet, ne domina non sustineat. Domina respondet se sustinere posse:

Qui vigilantem me non amat, cum somnianti mihi appareat non moriar.

1214. கனவினானுண்டாகுங்காம நனவினா
னல்காரைநாடித்தரற்கு (௪)

நனவினால் நல்காதவரை நாடி தரற்கு (தேடி கொண்டு வந்து) தருதலால், கனவினால் காமம் (இன்பம்) உண்டாகும்.

Cum illum, qui vigilantem me non amat, inquirens ad me adducat, in somnio voluptas mihi venit.

1215. நனவினாற்கண்டதூஉமாங்கேகனவுந்தான்
கண்டபொழுதேயினிது (௫)

[முன்னே] நனவினிடத்து கண்டதும் ஆங்கே (அக்கண்ட பொழுதே) [இனிது]; [இன்று] கனவுந்தான் (கனவினிடத்து கண்டதும்) இக்கண்ட பொழுதே இனிது.

Tum quod vigilanti apparebat (erat dulce); jam ipsum somnium, ubi apparuerit, dulce est.

1216. நனவெனவொன்றில்லையாயிற்கனவினாற்
காதலர்நீங்கலர்மன் (௬)

நனவு என்கிற ஒன்று இல்லையாயின் கனவினிடத்து [வந்து கூடிய] காதலர் நீங்கலர் (நீங்கார்).

Hoc unum, vigilare, nisi esset, in somnis amatus numquam discederet.

1217. நனவினானல்காக்கொடியார்கனவினா
னென்னெம்மைப்பீழிப்பது (௭)

நனவில் [வந்து] நல்காத கொடியவர் கனவில் [வந்து] எம் மை பீழிப்பது (வருத்துவது) என்?

Domina, quae de somno excitata dominum non videt, de conjunctione in somnio facta cogitans impatienter dicit:

Qui vigilantem me nôn amat, crudelis ille, quamobrem somniantem me cruciat?

1218. துஞ்சுங்காற்றோண்மேலராகிவிழிக்குங்கா
னெஞ்சத்தராவர்விரைந்து (அ)

துஞ்சும் போது [என்] தோள் மேலுள்ளவராகி விழிக்கும் போது விரைந்து நெஞ்சினுள்ளவராவார்.

Socia, ut se ipsam tranquillet, dominum reprehendente, domina ejus defensionem suscipit:

Dormiendi tempore humero meo adhaerens, vigilandi tempore statim in animum meum recedit.

1219. நனவினானல்காரைநோவர்கனவினாற்
காதலர்க்காணாதவர் (கூ)

[தமக்கு ஒருகாதலர் இல்லாமையால்] கனவிலே காதலரை காணாத மகளிர் [தாம் அறிய] கனவினால் (நனவில் வந்து) நல்காதவரை [அன்பிலரென்று] நோவர் (நோவாநிற்பார்).

Quae dormientes amatum non vident, vigilantem me non amanti dolorem faciunt.

1220. நனவினானந்நீத்தாரென்பர்கனவினாற்
காணார்கொலிவ்வூரவர் (௰)

இவ்வூரவர் நனவினால் நம் (நம்மை) நீத்தார் (விட்டு நீங்கினார்) என்பார்; கனவினால் [அவர் நீங்காது வருதலை] காணார் கொல் (கண்டறியாரோ)?

Illum vigilantem me deseruisse dicunt; certe dormientes eum non vident oppidani.

CXXIII.

பொழுதுகண்டிரங்கல். Nocte ingruente lamentari.

1221. மாலையோவல்லைமணந்தாருயிருண்ணும்
வேலைநீவாழிபொழுது (க)

பொழுதே! நீ மாலையோ? [நீ மாலை] அல்லை [முன்] மணந்த வரது (காதலரை கூடிய மகளிரது) உயிரை உண்ணும் வேலை (வேலாயிருக்கிறாய்) நீ வாழி (வாழ்வாயாக).

Domina vesperae subirata dicit:

Vespera non es, sed hasta, quae nuptarum consumit vitam. Vale tempus vespertinum!

1222. புன்கண்ணைவாழிமருண்மாலையெங்கேள்
போல்
வன்கண்ணதோநின்றுணை (௨)

மயங்கிய மாலையே, புன் கண்ணை (ஒளியற்ற கண்ணுடையை)! நின் (உனது) துணையும் எமது கேள் (காதலர்) போல் வன் கண்ணுடையதோ?

Domina affectum suum in vesperam transferens dicit:

Tristem oculum habes! vale, maesta vespera! Num ut amicus meus etiam tua socia durum habet oculum?

1223. பனியரும்பிப்பைதல்கொண்மாலை
துனியரும்பித்துன்பம்வளரவரும் (௩)

பனி (குளிர்) அரும்பி (தோன்றி) பைதல் கொள் [பசந்து வந்த] மாலையானது [எனக்கு] துனி (வெறுப்பு) அரும்பி துன்பம் வளர (மிக) வரும்.

Sociae ad patientiam exhortanti domina respondet:

Frigore ingruente expallescens vespera ita venit, ut angore ingruente dolor meus crescat.

1224. காதலரில்வழிமாலைகொலைக்களத்
தேதிலர்போலவரும் (௪)

மாலையானது காதலரில்வழி (காதலரில்லாத இடத்து) கொலை [செய்கிற] களத்து எதிலர் (பகைவர்) போல் வரும்.

Ubi amatus non adest, vespera ut hostis in campum pugnae cooritur.

1225. காலைக்குச்செய்த நன்றென்கொலெவன்கொ
ல்யான்
மாலைக்குச்செய்தபகை (௫)

காலைக்கு [நான்] செய்த நன்று (உபகாரம) என் கொல் (யாது?) என்ன? நான் மாலைக்கு செய்த பகை (அபகாரம்) எவன் கொல் (யாது)?

Tempori matutino (utpote desiderium minuenti) quid grati, vespertino (utpote desiderium augenti) quid ingrati feci?

1226. மாலைநோய்செய்தல் மணந்தாரகலாத
காலையறிந்ததிலேன் (௬)

மாலை நோயை செய்தலை — தலைவர் அகலாத (பிரியாத) காலத்தில் அறிந்ததிலேன் (அறியாதிருந்தேன்).

Sociae dicenti: quae nunc talem te geris, quamobrem tum ad discessum consensisti, domina respondet:

Cum amatus nondum discessisset, tempus vespertinum creare dolorem nesciebam.

1227. காலையரும்பிப்பகலெல்லாம்போதாகி
மாலைமலருமிந்நோய் (எ)

இந்நோய் காலையில் அரும்பி (முகைத்து) பகல் எல்லாம் போதாகி (பெரிய அரும்பாய் முதிர்ந்து) மாலையில் மலரும்.

Sociae interroganti: quid est quod tempore vespertino talem te geras, domina respondet:

Hic dolor mane germinat, per totum diem crescit, vesperi floret.

1228. அழல்போலுமாலைக்குத்தூதாகியாயன்
குழல்போலுங்கொல்லும்படை (அ)

ஆயன் (இடையனது) குழல் (வேணுநாதம்) அழல் (நெருப்பு) போலும் மாலைக்கு தூதாகி கொல்லும் படை போலும்.

Fistula pastoralis vesperae, quae igni similis est, nuntia, mortifero ferro est similis.

1229. பதிமருண்டுபைதலுழக்குமதிமருண்டு
மாலைபடர்தரும்போழ்து (கூ)

[இனிகண்டாரும்] மதிமருண்டு (மயங்கி) மாலை படர்தரும் (பரவும் = வரும்) பொழுது, பதி (இவ்வூர்) மருண்டு பைதலை (உழக்கும்) அனுபவிக்கும் [ஏனெனில் நான் இறந்து போவேன்].

